ஸ்ரீ

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

[illegible]

தொகுதி — 32 எண் — 2

ஜூலை — 1993

## உள்ளடக்கம்.

12-2-1993.


பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. 267–300

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 5 மற்றும் 6). 301-428

2. தகவல் கோரல்—

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து 428–431

3. விதி 110-இன் கீழ் சட்ட அமைச்சரின் அறிக்கை—

11-2-1993 அன்று இன்டர்ஸ்டேட்ஸ் கவுன்சில் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் மொழிக் கொள்கை பற்றி தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள். 431–433

4. கவன ஈர்ப்பு—

சென்னை நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர் த... டுப்பாடு குறித்து. 433–438

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—(தொடர்ச்சி).

1. திரு. எஸ். வி. சண்முகம்—(தொடர்ச்... 438 446
2. திரு. நா.சா. பழனிசாமி 446–457
3. திரு. ஜி. பழனிசாமி 457–485
4. திரு. எஸ். திருநாவுக்கரசு 485–507
5. திரு. செ. கு. தமிழரசன் 508–514

6. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்தல் .. .. 514–515

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்— 515


டி 53-445—1

164983

D
V 211,31 N93
N93.32.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 1, ஆங்கிரச—திருவள்ளுவர் ஆண்டு—2024

1993, பிப்ரவரி 12, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்''

நல்லதை மட்டுமே நாட்டம் கொண்டு, இனிய சொற்களையே சொல்பவர்களுக்கு, அவர்களுடைய தீமைகள் அகன்று நன்மைகள் பெருகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள், வினா எண். 61, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

61—

அகில இந்திய பணிகளுக்காக நேர்காணல் தேர்வுகளுக்குச் செல்லும் மாணவர்கள் ''புதுடெல்லி, தமிழ்நாடு இல்லத்தில்'' தங்க அறைகள் கொடுத்தல்.

*10179—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அகில இந்தியப் பணிகளின் நேர்காணல் தேர்வுகளுக்கு தமிழகத்திலிருந்து புதுடெல்லி செல்லும் மாணவர்கள் தங்குவதற்கு ''தமிழ்நாடு இல்லத்தில்'' அறைகள் கொடுக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1993 பிப்ரவரி 12

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அகில இந்தியப் பணிகள் மற்றும் மத்திய தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வுகளுக்கு தமிழகத்திலிருந்து புதுடெல்லி செல்லும், வேலையில் இல்லாத படித்த இளைஞர்கள் தங்குவதற்கு ''தமிழ்நாடு இல்லத்தில்'' மூன்று நாட்கள் சலுகைக் கட்டணத்தில் அறைகள் ஒதுக்கப்படுகிறது. இதற்கு நாளொன்றிற்கு சலுகை கட்டணமாக குளிர்சாதன அறையாக இருந்தால் ரூ. 30 (ரூபாய் முப்பதும்) சாதாரண அறையாக இருந்தால் நாளொன்றிற்கு ரூ. 10 (ரூபாய் பத்தும்) கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதைத் தவிர மேற்கூறிய மூன்று நாட்களுக்கு உணவு வசதியும் சலுகைக் கட்டணத்தில் தரப்படுகிறது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக அகில இந்தியப் பணிகள் என்று சொல்லப்படுகின்ற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளுக்குச் செல்கின்ற தமிழக மாணவர்களின் பங்கீடு குறைவாக இருந்து வந்தது. இந்தக் குறையைத் தீர்க்கும் முகத்தான் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக அங்கு வந்து தங்குபவர்களின் எண்ணிக்கை கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிகமாகியிருக்கிறது, அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 3 கட்டமாக இந்தத் தேர்வுகளுக்கான ரிசல்ட் வருகிறது. நேர்காணலுக்கு அங்கே தொடர்ந்து ஒரு மாதம் தங்க வேண்டும். ஒரு மாதத்திற்குமேல் அங்கே தங்கி ராவ் இன்ஸ்டிட்யூட் ஜவஹர்லால் நேரு யூனிவர்சிட்டி போன்றவற்றில் 'டெல்லியில் தங்கி தொடர்ந்து இந்த நேர்காணலுக்கு மார்க் இன்டர்வியூ' என்ற முறையில் மாணவர்களை அங்கே தயார் செய்கிறார்கள். எனவே, அவர்கள் அதிகமாக மார்க்குகள் வாங்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கிறது. நேர்காணலுக்கு 300 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன. அதற்கு அங்கே தங்கினால்தான் தமிழக மாணவர்கள் சிறப்பாக செயல்பட முடியும். ரிட்டன் எக்சாமினேசனில் என்னதான் மார்க்ஸ் அதிகமாக வாங்கியிருந்தாலும்கூட நேர்காணலில் குறைவாக மதிப்பெண்கள் பெறுவதால்தான் தமிழக மக்கள் 'ஏ குரூப்' என்று சொல்லக்கூடிய சபாடினேட் சர்விசசுக்கு செல்லக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, ரிசல்ட் வந்து. தேர்காணல் இன்டர்வியூ முடியும்வரை அவர்கள் அங்கே தங்கக் கூடியவரையில் வாய்ப்பை விஸ்தரிக்க . மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்வருவார்களா என மெத்தப் பணிவோடு அறிய விரும்புகிறேன்.



1993 பிப்ரவரி 12]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல, இங்கிருந்து இந்தத் தேர்வுகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு, வேலையில்லாத மாணவர்களுக்கு 3 நாட்களுக்கு சலுகைக் கட்டணத்தில் அங்கே தங்கும் இடமும், உணவும் வழங்கப்படுகிறது. இது ஒரு கெஸ்ட் அவுஸ் ஆக நடத்தப்படுவதால் இங்கிருந்து பலரும் சென்று கொண்டு, வந்து கொண்டு இருப்பார்கள். எனவே நீண்டநாட்கள் அங்கே மாணவர்கள் தங்கியிருப்பதற்கு சலுகைக் கட்டணத்தில் இடம் கொடுப்பதற்கு இதுவரை எந்தச் செயற் குறிப்பும் அரசிடத்தில் இல்லை. இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பணிகளுக்கு இணையான பணிகளுக்கு பப்ளிக் அன்டர்டேக்கிங் என்று சொல்லக் கூடிய பொதுத் துறை நிறுவனங்களுக்கு, ரெயில்வே ரெக்ரூட்மென்ட் போர்ட், ஸ்டாப் செலக்சன் கமிஷன் போன்றவற்றிற்கும் தமிழகத்திலுள்ள மக்கள் நேர்காணலுக்கு டெல்லிக்கு செல்கிறார்கள். அப்படி செல்லக்கூடிய மாணவர்களுக்கும் இந்த வசதியை விஸ்தரிப்பதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இல்லத்திலுள்ள அறைகளை ஒதுக்கீடு செய்வதில் பல வரைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. சலுகைமுறைக் கட்டணம், இடைப்பட்ட முறைக் கட்டணம் மற்றும் மற்றவர்களுக்கான கட்டணம் என அரசால் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் அகில இந்தியப் பணிகள் மற்றும் மத்தியத் தேர்வாணைக் குழு (யூ.பி.எஸ்.சி.) நடத்தும் தேர்வுகளுக்கு தமிழகத்திலிருந்து புதுடில்லி செல்லும் வேலைவாய்ப்பு வசதி கிட்டாத மாணவர்கள் தங்குவதற்கு நான் ஏற்கெனவே சொன்னது போல 3 நாட்கள் சலுகைக் கட்டணத்தில் இடம் தரப்படுகிறது.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லிக்கு நேர்காணல் செல்லும் மாணவர்கள் பெரும்பாலும் ஏழை எளிய மாணவர்களாக இருப்பதால் டெல்லிக்கு அவர்களால் சென்று வரமுடியாத சிக்கலான

சூழ்நிலை இருப்பதால், அந்த இண்டர்வியூ கமிட்டி
சென்னைக்கே வந்து அவர்களை இண்டர்வியூ செய்கிற ஏற்
பாட்டை, மாண்புமிகு முதலவர் புரட்சித் தலைவி அவர்கள்
செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இது தமிழ்நாடு இல்
லத்தில் உள்ள அறைகளை சலுகைக் கட்டணத்தில் அளிப்
பது பற்றிய கேள்வி.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : இதற்குத்
தனிக் கேள்வி போடவும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண். 62,
திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

62—

<u>திருக்கழுக்குன்றம் சங்கு தீர்த்தக் குளத்தை சீரமைத்தல்.</u>

<u>*11785—திரு. பி. சொக்கலிங்கம்</u> :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு
விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றத்தில் உள்ள சங்குதீர்த்தக் குளத்தை
சீரமைக்க அரசு ஆவன செய்யுமா ?

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர்:</u>
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கழுக்குன்றத்தில் உள்ள சங்கு தீர்த்தக் குளத்தை
சீரமைக்க ரூ. 7,50,000-க்கான மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதி
அங்கீகரிக்கப்பட்டு இதற்கான நிதி திரட்டவும் நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது.

<u>திரு. பி. சொக்கலிங்கம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆறரைக் கோடி தமிழ் மக்களின் இதயங்களில்
குடிகொண்டிருக்கும் என்னுடைய தெய்வத்தாய் அவர்கள் இந்
தக் கோரிக்கையை ஏற்று வழிவகை செய்தமைக்காக அன்
னாருடைய பாதங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண். 63, திரு.
தா. வேடியப்பன், மாண்புமிகு நிதியமைச்சர்.





63—

<u>போரூர் கருவூலக் கட்டிடத்தைப் புதுப்பித்தல்.</u>

*11746—<u>திரு. தா. வேடியப்பன் :</u>

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு
விடையளிப்பாரா—

போரூரில் உள்ள கருவூலக் கட்டிடத்தைப் புதுப்பிக்க
அரசு ஆவன செய்யுமா ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:</u>
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போரூரில் உள்ள துணைக் கருவூலம், வட்டாட்சியர்
அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. அக்கருவூலத்
தைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>திரு. தா. வேடியப்பன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்களின் நல்லாட்சியில் நூற்றுக்கணக்கான ஆண்டு
களாக செய்யாத காரியங்களையெல்லாம் சிறப்பாகச்
செய்து கொண்டு இருக்கிறார்கள். 120 ஆண்டுகளுக்கு
முன்பிருந்து அந்தத் துணைக் கருவூலம் தாலுக்கா அலு
வலகத்தில் தனி அறையாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.
இந்தத் துணைக் கருவூலத்தில் 10 அதிகாரிகளும் 71,000
அலுவலர்களும் வந்து பென்ஷன் தொகை பெறுவதற்
கான வாய்ப்பு இருக்கிறது. மேலும் போரூர், பெரணமல்லூர்,
கலசபாக்கம் ஆகிய 3 தொகுதிகளிலிருந்து அரசு அலுவலர்கள்
அங்கே வந்து பென்ஷன் பெறுகிறார்கள். எனவே அந்தக்கரு
வூல அலுவலகத்தின் பகுதியை தனிக் கட்டிடமாகப் புதுப்பிக்க
இந்த நிதியாண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று
அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாநிலத்தில் 202 துணைக்
கருவூலங்கள் இருந்து வருகின்றன. அவற்றில் 58 துணைக் கருவூ
வூலங்கள் அரசாங்கத்தால் கட்டப்பட்ட கட்டிடங்களிலும், 80
துணைக் கருவூலங்கள் வட்டாட்சியர் அலுவலகங்களின் பகுதியி
லும், 58 துணை கருவூலங்கள் வாடகைக் கட்டிடங்களிலும் இயங்
கருவூலங்கள் இருந்து வருகின்றன. இதைத் தவிர 6 கருவூலங்கள் அரசு சார்ந்த பல
கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. போரூரைப் பொறுத்த
வரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது
போன்று பழமையான கட்டிடத்திலேதான் போரூர் துணைக்கரு
வூலம் இயங்கி வருகிறது. அது கருதி, அந்தக் கட்டிடத்தில் சில
பல பழுதுகள் செய்யவேண்டியதன் காரணமாக, போதுமான

[1993 பிப்ரவரி 12

வசதிகள். தேவைகளைச் செய்ய, அதாவது கண்ணாடி பதித்தல் கூடுதலான மின் விசிறிகள், மின் விளக்குகள் அமைந்தல், ஓய் வூதியம் பெறுபவர்கள் அமருவதற்கான தனிக் கூடம் அமைத் தல், தண்ணீர் வசதியுடன் கழிப்பறை கட்டுதல் கேஸ் கவுண்டர் பழுது பார்த்தல், புதிய ஓடுகள் போட்டு, அவற்றில் வெளிச்சம் வருவதற்காக கண்ணாடிகள் பதித்தல், மற்றும் பாதுகாப்பு அறையைச் சுற்றிலும் உள்ள சுவற்றைப் பழுது பார்த்தல் போன்ற பழுது பார்க்கும் பணிகள் ரூ. 1,80,000 மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அதிலே கழிப்பறை கட்டுவதைத் தவிர மற்றைய பணிகள் 1992-93 இறுதிக்குள் செய்து முடிப்பதற்கான முயற்சிகள் மேற் கொள் ளப்பட்டு வருகின்றன. கழிப்பறை கட்டுவது என்பது 1993-94 ஆம் ஆண்டு இரண்டாவது பகுதித் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும். மற்றவைகள் இந்த ஆண்டிலேயே எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும் என்று நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நம் முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசுக்கு இதற்காக என்னுடைய உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நிதி ஆண்டில் பட்ஜெட்டில் அதை எடுத்துக் கொள்ளத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பகுதி பணிகள் இந்த ஆண்டு இறுதிகுள்ளேயே செய்து முடிக்கப்பட்டுவிடும். கழிப் பறை கட்டுவது மட்டும் 1993-94ல் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 64, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

64—

**இராஜபாளையம் வட்டத்தில் 1991-92 ஆம் ஆண்டிற்கு நில வரியைத் தள்ளுபடி செய்தல்.**

11730 திரு. தி. சாத்தையா:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் வட்டத்தில் 1991-92 ஆம் ஆண்டு முழுமையாக மழையே இல்லாததாலும், விவசாயமும் முழுமை யாக நடைபெறாததாலும் இந்த விவசாய ஆண்டில் நிலவரி தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா?



1993 பிப்ரவரி 12]

முற்பகல் 10-10.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

காமராசர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம் உட்பட அந்த மாவட்டத்தைச் சேர்ந்த 6 வட்டங்களில் 1401-வது பசலியில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1991-92 ஆம் வருடத் தில் நிலவரிக்கு வறட்சியின் காரணமாக காமராசர் மாவட்டத் திற்கு எக்சம்ஷன் கொடுத்து இருப்பதை அறிந்து என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் மாவட்டம் சார்பாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், புரட்சித் தலைவி அவர்களின் பொன் னான அரசுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். இந்த வருடத் தில் அதாவது 1992-93 ஆம் வருடத்தில் கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலும் அதிகமாக மழை பெய்து குளங்கள் எல்லாம் நிரம்பி இருந்தாலும், குறிப்பாக காமராசர் மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 60 சதவீதம் டேங்குகள் தான் நிரம்பி இருக்கின்றன. (குறுக்கீடுகள்) 40 சதவீத கண்மாய்கள் முழு வதுமாக நிரம்பவில்லை. ஆகையினால், காமராசர் மாவட்டத் தில் 1992-93 ஆம் வருடத்தில் ஏறத்தாழ 860 மில்லி மீட்டர் மழைதான் பெய்து இருக்கிறது. 1992-93-வது ஆண்டில், கடந்த வருடத்தைவிட இந்த ஆண்டு அதாவது 1992-93-ல் 60 மில்லி மீட்டர் மழை அளவு குறைவாகவே உள்ளது. எனவே இந்த பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் இந்த நிலவரி எக்சம்ஷன் 1992-93 ஆம் ஆண்டில் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு காமராசர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் 48 இலட்சத்து 57 ஆயிரத்து 940 ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. அதேபோன்று வறட்சியாக இருந்த 1991-92 ஆம் ஆண்டில் காமராசர் மாவட்டம், பசும்பொன் மாவட்டம், இராமநாத புரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் 181.79 இலட்சம் அதாவது 1.82 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு அதே போல் பல இடங்களிலிருந்து வெள்ளத்தால் பாதிக் கப்பட்டிருக்கிற கணக்குகளும், காமராசர் மாவட்டத்தில் இருந்து வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிற கணக்குகளும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கோரப்பட்டு இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை வந்த பிறகு அதன் மீது அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1993 பிப்ரவரி 12

திரு. டி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

65—

காட்டுமன்னார்கோயிலில் பெண்கள் கல்லூரி அமைக்கும் திட்டம்.

*10585— திரு. என். ஆர். ராஜேந்திரன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னார்க்காடு மாவட்டம், காட்டு மன்னார்கோயி வில் ஒரு பெண்கள் கல்லூரியினை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோயில் பெண்கள் மேல் நிலைப் பள்ளியை மையமாகக் கொண்டு ஏறத்தாழ 10 மேல் நிலைப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இங்கே கல்வி பயிலும் மாணவிகள், பெண்கள் கல்லூரியில் போய்ச் சேர வேண்டுமானால் அவர்கள் கும்பகோணத்திற்குத் தான் போய்ச்சேர வேண்டும்; அது ஏறத்தாழ 50 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அங்கே கல்வி பயிலச் செல்லும் மாணவிகளுக்கு போதிய இட வசதி தரப்படுவதில்லை. மேலும் அவர்கள் விரும்புகின்ற பாடங்கள் கொடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அங்கே இதுபோன்று அவதிப்படும் பொதுமக்களினுடைய குறைகளைப் போக்கும் பொருட்டு, அவர்கள் ஒரு நீண்ட கால கோரிக்கையாக அங்கே பெண்கள் கல்லூரி வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை நிறைவு செய்யும் பொருட்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் மீண்டும் அதை மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1993 பிப்ரவரி 12]

முற்பகல் 10-15

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக புதிய கல்லூரிகள் எதுவும் திறப்பதில்லை என்ற கொள்கை முடிவில் நாம் இருக்கிறோம். காட்டுமன்னார் கோவில் போன்ற இடங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கின்றன. தேவை இருக்கிறது; இருந்தாலும் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு புதியதாக கல்லூரிகள் திறப்பதில்லை என்ற முடிவை அரசு வைத்திருக்கிறது.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்த வரையில் அடுத்த ஆண்டிலாவது அரசு இதைப்பற்றிப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டில் இந்தக் கேள்வியைக் கேட்கும்படியாகச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு, வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் கல்லூரி தேவையென்பதை அறிந்து, அங்கே இருக்கிற தனியார்கள் கல்லூரிகள் அமைக்க முன்வந்தால் அதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 4 கல்லூரிகள், 5 கல்லூரிகள் பக்கம் அனுமதி தரப்பட்டிருக்கிறது. சமீபத்தில் நன்கொடை வசூலிப்பதைப் பற்றி உச்சநீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் தனியார் வருகிறார்களா, வரமாட்டார்களா என்பது நமக்கு தெரியவில்லை. ஆகவே, ஓரிரு மாதங்களில் நிலைமை தெளிவாகிறபோது இந்தப் பிரச்சினையைப் பற்றி நாம் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தனியார் கல்லூரிகள் ஆரம்பிக்கும்போது அரசு சலுகைகள் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குத் தனிக் கேள்வி கேட்க வேண்டும். துணை வினா மூலவினாவை ஒட்டிய தாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன சலுகைகள் என்பதைத் தனியாகக் கேட்கவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 66, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

66—

இராமநாதபுரம் அரசு கலைக்கல்லூரியில் பட்ட மேற்படிப்பு ஆரம்பித்தல்.

*10850—டாக்டர். எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் அரசு கலைக்கல்லூரியில் பட்ட மேற்படிப்பு ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர். எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். இங்கே ஒரே ஒரு அரசு கலைக் கல்லூரியும், ஒரு தனியார் கல்லூரியும் இருக்கின்றன. தனியார் கல்லூரியில் பட்ட மேற்படிப்புகள் இல்லை. ஆகவே கல்வியின் மூலம் பொருளாதார முன்னேற்றம் காண அயராது பாடுபடும் ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவியின் ஆட்சியில் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம் முன்னேற்றம் கருதி, இந்தப் பகுதி வாழ் மக்களின் நலம் கருதி, பட்ட மேற்படிப்பைத் துவங்க மறுபரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் கலைக் கல்லூரியானது பட்டப் படிப்பு வகுப்புகளைக் கொண்டு நடைபெற்று வருகின்றது. அந்தக் கல்லூரி கடந்த சில ஆண்டுகளாக சரியாக நடைபெறாமலிருந்து, நாம் சில நடவடிக்கைகளை எடுத்து, இப்போது பரவாயில்லை என்ற நிலைமை வந்திருக்கின்றது. அதில் இருக்கிற வகுப்புகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன என்ற நிலைமை வந்ததற்குப் பிறகு பட்ட மேற்படிப்பு தொடங்குவது பற்றி நாம் பரிசீலனை செய்யலாம்.

டாக்டர். எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதியில் அடிக்கடி ஜாதிக் கலவரங்கள் ஏற்பட்டு கல்லூரி அடைத்துக் கிடக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். இங்கே பட்ட மேற்படிப்பு தொடங்கப்பட்டால் இந்தப் பகுதி வாழ் மக்களின் முன்னேற்றம் கருதி செய்தால், இவ்வாறு இருக்கிற பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே நிதி பற்றாக்குறை இருக்கிற இந்தக் கட்டத்தில் புதிய கல்லூரி தொடங்க வாய்ப்பு இல்லாத காரணத்தால், இருக்கிற ஆசிரியர்களை வைத்து அரசுக்கு அதிகச் செலவு இல்லாமல் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில், எம்.ஏ., (தமிழ்), எம். ஏ., (ஆங்கிலம்), எம். காம்., போன்ற வகுப்புகளைத் தொடங்க அரசு உடனடியாக முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ட மேற்படிப்பு என்று ஒரு வகுப்பைத் தொடங்கினாலே கூடுதல் செலவுக்கு இடம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, செலவைப்பற்றி நாம பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, அரசின் நிதிநிலையில வருகிற நிதிநிலை அறிக்கையில், எந்த அளவுக்கு பணம் ஒதுக்கப்படுகிறதோ அந்த அடிப்படையில் இதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 67, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

67—

Approval by Pollution Control Board for New Industries

* 9166 Tmt. K. Mariaulasia :

Will the Hon the Minister for Health be pleased to state :

[1993 பிப்ரவரி 12

(a) Whether the Government propose to make it obligatory on the part of industry for opening new units and for expansion of the existing units in this State to get a clearance from the Pollution Control Boards in the State and Centre ; and

(b) if so, the details thereof;

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம், இது குறித்த ஆணை அமலில் உள்ளது.

(ஆ) வெவ்வேறு தொழிற்சாலைகளுக்கும் அதன் விவரங்கள் வேறுபடும்.

முற்பகல் 10.20

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்துறையில், தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக விளங்கவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் செயலாற்றி வருகின்ற நமது தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், இதுபற்றி அமலில் இருக்கப் போவதாக அறிவித்துள்ளார்கள். நன்றி. இதைப் போல தமிழகத்தில் மற்ற மாவட்டங்களிலே இந்த மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தை தனித் தனியாக அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் தனித் தனியாக இதற்கு என்று தலைமை அலுவலகத்தை அமைக்க முடியாது. ஏற்கனவே, அதற்கான பொறியாளர்கள் அந்தந்த மாவட்டங்களிலே இருக்கிறார்கள். அந்தப் பொறியாளர்கள் மூலமாகத்தான் இந்தப் பணி இப்போது நடந்து வருகிறது. எனவே, இப்போது இருக்கின்ற அமைப்பே அதற்குப் போதுமானதாக அந்தப் பணியை முழுவதுமாக செய்வதற்குக் தகுதி உடையநாக இருக்கின்ற காரணத்தால், அதை மேலும் விரிவாக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று கருதுகிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை வைத்து, திருச்சி மாவட்டத்திலே இருக்கின்ற நிலையைப் பார்த்து, அதற்கு ஏதாவது கூடுதலாக தேவை என்றால், அவசியம் இருந்தால் மட்டும் அதுபற்றி ஆலோசனை செய்யப்படும்.



1993 பிப்ரவரி 12]

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த முடியவில்லை என்றாலும் முக்கியமாக தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்ற மாவட்டங்களில் மட்டுமாவது, அந்த அலுவலகத்தை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமை அலுவலத்தைத்தான் ஆங்காங்கே அமைக்க முடியாது என்று சொன்னேன். ஆனால், அந்தந்த மாவட்டங்களிலே அதற்கான அலுவலர்கள் பணியாற்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்கான அலுவலகம் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக அதிகமாக தொழிற்சாலைகள் இருக்கின்ற இடத்திலே பணியாளர்கள் கூட அதிகமான எண்ணிக்கையிலே இருக்கிறார்கள். எனவே, தற்போதிருக்கிற சூழ்நிலையே சரியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மாசை உண்டாக்காத தொழிற்சாலைகளாக இருந்தும், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய ''நோ அப்ஜக்சன் சர்ட்டிபிக்கேட்டை'' வாங்கவேண்டும் என்ற கட்டாயமான சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதற்கு விலக்கு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்தந்த தொழிற்சாலைகள் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திலே அனுமதியை பெறவேண்டும் என்று ஒரு வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. அதன்படி, மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. மிக அதிகமாக மாசை ஏற்படுத்தக் கூடியது, மாசை அதிகமாக ஏற்படுத்தாத நடுநிலையில் இருப்பது, மாசையே ஏற்படுத்தாது இருக்கிற தொழிற்சாலை. இப்படி மூன்று விதமாகப்பிரிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அந்த வகையிலேதான் அனுமதியைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அந்த முறை தொடர்ந்து இருக்கவேண்டும். காரணம், குறிப்பாக பல இடங்களிலே வேறு ஒரு தொழிலைச் சொல்லி, அவர்கள் சான்றிதழைப் பெற்றுவிட்டு, அதற்குப் பின்னாலே மாசை ஏற்படுத்தக்கூடிய நிலையை உருவாக்கிவிடுகிறார்கள். எனவே, இப்போது இருக்கிற நிலையிலேயிருந்து மாற்றுவதற்கு வாய்ப்பில்லை.

[1993 பிப்ரவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 68,. திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர்.

68—

பட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள தனியார் காசநோய் சங்கம்

*9769 திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் இருக்கும் I.B. Association—Private—ஐ அரசு எடுத்துக் கொள்ள ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ; பட்டுக்கோட்டை தொ[illegible] இருக்கும் T. B. Association Private—ஐ அரசு எடுத்துக் கொள்ளும் நிலையில் இல்லை. இத்தனியார் மருத்துவ-மனையை அரசால் ஏற்று நடத்த இயலாது எனவும் இதை நடத்த பொருளுதவிகளைப் பெறுவதற்கான வழிவகைகளை மாவட்ட கோட்ட காசநோய்க் கழகம் ஆராய்ந்து தக்க நட வடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அரசு ஏற்கனவே கூறியுள்ளது.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நமது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில் ஓரளவிற்கு நிம்மதியைத் கொடுத் திருந்தாலும், நான் இன்னும் சில விரிவான விளக்கங்களைச் சொல்லவேண்டும் என்று கருதுகிறேன். இந்த டி. பி, அசோசி யேசன் என்பது, தனியாரால் நிறுவப்பட்டு அது நடந்து வந்த போதிலும் அங்கே வேலை செய்பவர்களுக்கு—குறிப்பாக 4, 5 நபர்கள்தான் வேலை செய்கிறார்கள்– பல மாதங்களாக சம்பளம் கொடுக்காததினால்: அந்த அசோசியேசன் மூலமாக தீர்மானம் போடப்பட்டு, அது ரீஜினல் மெடிக்கல் ஆபீசர் அவர்களால் சிபாரிசு செய்யப்பட்டு, அரசாங்கத்திற்கு அதை எடுத்துக் கொள்ள வழிசெய்யக் கோரப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலசுப்பிரமனியன், நான் விரிவாகச் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு நீங்கள் விரிவாகத்தான் சொல்கிறீர்கள். ஆனால் துணைக் கேள்விதான் கேட்கவேண்டும். எனவே, துணைக் கேள்வியாக மட்டும் கேளுங்கள். அமைச்சருக்கு அந்த விளக்கங்கள் எல்லாம் தெரியும்.



1993 பிப்ரவரி 12]

திரு. கி. பாலசுப்பிரமணியன் : இதைப்பற்றி நமது மாண்பு மிகு நிதி அமைச்சரிடம் ஒரு முறை நான் உரையாடியபோது, அவர்கள் சொன்னார்கள். அதில் எந்தவிதமான சிக்கல்களும் இல்லை, அதை எடுத்துக்கொள்வதற்கு சாத்தியம் இருக்கிறது. என்னிடம் அந்த பைல் வநதால், அது கவனிக்கப்படும் என்று சொன்னார்கள், எனவே, அரசாங்கம் இதைக் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நிதி அமைச்சரிடம் கேட்டது, அவர் சொன்னது இவை எல்லாம் கேள்வி நேரத்திலே வரக்கூடாது. கேள்வியாகக் கேளுங்கள்.

முற்பகல் 10-25

திரு. கி. பாலசுப்பிரமணியன் : இந்த ஆண்டிலாவது அதை அரசு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இதைப் பற்றி என்னிடத்திலே விரிவாக தெரிவித்தார்கள் அவர் களுக்கு இருக்கின்ற ஆதங்கத்தை, அங்கே இருக்கின்ற பணியாளர் களுக்கு பல மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கின் றது என்ற அந்த உணர்வை அவர்கள் தெரிவித்தார்கள். அந்த நிலை உண்மை என்பதும் எங்களுக்குத் தெரிகிறது. இருந் தாலும் அரசாங்கத்திற்கு தற்போது இருக்கின்ற நிதிப் பிரச்சினை யின் காரணமாக கூடுதல் சுமையை ஏற்படுத்த முடியாது என்ற காரணத்தால் தான் அதை எடுத்துக் கொள்ள முடியாத நிலையிருக் கிறது. அதன் காரணமாக அங்கே காசநோய் மருத்துவமனை மட்டும் தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. அங்கேயிருக்கின்ற கருவிகள் மிகப் பழையதாகவும் பழுதடைந்ததாகவும் இருக்கின்றது எனவே அது நமக்கு உபயோகமானதாக இருக்காது என்பதையும் அதே சிகிச்சை கொடுப்பதற்கு பக்கத்திலே இருக்கின்ற நிறைய மருத்துவமனைகளிலே இப்போது வசதி இருக்கின்ற காரணத்தாலும் தான் அதை எடுப்பதிலே சாத்தியம் இல்லை என்று நான் தெரிவித் தேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் இவ்வளவு வலியுறுத்திச் சொல்கிற காரணத்தால் அதைப் பற்றி மீண்டும் ஒரு முறை நாங்கள் ஆய்வு செய்கிறோம். ஏற்கெனவே நான் சொன்ன படி மாவட்ட கோட்ட காசநோய்க் கழகம் அதை நடத்துவதற்கு நிதியைத் திரட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று வலியுறுத் தப்பட்டிருக்கிறது. எனவே நிதியமைச்சரோடும் மாண்புமிகு உறுப் பினரவர்கள் பேசியதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே நானும் நிதியமைச்சர் அவரிடத்திலே இதைப் பற்றி பேசி நிதியிருக்கு மென்று அவர் சொன்னால் அதற்குப் பின்னாலே அதைப் பற்றி ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கமாக பதில் அளித்ததற்கு நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இருந்தபோதி

[1993 பிப்ரவரி 12

லும் அந்த மெஷின்கள் எக்ஸ்ரே யூனிட் மெஷின் சிமென்ஸ் கம்பெனியால் சப்ளை செய்யப்பட்டு பல லட்சங்கள் மதிப்புள்ளது. அது இன்றும் இயங்கி வருகின்றது. அது பழுதடைந்துள்ளது என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை நான் நேரிலே பார்வையிட்டபொழுது அதிலே சார்ஜ் செய்யக்கூடிய விலையானது மிகவும் குறைவாக இருக்கிறது. பட்டுக்கோட்டை தொகுதி மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதிகமான தொகை கொடுத்து எக்ஸ்ரே எடுக்கமுடியவில்லை பல லட்சம் மதிப்புள்ள அந்தக் கட்டடத்தையும் அவர்கள் டொனேஷனாக அரசுக்குத் தருவதாக இருக்கிறார்கள். அதையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கத்திற்கு இந்த நிலையில் எந்த நஷ்டமும் வராத வகையில்தான் இந்த கொஸ்டினை நான் எழுப்பினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மட்டுமல்ல. இங்கே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் ஒரு பக்கமும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இன்னொரு பக்கமும் இருந்து அதை எடுத்துத்தான் ஆகவேண்டுமென்று இங்கே தெரிவிக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் இதிலே ஒத்துக்கொண்டால் நிச்சயமாக இதுபற்றி ஆலோசிக்கப்படும். நிதிப் பிரச்சினை தான் இதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கிறது. அத்தோடு அங்கே இருக்கின்ற அந்தக் கருவியைப் பொறுத்தவரையில்........ குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் நிதியமைச்சர் ஒத்துக்கொண்டால் என்று சொல்வது சரியல்ல. நிதித் துறை என்று வர வேண்டும். அவர் ஏதோ இதிலே குறுக்கே நிற்கிறார் என்பது போல் வந்துவிடும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நான் அவர் குறுக்கே நிற்கிறார் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'நிதித் துறை ஒத்துக் கொண்டால்' என்று சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அங்கே இருக்கின்ற அந்தக் கருவி கூட மிகப் பழையது. இப்போது லேட்டஸ்ட் எகிப்யூமெண்ட்ஸ் எவ்வளவோ வந்திருக்கின்றன. எனவே அதன் காரணத்தால் தான் சொன்னேன். இருந்தாலும் நிதி அமைச்சரோடும், நிதித்துறையோடும் அதைப் பற்றி பேசி முடிந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ ஸ்ரீதரன்.



1993 பிப்ரவரி 12]

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தனியார் காசநோய் சங்கங்களில் அரசு சட்ட திட்டங்களை அறிந்து, அதற்குட்பட்டு, தகுதிவாய்ந்த தொண்டு நிறுவனங் கள் பங்கேற்க முன்வந்தால் அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதற்கு தயாராக இருக்கிறது. அப்படி இருப்பவர்கள் யாரையாவது கண்டிப்பாகக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் இருக்கின்ற அந்த காசநோய் நிறுவனம், அவர்களுக்கு முறையாக சம்பளம் வழங்காததோடு மட்டுமல்ல, அவர்களில் சம்பளம் பெறுபவர்கள்கூட ஒழுங்காக வேலை செய்வதில்லை. அந்த வேலை செய்கின்ற வர்களை முறைப்படுத்துவதற்கும், அதேபோல் முறையாக அவர்களுக்கு தொடர்ந்து சம்பளம் வழங்கினால் முறையாக செயல்படுவோம் என்ற உறுதியினையும் கொடுக்கிறார்கள். அந்த இரண்டையும் முறைப்படுத்தி முறையாக செயல் படுத்துவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பது ஒரு பக்கம். சம்பளம் வாங்கிக் கொண்டு சில பேர் சரியாக வேலை செய்யவில்லை என்பது அதற்கு எதிர்மாறாக இருக் கிறது. அவர்களையும் சேர்த்து நடவடிக்கை எடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலை நமக்கு இருக்கத்தான் செய்கிறது. எனவே அவைகளையெல்லாம் முறைப்படுத்த வேண்டுமென்று சொன் னால், மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்து, நாம் முறைப் படுத்தித்தான் ஆகவேண்டும். அதைப்பற்றி நாம் எடுக்கிற பொழுது ஆழமாக ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 69, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1993 பிப்ரவரி 12

69—

விபத்து இல்லாமல் பேருந்துகளை ஓட்டுதல் மற்றும் பராமரித்தல் பற்றிய பயிற்சி முகாம்கள் அமைத்தல்.

*9146—திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விபத்து இல்லாமல் பேருந்துகளை ஓட்டுவது பற்றியும், பராமரிப்பது குறித்தும் பேருந்து ஓட்டுநர் நடத்துனர்கட்கு சிறப்புப் பயிற்சி அளிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும் இதுபோன்ற பயிற்சி முகாம்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் ஓட்டுநர் நடத்துனர்கட்கு விபத்தின்றி பேருந்துகள் ஓட்டுவது பற்றியும் பராமரிப்பது பற்றியும் சிறப்புப் பயிற்சி ஏற்கனவே அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக வேகமாகச் சென்று விபத்து நடைபெறுவதைத் தடுக்க, இதற்கு முன்பு எலக்ட்ரானிக் மீட்டர் பொருத்தப்பட்டிருந்தது. அதை வண்டிகளில் பொருத்தினால் டிரைவர்களுக்கு, மிக வேகமாக செல்லுகிற வண்டிகளுக்கு ஒரு கட்டுப்பாடு இருக்கும், விபத்தைத் தடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும். அது மட்டும் அல்லாமல் அந்த விபத்துக்கள் எப்படி எல்லாம் நடைபெறுகிறது. அதனை எப்படியெல்லாம் தடுக்க வேண்டும் என்பதைப் பார்த்து, பரிசீலிக்க ஒரு பயிற்சி முறையை ஒவ்வொரு மாநிலத்திலும் ஆரம்பித்து வைத்தால் நடத்துநர்களுக்கும், டிரைவர்களுக்கும் அது உறுதுணையாக இருக்கும். அதை அரசு பரிசீலிக்குமா, என்று அறிய விரும்புகிறேன்.



1993 பிப்ரவரி 12]

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலக்டிரானிக் மீட்டர் வைத்து ஒரே வேகத்திலே அந்தப் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று அரசு முதலில் முடிவு எடுத்து செயல் பட்டபோது, சீரான முறையிலே அந்த வேகத் தடையின் காரணமாக நல்ல பாதைகளில் வேகமாகச் செல்ல முடியாத காரணத்தால் அந்த வேகத்தை ஈடுகட்டமுடியவில்லை என்கிற காரணத்தினால் அரசு பரிசீலித்து அதை அப்புறப் படுத்தியிருக்கிறது. நீங்கள் குறிப்பிட்டதைப் போல வாகனங்கள் எப்படி செல்ல வேண்டும்; எந்தெந்த வழிகளிலே எப்படிப் பேருந்துகளை இயக்க வேண்டும் என்பதற்காக ஆண்டுதோறும் ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலேயும் ஓட்டுநர், நடத்துநர் அத்துணை பேர் களுக்கும் தேவையான பயிற்சிகளை இந்தத்துறை நடத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ.து.வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துக்கள் இல்லாமல் மிகச் சிறந்த முறையிலே வண்டிகளை ஓட்டுகிற ஓட்டுநர்களுக்கும் நடத்துநர் களுக்கும் பரிசுகள் அளிக்கின்ற திட்டம் அரசிடம் உள்ளதா? விபத்துக்களைத் தடுக்க முயலாமல் தவறான முறையிலே விபத்துக்களை செய்கின்றவர்களுக்குத் தண்டனை வழங்க கண் காணிப்புத் திட்டங்கள் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல விபத்துக்கள் இல்லாமல் ஓராண்டு முழுவதுமாக சிறப்பாக ஓட்டுபவர்களுக்கு 100 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. அவர்கள் சிறப்பான முறையிலே இரண்டாவது ஆண்டும் விபத்துக் களைத் தவிர்த்து ஓட்டினால் 125-லிருந்து 175 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. மூன்றாவது ஆண்டும் விபத்துக்கள் இல்லாமல் சிறப்பான முறையிலே ஓட்டுபவர்களுக்கு 150-லிருந்து ரூபாய் 200 வரை அவர்களுக்கு வழங்கப் படுகிறது. நான்காவது ஆண்டும் விபத்துக்கள் இல்லாமல் ஓட்டுபவர்களுக்கு 175-லிருந்து ரூபாய் 225 வரையிலும் வெகுமதியாக வழங்கப்படுகிறது. 5 ஆண்டுகள் சீராக விபத்துக்கள் இல்லாமல் ஓட்டுபவர்களுக்கு 200 ரூபாயி லிருந்து 250 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. அதே போல ஓட்டுநர், நடத்துநர்களுக்கு சிறப்புப்பயிற்சி அளிக்கப் படுவதோடு, 'கொஞ்சம் நில்லுங்கள்' என்ற திரை படம்கூட வீடியோ மூலமாகக் காட்டப்படுகிறது.

நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பிறகு நல்ல முறையிலே இந்தத் துறை இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஆ. கு. சீனிவாசன்.

<u>திரு. ஆ. கு. சீனிவாசன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பயிற்சி அளித்து அதன் மூலமாக விபத்துக்களைத் தடுக்கலாம் என்று மேற்கொண்ட முயற்சி நமக்கு மிக மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழகத்திலே சில சாலைகள் மிகக் குறுகலாகவும், வளைவாகவும் மிகவும் பழுதுபட்டும் இருக்கின்றன. எந்த சாலைகளை அகலப்படுத்த வேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் பரிந்துரை செய்கிறார்களே, அந்த சாலைகளை முன் உரிமை கொடுத்து சரி செய்தாலேயே பெரிய விபத்துக் களைத் தடுப்பதற்குப் பெரும் வாய்ப்பாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே.ஏ.செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன யோசனை நல்ல யோசனைதான். ஆனால் அந்த சாலைகளின் சில இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. சென்னையிலிருந்து செங்கல்பட்டுவரை செல்லும் சாலையை, ஈஸ்ட்கோஸ்ட் ரோடு என்ற வகையில் பொதுப்பணித் துறை வேலைகளை மேற்கொண்டாலும்கூட ஏதோ ஒரு காரணத்தை வைத்து தடை வாங்கி விடுகிறார்கள். அந்தத் தடையை அகற்றிவிட்டால் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சொல்லுகிற சாலையை சீர் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 70 திரு தே. ஜனார்தனன் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

70—

<u>குறிஞ்சிப்பாடியில் தயாரிக்கப்படும் லுங்கிகள், பட்டுப் புடவைகளை கோ-ஆப் டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்தல்</u>

*9870 <u>திரு. தே. ஜனார்தனன் :</u>

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) குறிஞ்சிப்பாடியில் தனியார்கள் லுங்கிகள் பட்டுப்புடவைகள் ஆகியவற்றை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து அதிக லாபம் ஈட்டுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்யுமா ?

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்,</u> கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குறிஞ்சிப்பாடியில் தனியார் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. மாறாக தனியார் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் லுங்கிகள் துறையால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) கோ-ஆப்டெக்ஸ் மூலமாக தனியார் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிகளைக் கொள்முதல் செய்ய இயலாது.

முற்பகல் 10-35.

<u>திரு. தே. ஜனார்தனன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் மூலமாக உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசிடம் பரிசீலனையில் இருக்கிறதா?

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக உற்பத்தி செய்யப்படுகின்ற சேலைகள், பட்டுப் புடவைகள், லுங்கிகள் போன்றவைகள் மற்றும் இதர ரக துணிகள் தற்போது கோ-ஆப்டெக்ஸின் வாயிலாக ஏற்றுமதி செய்யப்படுகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. கு. சிவசுப்பிரமணியன்.

<u>திரு. கு. சிவசுப்பிரமணியன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீழ்ச்சியுற்ற இந்த தமிழ் சமுதாயத்தை அகில இந்திய அளவில் மட்டுமல்ல, அகில உலக அரங்கில் இறுமாந்து நிற்க வைக்க, செம்மாந்து நின்று செருக்கு நடை போட வைப்பேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டு தன் உயிரையே பணயம் வைத்து இன்று அன்னை தமிழாய் அழகுத்தமிழாய்' அணையா விளக்காய், வடலூர் வள்ளலார் ஏற்றி வைத்த அணையா ஜோதியாய் ஒளிவீசிக் கொண்டிருக்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் நல்லாட்சியில்தான்

[1993 பிப்ரவரி 12

குறிஞ்சிப்பாடியில் நெசவாளர்களுக்கு 28-1-1993-ல் 140 வீடுகளைக் கட்டி மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும் திறந்து வைத்தார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிஞ்சிப்பாடியில் 7, 8 இடங்களில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அதில் சிங்கமுனேரி டெக்ஸ் என்ற கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அதிலே லுங்கிகள்தான் நெய்யப்படுகின்றன. கொசுவலைகளும் நெய்யப்படுகின்றன. அந்தக் லுங்கிகளை ரிபேட்டில் அளிக்கின்றபோது ஒட்டு மொத்தமாகத் தனி நபர்கள் வாங்கிக் கொண்டு அதை வெளிநாட்டிற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தற்சமயம் அரசுக்கு இருக்கின்ற பொருளாதார நெருக்கடியில் தமிழக அரசே அதை ஏற்றுக் கொண்டு, அந்த லுங்கிகளைப் பெற்று வெளிநாடுகளுக்கு அந்நியச் செலவாணிக்கு உதவும் வகையில் ஏற்றுமதி செய்ய முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையின் போது புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனைக்கிணங்க ஏஜெண்ட்ஸ்கள் வாயிலாக பிற நாடுகளில் ஏஜென்சிகளுக்குத் தருவதாக உத்தேசிக்கப்பட்டு அதற்கான ஆக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கைத்தறித் துறையின் சார்பிலும், கோ-ஆப்டெக்ஸின் சார்பிலும் தற்போது ஏறத்தாழ 1 கோடி ரூபாய் கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். அதிகமாக ஏற்றுமதி செய்வதற்கு திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். மிக விரைவில் குறிஞ்சிப்பாடி போன்ற பகுதிகளில் அதிகமாக உற்பத்தி செய்கின்ற அந்த லுங்கிகளை ஏற்றுமதி செய்வதற்குத் திட்டமிடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> வினா எண் 71, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

71—

<u>சென்னை மெரினா கடற்கரையிலிருந்து மகாபலிபுரத்திற்கு கடலோரமாக சாலை அமைக்கும் திட்டம்.</u>

<u>*10656—திரு. எம். கே. பாலன்:</u> மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மெரினா கடற்கரையில் ஆரம்பித்து கடல் ஓரமாக மகாபலிபுரத்துக்குச் செல்லும் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1993 பிப்ரவரி 12]

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> பொதுப் பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மெரினாவிலிருந்து திருவான்மியூர் வரை நல்ல சாலை போக்குவரத்து இருப்பதால் திருவான்மியூர் முதல் கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாடு செய்யப்பட உள்ளது.

(ஆ) அநதப பணியினுடைய செயலாக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

<u>திரு. எம். கே. பாலன்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரை ஓரமாக சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா என்று கேட்டிருக்கிறேன். அதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரையில் ஆரம்பித்து கடல் ஓரமாக மகாபலிபுரத்திற்குச் செல்லும் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பது கேள்வி. ஆகவே மகாபலிபுரம் வழியாக இந்த கிழக்கு கடற்கரைச் சாலை செல்லுகிற காரணத்தினால் கிழக்கு கடற்கரைச் சாலை பற்றி நான் இங்கே குறிப்பிட்டேன். ஆகவே மகாபலிபுரம் செல்லுகின்ற கிழக்கு கடற்கரைச் சாலை பற்றி வருகின்ற காரணத்தினால் நான் இந்தக் கேள்விக்கு இந்த பதிலை அளித்திருக்கிறேன்.

<u>திரு. எம். கே. பாலன்:</u> தலைவர் அவாகளே, சென்னை மெரினா கடற்கரையிலிருந்து மகாபலிபுரத்திற்கு சாலை அமைக்கும் திட்டம் கடந்த 1969 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அடையாறு முகத்துவாரத்திலே ஒரு மிகப் பெரிய பாலம்—மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ரிக்ஷாக்காரன் படத்தில் நடித்ததால், அந்த பிரிட்ஜுக்கு ரிக்ஷாக்காரன் பிரிட்ஜ் என்று பெயர் இருந்தது. அந்த ரிக்ஷாக்காரன் பிரிட்ஜ்—10 வருடங்களாகக் காணவில்லை. அது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையிலிருந்து வேறு வழியாக மகாபலிபுரத்திற்கு சாலை என்றால் அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10.40

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> வினா எண் 72. திருமதி ஜெ. லோகாம்பாள், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் சு. மணிமேகலை கேட்கிறார்.—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

72—

## லால்குடி பேருந்து நிலையத்திற்கு கட்டிட வசதி ஏற்படுத்தல்.

*10379—திருமதி ஜெ. லோகாம்பாள் :
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி பேருந்து நிலையம் போதிய கட்டிட வசதி இல்லாமலும், இடவசதி இல்லாமலும் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், போதிய வசதிகள் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்பொழுது இயங்கிவரும் பேருந்து நிலையம் போதுமானதாக உள்ளதால் பேருந்துகள் சென்று வருவதற்கோ, பொது மக்களுக்கோ இடையூறு ஏதுமில்லை.

(ஆ) பேரூராட்சி நிதி நிலைமை பற்றாக்குறையாக உள்ளதாலும், தற்போது இயங்கி வரும் பேருந்து நிலையம் போதுமானதாக உள்ளதாலும் தற்போது இயங்கிவரும் இடத்தைத் தவிர வேறு இடம் ஏதுமில்லை என்பதாலும் லால்குடி பேரூராட்சியில் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் சு. மணிமேகலை: மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து ஜெயங்கொண்டம், அரியலூர், சிதம்பரம், தஞ்சாவூர், அன்பில் ஆகிய அனைத்து ஊர்களுக்குச் செல்லும் பேருந்துகளும், மையமாக உள்ள லால்குடி வழியாகத்தான் செல்லுகின்றன. அனைத்துப் பேருந்துகளும் லால்குடி பேருந்து நிலையத்திற்குள் நுழையும் போதும், லால்குடி பேருந்து நிலையத்தை விட்டு வெளியே வரும்போதும் ஒரு குறுகிய பாலத்தின் வழியாகத்தான் வர வேண்டியிருக்கிறது. அதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. ஆகவே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் உயிர்ச் சேதத்தைத் தவிர்க்கும் வகையில் மக்கள் நலன் கருதி புதிய பேருந்து நிலையத்தை அமைக்க அரசு ஆவன செய்ய முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடியில் பேருந்து நிலையத்தை ஏற்படுத்த பல்வேறு நிலைமைகளில் அந்த இடத்தில் நிலத்தை ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்தாலும் நிலம் கிடைக்காத



சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அந்தப் பகுதியில் நிலத்தை வாங்கித் தருவதற்கு ஏற்பாடு செய்வார்களானால் நிச்சயமாக பேருந்து நிலையம் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 73, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

73—

## செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

*10881— திரு. எம். பூராசாமி:
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செம்பனார் கோவில் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பது குறித்து தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. மேலும், தற்போது உள்ளாட்சி நிறுவனங்களில் எவ்வித நிர்வாக மாற்றங்களும் செய்தல் கூடாது என அரசின் தடையாணை அமலில் உள்ளது. தடையாணை விலக்கப்பட்ட பின்பு உரிய கருத்துரு அரசுக்கு வரப்பெற்றால் பரிசீலிக்கலாம்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். பூராசாமி: மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியம் தமிழ் நாட்டில் பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருக்கிறது. நிர்வாக வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே அதை நடப்பு நிதி ஆண்டிலே இரண்டாகப் பிரிக்கும் செயற்குறி[illegible] உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

[1993 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பனார் கோவில் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பது பற்றி அரசினுடைய தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்ட பின் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திரு. எஸ். அண்ணாமலை, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

74—

ஆலந்தூரிலுள்ள மூடப்பட்ட ரேஷன் கடைகளை மீண்டும் திறக்கும் நடவடிக்கைகள்.

*10193—திரு. எஸ். அண்ணாமலை :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் நெம்பர் (1), நெம்பர் (2) எண்ணுள்ள மூடப்பட்ட ரேஷன் கடைகளை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென் சென்னை பரங்கிமலை மண்டலம், ஆலந்தூர் ஏகாம்பர டபேதார் தெருவில், செங்கல்பட்டு மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையினரால் நடத்தப்பட்டுவந்த 2 அங்காடிகள் 8-2-1992ல் ஆட்டோ ஆனந்தன் என்பவர் கடை பணியாளர்களை மாமூல் கேட்டு கொடுக்க மறுத்ததால், அவர்களை ஓட ஓட விரட்டி மண்ணெண்ணெய் பேரலை தெருவில் உருட்டி, பொது மக்களுக்கு பீதி ஏற்படுத்திய காரணத்தால், 8-2-1992 லிருந்து அந்தக் கடைகள் மூடப்பட்டு மாற்று ஏற்பாடாக அருகில் இருக்கும் நியாயவிலை அங்காடியுடன் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டன. மேற்படி சமூக விரோதி ஆட்டோ ஆனந்தன் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டதையடுத்து, 1-4-1992 லிருந்து அதே இடத்தில் இரு அங்காடிகளும் மீண்டும் திறக்கப்பட்டு தக்க பாதுகாப்புடன் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, திரு. கே முனிவெங்கடப்பன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



1993 பிப்ரவரி 12]

75—

எல்லா மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் கணிப்பொறி வைக்கும் திட்டம்.

*11390—திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் கணிப்பொறி (Compuior) வைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நல அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மைய அரசின் நிதி உதவியுடன் தற்போது சென்னையில் அடையாறு, அண்ணாநகர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 4 மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகப் பணிகள் கணிப்பொறி (Computor) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் நடப்பு நிதியாண்டில் மேலும் 6 வேலை வாய்ப்பு அலுவலகங்கலை கணிப்பொறியின் மூலம் செயல்படுத்த அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. இத்திட்டம் படிப்படியாக அனைத்து வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் செயல்படுத்தப்படும்.

முற்பகல் 10-15.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எந்தத் துறையிலும் மிக நவீன விஞ்ஞான நுட்பத்தைப் புகுத்தி இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் செய்து வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலே சிறந்த, நவீன விஞ்ஞானங்களைப் புகுத்துகின்ற ஒரு சாட்சியாக ஏழரை மாதங்களில் நேரு ஸ்டேடியத்தை 'ஏஷியன் குயின்' என்று சொல்லக் கூடிய அந்த நேரு விளையாட்டு அரங்கத்தைக் கட்டி முடித்திருக்கும் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே இந்த ஆண்டிற்குள் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் கணிப்பொறி நிறுவப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1993 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் 6 அலுவலகங்களில் கணிப்பொறி ஆக்குவதற்காக அரசு ஆணைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. படிப்படியாக மற்ற அனைத்து மாவட்டங்களுக்கும் வரும் ஆண்டுகளில் நிதிநிலையை அனுசரித்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. முனவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் சிறந்த முறையில், சிறப்பான முறையில், நேர்மையான முறையில் செய்து வரும் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே இந்த ஆண்டு தர்மபுரி மாவட்டத் தலை நகரில் இந்த கணிப்பொறி நிறுவப்படுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் தர்மபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை கணிப்பொறி மயமாக்க எந்தச் செயல்பாடும் அரசின் குறிப்பில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

76—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலுள்ள அரசு விவசாய கிடங்குகள்.

*11094—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதி வேலப்பாடி, கண்ணமங்கலம், எஸ்.வி. நகரம், ஆத னூர் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு விவசாய கிடங்குகளிலிருந்து போலி பர்மிட்கள் மூலம் உரங்கள் எடுத்துச் செல்லப்பட்டு உர வியாபாரிகளுக்கு அதிக விலைக்கு விற்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1993 பிப்ரவரி 12]

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 78, திரு. கே. செல்வராஜ், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சிங்கை கோவிந்தராசு. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

78—

பச்சிளங் கைக்குழந்தைகளுக்கு ராகி மாவு, பால் பவுடர் ஆகியவைகள் இலவசமாக வழங்கும் திட்டம்.

*11818—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பச்சிளங் கைக்குழந்தைகளுக்கு ராகி மாவு, பால் பவுடர் இலவசமாகக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராகி மாவு கொடுக்கப்படுகிறது. பால் பவுடர் இலவசமாகக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லாத நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் ஏழையெளியவர்களுக்காக சத்துணவுத் திட்டம் மூலம் பல்வேறு நலத் திட்டங்களைக் கொடுத்திருந்த போதிலும், கடந்தகாலத்தில் ஏழையெளிய குழந்தைகளுக்கு, பள்ளிகளிலே பயிலுகின்ற குழந்தைகள்வரை பால் பவுடர் திட்டம் வழங்கப்பட்டு வந்தது. அந்தத் திட்டத்தின் வாயிலாக தமிழகத்திலே இருக்கக்கூடிய நலிவுற்ற குழந்தைகளின் உடல், வளம் பெறுகின்ற வகையிலே அமைந்திருந்தது. அந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

[1993 பிப்ரவரி 12

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தின்கீழ் 6 மாதம் முதல் 3 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கோதுமை, ராகி, சோயா மாவு, வெல்லம், வைட்டமின் கலவை, தாது உப்பு ஆகியவை அடங்கிய சத்து உருண்டை தினமும் வழங்கப்படுகிறது. இந்த சத்து உருண்டையில் 100 கிராம் அளவிற்கு 380 கலோரி சத்து உள்ளது. இது தவிர, பரிசோதனை அடிப்படையில் மதுரை, பெரியகுளம் பகுதியில் காலை வேளையில் பாசிப் பயிறு வேக வைத்து குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டால் உலக வங்கியின் உதவியுடன் பிற பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும். ஆகவே, எல்லா வைட்டமின் சத்துக்களும் நிறைந்து இருக்கிற ராகி மாவும், சோயா மாவும், கோதுமையும் தரப்படுகின்ற காரணத்தினால், பால் பவுடர் தருகின்ற திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 79, திரு. ஆர். பி. பரமசிவம். மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

79—

## தமிழ்நாட்டிலுள்ள இறால் பண்ணைகள் மூலம் கிடைக்கும் வருமானம்

*9698—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இறால் பண்ணைகள் எத்தனை உள்ளன ?

(ஆ) அவற்றின் மூலம் அரசிற்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.



1993 பிப்ரவரி 12]

## அறிக்கை.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் 10 இறால் பண்ணைகள் கீழ்க்கண்ட இடங்களில் அரசால் நடத்தப்படுகின்றன:—

1. பழவேற்காடு.
2. வாணியஞ்சாவடி.
3. தொண்டியக்காடு.
4. ஏரிப்புரக்கரை.
5. கட்டுமாவடி
6. காரங்காடு.
7. கண்ணாமுனை.
8. புன்னக்காயல்.
9. பரங்கிபேட்டை
10. கிள்ளை.

164983

இப்பண்ணைகளின் மூலம் 1991–92ஆம் ஆண்டில் அரசுக்குக் கிடைத்த வருமானம் பின்வருமாறு:—

| பண்ணை அமைந்துள்ள இடம். | | அறுவடை செய்யப்பட்ட இறால்களின் எடை. | விற்பனை செய்யப்பட்ட இறால்களின் மூலம் வருமானம். |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| | | (கிலோ.) | ரூ. |
| 1 பழவேற்காடு .. | .. | 928.000 | 65,464.00 |
| 2 வாணியஞ்சாவடி | .. | 444.600 | 11,712.00 |
| 3 தொண்டியக்காடு | .. | 563.350 | 36,466.00 |
| 4 ஏரிப்புரக்கரை | .. | 502.000 | 33,138.00 |
| 5 கட்டுமாவடி .. | .. | 747.650 | 42,428,00 |
| 6 காரங்காடு .. | .. | 77.000 | 3,124.00 |
| | | (130 பாலை மீன்கள்.) | |

[1993 பிப்ரவரி 12

| (1) | | (2) | (3) |
|---|---|---|---|
| | | கிலோ. | ரூ. |
| 7 கண்ணாமுனை | .. | 16.000 | 240.00 |
| 8 புன்னக்காயல் | .. | 149.050 | 3,815.00 |
| 9 பரங்கிப்பேட்டை | .. | 182.150 | 4,139.40 |
| 10 கிள்ளை | .. .. | 1,016.175 | 28,421.90 |

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலம் இறால் பண்ணை இல்லை என்பதை அறிய முடிகின்றது. அதேநேரத்தில் தனியார் இந்த இறால் பண்ணையை வளர்த்து அதிக வருமானத்தை ஈட்டுவதனால், அரசு இதுபோன்ற இறால் பண்ணையை ஏன் ஏற்படுத்தக்கூடாது என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10 50

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி. மொனடான், பி. இன்டிகஸ் என்ற இருவகை இறால்களுக்கு வெளிநாட்டிலே நல்ல கிராக்கி இருக்கிறது. இதைத் தமிழகத்திலே கடலோர மாவட்டங்களிலே வளர்ப்பதற்காக நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு புதிய கொள்கையை வடித்துத் தந்திருக்கிறார்கள். அந்தக் கொள்கையின் அடிப்படையிலே நான்கு வகையான விண்ணப்பதாரர்களாக நாங்கள் பிரித்து இருக்கிறோம். அந்த அடிப்படையிலே முதலாவதாக முன்னுரிமை விண்ணப்பதாரர்கள் என்று சொல்லும்பொழுது, மீனவர்கள், மீனவ கைம்பெண்கள், ஆதிதிராவிடர்கள் மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்குத் தலா ஒரு ஏக்கர் வீதம் அவர்கள் நிலம் குத்தகைக்கு வழங்கப்பட்டு இறால் வளர்ப்பதற்கு உதவிகள் செய்யப்படும். அதேநேரத்திலே, சிறுதொழில் முனைவோருக்கும் நடுத்தரத் தொழில் முனைவோருக்கும், பெரிய தொழில் முனைவோருக்கும் நிலம் குத்தகைக்கு வழங்கப்பட்டு, அவர்கள் கொண்டு வருகின்ற தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டைப் பொறுத்தமட்டில் கணக்கிலே எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு நிலம் குத்தகையாக அளிப்பதன்மூலமும் தான் இந்தத் தொழிலை மேம்படுத்த முடியும். அரசின் மூலம் ஒரு தொழிற்பேட்டை ஏற்கனவே நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியவர்கள் ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1993 பிப்ரவரி 12]

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் பண்ணையின் மூலம் தனியார்கள் நல்ல வருமானத்தை ஈட்டி வருவதையும், அதனால் அன்னியச் செலாவணி நம்முடைய தமிழகத்திற்குக் கிடைப்பதையும் அறிய முடிகிறது. ஆகவே, இந்தத் துறையின் மூலமாக இறால் மீன்களைத் தனியார் ஏற்றுமதி செய்வதின் மூலமாகத் தமிழகத்திற்கு எவ்வளவு ஆண்டு வருமானம் வருகிறது? அந்த வருமானத்தின் அடிப்படையில் இந்தியாவில் தமிழகம் எந்த இடத்தில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கையின் காரணமாக, 1992-93ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டிலே கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் சுமார் நான்கு இலட்சத்து ஐயாயிரம் டன்கள் உற்பத்தி எதிர்பார்க்கப்படும் என்று தெரிகிறது. இந்த வருஷம் அதிகமான அளவிற்கு உற்பத்தியை அதிகமாக்க வேண்டுமென்று நமது இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே வேகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டைப் பொறுத்தமட்டிலே இறால் கடல் உணவுப்பொருள் ஏற்றுமதியின் மூலம் நமது இந்திய நாட்டிற்குத் தமிழக அரசின் மூலம் கிடைக்கப் பெற்ற அன்னியச் செலவாணி சுமார் 228 கோடி ரூபாய் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இறால் பண்ணைகளை மேலும் பெருக்கி அரசின் வருமானத்தைப் பெருக்க என்ன திட்டம் உள்ளது என அறிய விரும்புகிறேன். என்ன திட்டம் உள்ளது? எவ்வளவு காலத்திற்குள் நடைமுறைப் படுத்தப்படும் எனவும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையிலே ஏற்கனவே இது குறித்து, நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 26 ராமசுப்பு இருக்கையில் இல்லை.

[1993 பிப்ரவரி 12

சென்னை பெரியார் நகர் எதிரிலுள்ள காலி மைதானத்தில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலம் வியாபார வளாகம் கட்டி வாடகைக்கு விடல்.

* 11854 திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[அ] சென்னை பெரியார் நகர் எதிரில் உள்ள காலி மைதானத்தில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலமாக வியாபார வளாகம் [Snopping Complex] கட்டி வாடகைக்கு விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

80—

அத்தியூத்து கிராமத்திலுள்ள அரசு அட்டை அலகு தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள்.

* 10859—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள அத்தியூத்து கிராமத்தில் அமைந்துள்ள அரசு அட்டை அலகு தொழிற்சாலையில் நிரந்தரமாக்கப்படாத தொழிலாளர் வேலையை நிரந்தரமாக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) அத்தியூத்து கிராமத்தில் அமைந்துள்ள அட்டை அலகு தொழிற்சாலை தமிழ்நாடு கதர் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அத்தியூத்து அலகில் உற்பத்தி செய்யப்படும் பேப்பர் வகைகளை எளிதில் விற்பனை செய்வதில் மிக சிரமமான நிலை உள்ளதாலும் கதர் வாரியத்தின் நிதி நிலைமை சரியில்லாத காரணத்தாலும் அத்தியூத்து அலகில் வேலை செய்து வரும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்திடும் எண்ணம் தற்போது வாரியத்திற்கு இல்லை.

(ஆ) எழவில்லை.



1993 பிப்ரவரி 12]

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(பட்டியல் எண். 5)

1—

பரங்கிப்பேட்டை குருநாதசெட்டிமேடு மக்களுக்கு பட்டா வழங்குதல்.

வினா எண். 7854—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை குருநாதசெட்டிமேடு மக்களுக்கு முறையாக வழங்கப்பட வேண்டிய பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) நத்தம் சர்வே தனி வட்டாட்சியர் மூலம் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) ஜனவரி 1993-க்குள் பட்டா வழங்கப்படும்.

2—

1991 நவம்பர் மாதம் பெய்த மழையினால் ஏற்பட்ட இழப்பு :

வினா எண். 8404—திரு. டி. எம் ரங்கராஜன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1991 நவம்பர் மாதம் பெய்த மழையினால் தமிழகத்திற்கு ஏற்பட்ட இழப்பின் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

1991 நவம்பர் மாதம் பெய்த மழையினால் தமிழகத்தில் கீழ்க்கண்ட அனைத்து இடங்களிலும் ஏற்பட்டுள்ள இழப்பின் மொத்த மதிப்பு ரூபாய் 50,217.50 இலட்சங்கள் ஆகும்.

அதன் விவரம் வருமாறு :—

| வரிசை எண்ணும் இனமும். | சேதத்தின் மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில.) |
|---|---|
| (1) | (2) |
| 1. நிவாரணத்தொகை பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவியுடன். | 2,050.00 |
| 2. வேளாண்மை .. .. .. | 17,245.00 |
| 3. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணிகள் .. | 13,245.00 |
| 4. பொது சுகாதாரம் .. .. | 450.00 |
| 5. பொதுப் பணிகள் (கட்டிடங்கள்) .. | 621.00 |
| 6. ஊரக வளர்ச்சி .. .. .. | 3,758.00 |
| 7. நீர்ப்பாசனம் .. .. .. | 4,441.00 |
| 8. குடிசைப்பகுதி மாற்று வாரியம் .. | 1,601.00 |
| 9. நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் .. | 1,279.50 |
| 10. வனங்கள் .. .. .. .. | 53.75 |
| 11. மின்சார வாரியம் .. .. .. | 479.25 |
| 12. குடியுரிமைப் பாதுகாப்பு மற்றும் இயணைப்பு. | 23.00 |
| 13. சென்னை மாநகராட்சி .. .. | 5,125.00 |
| | 50,217.50 |



3—

**மத்திய சென்னைப் பகுதியில் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்திய நிலங்கள் விவரம்.**

**வினா எண் 10022—திரு. ப. ரங்கநாதன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய சென்னைக்கு உட்பட்ட பகுதிகளில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசு கையகப்படுத்திய நிலங்களின் விவரம் என்ன?

(ஆ) அரசு கையகப்படுத்திய நிலங்களை இதுவரை எந்தெந்தத் துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :**

(அ) 3,13,075 சதுர மீட்டர் நிலம் மத்திய சென்னைக்கு உட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் உள்ள உதவி ஆணையர்களால் தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசு கையகப்படுத்தியது :—

| பகுதியின் பெயர். | கையகப் படுத்தப் பட்ட பரப்பளவு (ச.மீ.) |
|---|---|
| (1) | (2) |
| தண்டையார்பேட்டை ... ... ... .. | 1,49,212 |
| பெரம்பூர் .. .. ... .. | 25,397 |
| தியாகராயநகர் .. .. .. .. | 87,760 |
| மைலாப்பூர் .. .. .. .. | 50,706 |
| மொத்தம் ... | 3,13,075 |

(ஆ) அரசு கையகப்படுத்திய 3,13,075 சதுர மீட்டர் நிலங்களில், 26,172 சதுர மீட்டர் நிலம் அரசுத் துறைகளுக்கும் 1,63,360 சதுர மீட்டர் நிலங்களில் கழகங்கள், வாரியங்கள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்களுக்கும், 17,543 சதுர மீட்டர் நிலங்களில் தனியார் நிறுவனம்/தனிநபர் நிறுவனங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்களின் விபரங்கள் கீழ்க்கண்டவாறு :—

| ஒதுக்கீடு செய்யப்பட்ட துறை. | பரப்பளவு (சதுர மீட்டர்.) |
|---|---|
| (1) | (2) |
| மத்திய சென்னை— | |
| மருத்துவக் கல்வி இயக்ககம் .. .. .. | 10,553 |
| சமூக நலத் துறை .. .. .. | 443 |
| தீயணைப்புத் துறை .. .. .. | 602 |
| சென்னை நகர இதரப் பகுதிகள்— | |
| முன்னாள் இராணுவ வீரர் நல இயக்ககம் .. | 638 |
| தமிழ்நாடு தொழிற் கல்வி பள்ளி இயக்ககம் | 2,709 |
| ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை | 7,817 |
| மத்திய அரசு தொலைபேசித் துறை .. | 1,426 |
| பிற்பட்டோர் நலத் துறை .. .. | 1,384 |
| மத்திய அரசு கனிமத் துறை ... .. | 600 |
| மொத்தம் .. | 26,172 |





4—

அரசு உதவிபெறும் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியத்தை காசோலை மூலம் வழங்க நடவடிக்கை

வினா எண். 2901—திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு உதவிபெறும் கல்வி நிலையங்களில் பணிசெய்யும் ஆசிரியர்களின் மாத ஊதியத்தை அவரவர் பெயரிலேயே வங்கி வரைவோலை மூலம் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இது பற்றிய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

அரசு உதவிபெறும் கல்வி நிலையங்களில் மாணவர்களிடம் தொகை கோருவதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண். 2909—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு உதவிபெறும் தனியார் கல்லூரிகள், பாலிடெக்னிக் ஆகியவற்றில் சேரவிருக்கும் மாணவர்களிடம் தொகை கோரும் கல்வி நிறுவனங்களின்மேல் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகள் குறித்து தக்க ஆதாரத்துடன் புகார் பெறப்பட்டால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

6—

இடநெருக்கடி காரணமாக கலைக்கல்லூரிகளிலேயே தொழிற்கல்வியையும் கற்பித்தல்.

வினா எண். 5340—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இடநெருக்கடி காரணமாக கலைக்கல்லூரி கட்டிடங்களையே பயன்படுத்தி தொழிற்கல்வி கற்பிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

இல்லை.

7—

பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் அரசியல் கட்சி பிரச்சாரங்களில் பங்கேற்பதைத் தடை செய்தல்.

வினா எண். 5718—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், அரசியல் கட்சிகளின் (தேர்தல் பிரச்சாரம் உட்பட) பிரச்சாரங்களில் பங்கேற்பதைத் தடை செய்ய அரசு ஏதேனும் புதிய நெறிமுறைகள் கொண்டு வர உத்தேசித்துள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

8—

ஆரணி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்.

வினா எண் 5870—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பற்றாக்குறையாக உள்ள ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

ஒவ்வொரு ஆண்டும் புதிதாகத் தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்போது இப்பள்ளியின் தேவை முறைப்படி ஆய்வு அலுவலர்களால் கருதப்படும்.



9—

கணியம்பாடியில் பெண்கள் மேல்நிலைப்பள்ளியை ஏற்படுத்துதல்

வினா எண். 6205—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணியம்பாடியில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.

(அ) அரசு விதிகளின்படி ஏற்கெனவே பெண்கள் உயர்நிலைப் பள்ளி இயங்கி வருவதானால் மட்டுமே அப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த இயலும், எனவே, கணியம்பாடியில் பெண்கள் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தும் நிலை தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

10—

மாவட்ட கல்வி அலுவலரின் கட்டுப்பாட்டில் உதவி கல்வி அலுவலர் மற்றும் பள்ளி துணை ஆய்வாளர்களைக்கொண்டு வருதல்.

வினா எண். 8124—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் கட்டுப்பாட்டில் தற்போதுள்ள உதவிக் கல்வி அலுவலர்களும், பள்ளித் துணை ஆய்வாளர்களும், ஒன்றியக் கண்காணிப்பாளர்களும் செயல்படச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

தற்போது உதவிக் கல்வி அலுவலர்களும், பள்ளித் துணை ஆய்வாளர்களும் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றனர். ஆனால்

[1993 பிப்ரவரி 12

ஒன்றியக் கண்காணிப்பாளர்கள் என்ற பணியிடம் ஏதும் உதவிக் கல்வி அலுவலகத்தில் கல்வித்துறையில் ஏற்படுத்தப்படவில்லை.

11—

மாணவர் நலனைக் கவனிக்க மாணவர் இயக்ககம் ஏற்படுத்தல்.

வினா எண். 8532—திருமதி. வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களுடைய நலனை மட்டுமே கவனிக்கக் கூடிய மாணவர் நல இயக்ககம் ஒன்று துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

12—

சேதுபாவாசத்திரத்தில் துணை பிரதம சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண். 6558—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவா ஒன்றியம், சேதுபாவா சத்திரத்தில் துணை பிரதம சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தின் மக்கள் தொகை 86,200. இவ்வொன்றியத்தில் அழகியநாயகிபுரம், ..., ஊமத்தநாடு, குருவிக்கரம்பை மற்றும் பெருமகளூர் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயற்பட்டு வருவதால் மேலும் ஒரு பிரதம சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.



1993 பிப்ரவரி 12]

13—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போதுள்ள மக்கள் தொகை விகிதாசாரத்தை மாற்றியமைத்தல்.

வினா எண். 8841—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சமவெளிப் பகுதியில் மக்கள் தொகை முப்பதாயிரம், மலைப்பகுதியில் இருபதாயிரம் என்று இருக்க வேண்டும் என்கிற தற்போதுள்ள முறையை மாற்றி பதினைந்தாயிரம், பத்தாயிரம் மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தற்போது உள்ள முறையை மாற்ற நடவடிக்கை ஏதும் மேற்கொள்வதற்குச் சாத்தியங்கள் இப்போதைக்கு இல்லை.

14—

காவேரிப்பட்டினம் அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றியதை மீண்டும் அரசு மருத்துவமனையாக மாற்றுதல்.

வினா எண். 8866—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் ஏற்கெனவே அமைந்திருந்த அரசு பொது மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டது மீண்டும் அரசு பொது மருத்துவமனையாக உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் உயர்த்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் முன்பு இருந்த வட்டமில்லா மருத்துவமனை (Non-Taluk Hospital) சமுதாய நல மையமாக (Community Health Centre) மாற்றப் பட்டது. மீண்டும் இதை அரசு பொது மருத்துவமனையாக உயர்த்தும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

15—

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் சமூகநலக் காடுகளின் உற்பத்திப்பொருட்கள் விற்பனையில் கிடைத்த வருவாய்.

வினா எண். 5512—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் கடந்த 3 வருடங்களில் சமூகநலக் காடுகளின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதன்மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் எவ்வளவு?

(ஆ) அவற்றை விற்பனை செய்ய அரசு விதித்திருந்த நெறி முறைகள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) 1988-89-ல் ரூ. 11,07,197.

1989-90-ல் ரூ 23,80,736

1990-91-ல் ரூ. 34,11,750.

(ஆ) வனத்துறையில் வன விதித் தொகுப்பின் விதிமுறைகளின் அடிப்படையில் ஏல நிபந்தனைகள் நிர்ணயிக்கப்பட்டு, பின்னர் பொது ஏல முறையில் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் உள்ளூர் பஞ்சாயத்து, கிராம சமூக வனக்குழு மற்றும் உள்ளூர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய தகுதியான அமைப்புக்கள் விருப்பம் தெரிவித்தால், அவைகளுக்கு அரசு நிர்ணயித்த விலையில் தோட்டங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.



16—

வால்பாறை தொகுதியிலுள்ள நீர்வீழ்ச்சிகளை அழகுப்படுத்தி உல்லாசப் பயணிகளை கவரும் திட்டம்.

வினா எண். 5773—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி வனத் துறையிலுள்ள நீர் வீழ்ச்சிகளை வனத்துறை மூலம் அழகுபடுத்தி உல்லாசப் பயணிகளை கவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

17—

வால்பாறை-சென்னை வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து விடும் திட்டம்.

வினா எண். 5826—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மூலம் சென்னைக்குப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்போது சென்னையிலிருந்து பொள்ளாச்சிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஆறு பேருந்துகளை இயக்கி வருகின்றது. பொள்ளாச்சியிலிருந்து வால்

[1993 பிப்ரவரி 12

பாறைக்கு சேரன் போக்குவரத்துக் கழகத்தால் மிகுந்த அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தற்போதுள்ள வசதிகள் பயணிகளின் உடனடித் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் உள்ளது.

எனினும் பொது மக்களின் கோரிக்கைக்கிணங்க சென்னையிலிருந்து வால்பாறைக்கு நேரடி பேருந்து வசதி அளிப்பது குறித்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் அத்தகைய நேரடி பேருந்து வசதி அளிப்பதற்கான திட்டம் அக்கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

18—

**சேதுபாவா சத்திரம் ஒன்றிய கடலோரப் பகுதிகளில் பேருந்து மூலம் மீன், நண்டு போன்ற உணவுப் பொருட்களை ஏற்றிச்செல்ல வசதி.**

வினா எண். 6965—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், கடலோரப் பகுதிகளில் மீன், நண்டு போன்ற உணவுப் பொருள்களை பேருந்துகளிலோ நகரப் பேருந்துகளிலோ ஏற்ற மறுப்பதால் இதற்கென தனி பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

தற்சமயம் பேராவூரணி-அதிராம்பட்டினம் (வழி) சேதுபாவா சத்திரம் தடத்தில் தடம் எண் 1 மற்றும் தடம் எண் 11 ஆகியவற்றின் மூலம் தினசரி 14 நடைகள் இயக்கப்படுகின்றன. இதுபோன்ற பேராவூரணி-கட்டுமாவடி (வழி) சேதுபாவா சத்திரம் தடம் எண் 11 மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளில் மீன், நண்டு போன்ற உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு பேருந்தின் அடிச் சட்டத்திற்கும் கீழே தனியாக ஒரு பெட்டி வைக்கப்பட்டு அதில் ஏற்றிச் செல்லப்படுகிறது. தற்போதுள்ள வசதியே போதுமானதாக உள்ளது.



1993 பிப்ரவரி 12]

19—

**Consultation of Postal authorities with State Government Officials before opening a Post Office.**

Question No. 7945–Thiru M. Sundaradoss: Will the Hon. the Minister for Transport be pleased lo state—

(a) Whether the Postal authorities in this state consult the state Government Officials before opening a Post Office in any area or locality?

(b) If so, details thereof?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) அஞ்சலகம் தொடங்குவதற்கு அஞ்சல் துறையினர் மாநில அரசிடம் கலந்து ஆலோசிப்பது இல்லை. எனினும் இது பற்றி மாநில அரசிடமிருந்து குறிப்பான கோரிக்கை ஏதும் வரப்பெறின், அதற்கு முக்கியத்துவம் தரப்படும் என தமிழ்நாடு வட்டார தலைமை அஞ்சல்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(ஆ) ஊரகப் பகுதிகளில் புதிய அஞ்சலகங்கள் தொடங்குவதற்கு கீழ்க்கண்ட வரையறைகள் 1-4-1991 முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளன :—

(1) ஊரகப் பகுதியை பொறுத்தவரையில் 3,000 மக்கள் தொகை கொண்ட கிராமமாகவும், மலைவாழ் பகுதி மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் மக்கள் தொகை ஒரு கிராமத்தில் 500 அல்லது கிராமங்களின் தொகுதியாக 1,000 ஆக இருத்தல் வேண்டும்.

(2) தற்போது இருக்கும் அஞ்சலகத்திலிருந்து குறைந்தபட்ச தூரம் 3 கி.மீ. இருத்தல் வேண்டும். மலைவாழ் பகுதிகளுக்கு இந்தத்தூரம் தளர்த்தப்படும்.

(3) ஊரகப் பகுதிகளுக்கு செலவினத்தில் $33\frac{1}{3}$ சதவீதம் குறைந்தபட்ச வருமானமாக எதிர்பார்க்கப்படுகிறது. மலைவாழ் பகுதிகளுக்கு 15 சதவீதம் குறைந்தபட்ச வருமானமாக எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட வரையறைகளுக்கு உட்பட்டு அஞ்சலகங்கள் தொடங்குவதற்கு அஞ்சல் துறையின் களப்பணியாளர்கள் கிராமங்களில் அஞ்சலகங்கள் தொடங்குவது பற்றி கண்டறிகின்றனர்.

20—

## சென்னை-மன்னார்குடி வழித் தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் திட்டம்.

வினா எண் 8407—திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கும்-மன்னார்க்குடிக்கும் இடையே சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்தினை விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் அதன், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சென்னைக்கும், மன்னார்குடிக்கும் இடையேயுள்ள தடத்தின் நீளம் 322 கிலோ மீட்டராகும். தற்போதுள்ள அரசு விதிமுறைகளின்படி இத்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மட்டுமே பேருந்தினை இயக்க இயலும். மேலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தற்போதுள்ள பேருந்து வசதிகள் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் உள்ளது. எனவே, சோழன் போக்குவரத்துக் கழகம் இத்தடத்தில் பேருந்து இயக்கும் அவசியம் இல்லை.

21—

## குளித்தலை-சென்னை வழிதடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் திட்டம்.

வினா எண் 10272—திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருச்சி மாவட்டம், குளித்தலைக்கு சென்னையில் இருந்து திருவள்ளுவர் பேருந்தை இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சென்னைக்கும், திருச்சி மாவட்டத்திலுள்ள குளித்தலைக்கும் இடையே உள்ள தடத்தின் நீளம் 343 கிலோ மீட்டராகும். தற்பொழுது சென்னையில் இருந்து திண்டிவனம், தொழுதூர், பெரம்பலூர், துறையூர், குளித்தலை வழியாக கரூருக்கு நாள்தோறும் நான்கு பேருந்துகள் எட்டு ஒரு வழிப் பயணங்களுடன் இயக்கப்படுகின்றன. மேலும் சென்னையிலிருந்து திண்டிவனம், விழுப்புரம், தொழுதூர், குளித்தலை வழியாக பள்ளப்பட்டிக்கு ஒரு பேருந்து 2 ஒரு வழிப் பயணங்களுடன் நாள்தோறும் இயக்கப்படுகின்றன. தற்பொழுது உள்ள அத்தகைய வசதிகள் குளித்தலையிலிருந்து பயணம் மேற்கொள்ள விரும்பும் பயணிகளின் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் உள்ளது. சென்னையிலிருந்து குளித்தலைக்கு மேலும் பேருந்து இயக்குவது பொருளாதார அடிப்படையில் உகந்தது அல்ல என்று கருதப்படுகிறது.

22—

## சென்னை-மணப்பாறை வழித் தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக சொகுசு பேருந்துவிடும் திட்டம்.

வினா எண் 10273—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் இருந்து மணப்பாறைக்கு திருவள்ளுவர் சொகுசு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது சென்னையிலிருந்து திண்டுக்கல், தேனி, கம்பம், குமுளி, கொடைக்கானல் மற்றும் பொள்ளாச்சி ஆகிய இடங்களுக்கு இயக்கப்படும் 28 பேருந்து

களும் மணப்பாறை வழியாக இயக்கப்படுகின்றன. தவிரவும் மேற் குறிப்பிட்ட தடங்களில் இயக்கப்படும் அனைத்துப் பேருந்துகளுக்கும் மணப்பாறை ஒரு கட்டண நிலையாகும். மேலும் மணப்பாறை வழியாக தற்போது உள்ள பேருந்துவசதிகளே பயணிகளின் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் உள்ளது என்பதுடன் மணப்பாறையிலிருந்து சென்னைக்கு சொகுசு பேருந்து இயக்குவது பொருளாதார அடிப்படையில் உகந்தது அல்ல என்றும் கருதப்படுகிறது.

23—

<u>நெசவாளர்களுக்கு சலுகை விலையில் சிட்ட நூல் வழங்குதல்.</u>

<u>வினா எண் 8779—திரு. எம். ஆண்டி அம்டலம் :</u> மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் மற்றும் கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு சிட்ட நூல் சலுகை விலையில் கிடைக்கச் செய்ய அரசு என்ன நெறிமுறைகள் மேற்கொண்டிருக்கிறது ?

(அ) அனைத்து நூற்பாலைகளும் 50 சதம் சிட்ட நூல் உற்பத்தி செய்யவேண்டும் என்று மத்திய துணி நூல் ஆணையின் உத்தரவுக்கிணங்க அவ்வாலைகள் சிட்டநூல் உற்பத்தி செய்கின்றனவா என்பதைக் கண்காணிக்கத் தமிழ்நாடு கைத்தறித் தொழில் துறை என்ன வழிமுறைகளை மேற்கொண்டிருக்கிறது.

விடை—

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் :</u>

(அ) தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களில் 70 சதவீதம் நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையிலும் மீதமுள்ள 30 சதவீதம் நெசவாளர்கள் தனியார் துறையிலும் உள்ளனர். கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த நெசவாளர்களுக்குத் தேவையான சிட்டநூல் சலுகை விலையில் கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுகிறது. தனியார் துறை நெசவாளர்களுக்கு முதலமைச்சரின் சிறப்பு அறிவிப்பின்பேரில் அக்டோபர் 1991 முதல் டிசம்பர் 1991 முடிய 2,000 பேல்கள் சிட்டநூல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்பொழுது பருத்தி விலை குறைவின் காரணமாக சிட்டநூலின் விலையும் குறைந்துள்ளது. மத்திய அரசின் முந்தைய சிறப்பு அறிவிப்பின்பேரில்



31–12–1990 முடிய சிட்டநூல்கள் சலுகை விலையில் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தனியார் நெசவாளர் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

(ஆ) அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளும் மத்திய அரசின் ஆணையின்பேரில் 50 சதவீதம் சிட்டநூல் முறையே உற்பத்தி செய்து கூட்டுறவு நெசவாளர்களுக்கு விநியோகித்து வருகின்றது. மேலும் தனியார் நூற்பாலைகள் சிட்ட நூல் உற்பத்தி செய்தல் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

24—

<u>நெசவாளர் கூட்டுறவுச் சங்க வட்டி விகிதத்தைத் குறைத்தல்.</u>

<u>வினா எண். 8918—திருமதி கவிநிலவு தர்மராஜ்:</u> மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் கடனுக்கு, வங்கியின் வட்டி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளதை நெசவாளர்களின் நலன் கருதி குறைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் :</u>

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனம் வங்கி வட்டி விகிதத்தைவிட 2.5 சதவிகிதம் குறைவாக, கூட்டுறவு வங்கியினால் வழங்கப்பட்டு வருகிறது. 1–10–1991 முதல் மைய அரசினால் அனைத்து வட்டி விகிதங்களும் உயர்த்தப்பட்டபோது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்பட்டு வந்த வட்டி விகிதம் 7 1/2 சதவிகிதத்திலிருந்து 9-1/2 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. வட்டி விகிதம் 7-1/2 சதவிகிதமாக இருந்த சமயத்தில் அதனை குறைக்க மத்திய அரசுக்கு பிரேரணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஆனால் இப்பிரேரணை நிராகரிக்கப்பட்டுவிட்டது.

25—

<u>தார் சாலைகளின் அரிப்பைத் தடுக்க புதிய உக்திகளை கையாளும் திட்டம்.</u>

<u>வினா எண். 5797—டாக்டர் அ. ஸ்ரீதரன் :</u> மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1993 பிப்ரவரி 12

(அ) நெடுஞ்சாலையில் போடப்படுகின்ற B.T.R. தார் சாலைகளும் கான்கிரீட் சாலைகளும் மழையால் அரிக்கப்படு வதைத் தடுக்கும் வகையில் (New Technology வந்து உள்ளது என்பதை அரசு பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சாலை அரிப்பை தடை செய்ய கீழ்க்கண்ட 'New Technology' பயன்படுத்தப்படுகின்றன.

தார் சாலைகளைப் பொறுத்தவரை, நீர் ஊடுருவதைத் தவிர்க்க Seal Coat எனப்படும் பரப்பு தரப்படுகிறது. தார் உறிந்து விடுவதைத் தடுக்க Anti—Stripping Compounds பயன் படுத்தப்படுகின்றன. கான்கிரீட் சாலைகளில் இணைப்புகள் இருக்கும் இடங்களை Fillors மற்றும் Scaling Compounds பயன் படுத்தியும் மேலும் அடித்தளத்தில் சுண்ணாம்பு போன்ற வற்றால் நிலைபடச் செய்து உறுதிப்படுத்தியும் நீர் நிற்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தவிர்க்கலாம். தார் சாலைகளில் Anti—Stripping Compounds பயன்படுத்தினாலும், நீர் தேங்கி நின்றால் பாதிப்பு கண்டிப்பாக ஏற்படும். கான்கிரீட் சாலைகளில் மேற்கூறிய 'New Tcehnology' பயன்படுத்தி னால் கண்டிப்பாக சாலை அரிப்பே ஏற்படாது. மேற்கண்ட முறைகளை பயன்படுத்தினாலும், முறையான வடிகால் வசதிகள் இல்லாவிடில் மழையினால் தார்ச் சாலைகள் அரிக்கப்படுவதை தடுக்க இயலாது. எனவே முறையான வடிகால் அமைப்பதுதான் தார்ச்சாலை அரிப்பை தடுக்கக்கூடிய சிறந்த வழியாகும்.

26—

தமிழகம் முழுதும் உள்ள தார்ச் சாலைகளை சிமெண்ட் சாலை களாக மாற்றுதல்.

வினா எண் 5846— திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழகம் முழுவதும் உள்ள தார்ச் சாலைகளை சிமெண்ட் சாலைகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



1993 பிப்ரவரி 12]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித் துறை அமைச்சர் :

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

27—

ஒப்பு விடுதி தெரு விளக்கு விஸ்தரிப்பு

வினா எண். 7316—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒப்பு விடுதியில் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், ஒப்பு விடுதி கிராமத்தில் 18 தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே, மின்வசதி அளிக்கப்பட் டுள்ளது. மேற்குறிப்பிட்ட பகுதியில் 18 கூடுதல் தெரு விளக்குகள் கோரி விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டுள்ளது. இந்த 18 தெரு விளக்குகளுக்கும் அரசின் தெரு விளக்கு களுக்கான சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் (1992—93) மின் இணைப்பு தர ஆவன செய்யப் படும்.

28—

நாராண்டி ஆதிதிராவிடர் காலனிக்கு ஒற்றை விளக்கு திட்டம்.

வினா எண் 7344—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சொக்கநாதபுரம் ஊராட்சி நாராண்டி ஆதிதிராவிடர் காலனிக்கு ஒற்றை விளக்கு போட்டுந் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சொக்கநாதபுரம் ஊராட்சி, நாராண்டி ஆதி திராவிடர் காலனிக்கு ஒற்றை விளக்குகள் கோரி 25 குடிசை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவைகளுக்கு வரிசை அடிப்படையில் இலக்கீடிற்கு ஏற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

29—

கழனிவாசல் ஆதிதிராவிடர் காலனிக்கு ஒன்றை விளக்குத் திட்டம்.

வினா எண் 7414—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கழனிவாசல் ஆதிதிராவிடர் காலனிக்கு ஒற்றை விளக்கு போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கழனிவாசல் ஆதி திராவிடர் காலனி தொகுப்பு வீடுகளுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ் ஒற்றை விளக்குகள் வேண்டி 25 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்களுக்கு முன்னதாக 25 குடிசை விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட மின் வாரிய பிரிவு அலுவலகத்தில் ஏற்கனவே நிலுவையில் உள்ளன. கழனிவாசல் ஆதிதிராவிடர் காலனிக்கு ஒற்றை விளக்குகள், விண்ணப்பங்களின் வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்குகேற்ப அமைக்க ஆவன செய்யப்படும்.

30—

சாமியார்பேட்டை ஊராட்சியில் குறைந்த மின் அழுத்தத்தை சரிசெய்தல்.

வினா எண் 7504—செல்வி கோ மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய சாமியார்பேட்டை ஊராட்சியில் மின் சாரம் மிகவும் குறைந்த அழுத்த நிலையில் வருவதால் தெரு விளக்குகள் சரிவர இயங்காததால் அதைப் போக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய சாமியார்பேட்டை ஊராட்சியில் நிலவி வந்த குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்யும் பொருட்டு, புவனகிரியில் புதிதாக 33-11 கி.வோ. மின் வழிப்பாதை துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு தற்போது மின் அழுத்தம் சீராக உள்ளது.

31—

புஞ்சை மகத்து வாழ்க்கை ஊராட்சியில் தெரு விளக்குகள் அமைத்தல்.

வினா எண். 7507—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய புஞ்சை மகத்து வாழ்க்கை ஊராட்சியில் தெரு விளக்கு அமைத்துத்தர அரசு ஆவண செய்யுமா ?

(ஆ) ஆம், எனில் எப்பொழுது ?

விடை –

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியிலுள்ள புஞ்சை மகத்து வாழ்க்கை என்பது ஒரு குக்கிராமம் ஆகும். இங்கு ஏற்கனவே இரண்டு தெரு விளக்குகள் இயக்கத்தில் உள்ளன. மேலும் விளக்குகள் கோரி விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

32—

கிள்ளை பேரூராட்சி மீனவர் காலனியில் தெரு விளக்கு அமைத்தல்

வினா எண். 7587—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய கிள்ளை பேரூராட்சியில் உள்ள மீனவர் காலனிக்கு தெரு விளக்கு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கிள்ளை பேரூராட்சியில் உள்ள மீனவர் காலனியில் ஏற்கனவே எட்டு தெரு விளக்குகள் இயக்கத்தில் உள்ளன. கூடுதல் விளக்கு கோரி விண்ணப்பம் ஏதும் இல்லை.

33—

சிலம்பிமங்களம் கிராமத்தில் தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண். 7950—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சிலம்பிமங்களம் கிராமத்திற்கு தெரு விளக்கு போட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சிலம்பிமங்களம் கிராமத்தில் தெரு விளக்குக் கோரி விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.



34—

தச்சம்பாளையம் காலனியில் தெரு விளக்குகள் அமைத்தல்.

வினா எண். 7951—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தச்சம்பாளையம் காலனிக்கு தெரு விளக்கு போட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி தச்சம்பாளையம் காலனியில் 10 தெரு விளக்குகள் அமைக்கும் பணி அரசின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இவ் விளக்குகள் யாவும் இந்த ஆண்டில் நிறுவப்படும்.

35—

வெட்டான்விடுதி ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு மின்வசதி.

வினா எண். 7960—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, பெருங்களூர் பஞ்சாயத்துக்குட் பட்ட வெள்ள வெட்டான்விடுதி கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் காலனி வீட்டிற்கு புதிதாக மின் வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை தொகுதி, பெருங்களூர் பஞ்சாயத்துக்குட் பட்ட வெள்ள வெட்டான்விடுதி கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் காலனியில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 20 வீடுகளுக்கு ஒற்றை விளக்குத்

திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு கோரி 16–7–1991-ல் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. ஆயினும் புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்திற்கான 1992-93 ஆண்டு இலக்கீட்டுக்கேற்ப இப்பகிர்மான வட்டத்தில் இதற்கு முன் வரப்பெற்று நிலுவையில் உள்ள விண்ணப்பங்களில் 3/1991 வரை வரப்பெற்றவைக்குத் தான் இவ்வாண்டு மின் இணைப்பு வழங்க இயலும். ஆதலால் மேற்படி 20 வீடுகளுக்கு அடுத்த ஆண்டு 1993–94-ல் மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

36—

அதம்பை—பாதரங்கோட்டை சாலையை தார் சாலையாக மாற்றும் செய்தல்.

வினா எண். 1864—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம் அதம்பை (தெ) யிலிருந்து பாதரங்கோட்டை செல்லும் சாலையைத் தார்ச் சாலையாக அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருவோணம் ஊராட்சி ஒன்றியம் அதம்பை தெற்கிலிருந்து பாதரங்கோட்டை செல்லும் சாலையில் பேருந்து போக்குவரத்து இல்லாததால், அதனை தார்ச் சாலையாக அமைக்க செயற் குறிப்பு ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

37—

வாட்டாத்திக்கோட்டை சொக்கன் தெரு, ஆதி திராவிடர்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 2313—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்திக் கோட்டையைச் சேர்ந்த சொக்கன் தெரு, ஆதிதிராவிடர்களுக்கு ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வாட்டாத்திக் கோட்டையில் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து 5 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வசதி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கிராமத்தைச் சேர்ந்த சொக்கன் தெரு ஆதிதிராவிடர்களுக்கு ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

38—

காயாவூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 2331—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூரில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியை ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியாக கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

காயாவூரில் 1982–83ல் ஒரு மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய 11 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இது போதுமானதாகும். இந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியை ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த் தேக்கத் தொட்டியாக கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

39—

ஆவணம் பெரியநாயகிபுரம் ஆதிதிராவிடர்களுக்கு தனியாக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 2721—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆவணம் பெரியநாயகிபுரம் கிழக்கு ஆதிதிராவிடர்களுக்கு தனியாக ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

[1993 பிப்ரவரி 12

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பெரியநாயகிபுரத்திற்கு ஒரு கையிறைப்பான் பயனில் உள்ளது. மேலும் பெரிய நாயகிபுரம் கிராமம் குடிநீர் திட்ட பழைய தரைமட்ட நீர்த்தொட்டி மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படியூர் ஆதிதிராவிடர்களுக்கு தனியாக ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டிக்கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

40—

மிலாரிக் காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 2790—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு ஊராட்சியைச் சேர்ந்த மிலாரிக் காட்டில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு ஊராட்சியைச் சேர்ந்த மிலாரிக் காட்டில் 1981 ஆம் ஆண்டு ஒரு அடிபம்பு திட்டம் அமைக்கப்பட்டு உள்ளது. ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு தற்போது இல்லை.

41—

உடையநாடு ஆதிதிராவிடர்கள் இடையன் குளத்தை வெட்டிப் பராமரித்தல்.

வினா எண். 3054—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



1993 பிப்ரவரி 12]

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், உடையநாடு ஆதிதிராவிடர்களின் இடையன் குளத்தை வெட்டி மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஊமத்தநாடு ஊராட்சி உடையநாடு, ஆதிதிராவிடர்களின் இடையன் குளத்தை வெட்டி மராமத்து செய்திட இவ்வாண்டில் திட்டம் எதுவும் இல்லை. 1992–93 ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் இவ் வேலை மேற் கொள்ளப்படும்.

42—

கள்ளான்குளம், நல்லமுத்தான் குளம், ஆக்கிரமிப்புகளை அகற்றி செப்பனிட்டு பராமரித்தல்.

வினா எண். 3165—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், துறையூரைச் சேர்ந்த வாலியக்காட்டில் கள்ளான் குளத்தையும் நல்லமுத்தான் குளத்தையும் பராமரித்து ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி செப்பனிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இக்குளங்களை இவ்வாண்டுத் திட்டங்களில் செப்பனிட செயற் குறிப்பு ஏதுமில்லை. 1992–93-ல் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேர்த்து இவ்வேலைகளை செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

43—

அரசு புறம்போக்கில் சமூக மரவளர்ப்புத் திட்டம்.

வினா எண். 3822—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு புறம்போக்கில் சமூக மரவளர்ப்புத் திட்டத்தின்படி எவ்வளவு ஏக்கர்களில் மரங்கள் வளர்க்கப்படுகின்றன?

(ஆ) இத்திட்டம் வெற்றிபெற அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 1985–86 ஆம் ஆண்டு முதல் 1990–92 ஆம் ஆண்டு வரை 1,70,921.19 ஹெக்டேரில் மரங்கள் வளர்க்கப் பட்டுள்ளன. இத்திட்டம் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

44—

**கறம்பக்குடி, ஆலங்குடி, கீரமங்கலம் பேரூராட்சி சாலைகளை பழுது பார்த்தல்.**

வினா எண். 4335—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதியில் உள்ள கறம்பக்குடி (ஆலங்குடி) கீரமங்கலம் பேரூராட்சிக்குட்பட்ட சாலைகள் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி, கறம்பக்குடி, கீரமங்கலம் ஆகிய பேரூராட்சிகளின் நிதிநிலை பற்றாக்குறையின் காரணமாக இச்சாலைகளை சீரமைக்க தற்போது செயற் குறிப்பு ஏதுமில்லை.

45—

**சாலைகளை புதுப்பிக்க நகராட்சிகளுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு.**

வினா எண். 4875—திரு வெ. தமிழரசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் நகராட்சியில் நிதி வசதி இல்லாததால் சடைவீதி சாலை, முள்ளைவாடி விதைப் பண்ணை சாலை போன்றவைகள் மிகவும் பழுதடைந்து இருப்பதால் இது போன்ற நகராட்சிகளுக்கு சிறப்பு நிதி வழங்கி மேற் கண்ட சாலைகளை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1989-90 ஆம் ஆண்டில் பாதி கடன், பாதி மான்யத் திட்டத்தின்கீழ் பழுதடைந்த சாலைகளை செப்பனிட ஆத்தூர் நகராட்சிக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதனை தவிர சிறப்பு நிதி வழங்க இயலாது.

46—

**வெள்ளியம்பாளையம் ஆழ்குழாய்க் கிணற்றுக்கு மின் இறைப்பான் பொருத்துதல்**

வினா எண் 5766—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவிநாசி வட்டம், நம்பியாம்பாளையத்திற்குட்பட்ட வெள்ளியம்பாளையத்தில் உள்ள ஆழ்குழாய்க் கிணற்றுக்குள் compressor வைத்து நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் நிரப்பி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தற்போது அவிநாசி ஊராட்சி ஒன்றியத்தினால் வெள்ளியம் பாளையத்திலுள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் மின் இறைப்பான் பொருத்தப்பட்டு நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் நிரப்பி, குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

47—

**நாடாகாட்டிற்கு தொலைக்காட்சிப் பெட்டி வைக்க கட்டிடம் கட்டுதல்.**

வினா எண். 6740—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி நாடாகாட்டிற்கு தொலைக்காட்சிப் பெட்டி வைக்க கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இல்லை.

டி. 53-445—9

48—

நாட்டாளிக்கோட்டை வடக்கு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம்.

வினா எண் 6755—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், நாட்டாளி கோட்டை வடக்கு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டாரம், நாட்டாளிக்கோட்டை வடக்கு கிராமத்தில் 9 ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகள் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 1991-92 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளன.

49—

தில்லாங்காடு மத்தியப் பகுதியில் போர்வெல் அமைத்தல்.

வினா எண் 6776— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தில்லாங்காடு மத்திய பகுதியில் ஒரு போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தில்லாங்காடு மத்திய பகுதியில் ஒரு போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.



50—

குப்பத்தேவன் ஆதிதிராவிடர்களுக்கு நல்ல தண்ணீர் கொண்ட போர்வெல் அமைத்துக் கொடுத்தல்.

வினா எண் 6911—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் ஆதிதிராவிடர்களுக்கு போடப்பட்ட போர்வெல் உப்பு நீராக போய்விட்டதால் வேறிடத்தில் நல்ல தண்ணீர் போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் ஆதிதிராவிடர்களுக்கு போடப்பட்ட போர்வெல் உப்பு நீராக போய் விட்டதால் வேறிடத்தில் நல்ல தண்ணீர் போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

51—

செல்லப்பிள்ளையார் கோவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இயங்க வைத்தல்.

வினா எண் 6914—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செல்லப்பிள்ளையார் கோவிலில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இயங்க வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செல்லப்பிள்ளையார் கோவிலில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இயக்கி வைக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

[1993 பிப்ரவரி 12

52—

சோமநாதபட்டினத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்தல்.

வினா எண் 6947—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி, சோமநாதபட்டினத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி சோமநாதபட்டினத்திற்கு ஒரு மேல்நிலைத் தொட்டி அமைத்துக் கொடுக்க வழிவகை செய்யப்பட உள்ளது.

53—

ஒட்டங்காடு உக்கடையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 7015—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் ஒட்டங்காடு உக்கடையில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு உக்கடையில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.



1993 பிப்ரவரி 12]

54—

திருச்சிற்றம்பலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு சக்தி வாய்ந்த நீர்மூழ்கி மோட்டார் பொருத்துதல்.

வினா எண் 7017—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் நகரத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மோட்டார் சக்திவாய்ந்ததாக இல்லாததால் நீர்மூழ்கி மோட்டார் இணைத்து தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா—

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் நகரத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மோட்டார் சக்தி வாய்ந்ததாக இல்லாததால் நீர் மூழ்கி மோட்டார் இணைத்து தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

55—

திருச்சிற்றம்பலம் ஆதிதிராவிடர் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 7026—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஆதிதிராவிடர் தெருவில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஆதிதிராவிடர் தெருவில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

[1993 பிப்ரவரி 12

56—

**சின்னக்கழநிவாசலுக்கு வானொலிப்பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்.**

வினா எண். 7093—திரு. ஆர் சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சின்னக் கழநிவாசலுக்கு வானொலிப் பெட்டியும், தொலைக்காட்சிப் பெட்டியும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

வானொலிப் பெட்டியைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

நிதிநிலைக்கேற்ப ஒவ்வோர் ஊராட்சிக்கும், ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை அளிக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக உள்ளது. ரூ. 9,000-க்கு குறைவான ஆண்டு வருவாயுள்ள ஊராட்சிகளுக்கு மட்டுமே முதலிடம் அளிக்கப்பட்டு நிதிநிலையைக் கருத்தில் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவ்வடிப்படையில், இக்குடியிருப்பிற்கு 1992-93-ம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

நிதி வசதியுள்ள ஊராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப் பெற்றபின் வாங்கிக் கொள்ளலாம்.

57—

**கழனிவாசல் ஆதிதிராவிடர் தெருவிற்கு வானொலிப்பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்.**

வினா எண் 7095—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழநிவாசல் ஆதிதிராவிடர் தெருவிற்கு வானொலிப் பெட்டியும் தொலைக்காட்சிப்பெட்டியும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?



1993 பிப்ரவரி 12]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வானொலிப் பெட்டியைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

நிதிநிலைக்கேற்ப, ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை அளிக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக உள்ளது. ரூ. 9,000-க்குக் குறைவான ஆண்டு வருவாயுள்ள ஊராட்சிகளுக்கு மட்டுமே முதலிடம் அளிக்கப் பட்டு நிதிநிலையைக் கருத்தில் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவ்வடிப்படையில் இக் குடியிருப்பிற்கு 1992-93 ம் ஆண்டு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

நிதி வசதியுள்ள ஊராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப் பெற்றபின் வாங்கிக் கொள்ளலாம்.

58—

**தென்னங்குடி ஆதிதிராவிடர் தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்.**

வினா எண் 7106—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் தென்னங்குடி ஆதிதிராவிடர் தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி அனுமதிக்கப் பட்டும் இதுவரை கொண்டு வந்து வைக்கப்படாத தொலைக் காட்சிப் பெட்டியை உடன் வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தென்னங்குடி ஆதிதிராவிடர் தெருவில் வானொலி மன்றக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு அங்கு தொலைக்காட்சிப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

[1993 பிப்ரவரி 12

59—

பெரிய தெற்குகாட்டிற்கு வானொலிப்பெட்டி தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்.

வினா எண். 7126— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் ஒட்டங்காடு ஊராட்சியை சேர்ந்த பெரிய தெற்கு காட்டிற்கு வானொலிப் பெட்டியும், தொலைக்காட்சிப் பெட்டியும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

வானொலிப் பெட்டியைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.

நிதிநிலைக்கேற்ப, ஒவ்நவார் ஊராட்சிக்கும் ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை அளிக்க வேண்டுமென்பது அரசின் கொள் கையாக உள்ளது. ரூ. 9000-க்கு குறைவான ஆண்டு வருவாயுள்ள ஊராட்சிகளுக்கு மட்டுமே முதலிடம் அளிக்கப்பட்டு நிதி நிலையைக் கருத்தில் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவ்வடிப்படையில் இக்குடியிருப்பிற்கு 1992–93-ம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. நிதி வசதியுள்ள ஊராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து தொலைக் காட்சிப் பெட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப்பெற்றபின் வாங்கிக் கொள்ளலாம்.

60—

கோட்டைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு வானொலிப்பெட்டி தொலைக்காட்சிப்பெட்டி வழங்குதல்.

வினா எண் 7151—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு வானொலிப்பெட்டியும் தொலைக்காட்சிப் பெட்டியும் அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?



1993 பிப்ரவரி 12]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வானொலிப் பெட்டியைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

நிதி நிலைக்கேற்ப, ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை அளிக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாக உள்ளது. ரூ. 9,000-க்கு குறைவான ஆண்டு வருவாயுள்ள ஊராட்சிகளுக்கு மட்டுமே முதலிடம் அளிக்கப்பட்டு நிதிநிலையைக் கருத்தில் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவ்வடிப்படையில், இக்குடியிருப் பிற்கு 1992-93 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. நிதி வசதியுள்ள ஊராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டி களை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப் பெற்றபின் வாங்கிக் கொள்ளலாம்.

61—

வாடிக்காடு ஆதிதிராவிடர்களுக்கு வானொலிபெட்டி அளித்தல்.

வினா எண். 7168—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனல் வாசல் ஊராட்சி, வாடிக்காடு ஆதிதிராவிடர்களுக்கு வானொலி பெட்டி ஒன்று கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம் எனவே, இக்குடி யிருப்பிற்கென்று தனியே செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

[1993 பிப்ரவரி 12

62—

ஒளிராமன்காடு ஆயன்தூக்கில் போர்வெல் அமைத்தல்.

வினா எண். 7196—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஒளிராமன்காடு ஆயன்தூக்கில் போர்வெல் போட்டு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒளிராமன்காடு ஆயன்தூக்கில் போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

63—

திருச்சிற்றம்பலம் ஆதிதிராவிடர் தெருவில் போர்வெல் அமைத்தல்.

வினா எண். 7283—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஆதிதிராவிடர் தெருவில் ஓர் போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஆதிதிராவிடர் தெருவில் ஓர் போர்வெல் போட்டு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.



1993 பிப்ரவரி 12]

64—

ஒளிராமன்காடு பள்ளிக்கருகிலுள்ள போர்வெல்லை பழுது பார்த்தல்.

வினா எண். 7297—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒளிராமன்காட்டில் பள்ளிக்கு அருகில் இருக்கின்ற பழுது பட்ட போர்வெல்லை பழுதுபார்க்க செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒளிராமன்காட்டில் பள்ளிக்கு அருகில் இருக்கின்ற பழுதுப்பட்ட போர்வெல்லை பழுது பார்க்க செயற் குறிப்பு இல்லை.

65—

செருவாவிடுதி வடக்கு வெட்டிக்காட்டின் கிழக்குப் பகுதிக்கு தனியாக போர்வெல் அமைத்தல்.

வினா எண். 7313—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவாவிடுதி வடக்கு வெட்டிக்காட்டில் உள்ள கிழக்குப் பகுதிக்கு தனியாக ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், செருவாவிடுதி, வடக்கு வெட்டிக் காட்டில் உள்ள கிழக்குப் பகுதிக்கு தனியாக ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

[1993 பிப்ரவரி 12

66—

மடத்துக் காட்டிற்குப் பைப் லைன் விஸ்தரித்து குடிநீர் வசதி செய்தல்.

வினா எண். 7317—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மடத்துக் காட்டிற்குப் பைப் லைன் விஸ்தரித்துக் கொடுத்து குடி தண்ணீர் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி, மடத்துக் காட்டிற்கு பைப் லைன் விஸ்தரித்துக் கொடுத்து குடிதண்ணீர் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

67—

நடுவன்குறிச்சி தெற்கு ஆதி திராவிடர் தெருவிற்கு மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 7326—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவன்குறிச்சி தெற்கு ஆதி திராவிடர் தெருவுக்கு ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத்தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவா சத்திரம் ஒன்றியம், நடுவன்குறிச்சி தெற்கு ஆதி திராவிடர் தெருவுக்கு ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.



1993 பிப்ரவரி 12]

68—

நவக்கொல்லைக்காடு வடக்குக் கோனார் குடியிருப்புக்கு போர்வெல் அமைத்து கொடுத்தல்.

வினா எண். 7363—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், நவக் கொல்லைக்காடு வடக்கு கோனார் குடியிருப்புக்கு ஒரு போர் வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், நவக்கொல்லைக்காடு வடக்கு கோனார் குடியிருப்புக்கு ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

69—

ரெகுநாதபுரத்திற்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுத்தல்.

வினா எண். 7380—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், வாத்தலைக்காடு ஊராட்சி, ரெகுநாதபுரத்திற்கு ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவா சத்திரம் ஒன்றியம், வாத்தலைக்காடு ஊராட்சி, ரெகுநாதபுரத்திற்கு ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

[1993 பிப்ரவரி 12

70—

மடவர்ப்பள்ளம் கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண். 7502—செல்வி. கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, குமாரப்பேட்டை, மடவர்ப் பள்ளம் கிராமத்திற்கு குடியிருப்பு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 8 கிராமங்களில் 106 வீடுகள் கட்டும் பணி 1991-92 ஆம் ஆண்டிற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. 1992-93 ஆம் ஆண்டில் குமாரப்பேட்டை மடவர்ப் பள்ளம் கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

71—

புதுக் குப்பம் மீனவர் கிராமத்திற்கு குடிநீர் வசதி.

வினா எண். 7512—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி புதுக்குப்பம் மீனவர் கிராமத்திற்கு குடிதண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



1993 பிப்ரவரி 12]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) டானிடா திட்டத்தின் கீழ் 13 தாரா கை யிறைப்பான்கள் மார்ச் 1993-க்குள் பொருத்தப்படும்,

72—

நஞ்சை மகத்து வாழ்க்கை அரிசனக் காலனியில் மேல் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 7523—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியம் நஞ்சை மகத்து வாழ்க்கை அரிசனக் காலனி குடிநீர் மேல் தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) நஞ்சை மகத்து வாழ்க்கை அரிசனக் காலனியில் குடி நீர் மேல் நீர்த் தேக்கத் தொட்டி கட்ட திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1993 பிப்ரவரி 12

73—

வசப்புத்தூர் ஊராட்சி ஆதி திராவிடர் வாழும் பகுதியில் கைப்பம்பு அமைத்தல்.

வினா எண். 7594—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வசப்புத்தூர் ஊராட்சியில் ஆதி திராவிடர் வாழும் பகுதிக்கு கைப்பம்பு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நடப்பு வருடத்தில் டானிடா திட்டத்தின் கீழ் ஆழ் துளைக் கிணறுகள் போடப்படும்.

74—

முத்துகிருஷ்ணாபுரத்தில் மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 7608—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள முத்துகிருஷ்ணாபுரத்திற்கு மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



1993 பிப்ரவரி 12]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி ஒன்றியம், முத்துகிருஷ்ணாபுரம் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்னிறைப்பான் திட்டம் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளது. அதன் மின்னிறைப்பான் பழுது பட்டதால், பழுது நீக்கம் செய்யப்பட்டு தற்பொழுது இயங்கி வருகிறது.

75—

முகந்தெரியான் குப்பத்திற்கு சாலை வசதி.

வினா எண் 7620—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், முகந்தெரியான் குப்பத்திற்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி ஒன்றியம், முகந்தெரியான் குப்பத்திற்கு சாலை வசதி செய்து தரும் செயற் குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

76—

ஆயாங்குப்பம் குடிநீர்ப் பிரச்சினை.

வினா எண் 7633—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், ஆயாங்குப்பம் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், ஆயாங்குப்பம் குடியிருப்பில் குடிநீர்ப் பிரச்சினை இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

77—

மஞ்சகுழி கொடிக்கால் நகருக்குக் குடிநீர் வசதி.

வினா எண் 7651—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், மஞ்சகுழி கொடிக்கால் நகருக்கு குடிநீர் பிரச்சினையை தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நடப்பு வருடத்தில் டான்டா திட்டத்தில் கைப்பம்புகள் போடப்படும்.

78—

காந்திநகர் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க திட்டம்.

வினா எண் 7655—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியம், காந்திநகர் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியம், காந்திநகர் குடியிருப்பில் ஏற்கனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

79—

வீரமுடையா நத்தத்திலுள்ள ஆதி திராவிடர் பிற்பட்டோர் தெருக்களை செப்பனிடுதல்.

வினா எண் 7677—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், வீரமுடையா நத்தத்தில் உள்ள ஆதி திராவிடர் பிற்பட்டோர் தெருக்களைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஒன்றியம் வீரமுடையா நத்தத்தில் உள்ள ஆதி திராவிடர் பிற்பட்டோர் தெருக்களை 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 24,000 மதிப்பீட்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செப்பனிடப்படவுள்ளது.

80—

பு. ஆதனூருக்குச் சாலை வசதி.

வினா எண். 7690—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பு. ஆதனூருக்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

[1993 பிப்ரவரி 12

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பு. ஆத ஊர் கிராமம் சேத்தியாதோப்பு—விருத்தாசலம் நெடுஞ்சாலை அருகில் அமைந்துள்ளதால் இக்கிராமத்திற்கு தனியாக சாலை வசதி தேவையில்லை. எனவே, இது பற்றிய செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

81—

பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றிட அரசு வகுத்த நெறிமுறைகள்.

வினா எண் 7705—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றிட அரசு வகுத்துள்ள நெறி முறைகள் விவரம் என்ன ?

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் தமிழ் நாட்டில் எந்தெந்த பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றி அமைக்கப்பட்டன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை மைச்சர் :

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958, பிரிவு 5-ன்படி மக்கட் தொகை 20,000-க்கு மேலும், ஆண்டு வருமானம் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பேரூராட்சிகளை அரசு அறிவிக்கையின் மூலம் நகராட்சியாக மாற்றியமைக்கலாம். எனினும், அரசாணை எண் 1078, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 15-12-1988-ல் பேரூராட்சியை மூன்றாம் நிலை நகராட்சியாக மாற்றியமைக்கப்பட அதன் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி வருமானம் (கடன்கள், காலங் கடந்த வைப்புத் தொகை மற்றும் தொடரா மானியங்கள் நீங்கலாக) ரூ. 10 லட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும் என நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.



1993 பிப்ரவரி 12]

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் தருமபுரி மாவட்டம் ஓசூர் தேர்வு நிலை பேரூராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக 15—1—1992 முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பேரூராட்சி மூன்றாம் நிலை நகராட்சியாக 1—4—1992 முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

82—

அருள்மொழித் தேவன் கிராமத்திற்கு குடிநீர் வசதி.

வினா எண். 7751—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அருள்மொழித் தேவன் கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அருள்மொழித் தேவன் கிராமத்திற்கு இரும்பு நீர்த்தொட்டி திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் மூலம் அமைக்கப்பட்ட மாற்று ஆழ்துளைக் கிணறு மூலம் ஊராட்சி ஒன்றியம் இக்கிராமத்திற்கு குடிநீர் வழங்கி வருகிறது. இது போதுமானதாக இருப்பதால் வேறு எந்த குடிநீர்த் திட்டமும் பரிசீலனையில் இல்லை.

83—

மருதூர் கிராம அருந்ததியர் வாழும் பகுதிக்குச் சாலை வசதி.

வினா எண். 7798—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, மருதூர் கிராம அருந்ததியர் வாழும் இடத்திற்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

[1993 பிப்ரவரி 12

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புவனகிரி தொகுதி மருதூர் கிராம அருந்ததியர் வாழும் இடத்திற்கு நடப்பு நிதியாண்டில் ரூ. 12,000 மதிப்பீட்டில் சாலைப் பணி செய்ய செயற் குறிப்பு ஏற்கப்பட்டுள்ளது.

84—

சி. புதுப்பேட்டை கிராமத்திற்கு குடிநீர் மேல் நிலைத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 7874—செ[illegible] கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சி. புதுப்பேட்டை கிராமத்திற்கு குடிநீர் மேல் நிலைத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) புவனகிரி தொகுதி, சி. புதுப்பேட்டை கிராமத்தில் மேல் நிலைத் தொட்டி கட்டும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

85—

பள்ளிப்படை மக்களின் குடிநீர் பிரச்சினை.

வினா எண். 8334—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள பள்ளிப்படை மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



1993 பிப்ரவரி 12]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள பள்ளிப்படை குடியிருப்பிற்கு குடிநீர்த் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

86—

பிள்ளையார் திடலுக்குத் தனியாக கிராம அமுதம் அங்காடி.

வினா எண். 2731—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த பிள்ளையார் திடலுக்குத் தனியாக கிராம அமுதம் அங்காடி கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம் சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த பிள்ளையார் திடல் நாடியம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கிராம அங்காடியுடன் இணைக்கப்பட்டுள்ளது. பிள்ளையார் திடலில் மொத்த கார்டுகள் 64 ஆகும். மேற்படி பிள்ளையார்த் திடலில் ஒரு கிராம அங்காடி திறப்பதால், ஏற்படும் வாடகை மற்றும் இதரச் செலவுகள் அனைத்தும் வரவை விட கூடுதலாக நிதிச் செலவு ஏற்படுவதாக உள்ளது. நாடியம் அங்காடிக்கும், பிள்ளையார்த் திடல் கிராமத்திற்கும் உள்ள தூரம் 2 கிலோ மீட்டர் தான் உள்ளது. இயற்கை இடர்ப்பாடுகளோ காட்டாறுகளோ இல்லை. மேற்கூறிய காரணங்களினால் பிள்ளையார்த் திடல் பகுதிக்குத் தனி கிராம அங்காடியோ பகுதி நேர அங்காடியோ அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை. மேலும் இது குறித்து செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

87—

வயக்கல்லூர் தொடக்கக் கூட்டுறவு வங்கியில் முறைகேடுகள்.

வினா எண். 3936—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வயக்கல்லூர் தொடக்க கூட்டுறவு வங்கியில் பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வயக்கல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் தணிக்கை மற்றும் ஆய்வு நடந்தபோது கடந்த மூன்று ஆண்டுகளில் அவ்வங்கியின் செயல்பாட்டில் சில குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

88—

நல்லூர் தொடக்க கூட்டுறவு வங்கியில் முறைகேடுகள்.

வினா எண். 3937—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நல்லூர் தொடக்கக் கூட்டுறவு வங்கியில் பலவிதமான முறைகேடுகள் நடந்தது அரசுக்குத் தெரியுமா ?

ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.





(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்று எதுவுமில்லை. நல்லூர் கிராமத்தை உள்ளடக்கி நெல்வேலியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஒன்று செயல்பட்டு வருகிறது. அவ்வங்கியில் தணிக்கை மற்றும் ஆய்வு நடந்தபோது கடந்த மூன்று ஆண்டுகளில் அவ்வங்கியின் செயல்பாட்டில் சில குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

89—

அத்தியாநல்லூர் கிராமத்திற்குத் தனியாக ஒரு கூட்டுறவு அங்காடி.

வினா எண் 6680—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்-துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள அத்தியாநல்லூர் வேளங்கிப்பட்டு கிராமத்தில் உள்ள கூட்டுறவு அங்காடி கடையைப் பிரித்து அத்தியாநல்லூர் கிராமத்திற்கு மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றித்தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்போது வேளங்கிப்பட்டு நியாய விலைக் கடையில் அத்தியாநல்லூர் குடும்ப அட்டைகளையும் சேர்த்து 556 குடும்ப அட்டைகள் தான் பதியப்பட்டுள்ளன. இக்கிராமங்களில் இடைப்பட்ட தூரம் 2 கிலோ மீட்டரே உள்ளதால் அத்தியாநல்லூரில் புதிய நியாய விலைக் கடை திறக்க தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

90—

கட்டையன் காட்டிலுள்ள பகுதி நேர அங்காடியை முழு நேர அங்காடியாக மாற்றுதல்.

வினா எண் 7154—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்-துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கட்டையன் காட்டிலுள்ள பகுதி நேர அங்காடியை முழு நேர அங்காடியாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், கட்டையன் காட்டிலுள்ள நியாய விலைக் கடை 1-10-1987-லிருந்து முழு நேரக் கடையாக இயங்கி வருகிறது.

91—

கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் போதுமான மருந்துகளை அதிகரித்து எலும்பு முறிவு மற்றும் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்துதல்.

வினா எண் 8664—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஞ்சாலைகள் மற்றும் பல்வேறு தொழிற்சாலைகள் கோவை மற்றும் சுற்றுப்புற நகரப் பகுதியிலும் நிறைந்திருப்பதால், தொழிலாளர்களுக்கான இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் போதுமான மருந்துகள் இல்லாத நிலை நீங்கவும், எலும்பு முறிவு மற்றும் அறுவை சிகிச்சைப் பிரிவும், அங்கேயே அமைக்கவும் அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனையின் தேவைக்கான மருந்துகள் நோயாளிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதற்காக, ஒப்பந்த விலை ( Rate contract) மற்றும் மத்திய கொள்முதல் (central purchase) முறை மூலம் பெறப்பட்டு தேவையானவை கையிருப்பில் வைக்கப்பட்டு உள்ளன. மேற்கண்ட இருமுறைகளிலும் மருந்துகள் கிடைக்கப் பெறாத நிலை ஏற்படும்போது சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி அல்லது தனியார் மருந்து நிறுவனங்களின் தேவையான மருந்துகளின் விலைவாரி விவரங்கள் (quotation ) பெறப்பட்டு அதன் அடிப்படையில் அத்தியாவசியத் தேவைக்கான மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு அவை நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.





மேலும், இந்த மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவும், அறுவை சிகிச்சைப் பிரிவும் தனித்தனியாக இயங்கி வருகின்றன.

92—

வால்பாறை தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தற்காலிகப் பணியாளர்களின் விவரம்.

வினா எண் 10705—டாக்டர் அ ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் எத்தனை தொழிலாளர்கள் தற்காலிகமாகப் பணி செய்கிறார்கள் ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

| | ஆண்கள். | பெண்கள். |
|---|---|---|
| | (1) | (2) |
| தற்காலிகத் தொழிலாளர்களின் எண்ணிக்கை .. .. | 2,946 | 3,964 |

93—

உதவி வேளாண்மைத்துறை அலுவலர்களாக பணியில் சேர பட்டயப்படிப்புச் சான்றிதழ் வழங்கும் நிறுவனங்கள்.

வினா எண் 8944—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதவி வேளாண்மைத் துறை அலுவலர்களாகப் பணியில் (Assistant Agricultural officer) சேர எந்தெந்த நிறுவனங்களில் பயின்றவர்களுக்கு டிப்ளமோ சான்றிதழ் அரசு வழங்குகிறது ?

(ஆ) இச்சான்றிதழ் அளிக்க அரசு நிர்ணயித்துள்ள வரை முறைகள் விவரம் என்ன ?

[1993 பிப்ரவரி 12

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) வேளாண்மை உதவி அலுவலர்கள் பணியில் சேர கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பட்டுள்ள (Affiliated) பெரியநாயக்கன்பாளையம் இராம கிருஷ்ணா மிஷன் வித்யாலயா வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம், சகாயந் தோட்டம் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம், தக்கோலம் மற்றும் சாந்தி கிராமம் ஊரக வளர்ச்சி நிறுவனம் (காந்தி கிராமம் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது) ஆகிய நிறுவனங்களால் பட்டயப் படிப்பு (Diploma course) சான்றிதழ் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகத்தால் அளிக்கப்படுகிறது.

இவையெல்லாம் தமிழர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம் (தற்பொழுது நடைபெறவில்லை) மற்றும் அல் அமீன் வேளாண்மைப் பயிற்சி நிலையம், கிருஷ்ணாபுரம் ஆகிய நிறுவனங்களில் சான்றிதழ் படிப்பு (Certificate course) சான்றிதழ் வேளாண்மைத் துறையால் அளிக்கபடுகிறது.

(ஆ) மேற்கண்ட நிறுவனங்களில் சேர்ந்து படிக்க பிளஸ்-2 தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பிளஸ்-2 வகுப்பில் உயிரியல், பௌதிகம், வேதியியல பாடம் பயின்று இருக்க வேண்டும் அல்லது வாழ்க்கைக் கல்வி பிரிவில் வேளாண்மையும் அதனைச் சார்ந்த மற்றப் பாடங்களுடன் உயிரியல் பாடம் பயின்றிருத்தல் வேண்டும். மேலும், அரசு நிர்ணயித்துள்ள சாதி ஒதுக்கீடு முறைகளின்படி தேர்வு செய்யப்படுவர். அவ்வாறு தேர்வு செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் பட்டயப்படிப்பு அல்லது சான்றிதழ் படிப்பு பயின்ற பின் பாடம் மற்றும் செயல் முறைத் தேர்வுகளில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மதிப்பெண்கள் பெற்று தேர்வு பெற்று பட்டயம் அல்லது சான்றிதழ் அளிக்கப் பட்டவரே வேளாண்மை உதவி அலுவலர் பதவிக்குப் போட்டியிட தகுதி பெற்றவராவார்.

94—

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் வீட்டுவசதி இணை இயக்குநர் அலுவலகம் அமைத்தல்

வினா எண் 9848— டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1993 பிப்ரவரி 12]

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் வீட்டு வசதி இணை இயக்குநர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. பு. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சென்னை வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் 9 மண்டலங்கள், துணைப் பதிவாளர் (வீட்டு வசதி) அவர்களை அலுவலகத் தலைவர்களாக கொண்டு இயங்கி வருகின்றன. வீட்டுவசதித் துறையில் இணைப் பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம் என்ற அமைப்பு ஏற்படுத்தப் படவில்லை. மேலும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், மண்டல துணைப் பதிவாளர் (வீட்டுவசதி), வேலூர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளடங்கியுள்ளது. இம்மாவட்டத்திற்குத் தனியாக துணைப் பதிவாளர் (வீட்டு வசதி) அலுவலகத்தை ஏற்படுத்த தற்போது உத்தேசம் ஏதுமில்லை.

95—

ஆதிதிராவிட மக்கள் ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் நிவாரண நிதியை உயர்த்தி, சம்பந்தப்பட்ட ஊராட்சி அல்லது ஒன்றிய தலைவர்கள் அல்லது அதிகாரிகள் மூலம் வழங்குதல்.

வினா எண். 6545— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட மக்கள் ஈமச்சடங்கிற்கு அரசு வழங்கும் நிவாரண நிதி உதவியை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அல்லது ஒன்றியத் தலைவர் அல்லது அதிகாரியே நேரடியாக வழங்கும் அதிகாரம் அளிக்க அரசு முன்வருமா ?

(ஆ) இப்போது அளிக்கப்படும் நிவாரண நிதி உதவியை அதிகரிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆதிதிராவிட மக்கள் ஈமச்சடங்கிற்கு அரசு வழங்கும் நிதி உதவி குறித்து விதிமுறைகள் அரசு ஆணை (நிலை) எண். 465, சமூக நலத்துறை, நாள் 24-7-1978 பத்தி 9 இல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளன :—

ஊராட்சிப் பகுதிகளில் இவ்வுதவித் தொகையானது வழங்கக் கோரி இறப்புச் சான்றுடன் ஊராட்சி மன்றத் தலைவருக்கு மனுச் செய்ய வேண்டும். அவர் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் இவ்வுதவித் தொகையை வழங்குவார். நகராட்சிப் பகுதிகளில் இவ்வுதவித் தொகை கோரி நகராட்சி அலுவலகத்திலுள்ள கணக்கருக்கு இறப்புச் சான்றுடன் மனுச் செய்தல் வேண்டும். அவர் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் இவ்வுதவித் தொகையை வழங்குவார். மாநகராட்சிப் பகுதிகளில் கோட்ட அளவில் உள்ள மேற்பார்வையாளருக்கு (Overseer) இறப்புச் சான்றுடன் மனுச் செய்தல் வேண்டும். அவர் இரண்டு சாட்சிகள் முன்னிலையில் இவ்வுதவித் தொகையை வழங்குவார்.

(ஆ) ரூபாய் 100 ஆக வழங்கப்பட்டு வந்த நிவாரண தொகை 7-2-1992 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 25-ல் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை) ரூ. 200 ஆக உயர்த்தி அண்மையில்தான் ஆணையிடப்பட்டுள்ளது.

96—

**ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர தன்னிறைவுத் திட்டம் ஒன்று உருவாக்குதல்.**

வினா எண் 7869—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குச் சாலை வசதி, தெரு விளக்கு மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரத் தன்னிறைவுத் திட்டம் ஒன்று உருவாக்கி மாவட்ட வாரியாக நிறைவேற்ற அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அடிப்படை வசதிகளில் ஒன்றான சாலை வசதிக்குத் தேவையான கிராமங்களின் எண்ணிக்கைகளும் அவைகளின் பெயர்களையும் மாவட்ட ஆதிதிராவிடர்



நல அலுவலர்கள் மூலம் கண்டறியப்பட்டு அத்தகவல்கள் இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. ஊரக வளர்ச்சித் துறை இவ்வசதியை 1991-92 மற்றும் 1992-93 ஆண்டுகளில் முழுமையாக முடித்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஊரக வளர்ச்சித் துறையினரும் இதுவரையில் சுமார் 167 கி.மீ. அளவுக்கு இணைப்புச் சாலை ஏற்படுத்தும் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

தெரு விளக்கு :

அரசின் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1991-92 மற்றும் 1992-93 ஆகிய இரு ஆண்டுகளில் மொத்தம் 1,54,889 தெரு விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டு 31-3-1992 முடிய 20,959 விளக்குகள் அமைக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள விளக்குகள் அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இத்தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் குடியிருப்புகள் மற்றும் தெருக்கள் ஆகியவற்றில் கோரப்பட்டுள்ள விளக்குகள் உட்பட அனைத்து தெரு விளக்குகளும் 31-3-1993-க்குள் அமைக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடிநீர் :

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் கீழ் அனைத்து ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு நீர் ஆதாரமாவது உருவாக்கப்பட்டு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஒன்றியம் ஒன்றுக்கு, ரூ. 1·00 கோடி வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் துறை அமுல்படுத்தி வரும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் மூலம் ஆதிதிராவிடர் காலனிகள் அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்று வருகின்றன.

மேற்குறிப்பிட்ட நிலையில், ஆதிதிராவிடர்களுக்கு மேலே சொல்லப்பட்ட அடிப்படை வசதிகளை உருவாக்கிக் கொடுக்கத் தனியாக ஒரு தன்னிறைவுத் திட்டம் மாவட்ட வாரியாக அமைக்க அவசியமிருக்காது என கருதப்படுகிறது.

97—

**கிருஷ்ணாபுரம் காலனிக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம்**

வினா எண் 9833—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1993 பிப்ரவரி 12

(அ) ஆண்டிமடம் தொகுதியில் பெரிய கிருஷ்ணாபுரம் காலனிக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, உடையார்பாளையம் வட்டம், பெரிய கிருஷ்ணாபுரம் கிராமத்தில் வசிக்கும் வீடு இல்லாத ஏழை ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசு, 4(1) அறிவிக்கைக்கு அரசாணை (நிலை) எண். 3039, சமூக நலத்துறை, நாள் 20—11—1986 மூலம் ஒப்புதல் அளித்தது. 5-ஏ விசாரணை முடிந்து பின்பு பிரிவு 6-ன் கீழான வரைவு விளம்பல் அறிவிக்கை அரசு ஆணை (நிலை) எண். 2675, சமூக நலத் துறை, நாள் 31—12—1987 மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் 31—12—1987ம் நாளன்று பிரசுரமாகியது. இந்நிலையில் நிலச் சொந்தக்காரர்கள் நிலம் கையகப்படுத்துவதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை (ரிட் மனு) ஒன்றை எண். 798/88ல் தாக்கல் செய்து தடையாணை பெற்றனர். மேற்படி ரிட் மனு இன்னும் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கின் மீது தீர்ப்பு வழங்கியதும் உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு, பெரிய கிருஷ்ணாபுரம் கிராம ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

98—

தமிழ்நாட்டில் வீடற்ற மீனவர்களுக்கு அரசு கட்டித்தந்த வீடுகளின் விபரம்.

வினா எண் 5510—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இதுவரை வீடற்ற மீனவர்களுக்காக அரசு கட்டித்தந்த வீடுகள் எண்ணிக்கை விவரம் என்ன ?

(ஆ) மேலும் எங்கெங்கு எத்தனை வீடுகள் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது ?



1993 பிப்ரவரி 12]

(இ) கடலோர மீனவர்களல்லாமல் உள்நாட்டு மீனவர்களுக்காகவும் அரசு இலவசவீடுகள் கட்டித்தர ஏதேனும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் இதுவரையிலும் (1991 மார்ச்-31 வரையிலும்) 11,924 வீடுகள் மீனவர்களுக்காக கட்டி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) நடப்பாண்டில் (1992-93) 2,100 இணைப்பில் கண்டவாறு வீடுகள் கட்டி வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இணைப்பு.

1991-92 இல் அங்கீகரிக்கப்பட்ட மீனவர் வீடுகள் பட்டியல்.

| மாவட்டம் மற்றும் கிராமத்தின் பெயர். (1) | வீடுகளின் எண்ணிக்கை (2) |
|---|---|
| செங்கல்பட்டு-எம்.ஜீ.ஆர். : | |
| 1. காமராஜர்-காட்டுப்பள்ளி .. .. | 45 |
| 2. ஜமீலாபாத் .. .. .. .. | 101 |
| 3. அரங்கன்குப்பம் .. .. .. .. | 220 |
| 4. அண்ணாமலைச்சேரி .. .. .. | 101 |
| தென்னாற்காடு : | |
| 1. முதலியார்குப்பம் .. .. .. .. | 115 |
| 2. ஐயம்பேட்டை .. .. .. .. | 59 |
| 3. கூழையாறு .. .. .. .. | 55 |
| 4. மானியர்ப்பேட்டை .. .. .. | 27 |
| 5. வேலங்கராயன்பேட்டை .. .. .. | 2[illegible] |
| 6. புதுக்குப்பம் .. .. .. .. | [illegible] |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **தஞ்சாவூர் :** | | | | | |
| 1. சோமநாதன்பட்டினம் | .. | — | — | | 40 |
| 2. அன்னா நகர் | .. | .. | .. | — | 80 |
| **நாகப்பட்டினம்-காயிதே மிலலத்:** | | | | | |
| 1. கோடியக்காடு | .. | .. | .. | .. | 54 |
| 2. கோடியக்கரை | .. | .. | — | — | 24 |
| **வ. உ. சிதம்பரனார் :** | | | | | |
| 1. கீழவைப்பார் | | | | | 70 |
| 2. வேம்பார் | .. | .. | .. | — | 70 |
| **இராமநாதபுரம் :** | | | | | |
| பாசிப்பட்டினம் | .. | .. | .. | .. | 150 |
| **புதுக்கோட்டை :** | | | | | |
| புதுப்பட்டினம் | .. | .. | .. | .. | 81 |
| **கன்னியாகுமரி :** | | | | | |
| 1. வெள்ளவிளை | .. | .. | .. | .. | 58 |
| 2. ஏழுதேசம் சின்னதுறை | .. | .. | .. | | 226 |
| 3. கொட்டில்பாடு | ,, | .. | .. | .. | 75 |
| 4. இணையம்புத்தன்துறை | .. | .. | .. | | 25 |
| 5. மேல்மிடாலம் | .. | .. | .. | .. | 75 |
| 6. கீழ்மிடாலம் | .. | .. | | .. | 50 |
| 7. மேலமுட்டம் | .. | — | .. | .. | 50 |
| 8. செண்பகராமன் புத்தன்துறை | | .. | .. | | 40 |
| 9. பெரியவிளை | .. | .. | .. | .. | 100 |
| மொத்தம் | | | | .. | 2,100 |

(இ) மற்றும் (ஈ) உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடு கட்டித்தரும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.





99—

**தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மாணவர் இல்லங்கள் புதிதாக ஏற்படுத்தல்.**

**வினா எண். 7427—திரு. எம். ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்கள் மாணவர் இல்லங்கள் புதிதாக திறக்கப்படவிருக்கின்றன.

(ஆ) இவற்றுள் நத்தம் தொகுதியிலும் புதிதாக ஒரு விடுதி திறக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :**

(அ) மாவட்டம் (1992-93). இடம்.

**பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகள் :**

| மாவட்டம் | | இடம் |
|---|---|---|
| 1. தர்மபுரி | .. .. | பர்கூர் தொகுதியில் உள்ள ஆனந்தூர் அல்லது சாமல் பட்டி. |
| 2. தஞ்சாவூர் | .. | பேராவூரணி. |
| 3. நாகப்பட்டினம்-காயிதே மில்லத். | | எடமேலையூர். |
| 4. திருச்சிராப்பள்ளி | .. | பாலைக்குறிச்சி. |
| 5. கன்னியாகுமரி | .. | கோவளம். |
| 6. புதுக்கோட்டை | .. | திருமயம் (கே. புதுப்பட்டி). |
| 7. திருநெல்வேலி—கட்டபொம்மன். | | புளியங்குடி. |

**மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகள் :**

1. சென்னை .. .. இராயபுரம்.
2. சிதம்பரனார் .. சுப்பம்மாள்புரம்.
3. சேலம் .. .. திருச்செங்கோடு.
4. நீலகிரி .. .. கோலப்பள்ளி.
5. பெரியார் .. சத்தியமங்கலம்.

**சீர்மரபினர் மாணவியர் விடுதி :**

1. இராமநாதபுரம் .. சாயல்குடி.

(ஆ) தற்சமயம் இல்லை.

100—

**தோல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம் அமைக்கும் திட்டம்.**

**வினா எண். 7725—திரு. எம். ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோல் பொருட்கள் உற்பத்தியில் நவீன யுத்திகளை புகுத்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. எம். நாகூர்மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) சென்னையில் தோல் பொருள்கள் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு மையம் இந்தியன் வங்கி மற்றும் அனைத்திந்திய தோல் பொருள் ஏற்றுமதிக் குழுமத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்திந்திய தோல் வணிகர் சங்கமும் இணைந்து இந்தியன் தோல் பொருள் நிறுவனம் ஒன்றை அமைத்துள்ளன. இதற்காக தேவைப்படும் 5 ஏக்கர் நிலம் தரமணியில் ஒதுக்க இயலாத காரணத்தால் மாற்று நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகின்றது.



**(பட்டியல் எண். 6).**

1—

**தஞ்சாவூர் மாவட்டத்தில் 1990-91 ஆம் ஆண்டிலுள்ள குடும்பம் மற்றும் தொழில் சம்பந்தமான வழக்குகள்.**

**வினா எண். 9239—திரு. து. மூர்த்தி :** மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1990-91 ஆம் ஆண்டில் குடும்பம் மற்றும் தொழில் சம்பந்தமான வழக்குகள் எத்தனை?

(ஆ) அதில் தீர்க்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :**

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1990-91 ஆம் ஆண்டில் பதிவான குடும்பம் மற்றும் தொழில் சம்பந்தமான வழக்குகள் முறையே 309 மற்றும் 106 ஆகும்.

(ஆ) அவற்றில் தீர்வு காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை முறையே 271 மற்றும் 51 ஆகும்.

2—

**பத்திரப்பதிவு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பத்திரங்கள்.**

**வினா எண். 4560—திரு. ப. ரங்கநாதன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பத்திரப் பதிவு அலுவலகங்களில் பத்திரங்கள் பதிவு செய்த 3 நாட்களுக்குள் உரியவர்களுக்கு கிடைக்கும்படி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஒவ்வொரு ஆவணத்தைப் பொறுத்தும் செலுத்தப்பட வேண்டிய உரிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்டு, விதிமுறைகளுக்கு உட்பட்டிருப்பின், பதிவுக்கு அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து 3 நாட்களுக்குள் ஆவணம் பதிவு செய்யப்பட்டு கட்சிக்காரருக்குத் திருப்பி அனுப்பப்படுகிறது.

ஆவணத்தில் சொத்துக்களின் முழு விவரம் தெரிவிக்கப்படாமல் மறைக்கப்பட்டிருப்பதாகவோ சொத்தின் மதிப்பு குறைவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாகவோ பதிவு அதிகாரி கருதினால் விசாரணைக்குப் பின் ஆவணம் உடன் திருப்பி அளிக்கப்படுகிறது. வருமான வரிச்சான்று இந்து சமய அறநிலையத் துறையின் சொத்துக்கள் பற்றியதாயின் அத்துறையின் தடையிலாச் சான்று அங்கீகரிக்கப்படாத மனைகள் பற்றியதாயின் உள்ளாட்சி நிறுவன தடையிலாச் சான்று பெற வேண்டிய ஆவணங்கள் அச்சான்றுகள் பெறப்பட்டதும் திருப்பி அளிக்கப்படுகின்றன.

3—

## நெருஞ்சிப்பேட்டை பேரூராட்சி திரௌபதியம்மன் கோவிலுக்கருகிலுள்ள ராட்சச அரச மரம்.

வினா எண். 5577—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், நெருஞ்சிப்பேட்டை பேரூராட்சியில் திரௌபதியம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள 100 வயது உடைய ராட்சச அரச மரம் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது விழுந்து மக்களுக்கு ஆபத்து விளையும் என்பதால் அம்மரத்தை வெட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மேற்படி மரம் நேரில் அலுவலர்களால் பார்வையிடப்பட்டு அருகில் உள்ளவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. மரம் நல்ல நிலையில் உயிருடன் இருக்கிறது. ஆனால், அருகிலுள்ள வீட்டின் மேல் படர்ந்துள்ள இரண்டு கிளைகளை மட்டும்



வெட்டினால் போதுமானது எனக் கருதி அதற்கேற்ப மரத்தின் நலன் கருதியும் வீட்டின் மேல் பரந்துள்ள இரு கிளைகளினால் ஏற்படக் கூடிய ஆபத்தைத் தவிர்க்கும் பொருட்டும் அந்த இரண்டு கிளைகளும் 7–8–1993 அன்று வெட்டி அப்புறப்படுத்தப்பட்டு விட்டன. மேற்படி மரத்தின் அருகில் வாழ்ந்து வரும் குடிசை வாசிகள் தங்களுக்கு மரக்கிளையினால் ஏற்படவிருந்த ஆபத்து நீங்கிவிட்டது எனத் தெரிவித்து வாக்குமூலம் கொடுத்துள்ளனர்.

4—

## கிராமங்களிலுள்ள தனியார் நிலத்தை அரசு மதிப்பீடு செய்யும் முறை.

வினா எண். 6677—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமத்தில் தனியார் நிலத்தில் அரசு மதிப்பீடு எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது?

(ஆ) அப்படி நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டை, சார்புப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) ஒவ்வொரு கிராமத்திற்கும் அந்த அந்த கிராமத்தில் உள்ள அனைத்து சர்வே எண்களுக்கும் வழிகாட்டி மதிப்பு, அக்கிராமத்தின் வளர்ச்சி சதவிகிதம், உயர் மதிப்பு, புள்ளி விவரம், பூகோள ரீதியான அமைப்பு, நிலத்தின் உபயோகம் மற்றும் உள்ளூர் விசாரணை இவற்றின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது.

(ஆ) வழிகாட்டி மதிப்பு சார்பு பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

—

## தமிழ்நாட்டிலுள்ள சுயநிதி பொறியியல் மற்றும் கலைக் கல்லூரிகள்.

வினா எண். 246—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் சுயநிதி பொறியியல் மற்றும் கலைக் கல்லூரிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகளை அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் முப்பது (30) சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளும், இருபத்து இரண்டு (22) சுயநிதிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் பதினேழு (17) நிதி உதவி பெறாத தனியார் கலைக் கல்லூரி மற்றும் அறிவியல் கல்லூரி களும் இயங்கி வருகின்றன.

(ஆ) இல்லை.

6—

## ஆரம்பப் பள்ளி முதல் கல்லூரிகள் வரை மாணவர்கள் விகிதாச் சாரத்திற்கு ஏற்ப ஆசிரியர்களை பணியமர்த்தல்.

வினா எண். 2587—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிதி நெருக்கடியால் சிக்கனம் கையாளப்பட்டு ஆரம் பப்பள்ளி முதல் கல்லூரிகள் வரை மாணவர்களின் விகிதாச்சாரத் திற்கு ஏற்ப ஆசிரியர்கள் இல்லாததால் கல்வியின் தரம் குறைவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாணவர்கள் விகிதாச்சாரத்திற்கேற்ப ஆசிரியர்களைப் பணியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நிதி நெருக்கடியால் ஆசிரியர்கள் பணியிடங்கள் அனுமதிப்பதில் சிக்கனம் கையாளப்படுகிறது. ஆனால் இதன் காரணமாக கல்வியின் தரம் குறையவில்லை. அவ்வப்போது தேவை மற்றும் அரசின் நிதி நிலைக்கேற்ப ஆசிரியர் பணியிடங்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டு வரு கின்றன.





7—

## மயிலாடுதுறை இட்டப்பா மேல்நிலைப்பள்ளிக்குப் புதிய ஆசிரியர்கள் நியமனம்.

வினா எண் 5522—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை, இட்டப்பா மேல்நிலைப்பள்ளியில் போதிய ஆசிரியர்கள் இல்லாததால் அங்கு புதிய ஆசிரியர்களை நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதிய ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்படுவார்கள்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

8—

## விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் தொகையினை உயர்த்திக் கொடுத்தல்.

வினா எண் 7835—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநில அளவு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெறும் விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு முதலிடம் ரூ. 1,400-ம், இரண்டாமிடம் ரூ. 600-ம் வழங்கப்படுவதை உயர்த்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று முதலிடம் பெறும் விளையாட்டு வீரர், வீராங்கனை களுக்கு தலா ரூ. 600-ம் இரண்டாவது இடம் பெறும் விளை யாட்டு வீரர், வீராங்கனைகளுக்குத் தலா ரூ. 400-ம் மட்டுமே தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இத் தொகையினை உயர்த்திக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

9—

**"கிளப் லீக்" மற்றும் "ஸ்கூல் லீக்" போட்டிகளை மீண்டும் துவக்குதல்.**

வினா எண் 7838—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இளம் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் திட்டமாக "கிளப் லீக்" மற்றும் "ஸ்கூல் லீக்" ஆகிய போட்டிகள் நிறுத்தப்பட்டதால் அவற்றை மீண்டும் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

26—6—1990 மற்றும் 27—6—1990 அன்று நடந்த மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் கூட்டத்தில், கிளப் லீக் போட்டிகள், பள்ளி லீக் போட்டிகளாக மாற்றப்பட்டு, இப் போட்டிகள் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நடத்த தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஏற்கெனவே உள்ள பள்ளி லீக் விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு மட்டும் நடத்தப்படவும் தீர்மானிக்கப்பட்டது.

எனவே, பள்ளி லீக் விளையாட்டுப் போட்டிகள் மேல்நிலை பள்ளி/உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் நடத்தப்பட உள்ளன.

10—

**திருவையாறு தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தல்.**

வினா எண் 8540—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

தற்பொழுது பரிசீலனையில் இல்லை.



11—

**திருநின்றவூர் உயர்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 வகுப்புகள் துவங்குதல்.**

வினா எண் 9520—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி தொகுதி திருநின்றவூர் உயர்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 வகுப்புகள் துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

12—

**உடல் ஊனத்தால் கைவிரல்கள் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தேர்வு எழுதும் நேரத்தை அதிகரித்தல்.**

வினா எண் 9691—திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனத்தால், கை விரல்கள் மட்டும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தேர்வு எழுதும் 3 மணி நேரம் சற்று அதிகரித்து அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வாறு?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) எதிர்பாராத விபத்துக்களால் உடல ஊனமுற்று தேர்வெழுத இயலாதோர் பாரிச வாயு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் எதிர்பாராது அடிபட்டு எழுதும் கை முறிவு ஏற்பட்ட மாணவர்கள் போன்றோருக்கு பதிவு பெற்ற மருத்துவரின் தக்க சான்றிதழின் அடிப்படையின்

பேரில் அம்மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு அவர்களது சொந்த செலவிலேயே ''சொல்வதை எழுதுபவர்'' ( Scribe ) நியமனம் செய்யும் அதிகாரம் அரசாணை நிலை எண் 770, கல்வி, நாள் 15-6-1984-ல் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுவாக உடல் ஊனமுற்ற மாணவர்கள் தேர்வு எழுத அதிக நேரம் அளிக்காமல் மேற்சொன்னபடி ''சொல்வதை எழுதுபவரை'' நியமிப்பது மட்டும் இத்துறையில் நடைமுறையிலுள்ளது. ஆயினும், மேல்நிலைத் தேர்வு 1980 ஆம் ஆண்டு முதன் முறையாக நடத்த ஆரம்பித்த பின்னர் இதுகாறும் பின்வருமாறு இரண்டு பள்ளி மாணாக்கர்களுக்கு கூடுதலாக ஒரு மணி நேரம் தனிதேர்வாக அரசு வழங்கியுள்ளது.

(1) கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரம் அரசு மேல் நிலைப்பள்ளி மாணவியான ஜி. சசிகலா என்பவருக்கு தமிழ் நாடு சட்டமன்ற பேரவை மனுக்கள் குழுவின் பரிந்துரையின் பேரில் மார்ச் ஏப்ரல் 1989 மேல்நிலைத் தேர்வெழுத ஒரு மணி நேரம் அதிகமாகத் தனிதேர்வாக அரசு வழங்கியுள்ளது.

(2) திருச்சிராப்பள்ளி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளியின் மாணவியான ஜான் ரோஸ் மேரி என்பவருக்கு மார்ச் ஏப்ரல் 1992 மேல்நிலைத் தேர்வெழுத ஒரு மணி நேரம் அதிகமாகத் தனித்தேர்வாக அரசு வழங்கியுள்ளது.

13—

**மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்குப் போதிய மருத்துவர்கள் மற்றும் அலுவலர்கள் நியமனம்.**

வினா எண் 3480—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் போதிய மருத்துவர்களும், அலுவலர்களும் இல்லாமல் இருப்பதால், அங்கு புதிய மருத்துவர்களையும் அலுவலர்களையும் நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :





அரசு ஆணை 1516, சுகாதாரம், நாள் 28—11—1991 இல் கீழ்க்கண்ட பணியாளர்களை நியமிக்க அரசு ஆணைப் பிறப்பித்துள்ளது :

| | | |
|---|---|---|
| 1. உதவி மருத்துவர்கள் | .. | 2 |
| 2. செவிலியர் மேற்பார்வையாளர் | .. | 1 |
| 3. செவிலியர்கள் | .. | 2 |
| 4. நுண்கதிர் வீச்சாளர் | .. | 1 |
| 5. மருந்தாளுநர்கள் | .. | 4 |
| 6. ஆய்வக தொழில் நுட்பப் பணியாளர் தரம்-1 | | 1 |
| 7. மருத்துவமனைப் பணியாளர்கள் | .. | 5 |
| 8. துப்புரவுப் பணியாளர்கள் | .. | 6 |
| 9. நிர்வாகச் செயலாளர் மற்றும் பொருளாளர் தரம்-II. | | 1 |
| 10. உதவியாளர் | .. | 1 |
| 11. இளநிலை உதவியாளர் | .. | 1 |
| 12. பதிவு எழுத்தர் | .. | 1 |

14—

**போளூர் பேரூராட்சியில் 10 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமும், பொது மருந்தகமும் ஏற்படுத்தல்.**

வினா எண். 5281—திரு. கோ. காளன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதி, போளூர் பேரூராட்சியில் 10 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமும் பொது மருந்தகமும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது, ஆரம்பிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

15—

அழகிய நாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு பெண் மருத்துவர் நியமனம்.

வினா எண். 6190—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகிய நாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு பெண் மருத்துவரை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

போதிய பெண் மருத்துவர்கள் தற்போது இல்லாத காரணத்தால், தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் மருத்துவர்கள் அல்லது பட்ட மேற்படிப்பு முடித்த பெண் மருத்துவர்கள் பணிக்கு வரும்போது அழகியநாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு பெண் மருத்துவர் உடனடியாக நியமனம் செய்யப்படுவார்.

16—

கள்ளக்குறிச்சியிலிருந்து தடம் எண் 27 பேருந்தை எஸ். நரையூர் காலனி வரை இயக்குதல்.

வினா எண். 5644—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



மங்களூர் தொகுதி எஸ். நரையூர் கிராமத்திற்கு கள்ளக்குறிச்சியில் இருந்து வரும் தடம் எண் 27 என்ற பேருந்தை எஸ். நரையூர் காலனி வரை விட அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஒரு நகரப் பேருந்து பல்வழித் தட இயக்க திட்டத்தின் கீழ் கள்ளக்குறிச்சி எஸ். நரையூர் தடத்தில் தடம் எண் டி. 27-ஐ இயக்கி வருகிறது. இந்நகரப் பேருந்து ஏற்கெனவே எஸ். நரையூர் காலனி வரை தான் இயக்கப்பட்டு வருகிறது.

17—

போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழுவின் பணிகள்.

வினா எண். 6253—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழுவின் பணிகள் என்ன ?

(ஆ) அக்குழுவின் உறுப்பினர்கள் விவரம் என்ன ?

(இ) பொதுமக்களுக்கும் இக்குழுவில் பிரதிநிதித்துவம் அளிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழுவின் பணிகள் பின்வருவன குறித்து கலந்தாலோசித்து தக்க முடிவுகளைக் காணுதல் :—

(1) பேருந்து இயக்கத்தில் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இடர்பாடுகள்.

(2) பயணிகளின் வசதிகள்.

(3) பயணிகள், மாணவர்கள் மற்றும் போக்குவரத்து பணியாளர்கள் ஆகியோரிடையே நிலவும் குறைகள்.

(ஆ) போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு :

[1993 பிப்ரவரி 12

(1) போக்குவரத்துக் கழகத்தின் நிர்வாக இயக்குநர்—தலைவர்.

(2) போக்குவரத்துக் கழகத்தின் பணியாளர் பிரதிநிதிகள்—உறுப்பினர்கள்.

(3) மாணவர் பிரதிநிதிகள்—உறுப்பினர்கள்.

(4) மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் பிரதிநிதிகள்—உறுப்பினர்கள்.

(இ) பொதுமக்கள் சார்பில் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் பிரதிநிதிகள் இக்குழுவில் உறுப்பினர்களாக இருப்பதால் தனியே பொது மக்களுக்கு பிரதிநிதித்துவம் கோரும் வினாவிற்கு இடமில்லை.

18—

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சமூக நலக்காடுகளின் உற்பத்தி பொருள்கள் ஏலம் மூலம் கிடைத்த வருவாய்.

வினா எண். 7956—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சமூக நலக் காடுகளின் உற்பத்தி பொருள்கள் 1989–90 ல் கோட்ட அலுவலகத்தால் ஏலம் விட்டதில் கிடைத்த வருவாய் எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சமூகக் காடுகள் கோட்டத்திலிருந்த சமூகக் காடுகள் தோட்டங்களை ஏலம் விட்டதின் மூலம் அரசுக்கு ரூ. 18,88,442 வருமானம் கிடைத்துள்ளது.

19—

சிறிய துறைமுகங்களில் ஏற்படும் மணல்மேடு.

வினா எண். 8290—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறிய துறைமுகங்களில் எங்கெங்கு அடிக்கடி மணல் மேடு உருவாகிறது ?

(ஆ) அந்த மணல்மேடு ஏற்படாமலிருக்க நிரந்தர வழிமுறை காண அரசு ஏதேனும் பரிசீலனை செய்ததா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?



1993 பிப்ரவரி 12]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) கடலூர் மற்றும் நாகப்பட்டினம் துறைமுகங்களில் மணல் படிவுகள் உருவாகின்றன.

(ஆ) ஆம்.

(இ) நாகப்பட்டினம் துறைமுகத்தில் கடுவையாற்றின் துறைமுக முகத்துவாரத்தில் சுமார் 0.25 மில்லியன் டன் அளவிற்கு ஆண்டுதோறும் மணல் படிவுகள் ஏற்பட்டு நகரும் மணலுறிஞ்சியின் மூலம் தூர் எடுக்கப்பட்டு அப்புறப்படுத்தப்படுகின்றது. இதனை தவிர்க்கும் பொருட்டு துறைமுகத்தின் இரு புறமும் முறையே தெற்குப்பக்கத்தில் 100 மீ. நீளத்திற்கும், வடக்குப்பக்கத்தில் 193 மீ. நீளத்திற்கும் நீர்தடுப்பு ரூ. 20 இலட்சம் செலவில் 1985-86 இல் அமைக்கப்பட்டது. மேலும் பகுதி II திட்டத்தில் 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.00 இலட்சம் விரிவான தொழில் நுட்பப் பணிகளுக்காக் ஒதுக்கப்பட்டு உள்ளது. கடலூர் துறைமுக முகத்துவாரத்தில் சுமார் 0.5 மில்லியன் டன் மணல் படிவு ஆண்டுதோறும் அகற்றப்பட்டு வருகிறது. இதனை தடுக்கும் வகையில் 1985-86 ஆம் ஆண்டு ரூ. 20 இலட்சம் செலவில் வடக்குப் புறத்தில் 256 மீட்டர் நீளத்திற்கு 'நீர்த்தடுப்பு' போடப்பட்டது. இதன் மூலம் கடல் ஆழ அளவுகளில் கிடைத்த முன்னேற்றத்தினால், தென் புறத்தில் 150 மீட்டர் நீளத்திற்கு 1990-91 இல் மற்றும் ஒரு நீர்த்தடுப்பு அமைக்கப்பட்டது. எல்லா நேரங்களிலும் படகுப் போக்குவரத்து ஏதுவாக உள்ளது. நடப்பு ஆண்டில் இத்துறைமுகத்தினை மேம்படுத்த ஆய்வினை மேற்கொள்ள கலந்தறிதற்குரியவர் ஒருவர் ரூ. 2.90 இலட்சம் செலவில் நியமிக்கப்பட்டு மணல் படிவுகள் நிரந்தரமாக ஏற்படாமல் தடுக்கத்தக்க வழிமுறைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்தத் திட்ட ஆய்வு முன்னேற்ற நிலையில் உள்ளது.

20—

சிறிய துறைமுகங்களிலுள்ள சரக்கு மற்றும் பயணிகளுக்கான கட்டண விகிதங்களை மாற்றியமைத்தல்.

வினா எண் 8291—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சிறிய துறைமுகங்களில் சரக்கு மற்றும் பயணிகள் ஏற்றி இறக்குவதற்கான கட்டண விகிதங்களில் மாற்றம் செய்யப்பட்டதா ?

[1993 பிப்ரவரி 12

(ஆ) ஆம் எனில் எந்த அடிப்படையில் ஏன் மாற்றப்பட்டது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு சிறு மற்றும் இடைநிலைத் துறைமுகங்களில் சரக்குகள் மீது விதிக்கப்படும் ஏற்றுமதி இறக்குமதி கட்டண விகிதங்களும், பயணிகள் மீது விதிக்கப்படும் பயணிகள் கட்டண விகிதங்களும் 1990-ல் மாற்றியமைக்கப்பட்டன. இதற்கு முன்னர் 1986 ஆம் ஆண்டு இவ்விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டன.

(ஆ) துறைமுகப் பராமரிப்பு செலவு அதிகரிப்பு, கூடுதல் கிடங்குகள் கட்டுதல் படகுகளையும் துறையை கெட்டிப்படுத்துதல், தூர்வாரி, பளுதூக்கி, படகுகள் வாங்குதல் போன்ற, துறைமுக வசதிகளைப் பெருக்குவது போன்ற அபிவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்படவும், தூர்வாரிகள், விசைப்படகுகள், படகுகள், முதலிய இயந்திரங்கள் இயக்குதவற்கும் பராமரிப்பதற்கும் ஆகும் செலவு, பல மடங்கு உயர்ந்து விட்டபடியாலும் சம்பளக் குழுவின் பரிந்துறையினால் பணியாளர்களின் சம்பளம் மாற்றியமைக்கப்பட்டதால் பணியாளர் தொகுதிச் செலவு அதிகரித்ததாலும், கூடியுள்ள செலவினங்களை ஈடு செய்வதற்காகவும் துறைமுகத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் கட்டண விகிதங்கள் மாற்றப்பட்டன.

21—

முண்டந்துறையில் புலிகள் காப்பகம் அமைக்கும் பணி.

வினா என் 8697—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) களக்காடு முண்டந்துறையில் புலிகள் காப்பகம் அமைக்கும் பணி முடிவடைந்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், இந்த காப்பகத்தில் உள்ள புலிகளின் எண்ணிக்கை எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :



1993 பிப்ரவரி 12]

(அ) களக்காடு முண்டந்துறை சரணாலயங்களை இணைத்து புலிகள் காப்பகமாக மத்திய அரசு 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அறிவித்தது. இதற்கு முன் இரண்டு பகுதிகளும் தனித்தனி சரணாலயங்களாகப் பராமரிக்கப்பட்டு வந்தன. புலிகள் காப்பகத்தில் முன்னேற்றப் பணிகள் ஒவ்வொரு ஆண்டும் அரசாணையின் படியும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் நிறைவேற்றப்படுகின்றன. எனவே, முன்னேற்றப் பணிகள் ஒரு குறிப்பிட்ட தேதியில் முடிந்து விட்டதாக கருத இயலாது. மூலதனப் பணிகள் மற்றும் தொடராப் பணிகள் ஒவ்வொரு ஆண்டும் நிறைவேற்றப்படுகின்றன.

(ஆ) 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திய கணக்கெடுப் பின்படி இக்காப்பகத்தில் 21 புலிகள் உள்ளன.

22—

களக்காடு முண்டந்துறையில் புலிகள் காப்பகம் அமைக்க கையகப் படுத்திய நிலத்தினால் பாதிக்கப்பட்ட ஆதிவாசிகள் குடும்பங்கள்.

வினா என் 8782—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) களக்காடு முண்டந்துறையில் புலிகள் காப்பகம் அமைப்பதற்காக கையகப்படுத்திய நிலங்களினால் பாதிக்கப்பட்ட ஆதிவாசிகள் குடும்பங்கள் எத்தனை ?

(ஆ) அவர்கள் அனைவருக்கும் மாற்று இடமும் வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்பட்ட மாற்று விவசாய நில மேம்பாட்டிற்கான உதவியும் வழங்கப்பட்டு விட்டனவா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) களக்காடு முண்டந்துறையில் புலிகள் காப்பகம் அமைப்பதற்காக கையகப்படுத்திய நிலங்களினால் பாதிக்கப்பட்ட ஆதிவாசிகள் குடும்பங்கள் 53.

(ஆ) மத்திய அரசாங்கம் ரூ. 16.93 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கியுள்ளது. மாற்று இடமும் புலிகள் சரணாலயத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் (Buffer Ar a) ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கம் வீடு கட்டுவதற்காக ஒரு குடும்பத்திற்கு ரூ. 10,000 விதம் வழங்க அனுமதியளித்துள்ளது.

(இ) இதற்கான முழுத் திட்டத்தினை தலைமை வன உயிரினக் காப்பாளர் கூடிய விரைவில் அரசுக்கு அனுப்பி வைப்பார்.

23 —

## தமிழ்நாட்டில் விசைத்தறி கூடங்களை விரிவுபடுத்தும் திட்டம்.

வினா எண் 7985—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எங்கெங்கு (மாவட்ட வாரியாக) விசைத்தறிக் கூடங்கள் எவ்வளவு உள்ளவ ?

(ஆ) தமிழ்நாட்டில் விசைத்தறிக் கூடங்களை விரிவுடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் 22 விசைத்தறிக்கூடங்கள் உள்ளன. மாவட்ட வாரியாக விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும் மா வட்டத்தின் பெயரும். | விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| 1. வட ஆற்காடு-டாக்டர் அம்பேத்கார் மாவட்டம் | வெட்டுவானம் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம். |
| | பெருமுச்சி விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம். |





| (1) | (2) |
| --- | --- |
| 2. சேலம் .. .. | மேச்சேரி. |
| 3. தர்மபுரி .. .. | தர்மபுரி. |
| 4. பெரியார் .. .. | திங்களூர். |
| | தாராபுரம். |
| 5. மதுரை .. .. | தொட்டப்பநாயக்கனூர் |
| | ஆண்டிப்பட்டி. |
| | கிருஷ்ணாபுரம். |
| 6. பசும்பொன் முத்துராமலிங்கம் | ஆர். எஸ். மங்கலம். |
| | ஓரியூர். |
| | நயினார்கோவில். |
| | மூலனூர். |
| 7. காமராஜர் .. .. .. | தளவாய்புரம். |
| 8. திருநெல்வேலி கட்டபொம்மன் | வீரவநல்லூர். |
| | சங்கரன்கோவில். |
| | மேலப்பாளையம். |
| 9. புதுக்கோட்டை .. | பொன்னமராவதி. |
| | திருநாளூர். |
| | பேராவூர். |
| 10. தஞ்சாவூர் .. | எட்டுப்புலிக்காடு. |

(ஆ) தமிழ்நாட்டில் விசைத்தறிக்கூடங்களை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

24—

**ஒரு ஊரிலுள்ள அனைத்து கூட்டுறவு சங்கங்களை கவனிக்க தனி அதிகாரி நியமனம்.**

வினா எண். 11325—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல ஊர்களில் உள்ள பட்டு கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு தனி அதிகாரியை நியமிக்கும் முறையை தவிர்த்து ஒரு ஊரில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களை தனி அதிகாரிகள் கவனிக்கின்ற வகையில் அரசு நியமனம் செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் :

ஒரே ஊரில் உள்ள அனைத்துச் சங்கங்களுக்கும், ஒரே தனி அலுவலரை நியமனம் செய்வது, நிர்வாகக் காரணங்களால் செயல்படுத்த இயலாது.

25—

**குத்தியாலத்தூர் மலைப்பகுதி அஞ்சனப் பிரிவிலிருந்து குன்றி வரை தார்ச்சாலை அமைக்கும் திட்டம்.**

வினா எண். 3456—திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் ஒன்றியம், குத்தியாலத்தூர் மலைப் பகுதி அஞ்சனப் பிரிவிலிருந்து குன்றிவரை சுமார் 9.2 கி.மீ. தார்ச்சாலை அமைக்க தேசிய சாலை திட்டத்தின் கீழ் (மலைப் பகுதி) திட்டமிடப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) திட்டம் எப்போது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) இத்திட்டம் எந்தவித திட்டத்திலும் இடம் பெறவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



26—

**அமைச்சர்களின் இல்லங்களில் பராமரிப்புப் பணிகளுக்கான செலவிடப்பட்ட தொகை.**

வினா எண். 4450-ஏ—திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1989–90, 1990–91, 1991 ஜனவரி மாதம் முடிய முதல் அமைச்சர் மற்றும் அமைச்சர்களின் இல்லங்களில் பராமரிப்புப் பணிகளுக்காக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

முதல் அமைச்சர் மற்றும் இதர அமைச்சர்களின் இல்லங்களுக்கான பராமரிப்பு பணிகளுக்கான செலவு :

(1) 1–3–89 முதல் 31–3–89 முடிய ரூ. 4,54,700.

(2) 1–4–89 முதல் 31–3–90 முடிய ரூ. 11,74,556 ஆகும்.

(3) 1–4–90 முதல் 31–1–91 முடிய ரூ. 9,38,280 ஆகும்.

27—

**தனியார் உரிமை பெறும் பேருந்து உரிமையாளர் சாலைகளை தார்சாலைகளாக அமைக்கும் பொறுப்பை உரிமையாளரிடமே ஒப்படைத்தல்.**

வினா எண். 6055—திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேருந்து புதிய வழித்தடங்கள் தனியாருக்கு கொடுக்கும்போது தனியார் அந்த உரிமை பெறும் பேருந்து உரிமையாளருக்குரிய சாலைகளை தார் சாலைகளாக அமைக்கும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) இது போன்ற திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

28—

காடம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் குகைக்குள் பணிபுரியும் ஊழியர்களுக்குச் சுத்தமான காற்று வசதி ஏற்படுத்தல்.

வினா எண். 8014—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காடம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் குகைக்குள் பணி புரியும் ஊழியர்களுக்கு போதிய சுத்தமான காற்று கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

காடம்பாறை குகை மின் நிலையத்துக்குள் சுத்தமான காற்று கிடைக்கச் செய்வதற்கு ''வெண்டிலேஷன் சிஸ்டம்'' உள்ளது. 19—10—1990 அன்று மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் அந்த அமைப்பு பாதிக்கப்பட்டு, தற்போது வேலை செய்யவில்லை.

வெண்டிலேஷன் சிஸ்டம் முதலில் 'புளு ஸ்டார்' நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டது. எனவே, அந்த அமைப்பைச் சீர் செய்யும் பணியை அதே நிறுவனத்துக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அந்த நிறுவனம் முதலில் ஒப்புக் கொண்ட தொகையில் வேலையை முடிக்க மறுத்து மிக அதிகமான தொகை கோரியது. எனவே, சீர் செய்யும் பணியை முடிக்க தற்போது வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப்பணி முடிந்தவுடன் பழையபடி வெண்டிலேஷன் சிஸ்டம் இயங்கத் தொடங்கும்.



29—

மின் வாரியத்தில் தினக்கூலி அடிப்படையில் பணி புரியும் ஊழியர்கள்.

வினா எண். 8042—திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தினக்கூலி அடிப்படையில் மின் வாரியத்தில் Wireman உட்பட உள்ள ஊழியர்கள் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு ?

(ஆ) இவர்கள் எத்தனை ஆண்டுகளாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிகின்றனர் ?

(இ) இவர்களை நிரந்தர ஊழியர்களாக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு மின்வாரியத்தில் தினக்கூலி அடிப்படையில் நேரடியாக வேலைக்கு ஆட்கள் அமர்த்தப்படுவதில்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

30—

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாக மின் இணைப்பு பெற விண்ணப்பித்துள்ளோருக்கு சிறப்புரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கல்.

வினா எண். 83788—திரு. எஸ். சண்முகநாதன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாக மின் இணைப்பு பெற விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு சிறப்புரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கி விவசாயத்தை பெருக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம் காவிரி டெல்டா பகுதிகள் அடங்கிய ஆவுடையார்கோவில், ஆலங்குடி, அறந்தாங்கி தாலுக்காவிலுள்ள காவிரிடெல்டா பகுதிகளில் அமைக்கப்படும் குழாய்க்கிணறுகள் மற்றும் துணைக்கிணறுகளுக்கு ஏற்கனவே மின் இணைப்பில் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

31—

கிராமப்புற விவசாயிகளின் இறவைக் கிணறுகளுக்கான மின்இணைப்பு வைப்புத்தொகை.

வினா எண். 8472—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற விவசாயிகளின் இறவைக் கிணறுகளுக்கு மின் இணைப்புகளுக்கான வைப்புத் தொகை உயர்த்தப்பட்டுள்ளதா ?

(ஆ) உயர்த்தப்பட்ட தொகையை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு மின்சார வாரிய விதிகளின்படி (Terms and Conditions of Supply of Electricity) இலவச மின்சாரம் வழங்கப்படும் மின் இணைப்புகளுக்கு வைப்புத் தொகை (Security Deposit) வசூலிக்க வேண்டியதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

32—

முன்சிறை பகுதியில் துணை மின்நிலையம் அமைக்கும் பணி.

வினா எண். 8733—டாக்டர் தே. குமாரதாஸ் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட பகுதியின் மின் அழுத்தக் குறையினைப் போக்க புதிதாக முன்சிறை பகுதியில் அமைய இருக்கும் துணை மின்நிலையத்தின் வேலைகள் எப்பொழுது தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

முன்சிறை பகுதிக்கு தற்போது குழித்துறை மற்றும் தக்கலை ஆகிய இடங்களிலுள்ள துணை மின்நிலையங்களிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. 1994-95 ஆம் ஆண்டில் இப்பகுதியில் மின்தேவை உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் இந்தத் தேவையை நிறைவு செய்வதற்காகவும் மின்வழங்கல் நிலையைச் சீர் செய்வதற்காகவும் முன்சிறையில் ஒரு 110:11 கி. வே. திறனுள்ள துணை மின் நிலையம் எட்டாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் நிறுவப் பட உள்ளது.

இத்துணை மின்நிலையத்தை நிறுவுவதற்காக விளவங்கோடு தாலுக்காவில் உள்ள குன்னத்தூர் கிராமத்தில் 1·18 எக்டேர் பரப்பளவு உள்ள நிலத்தினை கையகப்படுத்த தமிழ் நாடு மின்வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. போதுமான நிலம் உரிய காலத்தில் கிடைத்ததும் துணை மின் நிலையத்தை நிறுவும் பணிகள் 1992-93-ம் ஆண்டில் துவங்கப் படும்.

33—

ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு மின்சார வசதி செய்து கொடுத்தல்.

வினா எண். 8754—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு வீடுகள் கட்டி முடிக்கும் பொழுதே மின்சார வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

[1993 பிப்ரவரி 12

தற்போது உள்ள அரசு விதிகளின்படி ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் தகுதி பெறும் ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிடர் அல்லாத குடிசை குடியிருப்புகளுக்கு இலவச மின்வசதி வேண்டுமானால் உரிய படிவத்தில் விண்ணப்பங்கள் மின் வாரிய அலுவலகத்தில் கொடுக்கப்பட வேண்டும். ஆகவே, வீடு கட்டி முடிக்கப்பட்டு குறிப்பிட்ட நபருக்கு ஒப்படைக்கப்பட்ட பின் அவர் தன்னுடைய பெயரில் உரிய படிவத்தில் வாரியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் பொழுது வட்ட வளர்ச்சி அலுவலரிடமிருந்து தகுந்த சான்றிதழ் பெற்று இணைத்தல் வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு பதிவு முன்னுரிமை அடிப்படையில் அப்பகுதி இலக்கீட்டிற்கு ஏற்ப எடுத்துக் கொள்ளப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. பின்னர், மின் தளவாடங்கள் இருப்பு நிலைக்கேற்ப இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு வீடுகள் கட்டி முடிக்கும் போதே மின் வசதி வழங்க இயலாது.

34—

சோத்துப்பாறை அணைத் திட்டப்பணிகள்.

வினா எண், 8829—திரு. எம். பெரியவீரன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தொகுதியில் சோத்துப்பாறை அணைத் திட்டப் பணிகள் எப்பொழுது முடிவடையும் ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சோத்துப்பாறை அணைத் திட்ட பணிகள் வரும் மார்ச் 1994-ல் கட்டிமுடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

35—

துவறமடை கீழத்தெருவிற்கு ஒரு போர்வெல் அமைத்தல்.

வினா எண். 2178—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



1993 பிப்ரவரி 12]

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புளிக்காடு ஊராட்சி, துவறமடை கீழத்தெருவிற்கு ஒரு போர்வெல் போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

'ஆம்' துரித கிராம குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட உள்ளது.

36—

பில்லங்குழிக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 2275—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புளிக்காடு ஊராட்சி பில்லங்குழிக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கழுகுப்புளிக்காடு ஊராட்சி, பில்லங்குழியில் இரண்டு அடிபம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

37—

பூவளூர்கிழக்கு ஆதிதிராவிடர் தெருவிலுள்ள தொடக்கப் பள்ளி செல்லும் கப்பிச் சாலையை தார்ச்சாலையாக மாற்றல்.

வினா எண். 236—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1993 பிப்ரவரி 12

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பூவலூர் கிழக்கு ஆதிதிராவிடர் தெருவில் உள்ள தொடக்கப்பள்ளிக்குச் செல்லும் கப்பிச்சாலையை தார்ச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், பூவலூர் கிழக்கு ஆதி திராவிடர் தெருவில் உள்ள தொடக்கப்பள்ளிக்குச் செல்லும் சாலையினை தார்ச்சாலையாக்க நிதி வசதி பற்றாக்குறை காரணமாகத் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

38—

மழவேனிற்காட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை விஸ்தரிப்பு செய்தல்.

வினா எண். 2663—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை விஸ்தரிப்பு செய்து கொள்ளளவை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை விஸ்தரிப்பு செய்து கொள்ளளவை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

39—

செங்கமங்கலம் கிழக்காட்டிலுள்ள சி.எம்.பி. வாய்க்காலில் ஒரு சிறு பாலம் கட்டுதல்.

வினா எண். 2702—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



1993 பிப்ரவரி 12]

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமங்கலம் கிழக்காட்டிலுள்ள சி.எம்.பி. வாய்க்காலில் ஒரு சிறுபாலம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் செங்கமங்கலம் கிழக்காட்டிலுள்ள சி.எம்.பி. வாய்க்காலில் பாலம் கட்ட சுமார் ரூ. 25,000 செலவாகும். ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லாததாலும் தற்போது இதுபற்றி செயற்குறிப்பு ஏதுமில்லை.

40—

செங்கமங்கலம் ஆதிதிராவிடர் தெருவிலுள்ள ஊராட்சி சாலையை சிகப்புக் கப்பிச் சாலையாக மாற்றல்.

வினா எண். 2728—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் செங்கமங்கலம் ஆதி திராவிடர் தெருவிலுள்ள ஊராட்சி சாலையை சிகப்புக் கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், செங்கமங்கலம் ஆதி திராவிடர் தெருவிலுள்ள ஊராட்சி சாலையை சிகப்புக் கப்பிச் சாலையாக மாற்றித்தரும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் தற்போது இல்லை.

41—

பள்ளி ஓடை வயலுக்கு செல்லும் நெடுஞ்சாலையை தார்ச்சாலையாக மாற்றல்.

வினா எண். 2733—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1993 பிப்ரவரி 12

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் எஸ்.ஆர். பட்டினம் ஊராட்சியைச் சேர்ந்த பள்ளி ஓடை வயலுக்கு வரும் நெடுஞ்சாலையை பராமரித்து தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், எஸ். ஆர். பட்டினம் ஊராட்சியைச் சார்ந்த பள்ளி ஓடை வயல் சாலையில் பேருந்து போக்குவரத்து இல்லாததால் இதனை தார்ச்சாலையாக மாற்றுவதற்குரிய செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

42—

பள்ளிகொண்டான்—அதிராம்பட்டினம் சாலையை மராமத்து செய்தல்.

வினா எண். 2745—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளி கொண்டான் ஊராட்சியில் இருந்து அதிராம்பட்டினம் செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பள்ளிக்கொண்டான் ஊராட்சியிலிருந்து அதிராம்பட்டினம் செல்லும் சாலை 10.8 கி.மீ. நீளமுடையது. இச்சாலை முழுவதுமே தற்சமயம் கருங்கல் ஜல்லிச் சாலையாக உள்ளது. எனவே இதுபற்றி தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.



சென்னை-600 009

1993 பிப்ரவரி 12]

43—

கார்காவயல் ஆதி திராவிடர் தெருவிற்குச் செல்லும் சாலையை செப்பனிடல்.

வினா எண். 2760—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கார்காவயல் ஆதி திராவிடர் தெருவிற்குச் செல்லும் சாலையை செப்பனிட்டுக் கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கார்காவயல் ஆதி திராவிடர் தெருவின் நீளம் 0.3 கி.மீ. இதனை 1990-91 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் செப்பனிடப்பட்டு செங்கப்பிச்சாலையாக்கபட்டுள்ளது. எனவே தற்போது இது பற்றி செயற்குறிப்பு ஏதுமில்லை.

44—

மிலாரிக் காட்டிலிருந்து அதிராம்பட்டினம் செல்லும் ஆற்றுக் கரைச் சாலையை மராமத்து செய்தல்.

வினா எண். 2872—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ழவேனிகாடு ஊராட்சியைச் சேர்ந்த மிலாரிக் காட்டில் இருந்து அதிராம்பட்டினம் செல்லும் ஆற்றுக்கரைச் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

[1993 பிப்ரவரி 12

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மழவேனிகாடு ஊராட்சியைச் சேர்ந்த மிலாரிக் காட்டிலிருந்து அதிராம்பட்டினம் செல்லும் ஆற்றுக்கரைச் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றித்தர நிதிநிலைமை இடம் தராமை காரணமாக தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

45—

**பெருமகளூர் சாலையிலிருந்து விளங்குளம் வரையுள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்றல்.**

**வினா எண். 2981—திரு. ஆர். சிங்காரம் :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் சாலையில் இருந்து வட்டங்காடு கூத்தாடிவயல் விளங்குளம் வரை செல்லும் சாலையை பராமரித்து தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் சாலையிலிருந்து வட்டங்காடு, கூத்தாடிவயல், விளங்குளம் வரை செல்லும் சாலையை பராமரித்து தார்ச் சாலையாக மாற்ற நிதிப் பற்றாக்குறையின் காரணமாக செயற்குறிப்பு ஏதும் இல்லை.

46—

**பட்டாங்காடு ஆதி திராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.**

**வினா எண். 3086—திரு. ஆர். சிங்காரம் :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பட்டாங்காடு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1993 பிப்ரவரி 12]

**விடை—**

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சியில் பெருமகளூர் பேரூராட்சியை சேர்ந்தது பட்டாங்காடு ஆதி திராவிடர் காலனி பெருமகளூர் பேரூராட்சியில் காமராஜர் நகர் என்கின்ற காலனிக்கு தற்போது 10 தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டு வருகிறது. இந்நிலையில் பட்டாங்காடு ஆதி திராவிடர்களுக்கு நடப்பு ஆண்டில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

47—

**வாலியக்காடு கிராமத்தில் மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைத்தல்.**

**வினா எண். 3189—திரு. ஆர். சிங்காரம் :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம, துறையூரைச் சேர்ந்த வாலியக்காட்டிற்கு மயானத்திற்கு தகரக கொட்டகை கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

மரக்காவலசை ஊராட்சியின் வாலியக்காடு கிராமத்தில் மயானக் கொட்டகை அமைத்துக் கொடுக்க ஊராட்சியில் தற்சமயம் போதிய நிதி வசதி இல்லை. வரும் நிதியாண்டில் நிதி நிலையைப் பொறுத்து, வேலையை மேற்கொள்ளப்படும்.

48—

**பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் ஆயிபுரம் காலனிக்கு சாலை வசதி.**

**வினா எண். 4044—செல்வி கோ. மல்லிகா :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஆயிபுரம் காலனிக்கு ரோடு வசதி அமைத்துத் தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஆயிபுரம் காலனிக்கு ரூ. 3,500 மதிப்பீட்டில் 1991-92 ஆம் ஆண்டில் சாலை வசதி செய்யப்பட்டுள்ளது

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

49—

சென்னை நகரில் சாலைகள் விரிவாக்கம் செய்யப் படுவதால் பாதசாரிகளுக்கு ஏற்படும் பாதிப்பு.

வினா எண். 6283 திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் பல்வேறு சாலை விரிவாக்கம் செய்யப்படுகையில் நடைபாதைகளின் அகலம் பெருமளவில் குறைவதால் பாதசாரிகள் சாலையில் நடக்கும் நிலை ஏற்படுவது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சென்னை நகரில் பல்வேறு சாலைகள் விரிவாக்கம் செய்யும்போது மற்றும் பாதசாரிகள் நடந்து செல்வதற்கென தேவையான அகலமுள்ள இடம் ஒதுக்கப் பட்டுத்தான் சாலைகள் அகலப்படுத்தப்படுகின்றன. எனவே பாதசாரிகள் சாலையில் நடக்கும் நிலை ஏற்படாது.



50—

சென்னை மாநகராட்சிக்கு சொத்துவரி மற்றும் தொழில்வரி மூலம் கிடைத்த வருவாய்.

வினா எண் 6285—திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சிக்கு கடந்த 3 ஆண்டுகளில் சொத்து வரி (Property Tax) மற்றும் தொழில் வரி (Professional tax) மூலம் கிடைத்த வருவாய் ஆண்டு வாரியாக எவ்வளவு ?

(ஆ) செத்து வரி உயர்வு செய்யப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை சதவிகிதம் உயர்த்தப் பட்டுள்ளது.

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சொத்துவரி மற்றும் தொழில் வரி மூலம் சென்னை மாநகராட்சிக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் கிடைத்த வருவாய் பின்வருமாறு :—

| வருடம். | சொத்து வரி. | தொழில் வரி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சங்களில்) | |
| 1988—89 .. .. .. | 2,248.34 | 117.32 |
| 1989—90 .. .. .. | 2,640.89 | 114.31 |
| 1990—91 .. .. .. | 2,800.47 | 126.11 |
| 1991—92 (28-2-1992 வரையில்) | 3,105.00 | 241.76 |

(ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1993 பிப்ரவரி 12

51—

குறிஞ்சிவனத்தில் ஒரு போர்வெல் அமைத்தல்.

வினா எண். 6405—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி குறிஞ்சிவனத்தில் ஒரு போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி குறிஞ்சி வனத்தில் ஒரு போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

52—

ரெட்டவயல் சொசைட்டிக்கு அருகில் ஒரு போர்வெல் அமைத்தல்

வினா எண். 6408—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெட்டவயல் சொசைட்டிக்கு அருகில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெட்டவயல் சொசைட்டிக்கு அருகில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.



1993 பிப்ரவரி 12]

53—

நெல்லயடிக்காட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர்மூழ்கி மோட்டார் அமைத்தல்.

வினா எண். 6449—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நெல்லயடிக்காட்டில் இருக்கும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நெல்லயடிக்காட்டில் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

54—

கொளக்குடி மாந்தோப்பு அருகில் ஒரு போர்வெல் அமைத்தல்.

வினா எண். 6456—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொளக்குடி ஊராட்சி கொளக்குடி "1" வார்டு மாந்தோப்பு அருகில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொளக்குடி ஊராட்சி கொளக்குடி "1" வார்டு மாந்தோப்பு அருகில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

[1993 பிப்ரவரி 12

55—

**போரூரிலுள்ள ஏரியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம்.**

**வினா எண். 6528—திரு. எம். ஆண்டி அம்பலம் :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அருகில் உள்ள போரூரில் உள்ள ஏரியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசால் திட்டமிடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) இல்லை : ஆனால், போரூரில் ஒரு குடிநீர் அழுத்தமேற்று நிலையம் நிறுவ சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் உத்தேசித்துள்ளது.

56—

**ஆலடிக்காடு ஆதிதிராவிடர் தெரு பள்ளியருகில் ஒரு போர் வெல் அமைத்தல்.**

**வினா எண். 6561—திரு. ஆர். சிங்காரம் :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட, வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு ஊராட்சி ஆலடிக்காடு ஆதிதிராவிடர் தெருவில் பள்ளி அருகில் ஒரு போர் வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஆலடிக்காடு பள்ளி அருகில் குப்பத்தேவன் மற்றும் ஆலடிக்காடு கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் ஒரு பொதுக் குழாய் மேடை அமைக்கப்பட்டுள்ளதால் இங்கு போர்வெல் போடும் உத்தேசம் இல்லை.



1993 பிப்ரவரி 12]

164983

57—

**ஊமத்த நாடு மெயின் சாலையிலிருந்து கொரட்டூர் செல்லும் மண் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றல்.**

**வினா எண் 6565—திரு. ஆர். சிங்காரம் :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு மெயின் சாலையிலிருந்து காமாட்சியம்மன் கோவில் ஆதிதிராவிடர் தெரு பெரிய கத்திக்கோட்டை வழியாக கொரட்டூர் செல்லும் மண்சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றி இடையில் கல்வெட்டுகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

தஞ்சை மாவட்டம் சேது பாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு மெயின் சாலையிலிருந்து காமாட்சி அம்மன் கோவில் ஆதி திராவிடர் தெரு பெரிய கத்திக்கோட்டை வழியாக கொரட்டூர் செல்லும் மண்சாலை ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இதன் நீளம் 3 கி.மீ. ஆகும். நிதிப் பற்றாக் குறையின் காரணமாக, மண்சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றி இடையில் கல்வெட்டு அமைத்து கொடுக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

58—

**ஊமத்தநாட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் ஐந்து குதிரை சக்தியுள்ள மோட்டார் அமைத்தல்**

**வினா எண் 6580—திரு. ஆர் சிங்காரம் :**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாட்டிலுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் [illegible] குதிரை சக்தி உள்ள மோட்டார் இணைக்க அரசிடம் [illegible] குறிப்பு உள்ளதா ?



D
V2:1,31'N93
N93.32.2

[1993 பிப்ரவரி 12

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் 5 குதிரை சக்தி உள்ள மோட்டாரை இணைக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

59—

## பெரிய குப்பத்திற்கு சாலை வசதி

வினா எண் 6687—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பெரியகுப்பத்தில் சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பெரிய குப்பம் கிராமம் சேத்தியாத்தோப்பு விருத்தாசலம் நெடுஞ்சாலையின் அருகில் அமைந்துள்ளதால் தனியாக சாலை வசதி செய்ய தேவையில்லை. எனவே இது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

60—

## அத்திமூர் களியம் காலனி வாழ் மக்களுக்கு தொகுப்பு வீடுகள்

வினா எண் 6805—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி அத்திமூர் களியம் காலனிவாழ் மக்கள் பயனடையும் வகையில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?



1993 பிப்ரவரி 12]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் தொகுதி, அத்திமூர் களியம் காலனியில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு முதல் கட்டமாக 1992–93 ஆம் நிதியாண்டில் 20 தொகுப்பு வீடுகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

61—

## ஆதிவராக நல்லூருக்கு சாலை வசதி

வினா எண். 6829—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள ஆதிவராகநல்லூரில் ரோடு வசதி கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள ஆதிவராக நல்லூருக்கு சாலை வசதியுள்ளது. சரளைக் கற்கள் சாலையாகவுள்ள இச்சாலை நல்ல நிலையில் உள்ளது. இச்சாலையின் ஓரத்தில் ஏற்பட்ட அரிப்பை ஈடு செய்ய தற்போது தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது.

62—

## பரங்கிப்பேட்டை ஒன்றியம் மணல்மேட்டிற்கு சாலை வசதி

வினா எண். 6838—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மணல்மேடு என்ற ஊருக்கு ரோடு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மணல் மேடு என்ற ஊருக்கு ரோடு வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

63—

பரங்கிப்பேட்டை ஒன்றியம் எம். ஜி. ஆர். நகர் மற்றும் புதுச் சத்திரம் ஆகியவைகளுக்கு குடிநீர் வழங்கல்.

வினா எண். 6840—செல்வி கோ. மல்லிகா:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள எம். ஜி. ஆர். நகர், புதுச்சத்திரம் ஆகிய ஊர்களில் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதி ஆண்டில், டானிடா திட்டத்தின் கீழ் எம்.ஜி. ஆர். நகர், புதுச்சத்திரம் ஆகிய ஊர்களில் கைப் பம்புகள் போடப்படவுள்ளன.

64—

ஆதிவராக நல்லூர், வடகுப்பத்திற்கு குடிநீர் வழங்கல்.

வினா எண். 6845—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள ஆதிவராக நல்லூர், வடகுப்பத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதிவராக நல்லூர் குடியிருப்புக்குச் சென்ற ஆண்டு டானிடா திட்டத்தின்கீழ் 2 இந்தியா மார்க் கையிறைப்பான்கள் போடப்பட்டு தற்போது மக்கள் பயனில் உள்ளது.

65—

பூவாணம் கிழக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் மூழ்கி மோட்டார் அமைத்தல்.

வினா எண் 7004—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவாணம் கிழக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்து நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவாணம் கிழக்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்து நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

66—

பெரியகத்திக்கோட்டைக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 7078—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி, பெரியகத்திக்கோட்டைக்கு ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஊரின் தெற்கு காட்டாற்று கரையோரத்தில் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயல் குறிப்பு உள்ளதா?

[1993 பிப்ரவரி 12

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி, பெரியகத்திக்கோட்டையில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

67—

கழனிவாசல் ஆதி திராவிடர்களுக்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அல்லது போர்வெல் அமைத்தல்.

வினா எண் 7094—திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் ஆதி திராவிடர்களுக்கு தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அல்லது போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் ஆதி திராவிடர்களுக்கு கழனிவாசல் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அல்லது போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

68—

பிலாங்குடியிருப்பு மேற்குப் பகுதிக்கு ஒரு போர்வெல் அமைத்தல்

வினா எண் 7149—திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனவாசல் பிலாங்குடியிருப்பு மேற்குப் பகுதிக்கு ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?



1993 பிப்ரவரி 12]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், புனவாசல், பிலாங்குடியிருப்பு மேற்குப் பகுதிக்கு ஓர் போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

69—

காலகம் ஊராட்சி, அணைக்கட்டில் ஒரு மேல்நிலைத்நீர் த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 7173—திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி அணைக்கட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

காலகம் ஊராட்சி, அணைக்கட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

70—

மிதியக்குடிக்காட்டிற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 7259—திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி மிதியக்குடிக்காட்டிற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி, மிதியக் குடிக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

71—

அம்பாள்புரத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண். 7351—திரு. ஆர். சிங்காரம், : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டயங்காடு ஊராட்சி, அம்பாள்புரத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அல்லது போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டயங்காடு ஊராட்சி. அம்பாள்புரத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அல்லது போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

72—

மூர் மார்க்கெட் புதிய கட்டிடத்திற்கு அமரர் ராஜீவ் காந்தியின் பெயரை சூட்டுதல்.

வினா எண் 7499—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் மூர் மார்க்கெட்டில் புதிதாகக் கட்டப்படும் கட்டிடத்திற்கு அமரர் ராஜீவ் காந்தியின் பெயரைச் சூட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?





விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சென்னை நகரில் பழைய மூர் மார்க்கெட் இருந்த இடத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அங்காடி கட்டிடத் தொகுப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28-1-1991 அன்று திறந்து வைக்கப்பட்டு, அதற்கு 'மூர் அங்காடி வளாகம்' (Moore market complex) எனப் பெயர் சூட்டப்பட்டுவிட்டது.

73—

அருள்மொழித்தேவன் ஊராட்சிக்கு சாலை வசதி.

வினா எண் 7510—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய அருள்மொழிதேவன் ஊராட்சிக்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய அருள்மொழித்தேவன் ஊராட்சிக்கு சாலை வசதி செய்து தரும் செயற் குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

74—

அத்தியாநல்லூர் சாலையை தார்ச்சாலையாக மாற்றி அமைத்தல்.

வினா எண் 7563—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள அத்தியாநல்லூர் சாலையை மெயின் ரோட்டில் இருந்து தார்ச்சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

[1993 பிப்ரவரி 12

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள அத்தியாநல்லூர் சாலையை மெயின் ரோட்டில் இருந்து தார்ச் சாலையாக அமைத்துத் தரும் செயற் குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

75—

4. மடுவான்கரை கிராமத்திற்கு சாலை வசதி.

வினா எண் 7574—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பு. மடுவான்கரை கிராமத்திற்கு சாலை வசதி செய்து தர அரசு அனுமதி வழங்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பு. மடுவான்கரைக் கிராமத்திற்கு 1990–91-ம் ஆண்டு ரூ. 30,000 மதிப்பீட்டில் சாலை வசதி செய்யப்பட்டுள்ளது.

76—

சித்தலாபாடி கிராமத்திற்கு சாலை வசதி.

வினா எண் 7575—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சித்தலாபாடி கிராமத்திற்கு சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



1993 பிப்ரவரி 12]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சித்தலாபாடி கிராமத்திற்கு 1991–92 ஆம்—ஆண்டு ரூ. 9,188 மதிப்பீட்டில் சாலை வசதி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

77—

தட்டான் ஓடைக்கு குடிநீர் மேல் நிலைத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 7623—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், தட்டான் ஓடைக்கு குடிநீர் மேல் நிலைத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் (1991–92) மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்துள்ளது.

78—

அகர ஆலம்பாடிக்கு சாலை வசதி.

வினா எண் 7676—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1993 பிப்ரவரி 12

(அ) புவனகிரி ஒன்றியம் அகர ஆலம்பாடிக்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புவனகிரி ஒன்றியம், அகர ஆலம்பாடிக் கிராமம், சேத்தியா தோப்பு—விருத்தாசலம் பேருந்து வழித் தடத்தில் அமைந்துள்ளது. வழித்தடம் நல்ல நிலையில் அமைந்துள்ளது. எனவே சாலை வசதி செய்வது பற்றிய செயற் குறிப்பேதும் இல்லை.

79—

சின்னகுமட்டிக்கு மயானப் பாதை அமைத்தல்.

வினா எண் 7694—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியத்தி லுள்ள சின்னகுமட்டிக்கு மயானப் பாதை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள சின்னகுமட்டிக்கு மயானப் பாதை அமைத்து தருவதற்கான செயற் குறிப்பு அரசிடமில்லை.

80—

சின்னகுமட்டிக்கு சாலை வசதி.

வினா எண் 7695.—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1993 பிப்ரவரி 12]

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியத்தி லுள்ள சின்னக்குமட்டி சாலைக்கு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தி லுள்ள சின்னகுமட்டிக்கு உள்ள சாலை நல்ல நிலையில் உள்ளது.

(ஆ) எனவே சாலை வசதி செய்து தரும் செயற் குறிப் பேதுமில்லை.

81—

கீழமூங்கிலடி கிராமத்திலுள்ள கிணற்றை தூர் எடுத்து குடிநீர் வசதி செய்தல்.

வினா எண். 8179.—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள கீழமூங்கிலடி கிராமத்தி லுள்ள கிணற்றை தூர் எடுத்து மக்களுக்கு குடிநீர் வசதி செய்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள கீழமூங்கிலடி கிராமத்திலுள்ள கிணறு தூர் எடுக்கப்பட்டு 21-6-1992 முதல் பொது மக்கள் உபயோகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

82—

கோட்டூர் பேரூராட்சியில் குடிநீர்த் தொட்டி அமைத்தல்

வினா எண். 8542—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1993 பிப்ரவரி 12

கோட்டூர் பேரூராட்சியில் போதிய குடிநீர் இல்லையாதலால் அங்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆனைமலை — வேட்டைக்காரன் புதூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் கோட்டூர் பேரூராட்சி பயன் அடைந்து வருகிறது. தற்போது மேல் நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு யாதொரு திட்டமும் பரிசீலனையில் இல்லை.

83—

குளக்குடி கிராமத்தில் மயானச் சாலையை செப்பனிடல்.

வினா எண். 9888.—திரு. ஆர். தங்கராசு :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில், குளக்குடி கிராமத்தில், மயானச் சாலையை செப்பனிட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அச்சாலை எப்போது சீரமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதியில், குளக்குடி கிராமத்தில் மயானத்திற்கு செல்லும்பாதை தனியார் நிலத்தில் அமைந்துள்ளது. தனியார் நிலத்தை கையகப்படுத்தினால்தான் மயானச் சாலை அமைக்க இயலும். ஏனவே மயானச்சாலை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

84—

நிலக்கோட்டை ஒன்றியத்தில் வாங்கப்பட்ட தொலைக் காட்சிப் பெட்டிகள்.

வினா எண். 10448.—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1993 பிப்ரவரி 12]

(அ) நிலக்கோட்டை ஒன்றியத்தில் கடந்த 5 ஆண்டுகளில் வாங்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் எத்தனை ?

(ஆ) தொலைக் காட்சிப் பெட்டிகள் ஒவ்வொன்றின் விலை என்ன ?

(இ) அவைகள் எங்கே வாங்கப்பட்டன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) கடந்த 5 ஆண்டுகளில் (1987 முதல் 1991 வரை) 70 தொலைக் காட்சிப் பெட்டிகள் வாங்கப்பட்டன.

(ஆ) கருப்பு-வெள்ளைத் தொலைக்காட்சிப் பெட்டியின் விலை ரூ. 3,180.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியின் விலை ரூ. 9,700.

(இ) திண்டுக்கல் ஜெயராம் எலக்ட்ரானிக்ஸ் கம்பெனியாரிடமிருந்து 48 கருப்பு-வெள்ளைத் தொலைக்காட்சிப் பெட்டிகள், திண்டுக்கல் லலிதா எலக்ட்ரானிக்ஸ் கம்பெனியாரிடமிருந்து மதுரை ராயல் சென்டரிடமிருந்து ஒரு வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி வாங்கப்பட்டன.

85—

சூரங்கொல்லையில் ஒரு பகுதி நேர அமுதம் அங்காடி அமைத்தல்.

வினா எண் 1914.—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை அமுதம் அங்காடியிலிருந்து பிரித்து சூரங்கொல்லையில் ஒரு பகுதி நேர அமுதம் அங்காடி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், நடுவுக் கோட்டை அங்காடியில் 589 குடும்ப அட்டைகள் மட்டுமே இலணக்கப்பட்டுள்ளன. நடுவுக்கோட்டை அங்காடிக்கும் சூரங்கொல்லை கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1½ முதல் 2 கிலோ மீட்டர் மட்டுமே. இக்கிராம மக்களுக்கு எவ்வித குறையுமின்றி அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், சூரங்கொல்லை கிராமத்தில் 58 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. எனவே, சூரங்கொல்லை கிராமத்தில் பகுதி நேர அங்காடி அமைக்கத் தேவையில்லை.

86—

## அனைத்து நியாய விலைக் கடைகளிலும் மின்னணு தராசுகளைப் பயன்படுத்தல்.

வினா எண். 3550.—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் மின்னணு தாரசுகளைப் பயன்படுத்துவது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போது 21,977 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. இவை அனைத்திலும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தராசுதான், பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் மின்னணு தராசு பயன்படுத்துவது குறித்து தற்பொழுது செயற் குறிப்பு ஏதும் இல்லை.



87—

## கடலங்குடியில் நியாய விலைக் கடை ஏற்படுத்தல்.

வினா எண். 4202.—திரு. எஸ். ஆசைமணி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், கடலங்குடி திருவேள்விக்குடி கிராம மக்கள் 3 கி.மீ. தூரம் சென்று அத்தியாவசியப் பொருள்கள் வாங்க வேண்டியிருப்பதால் கடலங்குடியில் நியாய விலைக் கடை திறக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், கடலங்குடியில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை துவங்க கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

88—

## நீரேற்றுப் பாசன கூட்டுறவுச் சங்கங்கள்.

வினா எண் 4444—திரு. நா.சா. பழனிசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீரேற்றுப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் செயல்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

[1993 பிப்ரவரி 12

(ஆ) தமிழகத்தில் சிறந்த முறையில் செயல்பட்டுவரும் 22 நீரேற்றுப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் சேலம், பெரியார், திருச்சிராப்பள்ளி, தருமபுரி மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் அமைக்கப்பட்டவையாகும். இவற்றில் 18 சங்கங்கள் ஆறு, கால்வாய் போன்ற நீர்நிலைகளிலிருந்து கிடைக்கும் நில மேற்பரப்பு தண்ணீரின் மூலமும் (Surface water) இதர 4 சங்கங்கள் கிணறுகள் அமைத்து அதன் மூலம் கிடைக்கும் நிலத்தடி நீரின் மூலமும் (Ground water) உறுப்பினர்களின் நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்கின்றன. இச்சங்கங்கள் மூலம் 13,023 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுவதுடன் இச்சங்க உறுப்பினர்கள் 8,367 பேர் பயனடைந்து வருகின்றனர்.

89—

காவல்துறை, தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு வழங்குவது போல் அரசு ஊழியர்களுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் வழங்கல்.

வினா எண். 4658—திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல்துறை, தீயணைப்புத் துறை பணியாளர்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருள் வழங்கப்படுவது போல மற்ற அரசு ஊழியர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) அரசு ஊழியர்களுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருள் வழங்கல் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



1993 ஏப்ரவரி 12]

90—

திருவெறும்பூர் தொகுதியில் ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கு அவற்றை வழங்கல்.

வினா எண். 5311—திரு. த. ரத்தினவேல் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதியில் ரேஷன் கார்டுகள் இல்லாதவர்களுக்கு அவற்றை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

திருவெறும்பூர் தொகுதியில் 1991-ல் புதிய குடும்ப அட்டை வேண்டி 2,604 விண்ணப்பங்கள் வரப்பெற்றதில் 1,050 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள விண்ணப்பங்கள் 100 சதவீதம் தீவிர விசாரணைக்குப் பின் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

91—

தேவனாங்குளம் பகுதியிலுள்ள பகுதிநேரக் கூட்டுறவு அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்றல்.

வினா எண். 6869—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர்-படவேடு தேவனாங்குளம் பகுதியில் உள்ள பகுதிநேரக் கூட்டுறவு அங்காடியை முழு நேர அங்காடியாக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) போளூர் வட்டம், படவேடு மதுரா தேவனாங்குளம் கிராமத்தில் தற்போது எந்த நியாயவிலைக் கடைகளும் இல்லை. பகுதி நேரக் கடையும் இல்லை. இக்கிராமத்திற்கான குடும்ப அட்டைகள் படவேடு கடை எண் 1-ல் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், தேவனாங்குளம் கிராமத்தில் 200 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், தற்போது இயங்கி வரும் ஏ. கே. படவேடு நியாய விலைக் கடைக்கும் இக்கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1½ கிலோ மீட்டர் உள்ளதாலும், தேவனாங்குளம் கிராமத்தில் நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) எழவில்லை.

92—

**வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல நிதியால் அடைந்த நலன்கள்.**

வினா எண். 11504—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நல நிதியால் வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு செய்த நலத் திட்டங்கள் யாவை ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

வால்பாறை வட்டாரத்தில் வால்பாறை, சோலையார் நகர் மற்றும் மூடீஸ் ஆகிய இடங்களில் தொழிலாளர் நல வாரியத்தால் தையற் பயிற்சி நிலையங்கள் நடத்தப்படுகின்றன. இந்நிலையங்களில் தொழிலாளர்களின் குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்கு மாதம் ரூ. 80 உதவித் தொகையுடன் ஓராண்டிற்கு தையற் பயிற்சி அளிக்கப்பட்டு தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்படும் தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். அத்தேர்வில் கீழ்நிலை மேல்நிலை ஆகிய இரு வகைத் தேர்வுகளில் முதல் மதிப்பெண் பெறும் மாணவிகளுக்கு ஆண்டுதோறும் நபருக்கு ஒரு தையல் இயந்திரம் வீதம் பரிசாக வழங்கப்படுகிறது.



மேலும், தொழிலாளர் நல நிதி செலுத்துபவர்களுக்கு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் புத்தக உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்துப் பயிற்சிக்கான/தேர்வுக்கான கட்டணத்தை திரும்ப பெறுதல், இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகை, ஊனமுற்றால் செயற்கை உறுப்பு வழங்குதல், காது கேளாதவர்களுக்கு காது கேட்கும் கருவியும் மூக்குக் கண்ணாடிக்கான பணத்தை திரும்பப் பெறுதல் போன்ற நல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மேற்கண்ட திட்டங்களின்படி இதுவரையில் 5 பேர்கள் பயனடைந்துள்ளார்கள்.

93—

**வால்பாறையில் தொழிலாளர்களுக்கென்று ஆண்டுதோறும் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள்.**

வினா எண். 11508—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்களுக்கென்று ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் வால்பாறையில் நடத்தப்படுகின்றனவா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் தொழிலாளர்களுக்கென ஆண்டு தோறும் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் முதலில் மாவட்ட அளவிலும், பின் மண்டல அளவிலும் இறுதியில் மாநில அளவிலும் நடத்தப்படுகின்றன. வால்பாறை கோவை மாவட்டத்தின் ஒரு பகுதியாகையால் கோவையில் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. வால்பாறையில் தனியாக நடத்தப்படுவதில்லை.

94—

**தாலுக்கா தலை நகரங்களில் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

வினா எண். 6500—திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகரங்கள் மற்றும் மாவட்டத் தலை நகரங்கள் அல்லாமல் தாலுக்கா தலைநகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளை சீர்திருத்தி அமைக்க தமிழ்நாடு குடிசைப் பகுதி வாரியம் மேம்பாட்டுத் திட்டம் தயாரித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆம். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் இதுவரை 91 தாலுக்கா தலை நகரங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் அந்த தாலுக்கா தலைநகரங்களில் குடிசைப் புற மேம்பாட்டுப் பணிகளை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது. மற்றும் வீடுகள் கட்டிக் கொள்ள கடனும் இவ்வாரியத்தால் வழங்கப்படுகிறது. இது தவிர, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிசைப் புற மேம்பாட்டுப் பணிகள், வீடுகள் கட்டிக்கொள்ள கடன் மற்றும் மனைப்பட்டா ஆகியவை, சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு, வேலூர், திருப்பூர் ஆகிய நகரங்களில் உள்ள தாலுக்காக்களில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது.

95—

ஆரணி பெரியார் பேட்டையில் பொது மக்களுக்கும், ஆதி திராவிடர் மக்களுக்கும் உள்ள மயானப் பிரச்சினைகள்.

வினா எண். 5835—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி நகரம் பெரியார் பேட்டையில் பொது மக்களுக்கும் ஆதிதிராவிடர் மக்களுக்கும் உள்ள மயானப் பிரச்சினை குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?



விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆரணி, பெரியார் நகர்வாசிகளுக்கும் காந்தி நகர் ஆதிதிராவிடர் மக்களுக்கும் மயானம் குறித்து கடந்த 2 ஆண்டுகளாகப் பிரச்சினை இருந்து வந்துள்ளது. அவ்வப்பொழுது சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டு தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் பிரச்சினை வராமல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த 15—11—1991 அன்று காந்தி நகரில் காலமான ஆதிதிராவிடர் ஒருவரை அடக்கம் செய்வது குறித்து ஆரணி நகரம் பெரியார் நகர்வாசிகளுக்கும் காந்தி நகர் ஆதிதிராவிடர் மக்களுக்கும் இடையே பதட்ட நிலை உருவாகியது. ஆரணி நகரம் பழைய சர்வே எண் 312 ஏ. 22 கோட்டை புறம்போக்கில் 0.91 ஏக்கர் நிலம் ஆரணி காந்தி நகர் ஆதி திராவிடர்களுக்கு இடுகாடாகப் பயன்படுத்த நில உரிமை மாற்றம் (Alieration) செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரச்சனைக்கு உரிய இடத்தில், ஆதி திராவிடர் உட்பட பல்வேறு சமூக மக்கள் (11 நபர்கள்) ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்டி வசித்து வருகிறார்கள். ஆக்கிரமிப்பு செய்துள்ள பரப்பளவு 0.12 சென்ட் ஆகும். மேற்கண்ட ஆக்கிரமதாரர்களை நீக்க காந்தி நகர்வாசிகள் ஆரணி மாவட்ட முன்சீப் கோர்ட்டில் 1984-ஆம் ஆண்டு வழக்கு தொடர்ந்து உள்ளனர். இந்த வழக்கு விசாரணையில் உள்ளது. இதற்கிடையில் பெரியார் நகரவாசிகள் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல அமைந்திருந்த பாதையை காந்தி நகர்வாசிகள் கடந்த ஜனவரி 1990-ல் கல்தூண்கள் நட்டு அடைத்து விட்டனர். இக் கல்தூண்களை அப்புறப்படுத்த நடவடிக்கை முன்னாள் வட்டாட்சியர் அவர்களால் எடுக்கப்பட்டது. மார்ச்சுத் திங்களில் பெரியார் நகர் வீடுகளுக்குச் செல்லும் பாதையில் இருந்த கட்டிடங்களையும், கூரைகளையும் காந்தி நகர்வாசிகள் சிலர் இடித்துவிட்டனர். இடித்த நபர்கள் மீது ஆரணி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. செய்யார் காவல் துணைக் கண்காணிப்பாளர், வட்டாட்சியர் முன்னிலையில் வட்டாட்சியர் அலுவலகத்தில் இரு தரப்பினருக்கும் இடையே ஒரு சமாதானக் கூட்டம் நடத்தப்பட்டு, மேற்படி சுடுகாடு சம்பந்தமாக ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுவதால் வழக்கு முடியும் வரை இருதரப்பினரும் சட்டப் பிரச்சினைக்குரிய இடத்தில் எந்தவிதமான மாற்றங்களையும் ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு நடக்கக்கூடாது எனவும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு முடிவுக்கு வந்து தீர்வு காண்பதற்கு முன்பாக சுடுகாடு பாதையாக உள்ள 0.63 ஏக்கர் இடத்திற்கு சுற்றிலும் கம்பிவேலி அல்லது சுவர் அமைத்து மேலும் ஆக்கிரமனம் ஏற்படாமலும், ஆக்கிரமனம் செய்தவர்களின் வீட்டுக்கருகில் சவ அடக்கம் செய்வதை நிறுத்தும் அறிக்கைமீது மேல் நடவடிக்கை எடுப்பதும் ஆய்விலுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு முறையும் காந்தி நகரில் எவராவது மரணமடைந்தால் இந்த பிரச்சினைக்குரிய இடத்தில் சவ அடக்கம் நடந்துவரும்போது இரு தரப்பினருக்கும் இடையே பதட்ட நிலை நிலவும்போது, காவல் துறை ஏற்பாடுகள் மூலம் அசம்பாவிதங்கள் நிகழாமல் தடுத்து வருகின்றது. நீதிமன்றத் தீர்ப்பு வந்ததும் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

96—

**ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளிகளுள்ள மாவட்டங்கள்.**

வினா எண். 7733—திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்தெந்த மாவட்டங்களில் ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன ?

(ஆ) அவற்றில் படிக்கும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) புதியதாக ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளிகள் எங்கெங்கு துவங்க உத்தேசித்துள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

| | | |
|---|---|---|
| (அ) | 1. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் | 5 |
| | 2. தர்மபுரி மாவட்டம் | 1 |
| | 3. சென்னை மாவட்டம் | 2 |
| | 4. வடாற்காடு- அம்பேத்கார் மாவட்டம். | 2 |



| | |
|---|---|
| 5. திருச்சி மாவட்டம் | 4 |
| 6. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம். | 1 |
| 7. நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம். | 1 |
| 8. சேலம் மாவட்டம் | 3 |
| 9. தென்னாற்காடு மாவட்டம் | 7 |
| 10. கன்னியாகுமரி மாவட்டம் | 2 |
| மொத்தம் .. | 28 |

| (ஆ) | மாணவர். | மாணவியர். |
|---|---|---|
| 1 | 4,986 | 2,229 |
| 2 | 543 | 290 |
| 3 | 1,933 | 1,414 |
| 4 | 1,479 | 1,484 |
| 5 | 2,062 | 1,634 |
| 6 | 676 | 31 |
| 7 | 538 | 375 |
| 8 | 2,233 | 1,351 |
| 9 | 6,153 | 3,906 |
| 10 | 736 | 795 |
| | 21,339 | 13,709 |

[1993 பிப்ரவரி 1.

(இ) 1992-93-ஆம் ஆண்டில், கீழ்க்காணும் 3 ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளது :—

1. மா. புடையூர் .. தென்னாற்காடு மாவட்டம்.

1. பூவாணிப்பட்டி .. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. நாச்சிகுளம் .. மதுரை மாவட்டம்.

97—

வடவாளத்தில் ஆதிதிராவிட மாணவர் விடுதி அமைக்கும் திட்டம்

வினா எண் 1050—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளத்தில் ஆதி திராவிட மாண்வர் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

98—

சீர்மரபினருக்கு அளிக்கப்படும் மானியக் கடன் திட்டங்கள்

வினா எண். 10851—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்மரபினருக்கு அளிக்கப்படும் மானியக் கடன் திட்டங்கள் என்ன ?

(ஆ) அவைபற்றிய விவரங்கள் என்ன ?



1993 பிப்ரவரி 12]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டிலுள்ள சீர்மரபினர் பிரிவைச் சார்ந்த, இரண்டு ஏக்கருக்கு குறையாமல் சொந்த நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கென பாசனக் கிணறு வெட்டுவதற்கு நபர் ஒன்றுக்கு ரூ. 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) மான்யம் வழங்கப்படுகிறது.

99—

பரமக்குடி தொகுதியில் மிகப்பிற்பட்டோர் மற்றும் சீர் மரபினருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள்.

வினா எண் 11382—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு பரமக்குடி தொகுதியில் இதுவரை ஒதுக்கப்பட்ட வீட்டு மனைப்பட்டாக்கள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு பரமக்குடி தொகுதியில் இதுவரை 170 வீட்டுமனைப்பட்டாக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

100—

வாணியம்பாடியில் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி.

வினா எண் 8690—திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிக்க வாணியம்பாடியில் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி முடிந்துவிட்டதா ?

(ஆ) அம்பேத்கார் மாவட்டத்தில் வேறு எந்தெந்த நகரங்களில் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டன ?

(இ) இவற்றை அமைப்பதில் அரசு ஏதேனும் நிதியுதவி செய்துள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) இல்லை. இதற்கான பணிகள் முழுமையாக இன்னும் முடிவடையவில்லை.

(ஆ) அம்பேத்கார் மாவட்டத்தில் ஆம்பூர், பேரணாம்பட்டு, இராணிப்பேட்டை ஆகிய இடங்களிலும் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

(இ) ஆம். மாநில அரசு 25 விழுக்காடும், மத்திய அரசு 25 விழுக்காடும் மானிய தொகையாக நிதியுதவியும் அளித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை குறித்து.

திரு. ஜி. பழனிசாமி : தலைவரவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன?

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடத்தில் ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் என்னுடைய உரிமையைப் பறிக்கின்ற வகையில்..



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எனக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். கொடுத்திருப்பது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அரசிடமிருந்து நான் அதற்குரிய விளக்கத்தைப் பெற்றுத் தருகிறேன் என்று உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். அதைத் தவிர நீங்கள் பொது விவாதத்தில் பேசுகிற பொழுதும் அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசலாம். அதற்கு முதலமைச்சரவர்கள் பதில் அளிக்கிற பொழுது பதில் அளிப்பார்கள். (குறுக்கீடு) கேளுங்கள். என்னிடம் கொடுத்தது என்னவாயிற்று என்பதை என்னுடைய அறையிலே வந்துதான் கேட்க வேண்டும். நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். வெளியிலே நடந்த ஒரு சம்பவம். அந்த சம்பவம் என்னுடைய உரிமையை பாதிக்கிற வகையிலே இருக்கிறது என்று நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். அது சம்பந்தமாக நான் அறிக்கை பெற்றுத் தரவேண்டும். (குறுக்கீடு) அதை நீங்கள் உரிமைப் பிரச்சினையாகக் கொடுத்திருந்தால்கூட நீங்கள் இப்பொழுது கேட்கலாம். என்னுடைய தகவலுக்கு, நான் பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். (குறுக்கீடு) உரிமைப் பிரச்சினையாக நீங்கள் கொடுக்கவில்லை. பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுத்து எனக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று எனக்கு நீங்கள் கொடுத்தது. எனக்குக் கொடுத்ததை அவையிலே வந்து கேட்கக் கூடாது.

திரு. ஜி. பழனிசாமி : அன்றைய தினமே உங்களிடத்திலே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை உரிமைப் பிரச்சினையாகக் கூடக் கொண்டு வரலாம். நான் அப்படிக் கொண்டு வரவில்லை. நீங்களே நடவடிக்கை எடுத்தால் போதும் என்றுதான் என்னிடம் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். நான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். அதாவது, என்னிடம் கொடுக்கிற வேண்டுகோள் குறித்து என்னுடைய அறையிலே வந்துதான் கேட்க வேண்டும். (குறுக்கீடு) நான் நடவடிக்கை எடுக்கிற பிரச்சினை; அவைக் குறிப்பின் பிரச்சினை அல்ல. உட்காருங்கள். அதில் நான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை; நீங்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்கு நான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு).

முற்பகல் 10-55

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நின்று கொண்டிருக்கிறீர்கள்; அவரை உட்காரச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக் கனி உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, நீங்களும் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, வேண்டாம். அது தவறான முன்னுதாரணம். என்னை நடவடிக்கை எடுக்கச் சொல்லி, எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். உட்காருங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : இது தவறான முன்னுதாரணம் கிடையாது. நான் பேரவைத் தலைவருக்குக் கொடுத்திருக்கிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேளுங்கள். அதன் மீது நான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறேன். நான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிற பிரச்சினையைப் பற்றி அவையிலே வந்து கிளப்பக் கூடாது. (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வாருங்கள். இன்னும் விளக்கங்கள் நிறையத் தருகிறேன். உட்காருங்கள் (குறுக்கீடு) அந்த அவையிலே எடுக்கச் சொல்லி நீங்கள் கேட்கவே இல்லை. (குறுக்கீடு), என்னை நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருக்கிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். நான் நிற்கிறேன்; நீங்கள் உட்காருங்கள். நான் உங்களுக்கு விளக்கம் தருகிறேன். ஒரு பிரச்சினையைச் சொல்லி, நீங்கள் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்து என்னை, பேரவைத் தலைவர் என்கிற முறையில் நடவடிக்கை எடுத்து நியாயம் வழங்குங்கள் என்று என்னிடத்திலே கேட்டிருக்கிறீர்கள். அதை இந்த அவையிலே எழுப்ப வேண்டுமென்றோ, அல்லது உரிமைப் பிரச்சினையாகவோ, நீங்கள் கொடுக்கவில்லை. நான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நீங்கள் தெரிவித்திருக்கிற பிரச்சினைக்கு நான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதை அவையிலே கிளப்பக் கூடாது. வேண்டுமானால், ஒன்றுக்கு இரண்டு, மூன்று முறை நீங்கள் என் அறையிலே வந்து என்னிடத்திலே கேட்கலாம். (குறுக்கீடு) இது சரியில்லை. நீங்கள் என்னை விவாதப் பொருளாக ஆக்கக் கூடாது. (குறுக்கீடு) பேரவைத் தலைவரை நீங்கள் விவாதப் பொருளாக ஆக்கக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) கேளுங்கள். அதை நீங்கள் ஒரு உரிமைப் பிரச்சினையாகவே கொடுங்கள். நான் அதற்கு விளக்கம் தருகிறேன். (குறுக்கீடு) நீங்கள் என்னை நடவடிக்கை எடுக்கச் சொல்லிவிட்டு இங்கே அனுமதி கேட்டால் என்ன அர்த்தம்? அது முறையல்ல. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) இன்று பேசப்போகிறீர்கள், அதுபற்றிய விளக்கங்களை நீங்கள் பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) நான் இவ்வளவு சொல்லிக் கொண்டிருக்கிறேன். அப்படியென்றால், நீங்கள் இன்றைக்கு பேசப் போவதில்லையா? (குறுக்கீடு) இன்று நீங்கள் பேசுகிறபோது அதுபற்றிப் பேசலாம். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதிலுரையில் தன்னுடைய விளக்கத்தினை வழங்குகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். உட்காருங்கள்.



### 3. விதி 110-இன்கீழ் சட்ட அமைச்சரின் அறிக்கை.

11-2-1993 அன்று இண்டர்ஸ்டேட் கவுன்சில் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் மொழிக் கொள்கை பற்றித் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-இன்கீழ், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைப் பேரவைக்கு அளிக்க அனுமதி கோரியிருக்கிறார்கள். அதற்கு அனுமதி அளித்திருக்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில உறவுகள் பற்றிய சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட, மாநிலங்களின் துணைக் குழுவின் கூட்டம் ( Inter State Council ) 11-2-1993 அன்று புதுடில்லியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிரதிநிதியாக, தமிழக சட்ட அமைச்சர் என்ற வகையிலே, அங்கு நான் பங்கேற்றேன், நேற்றைய தினம் மொழிப் பிரச்சினையில், மும்மொழித் திட்டத்தை தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என்பது, சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளில் ஒன்றாகும். இந்தப் பரிந்துரையைப் பற்றி விவாதம் நடந்த நேரத்தில், பீஹார் முதலமைச்சரும், பஞ்சாப் மாநிலத்தினுடைய முதலமைச்சரும் மும்மொழித் திட்டத்திற்கு ஆதரவாகவும், இந்தியை வளர்க்க வேண்டியதன் அவசியம் பற்றியும் பேசினார்கள். அவர்கள் இருவரும் இந்தி மொழியில் பேசியதை ஒலிபெருக்கிக் கருவியின் மூலம் நான் கேட்டேன். மும்மொழித் திட்டத்தை தமிழ்நாடு ஏற்கவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டிய இடம், இந்தத் துணைக் குழுக் கூட்டம் தான் என்பதால், தமிழக அரசின் மொழிப் பிரச்சினையில், பேரறிஞர் அண்ணா டாக்டர் புரட்சித் தலைவர் ஆகியோருடைய வழியில் நடந்து வரும் ஒப்பற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய மொழிக் கொள்கையையும், இந்தியை மட்டும் தேசிய மொழியாக ஏற்க முடியாது என்பதனையும் அங்கே பேசும்போது நான் திட்டவட்டமாகத் தெரிவித்தேன். உரிய பிரதிநிதித்துவம் வாய்ந்த உயர்மட்ட

அமைப்பான இந்தக் குழுவின் முன் புரட்சித் தலைவி அரசினுடைய சார்பில் நான் பின்கண்ட கருத்துக்களை வலியுறுத்தினேன் :

1. தமிழ்நாட்டில் 1968 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறிய நாள் தொடங்கி தாய் மொழி தமிழ்; அடுத்தது ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கைதான் தமிழ்நாட்டிலே நடைமுறையில் இருக்கிறது;

முற்பகல் 11-00

2. இந்தியாவில் தேசிய மொழி அனைத்தும் ஆட்சி மொழி ஆகும் வரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பது தான் தமிழக மக்களின், தமிழ்நாடு அரசின் உயிர்மூச்சுக் கொள்கையாகும்.

3. இந்தியாவில் ஒட்டுமொத்த ஆட்சி மொழியாக ஆகும் தகுதி இந்திக்குத் துளியும் இல்லை என்பதும், மற்ற மொழிகளைப் போல இந்தியும் ஒரு மாநில மொழி என்பதும் தமிழகத்தினுடைய நிலை ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி).

4. இந்தி, ஆங்கிலம், இந்தி அல்லாத பிற மாநில மொழி என்ற மும்மொழிக் கொள்கையானது இந்தியாவில் எந்தப் பகுதியிலும் முழு விஸ்வாசத்துடன் இன்று கடைப்பிடிக்கப் படுவதில்லை. இந்தி பேசும் எந்த மாநிலத்திலும் தமிழோ தெலுங்கோ, கன்னடமோ, வங்காளமோ இந்தி அல்லாத மொழியோ கற்றுக் கொடுக்கப்படுவதும் கிடையாது. மும்மொழித் திட்டத்தை மத்திய அரசோ, இந்தி பேசும் மாநிலங்களோ எந்த வகையிலும் செயல்படுத்துவது இல்லை. மாறாக, இந்தி பேசும் மாநிலங்களில் மத்திய அரசு இந்தி மொழி மட்டும் என்கின்ற ஒரு மொழித் திட்டத்தையே—One Language Formula என்ற முறையிலே நிறைவேற்றி வருகின்றது. இதைநான் ஆதாரங்களுடன் அங்கே விளக்கினேன்.

இந்தி மொழியானது வளம் பெறாதஒரு மொழி. பல்வகையாகப் பேசப்படும் ஒரு இலக்கணமில்லாத மொழி என்றுதான் இந்தி தேவையில்லை என்பதும் பிற பகுதிகளுடனும், உலக அளவிலும் தொடர்புகொள்ள ஆங்கிலமே போதும் என்பதும் தான் தமிழக அரசின் கொள்கை என்பதனையும் திட்டவட்டமாக தெளிவாக, மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பாக எடுத்துரைத்தேன். மும்மொழித் திட்டம் என்ற பெயரில் இந்தியை மட்டும் திணிக்கும் போக்கினை எதிர்த்து தமிழ்நாடு தொடர்ந்து, பேரறி





ஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இருந்து போராடி வருகிறது என்பதையும் சுட்டிக்காட்டினேன். குறிப்பாக மும்மொழித் திட்டம் பற்றிய சர்க்காரியா கமிஷன் பரிந்துரையை அன்றே எதிர்த்து டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இதே சட்டசபையிலே இதைப் பற்றிய தெளிவான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருப்பதையும் அந்த மன்றத்திலே சுட்டிக்காட்டினேன். இந்திக்கு மட்டுமே ஆட்சிமொழி அந்தஸ்து அளிக்கும் அரசியல் அமைப்புச் சட்ட விதி திருத்தப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொடர்ந்து வலியுறுத்து வருகின்றார்கள். மேலும் 25 ஆண்டுக் காலமாக இருமொழித் திட்டத்தை தமிழ்நாடு உறுதியாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. எனவே, மும்மொழித் திட்டம்— Three Language Formula — என்ற சர்க்காரியா கமிஷன் பரிந்துரையை அமல் செய்யப்படுவதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஏற்காது; ஏற்காது; ஏற்காது; (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை அந்த அமைப்பில் திட்டவட்டமாகக் கூறியதுடன், கூட்ட நடவடிக்கைக் குறிப்பில் அதைப் பதிவு செய்யுமாறும் கேட்டுக் கொண்டேன். மும்மொழித் திட்டம் என்ற பெயரில் இந்தி அல்லாத பிற மொழிகள் எந்த இந்தி பேசும் மாநிலத்திலும் கற்றுக் கொடுக்கப்படுவதில்லை என்ற கருத்தை தலைமை வகித்த மத்திய உள்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ்.பி. சவான் அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். ஒப்புக்கொண்டு பேசினார்கள். உண்மை இவ்வாறு இருக்க, சர்க்காரியா கமிஷன் பரிந்துரையின்படி மும்மொழித் திட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவது என்ற கருத்தொற்றுமை ( Consersus ) 11-2-1993 அன்று நடந்த உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் ஏற்பட்டதுபோல இன்றைக்கு மத்திய உள்துறை அமைச்சர் தெரிவித்திருப்பது சரியல்ல. இருமொழிக் கொள்கைக்கு ஆதரவாகவும், மும்மொழித் திட்டத்தை எதிர்த்தும், இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்ற நிலையை ஏற்க முடியாது என்பதையும் மேற்படிக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சார்பில் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறேன் என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## 4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். செல்லாரம். இருக்கையில் இல்லை.

(முற்பகல் 11-05)

<u>சென்னை நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாடு குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அடுத்த கவன ஈர்ப்பு திரு. டி.எம். ரங்கராஜன், திரு. எஸ். ஜெயக்குமார், திரு. எம்.கே. பாலன், திரு. ப. ரங்கநாதன், திரு. உ. பலராமன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி.எம். ரங்கராஜன்.

<u>திரு. டி.எம். ரங்கராஜன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாடு" குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

<u>சென்னை குடிநீர்—வறட்சி நிவாரண பணிகள் 1993.</u>

தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் இந்த ஆண்டில் சராசரி அளவுக்கு அதிகமாகவே மழை பெய்த போதிலும் சென்னை நகரிலும் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் குறிப்பாக நீர்த்தேக்க பகுதிகளில் சராசரி மழை அளவுக்கு குறைவாகவே இந்த ஆண்டு மழை அளவுக்கு குறைவாகவே இந்த ஆண்டு மழை பெய்துள்ளது. தற்போதுள்ள நீரின் கொள்ளளவு சாதாரண தேவைக்கும் குறைந்த அளவாகவே உள்ளது.

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்கான நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| நீர் ஆதாரம். | முழுக் கொள்ளளவு. (மி.க. அடி). | இன்றைய கொள்ளளவு. (மி.க. அடி). | கடந்த ஆண்டின் கொள்ளளவு (மி.க. அடி.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பூண்டி .. | 2,752 | 60 | 2,659 |
| சோழவரம் .. | 881 | 81 | [illegible] |
| செங்குன்றம் .. | 2,850 | 1,104 | 2,579 |
| மொத்தம் | 6,483 | 1,245 | 5,773 |





எனவே தற்போதுள்ள நீரின் கொள்ளளவுக்கேற்ப 1993 சனவரி திங்கள் 10 ஆம் தேதி முதல் சென்னை மாநகருக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் நீர் வழங்கும் முறை கொண்டு வரப்பட்டுள்ளது. நீர்பற்றாக்குறையால் சென்னை நகரில் வாழும் மக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை போக்கும் விதத்தில் சென்னை குடிநீர் வாரியம் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அரசு, தனது ஆணை எண். 3 (ப) 3 ந.தி.ம.கு.க. துறை, நாள் 8—1—1993-ல் சென்னை குடிநீர் வாரியம் ரூ. 23.22 கோடி மதிப்பீட்டில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

<u>இத்திட்டத்தில் முக்கிய பணிகள் வருமாறு.</u>

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (i) நீர்த்தேக்கங்களிலிருந்தும் நிலத்தடி நீர்ப் பகுதியிலிருந்தும், நீரிறைப்பதற்கான வசதிகளை மேம்படுத்துதல். | 3.38 |
| (ii) அடிமட்டத்திலிருந்து பெறப்படும் நீரிற்கான கூடுதல் சுத்திகரிப்பு மற்றும் நீரின் தரக் கண்காணிப்பு. | 1.69 |
| (iii) நகரிலுள்ள 6500 பொதுக் குழாய்களைப் புதுப்பித்தல். | 1.42 |
| (iv) மேலும் 600 இந்தியா மார்க் II பம்புகளை அமைத்தலும், தேவைப்படும் இடங்களில் ஏற்கனவே உள்ள இந்தியா மார்க் II பம்புகளைப் பழுது பார்த்தலும். | 2.90 |
| (v) சென்னையிலுள்ள குடிசைப் பகுதிகளிலும் நீர்ப் பற்றாக்குறைப் பகுதிகளுக்கும் தற்போது குடிநீர் வழங்கும் 125 லாரிகளை மேலும் கூடுதலாக 250 லாரிகளாக அதிகரித்து, சுமார் 1,000 எக்குத் தொட்டிகளை வைத்து நீர்வழங்குதல். | 7.83 |
| (vi) தொழிற் சாலைகளுக்கு இருமுறை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வழங்கும் கொள்ளளவை அதிகரிக்க வசதிகள் செய்தல். | 6.00 |
| | 23.22 |

அரசு மேற்கண்ட பணிகளின் செயல்பாட்டினை உன்னிப்பாக கவனித்து தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

<u>திரு. டி. எம். ரங்கராஜன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே வாழ்கின்ற மக்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டு, எங்களுடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 24 கோடி ரூபாய் ஒதுக்கி இன்றைக்கு வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டதற்காக சென்னையிலே வாழ்கின்ற மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் முதற்கண் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலே அதிகமாக குடிசைப் பகுதிகளிலே மக்கள் வாழ்கின்றனர். குறிப்பாகச் சொல்லப்போனால் மைலாப்பூர் தொகுதியிலே, சென்னையிலே அதிகமாக 83 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. அங்குள்ள மக்கள் எல்லோரும் இன்றைக்கு தண்ணீர் இல்லாமல் மிகுந்த அவதிக்குள்ளாகி இருக்கின்றார்கள். அவர்களுடைய குறைகளைத் தீர்க்கின்ற வகையில் எங்களுடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கடல் நீலரக் குடிநீரா ஆக்குகின்ற திட்டத்தை அறிவித்தது. இந்தத் திட்டத்தை மைலாப்பூர் பகுதியிலே அமைத்துத் தந்து, இந்தக் குடிசைப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் குறைகளைத் தீர்ப்பதறகு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஏழ்மையைப் பற்றி சிந்திக்கின்ற அரசு. ஏழ்மையைப் போக்குவதற்காக பல்வேறு திட்டங்களை உருவாக்கியிருக்கிற இந்த அரசு நிச்சயமாக சென்னை மாநகரத்தில் ஏற்பட்டிருக்கிற குடிநீர் பற்றாக்குறையைப் போக்குவதற்காகப் பல்வேறு திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, சென்னை நகரில் குடிநீர்ப் பற்றாக் குறையை ஓரளவுக்கு ஈடுகட்டும் நோக்கத்தோடும், கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டத்தின் முறைகளையும், சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்து, செயல்வடிவம் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலவர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவின்படி ஓர்





உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின் பல்வேறு அம்சங்களை விரிவாக்க ஆராய்ந்து இக்குழு சமீபத்தில் தன்னுடைய அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. இதன் அடிப்படையில் சென்னையில் சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நாளைக்கு ஒரு மில்லியன் காலன் குடிநீரை கடல் நீரிலிருந்து பெறுவதற்கு திட்ட மதிப்பீடு தற்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஜெயக்குமார்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Prevention is better than cure என்ற பழமொழிக்கு ஏற்ப தண்ணீர் கஷ்டம் ஆரம்பிக்கும் முன்னரே எங்களது இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொலைநோக்குக் கண்ணோட்டத்துடன் கவலைப்பட்டு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து இருப்பதற்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அறிக்கையிலே தற்போது 600 இந்தியா மார்க் பம்பு, 1000 தண்ணீர்த் தொட்டிகள் அமைக்க இருப்பதாக ஆணையிட்டு இருப்பதற்கு நன்றி சொல்லக் கடமைபட்டிருக்கிறேன். அதே நேரத்திலே இன்று சென்னையிலே ground water level இறங்கி கொண்டு இருக்கின்றது. பல கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலமை இருக்கிறது. அதனால் இந்த ஆயிரம் டேங்க் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இன்னும் அதிகப்படுத்துமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அதே போல சென்னை நகரத்தின் பரப்பளவு, ஜனத்தொகை பெருகி வருகிறது. இந்த நேரத்திலே இந்த Metro Water 6 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு வேலை செய்து வருகிறது. அதை மாற்றியமைத்து, அதிகாரிகளின் Concentration ஐ ஜாஸ்தி செய்வதற்காக, அதை 10 மண்டலங்களாக மாற்றியமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தின் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆயிரம் டேங்குகளைத் தயாரிப்பதற்கான ஆர்டர்களைக் கொடுத்திருக்கிறோம். அந்தந்தப் பகுதிகளின் நிலைமைக்கு ஏற்ப இந்த டேங்குகளை அதிகப்படுத்தவேண்டுமானால், நிச்சயமாக தமிழக அரசு அதிகரிப்பதற்குத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், 6 மண்டலங்களை 10 மண்டலங்களாக மாற்றியமைப்பதற்காக தமிழகத்தினுடைய குடிநீர்வடிகால் வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சூழ்நிலையில் சரியான முறையில் மழை இல்லாத காரணத்தால், சென்னையில் பல்வேறு இடங்களில் தண்ணீர் அழுத்தம் இல்லாததால்; இன்றைக்கு தண்ணீர்ப் பஞ்சம் கடுமையாக இருக்கின்ற நேரத்திலே எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பதற்கு என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி கடைசி தொகுதியாக இருப்பதால் தண்ணீர் அழுத்தம் மிகக் குறைந்துவிட்டது. அந்தப் பகுதிக்கு 1000 இரும்புத் தொட்டிகள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக நான் ஏற்கனவே பலமுறை பேசி இருக்கிறேன். முன்னால் வைத்திருந்த இரும்புத் தொட்டிகள் எல்லாம் பழுதடைந்துவிட்டன. என்று குறிப்பிட்டிருக்கிறேன். என்னுடைய வற்புறுத்தல் காரணமாக அங்கே 300 தொட்டிகள் வைத்து சமாளிக்க முடிந்தது. அந்த நேரத்தில் கடுமையாகத் தண்ணீர் பஞ்சம் இருந்த காரணத்தால் அந்த நிலை. எனவே 1000 தொட்டிகள் என்பதை 2000 தொட்டிகள் என்று உருவாக்க வேண்டும். 250 லாரிகள் மூலமாக கூடுதலாகத் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதனை 400 லாரிகள் ஆக உயர்த்தி புரட்சித் தலைவர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு கடுமையான தண்ணீர் பஞ்சம் வந்த போது எப்படியெல்லாம், கேட்ட இடத்திற்கெல்லாம் தண்ணீர் கொடுத்து சமாளித்தாரோ அதேபோன்று புரட்சித் தலைவியின் ஆட்சியிலும் சமாளிக்க அரசிடம் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் சென்னை நகரில் எந்தப் பகுதியில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் அந்தப் பகுதியினுடைய நிலைமையை கருத்தில் கொண்டு லாரிகள் மூலமாகத் தண்ணீர் கொடுப்பதற்கு எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி. திரு. எஸ். வி. சண்முகம்.





*திரு. எஸ். வி. சண்முகம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது தொடர்ந்து பேசுகிற நல்ல வாய்ப்பைத் தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசின் கொள்கை நிலை அறிக்கையாகத் திகழ்கிற ஆளுநர் அறிக்கையை நான் மனசாட்சி உள்ளவன் என்ற முறையிலும், மன நிலையிலே குழப்பம் இல்லாமல் தெளிவாக இருப்பவன் என்ற முறையிலும் (மேசையைத் தட்டும் ஒலி) மன நிறைவோடு ஏற்கிறேன் என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன். மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் முற் பகுதியில் குறிப்பிட்டுக் காட்டியிருப்பது போல் நம்முடைய இந்திய நாடு மிகுந்த சோதனைக்கு உள்ளாகி இருக்கிறது. அஸ்ஸாமில் அமைதி இல்லை. காஷ்மீர் கலவரப்பகுதியாக ஆகிவிட்டது. பஞ்சாபில் பதட்டம் தொடருகிறது. மிசோராமும் நாகலாந்தும் நாச சக்திகளின் கைக்கே போய்விட்டது. உத்தரப் பிரதேசத்தில், ராஜஸ்தானில், மத்திய பிரதேசத்தில் வகுப்புக் கலவரங்கள்; மராட்டியத்தில் ஆயிரத்திற்கும் அதிகமானோர் படுகொலை; ஆந்திராவில் ஒரு அமைச்சருடைய வீடே குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் துப்பாக்கி முனையிலே செய்வதறியாது திகைத்துப்போய் இருக்கிற நிலை. நம்முடைய அருமைத் தோழர்கள் ஆளுகிற மேற்கு வங்கத்தில் கற்பழிக்கப்பட்ட ஒரு பெண்ணை அழைத்துக்கொண்டு முதலமைச்சர் அலுவலகத்திற்கு நீதி கேட்டுப் போனவருக்கு அடி உதை; போனவர் யாரோ அல்ல. மத்திய பெண் அமைச்சர் ஒரு மத்திய பெண் அமைச்சர் கூட ஒரு மாநில முதலமைச்சர் அலுவலகத்திற்குச் சென்று, அவர்களைச் சந்தித்து நீதி கேட்க முடியாத அவல நிலை, சட்டம், ஒழுங்கு பற்றி மிக அதிகமாகப் பேசுகிற தோழர்கள் ஆளுகிற மேற்கு வங்கத்தில் இருக்கிறது. இதை எல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் அங்கெல்லாம் அப்படி இருக்கிறது என்பதைச் சொல்வதற்காகத்தான் சொல்கிறேன். இந்தியாவிலே எங்காவது ஒரு மாநிலம் அமைதி தவழ்கிற மாநிலமாக இருக்கிறதா என்று கேட்டால், நாம் அல்ல, தமிழர்கள் அல்ல, டெல்லியிலே இருந்து வருபவர்கள் எல்லாம் அது தமிழ்நாடுதான் என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்று தினங்களுக்கு முன்பு வந்த மத்திய அமைச்சர் திரு. பல்ராம் ஜாக்கர் அவர்கள், அவருக்கு மனசாட்சி இருந்ததால் இங்கே அமைதி திகழ்கிறது என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். இப்படி டெல்லியில் இருந்து வருபவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். சொல்லிச் சொல்லிப் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். இப்போதும் அழைத்துச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் கேட்பதாக இல்லை.

முற்பகல் 11-15

தமிழகம் எத்தகைய அமைதி நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு, தமிழகத்தில் இந்த ஆட்சி

வருவதற்கு முன்பு இந்த முதலமைச்சர் பதவி ஏற்பதற்கு முன்பு எத்தகைய நிலைமை இருந்தது என்பதை எண்ணிப்பார்த்தால் தெரியும். நிழலின் அருமையை வெயிலின் கொடுமையில் எண்ணிப்பார்த்தால் தெரியும்.

தமிழகம் விடுதலைப் புலிகளுடைய வேட்டைக்காடாக இருந்தது. கூடாரங்கள் இருந்தன. பயிற்சி மையங்கள் இருந்தன. இங்கிருந்த தமிழ் இளைஞர்களுக்கு தீவிரவாத கருத்துக்கள் ஊட்டி அங்கே அழைத்துப்போய் அதுவும் நாடாளுமன்ற உறுப்பினரே தலைமை ஏற்று கள்ளத்தோணியிலே அழைத்துப்போய் பயிற்சி தந்து இங்கே வந்து தகராறு செய்ய வைத்த கொடுமை இருந்த நிலைமை இருந்தது.

இந்திய ராணுவத்தையே கொலைகாரப்படை என்று சொன்ன ஒரு ஆட்சி இருந்தது. அனைத்திற்கும் மேலாக அரும்பெரும் தலைவராக இருந்த ராஜிவ் காந்தி அவர்களும் கொல்லப்பட்டார். நான் எண்ணிப் பார்க்கிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய முதலமைச்சருடைய அரசு அன்றைக்கு தமிழ் மண்ணிலே இருந்திருக்குமேயானால், அவர் பிரதமராகவும் இருந்திருப்பார் உலகப் பெருந்தலைவராகவும் பவனி வந்திருப்பார். அத்தகைய அச்சம் சூழ்ந்த நிலை அன்றைக்கு இருந்தது. அத்தகைய நிலைமைகளை எல்லாம் மாற்றி ஒழித்து அந்த தீவிரவாத சக்திகளை தீய சக்திகளை, வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தி தமிழகத்தை அமைதிப் பிரதேசமாக்கிய முதலமைச்சரை வீராங்கனை என்பேன்; வீரத்தின் விளைநிலம் என்பேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தியாவில் வடக்கே அமைதியில்லை. இந்தியாவின் கிழக்கே குழப்பம், மேற்கே சொல்லமுடியாத சூழ்நிலை. இப்போது தெற்கே தமிழகத்தில் அமைதியை நிலை நாட்டச் செய்ததோடு மட்டுமல்லாமல் பக்கத்திலே இருக்கக்கூடிய கர்நாடகத்திற்கும் அங்கே படையை அனுப்பி அங்கேயும் அமைதியை நிலை நிறுத்த துணை செய்த முதலமைச்சரை தென் திசைத்தீபம் என்பேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இந்த தேசத்தின் மீது நம்பிக்கையுள்ளவர்கள், இந்த நாட்டின் ஒருமைப்பாட்டின் மீது நம்பிக்கையுள்ளவர்கள், இந்த முதலமைச்சரை ஆதரிப்பார்கள். அதிலே ஏதாவது சிக்கல் இருக்குமானால் வேறு ஏதோ சிக்கல் என்று பொருள். இந்த தமிழகத்தில் இந்த தென் திசைக்கு அமைதியைத் தந்த முதலமைச்சர் இந்தியாவிற்கே அமைதி தருகின்ற ஒரு நல்ல ஆலோசனையை தேசிய வளர்ச்சிக் கூட்டத்திலே சொன்னார்கள். பாபர் மசூதியும் இருக்க வேண்டும். இராமர் கோயிலும் கட்டப்படவேண்டும் என்று சொன்னார் அதைத்தான் இன்றைக்கு பிரதமர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார். இரண்டையும் கட்டுவாராம், மசூதியையும் கட்டுவாராம். இராமர் கோயிலையும் கட்டுவாராம். இரண்டும் இருக்குமாம். ஒன்று இருக்கும்போதே இன்னொன்றைக் கட்டு [illegible]



சொன்ன முதலமைச்சருடைய கருத்துக்கு அன்றைக்கு களங்கம் கற்பித்தவர்கள் இன்றைக்கு முதலமைச்சருடைய கருத்தை ஏற்றுக்கொள்ள முன் வந்திருப்பது ஒரு நல்ல அறிகுறி பாபர் மசூதியை இடித்து மகுடம் சூட்டுவதற்கு அங்கு உள்ளவர்கள் நினைத்தார்கள். மசூதியை இடிப்பதற்கு இங்கிருந்தும் ஆட்கள் போனார்கள் எனறு கதையளந்து, இடிந்த மசூதிக்குள்ளே கிரீடம் தேடியவர்கள் இங்கும் இருந்தார்கள்; இருக்கிறார்கள். அத்தகைய நிலைமைகளில் நான் திறந்த மனதோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தியர் ஒன்றுபட்டு இருக்க வேண்டுமானால் இந்த தென் திசையிலே இந்த முதல் அமைச்சர் இருந்தாக வேண்டும். அது காலத்தின் கட்டாயம்.

காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஆட்சி அமைக்க விரும்புகிறார்கள் என்றால் விரும்பட்டும்; நல்லது. முடிந்தால் செய்யட்டும். ஆனால் முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். அருமை தலைவர் ராஜிவ் காந்தி அவர்கள் 13 முறை தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். ஊர் ஊராகப் போனார்கள். குடிசைகளுக்குப் போனார்கள் கஞ்சி வாங்கி குடித்ததைப் பார்த்தார்கள். அப்புறமும் காங்கிரஸ் ஆட்சி வரவில்லை. இப்போது முடியுமா? அந்த அரும்பெரும் தலைவர் இருந்தபோதே முடியாதபோது, இப்போது இயலுமா காங்கிரஸ் ஆட்சி வராது 'கா' ஆட்சி அமைப்பதற்கு வேண்டுமானால் நீங்கள் துணை போகலாம். அத்தகைய ஒரு அபாயகரமான ஒரு நிலைமையை தேசியவாதிகள் உருவாக்கிவிடக்கூடாது. அது நாட்டிற்கு நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முதலமைச்சர் அவர்களிடம் சிறப்பாக சில அம்சங்களைக் காணமுடிகிறது. வரதட்சணைக் கொடுமையால் பெண்கள் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட முடியவில்லை அதற்கு ஏதாவது யோசனை சொல்லுங்கள் என்று நான் ஒரு கம்யூனிஸ்ட் தலைவரிடம் கேட்டேன். That can happen only in a New Society என்று அவர் கூறினார்.

முற்பகல் 11-20

வரதட்சணைக் கொடுமைக்கு வழிகாட்டுங்கள் என்று கம்யூனிஸ்ட் மேதையைக் கேட்டேன். அது சமுதாயப் பிரச்சினை என்று சொல்கிறார். இன்னொரு சமுதாயம் வந்தால்தான் அது தீரும் என்றார். ஆனால் அத்தகைய ஆழமான சமுதாயப் பிரச்சினையில்கூட தன்னால் முடிந்ததை இந்த முதலமைச்சர் செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் குழந்தை பிறக்கும்போதே அதற்கு ஒரு தொட்டில் என்றும், அதற்கு ஒரு வாழ்க்கை என்றும், அதற்கு ஒரு வளர்ச்சிக்கு வழி காட்டியிருக்கிறார். இந்த அரசாங்கத்திற்கு எதிராக என்னென்ன செய்யலாம் என்ற மன அரிப்பு. விஷயமே கிடைக்கவில்லை. சரி, விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று ரெயிலை மறி. விவாதித்தால் விலைவாசி உயர்வுக்குக் காரணமானவரே அங்குதான் இருக்கிறார். ஆனால் ஏதாவது இங்கே செய்தாக

[திரு. எஸ். வி. சண்முகம்] [1993 பிப்ரவரி 12

வேண்டும். நியாயம்தானா? காந்தியடிகள் மீது யாருக்கும் அன்பு இல்லாமல் இருக்கமுடியுமா அன்பு இல்லாதவர்கள் இந்தியாவில் யாராவது இருக்கிறார்களா? கோட்சே வாழ்க என்று யாராவது சொல்வார்களா? மகாத்மா காந்தி என்றால் தேசப்பிதா. நம் எல்லோருடைய மிகப் பெரிய தலைவர் .

ராஜீவ் காந்தியைக் கொன்ற கருங்காலிக்கூட்டத்தையே வேரோடும், மண்ணோடும் ஒழித்த இந்த முதல்வர்தேசப்பிதாவினுடைய சிலையை உடைத்தவர்களைப் பிடிக்க மாட்டாரா? நடவடிக்கை எடுக்க மாட்டாரா? (மேசையைத் தட்டும் ஒலி) ஏதாவது நொண்டிக் காரணம் வேண்டும். ஏதாவது சொல்லியாக வேண்டும். தேசப்பிதா, வெள்ளையனை எதிர்த்து நீண்ட நெடிய காலம் போராடினார். வெள்ளையன் இருந்தபோது தேசப் பிதாவுடைய உடம்பில் ஒரு சிறிய காயம் கூட படவில்லை அவ்வளவு நாகரீகமாக அவன் இருந்தான். அந்த தேசப்பிதா எப்போது கொல்லப்பட்டார் என்று தெரியுமா? சிலை உடைந்துபோய்விட்டது. பாதுகாப்பாக இல்லை என்று சொல்கிறார்கள் அல்லவா, இந்த அற்புதமான தேசியவாதிகள் ஆட்சியில்தான் தேசப்பிதாவே கொல்லப்பட்டார். (மேசையைதட்டும் ஒலி) மறுக்க முடியுமா?

இந்த முதலமைச்சர் விடுதலைப் புலிகளுக்கு துணைப்போகிறார் என்று சொல்லலாமா? நெஞ்சில் ஈரம் இன்றி இத்தகைய கருத்தை அவர்கள் பேசலாமா? மறந்தும் பேசலாமா? ராஜீவ் காந்தியை நேசிக்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் பரம விரோதி யார் என்றால் சிவராஜனும், தாணுவும் தான். நினைத்தாலே நெஞ்சம் பதறுகின்ற அளவுக்கு அந்த அருமைத் தலைவரை கொன்ற மாபாதகிதான் தாணு. அந்த தாணுவினுடைய படத்தை நெஞ்சில் ஏந்தி ஊர்வலம்போன ஒரு தலைவருடைய வீட்டிற்கே விருந்துக்குப் போகலாமா? (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உடம்பு சரியில்லையாம், பார்க்கப் போனாராம், ராஜீவ் காந்தியைக் கொன்ற கொடுமைக்காரியினுடைய உருவத்தை நெஞ்சில் ஏந்தியவருடைய இல்லத்தின் வாசல் படியை கூட ஒரு தேசியவாதி மிதிக்க மாட்டார். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தித் திணிப்பு எதிர்ப்புக்கு எதிராக ஒரு கிளர்ச்சி. நான் இந்த சபைக்கே தெளிவாக ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் எல்லாம் 1965லே இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் இருந்து பள்ளியிலிருந்து வந்தவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களால் அரசியலுக்கு வந்தவன் நான். 1968-ல் ஒரு இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. நாம் ஆட்சிக்கு வந்ததற்கு பின்பு. அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது இந்த சபை கூடியது. நான் அப்போது 'மாலைமணி' பத்திரிகையை கையில்



1993 பிப்ரவரி 12] [திரு. எஸ். வி. சண்முகம்]

ஏந்தி தெருவெல்லாம் விற்றவன் என்ற முறையில் எனக்கு நன்றாக நினைவில் தெளிவாக இருக்கிறது. அப்போதெல்லாம் இப்பொழுது நடந்ததுபோல எதிர்க்கட்சித் தலைவர் நடந்துகொண்டதாக வரலாற்றிலேயே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர்கள் பேசுவார்கள், எதிர்க்கட்சித் தலைவர் சமாதானப் படுத்துவார். ஆனால் எதிர்க்கட்சித் தலைவரே ஆடியது, கூச்சல் போட்டது இங்கு தான். இதேபோன்ற இந்தி எதிர்ப்புத் தீர்மானம் வந்தபோது அன்றைக்கு இந்த சபையின் தலைவராக மரியாதைக்குரிய கருத்திருமன் இருந்தார். விநாயகம் போன்ற பெரிய தலைவர்கள் எல்லாம் இருந்தார்கள். எதிர்த்தார்கள்— நாகரீகத்தோடு, அன்போடு, நெறிபிறழாமல் எதிர்த்தார்கள். இறுதியிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கு பேசியது எனக்கு அப்படியே நினைவில் இருக்கிறது. என்னால் இயன்றதைச் செய்துவிட்டேன், டெல்லி தன்னால் இயன்றதைச் செய்யட்டும்' என்று சொன்னார்.

முற்பகல் 11—25.

அப்படி அண்ணாவைப் போலத்தான் நான் இந்த முதலமைச்சரைப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அண்ணாவின் இடத்திலே நான் இந்த முதலமைச்சரைப் பார்க்கிறேன். We can cumpromise With the Central Government ஆனால் அப்படி செய்யத் தயாராக இல்லை. எந்த உருவத்தில் இந்தி வந்தாலும் விட மாட்டோம், அனுமதிக்க மாட்டேன் என்று இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சூளுரைத்திருக்கிறார் என்றால், அண்ணா வழியில் இந்த அரசு இருக்கிறது என்பதை அறிந்து பூரிப்பு அடைகிறோம் . (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த சபையிலே, சொல்லக்கூடாத விஷயத்தைக்கூட சொல்லலாம் என்று நினைக்கிறேன். இங்கே நம்முடைய சபாநாயகர் அவர்கள் தன்னால் இயன்ற அளவுக்கு, இதற்கு மேல் அடக்கி ஒடுக்கி எல்லாம் வாசிக்கமுடியாது, முடிந்த அளவுக்கு சபையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அத்தனையையும் விட்டுவிட்டு இங்கேயிருந்து வெளியே போய்விட்டு இங்கே நடப்பது சர்வாதிகாரம் என்று சொல்கிறார்கள். *** வெளியே போனால் சர்வாதிகாரம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : ** நடைபெற்ற நிகழ்வுகளை இங்கே கூறுவது நல்லதல்ல. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. எஸ். வி. சண்முகம் : தேடித் தேடிப்பார்த்தும் கடைசியாக எதுவும் கிடைக்கவில்லை. காண்ட்ராக்ட் வேலையில் பில் போடுவதில் சின்ன ஊழல் நடந்ததாம். இவ்வளவு பெரிய தமிழக அரசில், இந்த அரசை எதிர்ப்பதற்கு என்ன காரணம் இருக்கிறது என்று இங்கே தேடிப்பார்த்தால், அங்கே உள்ள மண்ணை எடுத்து இங்கே போட்டு பில் வாங்கிவிட்டார்களாம். அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். ஆதாரத்தோடு சொல்லுங்கள், நடவடிக்கை எடுக்கிறேன் என்று. எப்போதும் பழைய ஆட்சியின் மீது பாசம் உள்ள அதிகாரிகள் சிலர் செய்திருப்பார்கள், செய்திருக்கலாம். அப்படியிருந்தாலும் அது அனேகமாக 380 ரூபாய் ஊழலாக இருக்கலாம், அல்லது 3800 ரூபாய் ஊழலாக இருக்கலாம். அல்லது கொஞ்சம் கூட இருக்கலாம். ஆனால் உலகமே அதிர்ச்சி அடைகிற அளவுக்கு ஒரு ஷேர் மார்க்கெட் ஊழல் நடந்ததே டெல்லியில்? (மேசையைத் தட்டும் ஒலி) சும்மா கொஞ்சம் தான். 3800 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே 380 ரூபாய் பில் மோசடி என்பது பெரிய பிரச்சினை. யார் எதைச் சொல்வது என்று தெரியவேண்டாமா? இன்னும் தெரியும். வாங்கிய ரயிலின் இன்ஜினையும், பெட்டியையும் காணோமாம் முழுமையாக. டெல்லியில் விவாதத்திற்கு வந்த விவரத்தைச் சொல்கிறேன். நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் இத்தகைய விஷயங்களுக்கப்பால் ஒரு உயர்ந்த லட்சிய உறவோடு தமிழக மக்களின் நம்பிக்கையைப் பெற்று இந்தக் கட்சி ஆட்சி பீடத்திற்கு வந்திருக்கிறது. 3 மாதத்தில் ஒன்றும் நடந்துவிடவில்லை. எப்படியாவது இங்கே வந்து ஆட்சியில் அமர வேண்டுமென்ற ஆவலைத் தவிர வேறு எதுவும் இல்லை. அது முடியாது. அது தமிழகத்தில் நடக்காது. (மேசையைத் தட்டும் ஒலி).

முதலமைச்சர் அவர்கள் நம்முடைய அருமைத் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு நினைவிடத்தை அமைத்தார்கள். மாபெரும் நேரு ஸ்டேடியத்தை அமைத்தார்கள். அதனுடைய துவக்க நிகழ்ச்சி இருக்கிறதே, அது ஒரு சிறப்பான நிகழ்ச்சி. That is of international standards நிகழ்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அது ஒரு கண்கொள்ளாக்காட்சி. அதையெல்லாம் பலர் பார்க்க மாட்டார்கள். அந்த ரசனைகள் எல்லாம் அவர்களுக்கு இல்லை. அது அவர்களுக்கு ரொம்ப தொலைவில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அருமைத் தலைவி, முதலமைச்சர் அவர்கள் ராஜீவ்காந்தி அவர்களுக்கும் நினைவிடத்தை அமைக்க வேண்டுமென்று அதற்கான முயற்சிகளை நாங்கள் செய்கிறோம் என்று சொன்னபோது, அந்த வரைபடத்தைக் கூட இன்றைக்குத் தராதவர்கள் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் சொன்னபோது நான் அதிர்ச்சி அடைந்து போனேன். என்ன ஐயா இது, ராஜீவ் காந்தியின் நினைவிடத்தின் ஸ்கெட்ச்சைக் கூட தராத இவர்கள



தேசியவாதிகள்? (மேசையைத் தட்டும் ஒலி) நான் அதிர்ந்து போனேன். ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் மன அரிப்பு கூடாது. அது நல்லதல்ல. இந்தியாவிலேயே ஒரு அமைதி தவழுகிற ஒரு மாநிலம் தெற்குப் பகுதியில் இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் இங்கே இருக்கக்கூடிய ஆட்சி, இந்த முதலமைச்சர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உண்மையை டெல்லியில் இருப்பவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். இவர்களுக்குப் புரியவைக்க அவர்களால் முடியவில்லை. ஆகவே இந்தஅவல நிலை தொடர்ந்தால் தமிழகத்தில் எதிர்காலத்தில் 'கா' ஆட்சி வராது. 'க' ஆட்சி வருவதற்கு தேசிய நண்பர்கள் துணைபோய்விடக்கூடாது என்று கேட்டுக் கொள்வதோடு, எதையாவது செய்து இந்த அரசுக்கு எதிராகக் குழப்பத்தை உண்டாக்கவேண்டுமென்று நினைத்தால் தமிழ்நாட்டு மக்கள் அதை அனுமதிக்கமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11.30

ஏனெனில் ஒரு நீண்ட காலத்திற்குப் பின்பு தமிழ்நாட்டு, மக்கள் ஒரு ஆற்றல் மிக்க முதலமைச்சரை சந்தித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). உயர்ந்த கல்வி, கூர்ந்த மதி, ஆராயும் வேட்கை, சீரிய சிந்தனை (மேசையைத் தட்டும் ஒலி), மக்களிடத்திலே அன்பு, தியாகத் துணிவு — இப்படி அனைத்து அம்சங்களிலேயும் சிறந்து விளங்குகின்ற முதலமைச்சர் அவர்களை தமிழக மக்கள் ஆதரிப்பார்கள். அவர்களோடு நிற்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). நான் இப்படியெல்லாம் சொல்லும்போது, சில நண்பர்கள் என்னையும் எதிர்காலத்திலே சிங்காரத்தினுடைய பட்டியலோடு சேர்த்துவிடுவார்கள். என்னைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அரசியலை லாயிட்ஸ் சாலையிலுள்ள கட்சி அலுவலகத்தைக் கைப்பற்றுவதிலேயிருந்து, வேப்பேரி காவல் நிலையத்தில் அமர்ந்து தன்னுடைய அரசியலை நடத்திய காலத்திலிருந்தே, நான் இந்த முதலமைச்சர் அவர்களின்பால் ஈர்க்கப்பட்டவன். இந்த முதலமைச்சரின்பால் எனக்கு இருக்கக்கூடிய பற்றுதல் குறைவதற்கு எந்தக் காரணமும் இல்லை, கூடிக் கொண்டே இருக்கும். ஆகவேதான் எனக்கு மனச்சாட்சி இருக்கிறது என்று சொன்னேன்.

சில சொந்த விருப்பு வெறுப்புகள் இருக்கலாம். ஒன்றைச் சொல்லி நடக்காமல் இருந்திருக்கலாம். அவரிடம் முடித்துத் தருகிறேன் என்று சொல்லி இங்கே அது லேட் ஆனவுடன், அந்தக் கோபத்திலே ஏதாவது செய்யலாம். அப்படியெல்லாம் செய்யக்கூடாது. நான்கூட வருவாய்த்துறை அமைச்சரிடம் சொன்னேன். எனக்கு தேர்தலோடு எல்லாம் போய், கொஞ்சம் 1½ அல்லது 2 ஏக்கர் இருந்தது. அதைக் கூட வந்து ஊரிலே என் பெயரைச் சொல்லியே தண்டோரா போட்டு ஜப்தி பண்ணிவிட்டார்கள்.

நான் அதுபற்றி அமைச்சரிடம் சொன்னபோது, அவர்கள் கூட நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். அப்போது நான், அதெல்லாம் வேண்டாம்; நான் கடனைக் கட்டவில்லை என்றால், தண்டோரா போடத்தானே செய்வார்கள் என்று சொன்னேன். என்னுடைய பெயரைச் சொல்லி தண்டோரா போட்டதைக்கூட என்னால் சகித்துக் கொள்ள முடிகிறது. ஏனென்றால், நான் என்னுடைய பகுதியிலே வாங்கிய கடனைக் கட்டவில்லை. ஒரு நாலாயிரம் ரூபாய் கட்ட முடியவில்லை. அதனால் ஜப்தி செய்தார்கள். இப்படி, இதுபோன்று தனக்குள்ள சொந்த விருப்பு வெறுப்பு, தான் நினைத்தது நடக்க வேண்டும், தனக்கு மரியாதை வரவேண்டும் என்பதற்காக சிலர் இந்த ஆட்சியை எதிர்க்கிறார்கள். அப்படி எதிர்ப்பவர்கள் சமுதாயத்தில் தலை தூக்கி நடக்க முடியாது, நிற்க முடியாது என்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

முதலமைச்சர் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்களைப் போல், என்னால் இயன்றதைச் செய்துவிட்டேன்; டெல்லி தன்னால் இயன்றதைச் செய்யட்டும் என்று பிரகடனம் செய்யட்டும் தமிழ்நாட்டு மக்கள் அவர்களோடு நிற்பார்கள் என்று கூறி, ஆளுநர் உரைக்கு என்னுடைய நன்றியைக் கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உவந்தளித்த......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஒரு வேண்டுகோள். இன்று எல்லாத் தலைவர்களும் பேசுகிறார் கள். நாளைக்கு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டும். எனவே இன்று எல்லாத் தலைவர்களும் பேசி முடிக்கின்ற வகையில், ஒவ்வொருவரும் நேரத்தின் அருமை கருதிப் பேசி முடித்தால் நல்லது என்கிற வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மேதகு ஆளுநர் அவர்கள் உவந்து அளித்த உரையின் மீது உழவர்-உழைப்பாளர் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த தமிழக அரசு பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி இருக்கின்ற செய்திகளை ஆளுநர் உரையிலே காண முடிந்தது.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.)

திரு. நா. சா. பழனிசாமி : ராஜீவ் காந்தி அவர்களை தமிழக மண்ணிலே வெடிகுண்டு வைத்து கொலை செய்து விட்டார்கள் என்பதற்காக, தமிழர்கள் என்றும் பாராமல்— ஒரு காலக் கட்டத்திலே புரட்சித் தலைவரே அவர்களை ஆதரித்தார்கள் என்றுகூட பாராமல், தமிழகத்திற்கு ஒரு களங்கத்தை விளைவித்து விட்டார்கள் என்பதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய உயிரைப் பணயம் வைத்து, விடுதலைப் புலிகள் இயக்கத்தை அடக்கினார்கள்; தமிழகப் போராளிகளை தமிழகத்திலே இல்லாமல் செய்தார்கள்; வெடிகுண்டு கலாச்சாரத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தார்கள். அயோத்தி பிரச்சினை வந்த நேரத்திலே, இந்திய நாடெல்லாம் வன்முறைக் கும்பலாலே தாண்டவமாடிய நேரத்திலே, இனக்கலவரம் இடைவிடாது நடந்த நேரத்திலே, தமிழகம் அமைதிப் பூங்காவாக இருந்து. தமிழகத்திலே இனக் கலவரம் வராமல் தடுத்தார்கள். தமிழகக் காவல் துறையை நவீனப்படுத்துகிற நடவடிக்கைகளை எடுத்தார்கள். நீதித் துறைக்கு ஆக்கம் தந்தார்கள். கள்ள மதுவை ஒழித்தார்கள். இன்று கூட மதுக் கடைகளில், அன்னிய நாட்டு மதுபானக் கடைகளில் பார் இருக்கக்கூடாது என்ற முடிவை எடுத்திருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உச்ச நீதிமன்றம் 50 சதவீத இடம் தான் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு அளித்து இருந்தாலும், தமிழகத்தில் அது 69 சதவீதமாக நீடிக்க வேண்டுமென்றும் உச்ச நீதிமன்றம் அதை மறு ஆய்வு செய்ய வேண்டுமென்றும் தமிழகத்தின் சார்பில் அதற்கு வழிவகை செய்யப்படும் என்றும் கூறி இருக்கிறார்கள்.

முற்பகல் 11-35

மின்சார உற்பத்தி அதிகரித்து மின்வெட்டே இல்லாத நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்திற்கு மத்திய அரசிடம் திட்டக் குழுவில் வாதாடி 10,200 கோடியை பாங்காகப் பெற்றிருக்கிறார்கள். இப்படியெல்லாம் ஆளுநர் உரையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக, தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக்கி ஒரு நல்லாட்சி நடத்துவதற்கு எடுத்திருக்கிற செயல்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை வரவேற்கிறோம், வாழ்த்துகிறோம்.

தமிழ்நாட்டில் சென்ற நவம்பரில் பெய்த அதிக மழையின் காரணமாக 5.93 இலட்சம் ஏக்கர் நிலங்களில் பயிர்கள் அழிந்து இருக்கின்றன. 1.71 இலட்சம் குடிசைகள் அழிந்து

இருக்கின்றன. 238 பேருக்கு மேல் இறந்து இருக்கிறார்கள்.
இப்படியெல்லாம் தமிழகத்தில் வெள்ளத்தால் அமளி ஏற்
பட்டு, அழிவு ஏற்பட்ட காலத்தில் வெள்ள நிவாரணமாக
மத்திய அரசிடம் 530 கோடி ரூபாயை தமிழக முதலவர்
அவர்கள் கேட்ட நேரத்தில், மத்திய அரசாங்கம் தமிழகத்
தில் இப்படி ஒரு வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கிறது, அது
வும் ஏழை விவசாய மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.
அதற்கு உதவ வேண்டுமென்று, உதவி செய்யாமல் வெறும்
50 கோடி ரூபாயை, அதுவும் மத்திய அரசினுடைய வரிவி
லிருந்து தமிழகத்திற்குக கிடைக்க வேண்டிய பங்குத் தொகை
யிலிருந்து 50 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். அதே
நேரததில் கேரள மாநிலத்தில் அப்படி ஒரு வெள்ளச் சேதம்
ஏற்பட்ட நேரத்தில் கேரளத்திற்கு மத்திய அமைச்சர்கள
எல்லாம் சென்று ஒரு பெருந் தொகையைக் கொடுத்து,
தமிழகத்திறகு மட்டும் இப்படி 50 கோடி ரூபாயைக் கூட
கொடுப்பதற்கு மனம் இல்லாமல், இன்னும் பாக்கி வைத்திருக்
கிற நிலையை ஆளுநர் உரையில் பார்க்க நேர்ந்தது. இப்
படி தமிழகத்திறகு மத்திய அரசாங்கம் ஓரவஞ்சமாகத் தான்
நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு
உதாரணத்தைச் சொல்ல வேண்டியதில்லை. (மேசையை
தட்டும் ஒலி).

நலிவுற்ற தொழிற்சாலையில் ஒரு அழிவு என்றால் அந்தத்
தொழிற்சாலைக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு காப்பீட்டுக்
கழகங்கள் இருக்கின்றன. விவசாயத்தில் நஷ்டம் அடை
யும் நேரங்களில், விவசாயிகள் வெள்ளத்தாலும், புயலாலும்,
மழையாலும், வறட்சியாலும் இழப்பு ஏற்படுகின்ற காலக்
கட்டத்தில் அவர்களுக்கு ஈடு செய்வதற்கு காப்பீட்டுக் கழ
கங்கள் பயிர் இன்ஸூரன்ஸ் திட்டத்தை, மத்திய அரசாங்கம்
அமல்படுத்த வேண்டிய திட்டத்தை, முறையாக அமல்படுத்
தாத காரணத்தால்தான் ஆண்டுதோறும் வெள்ளச்
சேதத்தை, வறட்சியின் கொடுமையை விவசாயிகள் சந்திக்க
வேண்டியிருக்கிறது. இருந்தாலும், இத்தனைக்கும் இடை
யில் இந்த ஆண்டு தமிழகத்தில் நல்ல மழை பெய்ததன்
காரணமாக விவசாய உற்பத்தி பெருகுவதற்கான வாய்ப்
பைப் பெற இருப்பதற்கான சான்றுகளை ஆளுநர் உரை
யில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். 90.70 இலட்சம் மெட்
ரிக் டன் அதிக உற்பத்தியை சென்ற ஆண்டு பெற்றோம்.
வருகிற ஆண்டில் 100 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானி
யங்கள் உற்பத்தி செய்யப்படும் என்ற குறிப்பையும் சொல்லி
இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் செய்தது யார் என்பதை
யும் இந்த அரசு நன்றியோடு குறிப்பிட்டு இருக்கிறது. இதற்
கெல்லாம் காரணம் தமிழ் நாட்டில் அயராது உழைக்கும்
விவசாயிகளின் சாதனை என்று விவசாயிகளுக்கு இந்த அரசு





நன்றி சொல்லியிருக்கிறது. அதை வரவேற்கிறோம். வாழ்த்து
கிறோம். அதே நேரத்தில் இந்த அளவு உற்பத்தியைச் செய்த
விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களுக்கு சரி
யான விலை கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்
கிறார்கள் என்பதை இந்த அரசுக்கு நான் சொல்லிக் கொள்
ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

பருத்தி உற்பத்தி அதிகரித்திருக்கிறது. 2 ஆயிரம்
ரூபாய்க்கு சென்ற ஆண்டு ஒரு குவிண்டால் விற்ற பருத்தி,
இன்றைக்கு ஆயிரம் ரூபாய்க்குத்தான் விற்கிறது. எங்கள்
கோவை மாவட்டத்திலே பெரிய அளவிலே மக்காச் சோளம்
விளைவித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு 400 ரூபாய்
அளவிற்கு ஒரு குவிண்டால் விற்பனையான மக்காச்சோளம்
இந்த ஆண்டு 250 ரூபாய்க்குக் கூட விற்க முடியாமல்
இருக்கிறது. நிலக்கடலை, எண்ணெய் வித்துப பயிர்
ஒரு குவிண்டால் 1,500 ரூபாய் வரை விற்பனை செய்யப்
பட்டது, இன்றைக்கு 800 ரூபாய், 700 ரூபாய் என்று விலை
குறைந்து வந்திருக்கிறது. உழுகின்ற காலத்திலே ஊர்வழி
போனால், அறுககின்ற காலத்தில் அறிவாள் தேட வேண்
டியதில்லை' என்று ஒரு பழமொழியைச் சொல்வார்கள்.
உழுகின்ற காலத்தில் இன்று விவசாயிகள் உழைத்த காரணத்
தினால். உற்பத்தி செய்த காரணத்தினால், முதலீடு போட்ட
காரணத்தினால், இன்றைக்கு உற்பத்தியைப் பெருக்கியும்
கூட, அவர்களுக்கு விலை கிடைக்காத காரணத்தால், இன்
றைக்கு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல இடங்
களிலே, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு விலை
கொடுக்கின்ற அதிகாரம் கூட மத்திய அரசாங்கத்திடம் தான்
இருக்கிறது. மத்திய அரசாங்கம் நிர்ணயித்து இருக்கின்ற
விலை, கொள்முதல் விலை கூடுமானதாக இல்லை. இருந்
தாலும் கூட மாநில அரசாங்கம் அதற்கும் போராடி உற்பத்தி
செய்த பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு—ஏன் என்
றால், மற்ற பொருட்களை எல்லாம் உற்பத்தி பெருகுகிற
நேரத்திலே ஏற்றுமதி செய்கிறார்கள். ஆனால் வேளாண்
மை உற்பத்திப் பொருட்கள் எல்லாம் அத்தியாவசியப்
பொருட்கள் சட்டத்தின் கீழ் வந்துவிடுகிற காரணத்தினால்,
அது ஏற்றுமதி செய்யப்படாமல் இருக்கிறது. அதனால் உற்
பத்தி அதிகரித்து தேங்குகிறபோது, விவசாயிகள் விலை
இல்லாமல் தவிக்கிறார்கள். இன்றைக்கு அரிசி விலை
உயர்ந்து விட்டது என்று கூச்சல் போடுகிறார்கள், போராட்
டம் நடத்துகிறார்கள். அரிசி விலை உயராமலே வைத்துக்
கொண்டு, நெல்லை எப்படி உற்பத்தி செய்ய முடியும் ?
நெல்லிலிருந்துதானே அரிசி கிடைக்கிறது. அரிசி நெல்லிருந்து

[திரு. நா. சா, பழனிசாமி [1993 பிப்ரவரி 1:

கிடைக்காமல் ஏதாவது ஆலையில் உற்பத்தி செய்யப்பட்டால்,
நிச்சயமாகக் குறைக்கலாம். இன்றைக்கு விவசாயிகளுக்
நெல்லுக்கு விலை கொடுத்தாக வேண்டும். உரத்தினுடைய
விலையை மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறார்கள். இரசா
யன உரத்தினுடைய விலை 3 மடங்கு அதிகரித்துவிட்டு,
உயர் விளைச்சல் நெற்களை எல்லாம் இரசாயன உரத்
தைப் போட்டுத்தான் விளைவிக்க வேண்டிய நேரத்திலே—
இதிலே கூட மத்திய அரசாங்கம் தமிழகத்திற்குத் துரோ
கம் இழைத்திருக்கிறது. இரசாயன உரத்திலே நைட்ரஜன்,
தழைச் சத்து உரத்தினுடைய விலையை மட்டும் உயர்த்தா
மல், தமிழகத்திலே அதிகமாகப் பயன்படுத்துகின்ற சூப்பர்
பாஸ்பேட், பெட்டாசினுடைய விலையை மட்டும் 3 மடங்கு
உயர்த்தியிருக்கிறார்கள். வட மாநிலங்களிலே கோதுமை,
அரிசி, கடுகு, கம்பு தானியப் பயிர்கள் மட்டுமே உற்பத்தி
செய்யப்படுகின்றன. அந்த வட மாநிலங்களிலே இரசா
யன உரமான சூப்பர் பாஸ்பேட்டையும், பொட்டாஷையும்
அவர்கள் அதிகமாக உபயோகப்படுத்த வேண்டியதில்லை.
அவர்கள் நைட்ரஜன் உரத்தைத்தான் அதிகமாகப் பயன்
படுத்துகிறார்கள். 10 சதவீதம்தான் சூப்பர் பாஸ்பேட்,
பொட்டாஷ் உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால்
தென்னாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டில்' தென்னை, வாழை,
கரும்பு நிலக்கடலை, மஞ்சள் என்று பொட்டாசும், சூப்பர்
பாஸ்பேட்டும் அதிகமாகப் பயன்படுத்தவேண்டிய பல பயிர்
சாகுபடியை இங்கே செய்து கொண்டு இருக்கிறார்கள். இங்கே
அந்த உரங்களுடைய விலை 3 மடங்கு உயர்த்தப்பட்ட
காரணத்தால், தமிழகத்திலே
நிலத்தினுடையவளம் கெடுவதோடு, நாளைக்கு
குறையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. உற்பத்தி
கூட நான் நினைக்கிறேன், தமிழகம் எப்போதும் இதற்குக்
மற்ற பொருட்களுக்கும் மத்தியத் தொகுப்பை எதிர்பார்த்தே அரிசிக்கும்
இருக்கவேண்டிய அளவிற்கு, இருக்கவேண்டிய நிலைக்
குத் தள்ளுவதற்காகத்தான் திட்டமிட்டே, இந்த இரண்டு
வகை உரங்களின் விலையை மட்டும் உயர்த்தியிருக்கிறார்கள்.
இப்படி இரசாயன உரத்தினுடைய விலை உயர்ந்ததால்,
இன்றைக்கு நெல்லுககுக் கூடுதல் விலை கொடுக்க வேண்டி
யிருக்கிறது. கூடுதல் விலை கொடுக்கின்றபோது, அரிசியின்
விலையை உயர்த்தியாகவேண்டும். அரிசி விலையை உயர்த்
தாமல் யாரும் ஆட்சி நடத்த முடியாது. ஆனால் அரிசி
விலையைக் குறைப்பதற்காகவே அரசியல் நடத்திக் கொண்
டிருப்பவர்கள், அரிசி விலை ஏறிவிட்டது என்று சொல்
கிறார்கள், அதைக் கூட மத்திய அரசாங்கம் ஏற்றுகின்ற
போது, தமிழக அரசாங்கம் ஏற்றித்தான் தீரவேண்டும்,
இன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன?
மானியங்களை எல்லாம் எடுத்தாகவேண்டும். புதிய
பொருளாதாரக் கொள்கை, சந்தைப் பொருளாதாரம்,



1993 பிப்ரவரி 12] [திரு. நா. சா. பழனிசாமி]

Globalisatior liberalisation, privatisation என்று
சொல்லி, சந்தைப் பொருளாதாரத்தைக் கொண்டு வந்திருக்
கிற மத்திய அரசாங்கம், மானியத்தை எல்லாம் எடுக்க
வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அந்த வகையிலே
தான், உர மானியத்தைக் கூட எடுத்திருப்பதாகச் சொல்
கிறார்கள். அப்படி மானியத்தை அவர்கள் ஒருபுறம் நீக்கிக்
கொண்டிருக்கிறபோது, மாநில அரசாங்கம் மற்றும் மானி
யத்தைக் கொடுக்கவேண்டும் என்றால், அரிசிக்கான மானி
யத்தை அதிகப்படுத்தவேண்டும் என்றால், இது எப்படி
சாத்தியம் ஆகும்? இந்தச் சூழ்நிலையிலே அரிசியினுடைய
உற்பத்தி அதிகரித்தால்தான் விவசாயிகள் உற்பத்தி செய்ய
முடியும். அவர்கள் கடன் இல்லாமல் இருக்க முடியும். இன்
றைக்கு விவசாயப் பெருமக்கள் வாங்கிய கடனை, அரசாங்
கத்திடம் வாங்கிய கூட்டுறவுக் கடனைக் கட்ட தவித்துக்
கொண்டிருக்கிறார்கள். அதற்குக் கூட மாண்புமிகு தமிழக
முதல்வர் அவர்கள் 69 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிக்கான
சலுகையைக் கொடுத்தார்கள். போனஸ் என்று சொல்லிக்
கொடுத்தார்கள். அதைக்கூட மத்திய அரசாங்கம் தடுத்தது.
விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் செய்யக்கூடாது என்று
மத்திய அரசாங்கம் சொல்லியும் கூட, மத்திய அரசாங்கத்
தினுடைய அந்த வேண்டுகோளையும் மீறாமல் அதை போனஸ்
என்று ஊக்கத் தொகையைக் கொடுத்தார்கள். அந்தக் காலக்
கட்டத்திலே பல விவசாயிகளால் அந்த நேரத்திலே கடனைக்
கட்ட முடியாமல் போய், இன்றைக்குப் பல இடங்களிலே
கட்ட முடியாத விவசாயிகளிடம் ஜப்தி நடந்து கொண்டிருக்
கிறது. அதிலே கூட நான் ஒரு வேண்டுகோளாகச் சொல்
கிறேன். இந்த ஆளுநர் உரையில் ரூ. 69 கோடியில் ரூ. 55
கோடியைத் தான் அந்த வட்டி நிவாரணத்திற்காக செல
வழித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே இன்
னும் ரூ. 14 கோடி இருக்கிறது. அந்த ரூ. 14 கோடியை
யாவது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்த வட்டி
யை போனஸ் சலுகையாகக் மீண்டும் ஒரு சலுகையைக்
கொடுத்து இன்றைக்கு உற்பத்தி செய்தும், விலை இல்லாமல்
விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக
அந்த ஜப்தியை நிறுத்தி அவர்களுக்கு அந்தச் சலுகையை
அளிக்கவேண்டுமென்ற வேண்டுகோளைச் சொல்கிறேன்.

(முற்பகல் 11-45)

இன்றைக்கு இந்த விவசாயிகள் பிரச்சினை பற்றி மாண்பு
மிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தென்னவன் அவர்கள் மிக
உருக்கமாக சட்டமன்றத்திலே பேசினார்கள். இன்றைக்கு
அரசாங்க அதிகாரிகளுக்குச் சங்கம் இருக்கிறது. ஆசிரியர்
களுக்குச் சங்கம் இருக்கிறது. தொழிலாளர்களுக்குச் சங்கம்
இருக்கிறது. ஆனால் விவசாயிகளுக்குச் சங்கம் இல்லை
அதனால் அவர்கள் வேதனைப் படுகிறார்கள் என்று சொன்
னார்கள். விவசாயிகளுக்கும் சங்கம் இருக்கிறது. விவசாயிகள்

சங்கம் மற்ற எந்தச் சங்கத்தையும் விட அதிகமாகப் போராடி இருக்கிறது. கலைஞர் கருணாநிதி காலத்திலே புரட்சித் தலைவர் காலத்திலே, அந்த விவசாயிகள் சங்கம் மற்ற எந்த அரசியல் கட்சிகளும், சங்கங்களும் நடத்தாத போராட்டத்தை நடத்தி தியாகம் செய்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலே இந்த விவசாயிகள் சங்கம் போராட சங்கம் போராட வேண்டிய அவசியமில்சல. (மேசையைத் தட்டும் ஒலி) வாதாடினால் போதும் என்ற நிலைக்கு வந்திருக்கிறது. ஏனென்றால், புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய வாழ்க்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் திரைப்படத்திலே சூப்பர் ஸ்டாராக, லேடிஸ் சூப்பர்ஸ்டாராக இருந்தவர்கள். இருந்தாலும்கூட அவர்கள் தன்னைத் திரைப்பட நடிகை என்று சொல்லவில்லை. தன்னுடைய வாழ்க்கைக் குறிப்பிலே தன்னை ஒரு விவசாயி என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயி என்று சொல்லால் மட்டும் சொல்லவில்லை. தன்னுடைய பொழுது போக்கு கூட விவசாயம் என்று சொல்லியிருக்றார்கள். விவசாயிகள் கூட விவசாயத்தை விட வேறு ஏதாவது ஒரு பொழுது போக்கைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் முதல்வர் அவர்கள் தன்னுடைய பொழுதுபோக்கு கூட விவசாயம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளின் உணர்வுகளைப் படைத்த, விவசாயிகளின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்ட ஒரு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற நேரத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள் சங்கம் போராட வேண்டியதில்லை, வாதாடினால் போதும் என்றுதான் நாங்கள் போராடாமல் இருக்கின்றோம்.

இந்த இலவச மின்சாரத்தை மத்திய அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தின் காரணமாகப் புரட்சித் தலைவர் அவர்கள் தற்காலிகமாக எடுத்தபொழுது நானும் எனது தலைவர், சொல்லேர் உழவன் செல்லமுத்து அவர்களும், தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்து மீண்டும் இலவச மின்சாரம் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளைச் சொன்ன நேரத்திலே மீண்டும் விவசாயிகள் சங்கத்தினுடைய வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து இலவச மின்சாரத்தை நீட்டித்துத் தந்தார்கள். இன்றுகூட அந்த இலவச மின்சாரத்திற்கு மத்திய அரசாங்கம் விவசாயிகள் ஒரு யூனிட்டுக்கு 50 காசு அளிக்கவேண்டுமென்ற ஒரு நிர்ப்பந்தத்தைக் கொடுத்திருக்கிறது. அதற்கு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் சிங்காரம் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு சிங்காரம் அவர்கள் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்ந்து நீட்டிக்கப்படவேண்டுமென்று இந்த அவையின் சார்பிலே மத்திய அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கவேண்டுமென்ற ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து விட்டு,



காங்கிரஸ் கட்சி தமிழக அரசோடு மோதிக் கொண்டது என்பதற்காக விவசாயிகளின் நலனைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் காங்கிரஸ் கட்சிக்கென்று தன்னுடைய கட்சிப் பற்லுற அதிகமாகச் செலுத்துகின்ற காரணத்தால், அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கூட வாபஸ் பெற்றுக் கொண்டு விட்டார்கள். அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அமைச்சரவர்கள் பதிலுரை வைத்திருந்த நேரத்திலே அவர் அதை விலக்கிக் கொண்டதால் விவசாயப் பெருமக்களுக்குக் கிடைக்க வேண்டிய தகவல் இன்று கிடைக்காமல் போய் இருக்கிறது. இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற விவர அறிக்கையிலே சொல்லியிருப்பது, மத்திய அரசாங்கத்தை, இந்த இலவச மின்சார சலுகைக்காக மீண்டும் அவர்களிடத்திலே கேட்டு, அவர்கள் இயலாது என்பது போல சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக மத்திய அரசாங்கத்திற்கு தெரிவித்து இந்த இலவச மின்சாரத்தை நீட்டிக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் ............ (குறுக்கீடு)

[முற்பகல் 11–50]

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்</u> : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே நடந்த மின்துறை அமைச்சர்களுடைய மாநாட்டிலே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அனுமதியோடு நான் கலந்து கொண்ட நேரத்தில் யூனிட்டிற்கு 50 பைசா மின் சாரத்திற்கு விதிக்க வேண்டும் என்ற பிரச்சினை வருகிற போது நம்முடைய தமிழக மக்களுடைய உணர்வுகளை, தமிழக விவசாயிகளுடைய உணர்வுகளை அன்றைக்கே டெல்லியிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பிலே நான் தெரிவித்திருந்தேன். 'ஏற்கனவே ஹார்ஸ் பவர் அடிப் படையில் நாம் கட்டணத்தை விதித்தபோது பல்வேறு சங்கடங்களை இந்த அரசு சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஏராளமான பேர் தமிழ்நாட்டிலே விவசாயத்தை நம்பியிருக்கிற காரணத்தாலே அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அதை மீண்டும் புரட்சித் தலைவி அவர்கள் ரத்து செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, உலக வங்கியிலோ அல்லது மற்ற நிறுவனங்களிலோ கடன்கள் பெறுகிறபோது மின் நிலையங்கள் இயங்குவதற்கான சில நிபந்தனைகளை விதிக்கிறபோது சில பிரச்சினைகள் வருகிற காரணத்தினாலே இதை இப்பொழுதே பொலிடிகல் டெசிஷன் என்பதால் எங்களால் ஏற்றுக் கொள்ள இயலாத சூழ்நிலையில் இருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே அதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஆகவே இந்த அரசு விவசாய சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசிய தற்குப் பின்னால்தான் எங்கள் நிலையை தெளிவு படுத்த

முடியும். இப்போது அதை ஏற்க இயலாது' என்பதை மிகத் தெளிவாக அந்த மாநாட்டிலே புரட்சித் தலைவியினுடைய சார்பிலே தெரியப்படுத்தியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : அதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இந்திப் பிரச்சினை எப்படி தமிழகத்திலே மிக முக்கியமான பிரச்சினையோ, இந்தியிலே மத்திய அரசாங்கம் கை வைக்கிற .நேரத்திலே எல்லாம் எப்படி தமிழக மக்கள் பொங்கி எழுகிறார்களோ, அதைப்போல மின்சாரப் பிரச்சினை என்பது, விவசாயிகளுக்கான மின்சார பம்பு செட் பிரச்சினை என்பது, தமிழகத்தைப் பொறுத்த வரையில் மிகவும் உணர்ச்சி வயப்படக்கூடிய பிரச்சினை. ஏனென்றால் தமிழகத்தில்தான் அதிகமான பாசன பம்பு செட்டுகளும், ஆழமான கிணறுகளும், ஆழ்குழாய்க் கிணறுகளும், ஏர் கம்ப்ரசர் பாசன முறை என்ற பாசன முறையெல்லாம் இருக்கின்றன. ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து இறைக்கின்றோம். அதனால்தான் 1968—70 ஆம் ஆண்டுகளிலே மின் கட்டணத்தைக் குறைக்கின்ற போராட்டத்தை விவசாயிகள் சங்கம் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையிலே நடத்தி அதன் பிறகு இந்த மின்சாரம் என்பது தமிழக விவசாயிகளின் உயிர் நாடியாக இருக்கிற காரணத்தினால் இன்றைக்கும் அந்த இலவச மின்சாரத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்தியா ஒரே நாடாக இருந்தாலும்கூட இந்தியாவினுடைய பல்வேறு பாகங்கள் இயற்கை வளத்திலே ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருக்கிறது. வடக்கே கங்கை பாய்கிறது. கங்கையினுடைய உப நதிகள் எல்லாம் ஜீவ நதிகளாகப் பாய்ந்து வளம் பெற்றிருக்கின்றன. அங்கே நிலத்தடி நீர்வளம் என்று சொன்னால், நிலத்திற்குக்கீழே பத்து அடியிலே தண்ணீர் இருக்கிறது. 3 எச். பி. மோட்டாரை வைத்து 10 எச்.பி. தண்ணீரைப் பெற முடியும் அங்கே. ஆனால் தமிழகத்தினுடைய நிலை அப்படிப்பட்டது அல்ல. இந்தியாவைப் பற்றி வரலாற்று ஆசிரியர் எச்.ஜி. வேல்ஸ் அவர்கள் குறிப்பிடுகிறபோது, "Linguistically, the Babel of voice' ethnologically, the museum of man-race, geographically, the land of natural division", என்றால். மொழி அடிப்படையிலே என்றாலும் இன அடிப்படையிலே என்றாலும் இயற்கை அமைப்பு என்று எடுத்துக் கொண்டாலும் இந்தியா என்பது இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. இப்படிப்பட்ட ஒரு பரந்த நாட்டிலே இந்தியா முழுமைக்குமான மின்சாரக் கட்டணம்—ஒரே மாதிரியாக மின்சாரக் கட்டணம் யூனிட்டிற்கு 50 பைசா என்பது தமிழக விவசாயிகளால் தாங்கிக் கொள்ள முடியாத ஒன்று.15 பைசா யூனிட்டிற்கு என்பதைக் கூட கட்ட முடியாமல்தான் விவசாயிகள் சங்கம் போராடி வருகிறது. அதனால் இன்றைக்கும் அரசாங்கம் அதை இலவச மின்சாரமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே இந்த இலவச மின்சாரம் தொடர வேண்டும், என்பதை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



மத்திய அரசாங்கம் இன்றைக்கு கடைப்பிடிக்கிற விவசாயிகள் கொள்கை என்பது விவசாயத் தொழிலையே அழித்து விடுகிற சூழ்நிலையில் இருக்கிறது. உலக வங்கியிடம் அரசாங்கம் கடன் பெறுவதற்காக அந்த உலக வங்கி என்னவெல்லாம—சொல்லுகிறதோ அதையெல்லாம் மாநில அரசாங்கத்தை நிறைவேற்றச் சொல்லி நிர்ப்பந்தம் கொடுக்கிறார்கள் தங்களுடைய பெயர் கெட்டு விடக் கூடாது என்று. சென்ற ஆண்டிலே பட்ஜெட் கூட்டத் தொடரில் மன்மோகன்சிங் அவர்கள், மத்திய நிதியமைச்சர் அவர்கள் பேசுகிற போது குறிப்பிட்டார்கள். "Agriculture is the foundation of our national prosperity and no strategy of economic development can succeed in our country if it does not ensure rapid growth of production and employment in agriculture, nor can we hope to provide sufficient jobs for our growing labour force, unless we can transform the economy of our rural areas" என்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-55

கிராமப்புறத்தினுடைய பொருளாதாரத்தை வளர்க்காமல் அதற்கு அடிப்படையான விவசாயத்தை வளர்க்காமல் இந்திய நாட்டை வளம் பெறச் செய்ய முடியாது என்று அவர்கள் தன்னுடைய பட்ஜெட்டிலே சொல்லிவிட்டு, விவசாயத்திற்கு மானியம் கொடுக்கக் கூடாது. விவசாயத்திற்கு மானியம் கொடுத்தால் நாடே திவால் ஆகிவிடும் என்று ஒரு புறத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது எப்படி இருக்கிறது என்றால் 'படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில்' என்பதைப் போல் இருக்கிறது. ஒரு புறத்திலே விவசாயிகள் வாழ வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இன்னொரு புறத்திலே விவசாயத்திற்கு மானியம் கொடுக்கக் கூடாது என்று சொல்லுகிறார்கள். அமெரிக்கா போன்ற பொருளாதாரத்தில் உயர்ந்த நாடுகளில், ஐரோப்பா போன்ற வளர்ந்த நாடுகளில் கூட தொழில் துறை வளர்கின்றபோது விவசாயம் அழிகிறது. விவசாயத்தை மானியம் கொடுத்துதான் அங்கே காப்பாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அமெரிக்காவிலே விவசாயத்திற்கு மானியம் கொடுக்கப்படுகிறது ஐரோப்பிய நாடுகளிலே விவசாயத்திற்கு மானியம் கொடுக்கப்

படுகிறது. 'காட்' என்ற அந்த அமைப்பினுடைய சேர்மன் டன்கெல் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற ஒரு திட்டத்தைக் கூட ஐரோப்பிய நாடுகள் இன்றுவரைக்கும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றன என்றால் அதிலே விவசாயித்திற்கான மானியத்தை வைக்கவேண்டும் என்ற ஷரத்து இருக்கின்ற காரணத்தினால்தான். தொழில் வளருகின்றபோது அந்தத் தொழிலோடு போட்டிபோட்டு விவசாயம் வளர முடியாது. அதற்கு விவசாயத்தை மானியம் கொடுத்துதான் காப்பாற்றியாக வேண்டும். இன்றைக்கு விவசாயத் தொழிலாளிக்கு அதிகமாகக் கூலி கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு எங்களுடைய பகுதியிலே கோவை மாவட்டத்திலே தொழில்துறை வளருகின்றபோது திருப்பூரிலே இருக்கின்ற பனியன் தொழிலுக்கு படித்த இளைஞர்கள் எல்லாம் சென்று வருகின்ற நேரத்திலே 50 ரூபாய் விவசாயத் தொழிலாளிக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனால் தான் இன்றைக்கு நாட்டிலே அமைதி இருக்கிறது. ஆந்திர மாநிலத்திலே இன்றைக்கு நக்சலைட் பிரச்சினை இருக்கிறது என்றால், இந்தியாவினுடைய பிரதமா நரசிம்மராவ் அவர்கள் கூட தன்னுடைய 200 ஏக்கர் நிலத்தை விற்றுவிட்டு டெல்லியிலே இருக்கிறார் என்றால் அங்கே அவர் கூட விவசாயம் செய்ய முடியாத நிலை இருக்கிறது என்றால், அங்கே கூலியைக் குறைத்துக் கொடுக்கிறார்கள். ஆந்திர மாநிலத்திலே இருக்கின்ற விவசாயத் தொழிலாளிக்குப் பாதுகாப்பு இல்லை. அவன் ஏன் நக்சலைட்டாக மாற வேண்டும்? அவனுக்குக் கூலி கிடைப்பதில்லை.

'நடவு செய்த தோழர் கூலி
நாலணாவை ஏற்பதும்
உடல் உழைப்பிலாத செல்வர்
உலகையாண்டு உலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டம் மீதிலே
கடவுள் என்ற கட்டளுத்துத்
தொழிலுலாரை ஏவுவோம்'

என்று கவிஞர் பாரதிதாசன் சொன்னார்கள். நடவு செய்த தோழர் கூலியாக நாலணாவைப் பெறுகின்ற இடம் எங்கேயென்றால் நம்முடைய பாரதப் பிரதமர் ஆந்திராவிலே அவர் இருக்கின்ற இடத்தில் தான். தெலுங்கானாவில் தான் அப்படி இருக்கிறது. அதனால் தான் அங்கே நக்சலைட் பிரச்சினை இருக்கின்றது. ஓடப்பர் ஆகியிருக்கின்ற ஏழையப்பர் அங்கே உதையப்பர் ஆகியிருக்கிறார் என்றால் அவர்களுக்கு சரியான கூலி கொடுக்கப்படுவதில்லை. இன்றைக்கு தமிழகத்தில் தான் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளிகளும் பாதகம் இல்லாமல் கூலியைப் பெறுகின்றனர். விவசாயிகளும் நல்ல முறையிலே உழைக்கிறார்கள். இந்த நிலையிலே இன்றைக்கும் தமிழகம் சகல துறையிலும் அமைதியை நிலைநாட்டுகின்ற



தொழில் அமைதியை நிலைநாட்டியிருக்கின்ற ஒரு மாநிலமாகத் திகழ்ந்துக்கொண்டிருக்கிறது. அந்த வகையிலே நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள்.......... (மணியடிக்கப்பெற்று.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாவேந்தர் அவர்களுடைய பாட்டு வரிகளைச் சொல்லியிருந்தாலும் இடையில் 'கயவர்' என்ற ஒரு சொற்றொடர் வருகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன். பல்வேறு மாநிலங்களில் ஏற்பட்டிருக்கின்ற சட்டம் ஒழுங்கு சீர்கேட்டையெல்லாம் பார்க்கின்றபோது தமிழகத்தில் அமைதி நிலவுகிறது. இதனை நான் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதே போன்று 450 ஆண்டுகளுக்கு மேலாக உருவெடுத்து இருக்கின்ற அயோத்திப் பிரச்சினை மதத்தினுடைய நல்லிணக்கத்தை சீர்குலைக்கின்ற விதத்தில் இந்தியாவில் பல்வேறு இடங்களில் மதச் சிக்கல் ஏற்பட்டு, மிகப் பெரிய ஜாதிக் கலவரங்கள் ஏற்பட்டு, மனிதப்பண்பு படைத்த அனைவருடைய மனதிலேயும், மிகப்பெரிய கவலைக்குரிய நிலைகளை உருவாக்கியிருக்கிறது. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாடு முழுவதும் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள், அரசியல் அமைப்புகள் மிக அக்கறையோடும், பொறுப்போடும் தீர்வு காண வேண்டும் என்பதிலே எங்களுடைய கட்சி தொடர்ந்து முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

நற்பகல் 12-00

நம்முடைய தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள்,—அயோத்தியில் கரசேவை நடைபெறாவிட்டால் மறு சேவை நடத்துவோம் என்று மதவாதத்தைக் கொண்டிருந்தவர்கள்—நாட்டையே ரணகளம் ஆக்க வேண்டும்மென்று பிரகடனப்படுத்திக்கொண்டிருந்தவர்கள்—அந்த ஒருமைப்பாட்டுக் கூட்டத்தில் கரசேவை நடத்த வேண்டுமென்று சொன்னது தமிழகத்தில் ஒரு அச்சத்தை ஏற்படுத்தியது. ஆனாலும், அதற்குப் பின்னர் விளைந்து இருக்கின்ற நிலைமை இன்றைக்கு தமிழகத்தில் கூட—வட மாநிலங்களில் உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் ஏற்பட்டு இருக்கின்ற நிலைமை—நம் தமிழ் நாட்டில் பார்ப்போமேயானால் ஆளுகின்ற கட்சி மட்டுமல்லாமல் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் அதற்கு யாரும் தூபம் போடாமல் பாதுகாத்தது மிகப்பெரிய பெருமையை ஏற்படுத்தியிருக்கிறது.

இதேபோல் இன்றையதினம் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பம்பாய் நகரில் கவலைக்குரிய சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆண்டாண்டுக் காலமாக உழைத்துக் கொணடிருக்கிற தமிழர்கள், இன்றைய தினம் சிவசேனையினுடைய அந்தக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் உடமை இழந்து இருக்கிறார்கள், உயிர் இழந்து இருக்கிறார்கள். இன்றையதினம் அவர்கள் நிர்க்கதியாக தமிழகத்திற்கு சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் குடிபெயர்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்வு அளிப்பதில் கூட சரியான முறையில் மாநில அரசு இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது போல் பாதிக்கப்பட்டு வந்திருக்கின்ற தமிழர்களுக்கு மத்திய அரசிலிருந்து பாதுகாப்பான என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை—நம்முடைய மாநில அரசு, தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களைச் சந்தித்தார்களே தவிர, இன்றைய மத்திய அரசு அதற்கு என்ன அக்கறை எடுத்துக் கொண்டது என்று தெரியவில்லை.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டபோது கர்நாடகத்திலிருந்து தமிழர்கள் மீண்டும் தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். இதுபோன்று தான் மத்திய அரசில் இருக்கின்ற காங்கிரஸ் கட்சி அந்த மக்களுக்கு எந்த ஒரு நிவாரண நடவடிக்கையும் எடுப்பதற்குத் தயாராக இல்லை. அதைக் காட்டிலும் கூட மாநில அரசு இன்னும் தைரியமாகத் தட்டிக் கேட்டு இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய கருத்து ஆகும். ஆனால் அதேபோல் இன்றைக்கு தமிழ்நாட்டில்........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை காரணமாக கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்ட போது மிகவும் வற்புறுத்தித்தான் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கடிதங்கள், டெலக்ஸ் செய்திகள் மூலம் கேட்டுக்கொண்டதோடு மட்டுமல்லாமல் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து மிகவும் வற்புறுத்தித்தான் நான் வாதாடினேன், அதற்காகப் போராடினேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, இன்னும் சற்று தைரியமாகப் போராடியிருக்கலாம் என்ற குற்றச்சாட்டுக்கே இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படியெல்லாம் கேட்க முடியுமோ, எப்படியெல்லாம் வற்புறுத்திக் கேட்க முடியுமோ, அப்படி எல்லாம் கேட்டுப் பார்த்தேன், அப்படிக் கேட்டும் கர்நாடக தமிழர்களின் மறுவாழ்வுக்காக மத்திய



அரசு எந்த ஒரு உதவியும் செய்யாததால் மாநில அரசால் என்ன உதவிகள் செய்ய முடியுமோ அதனைச் செய்திருக்கிறோம் செய்துகொண்டும் இருக்கிறோம்.. (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே இப்போது அண்மையில் பம்பாயில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது எங்களுக்குத் தெரிந்தவரை, அவர்கள் தமிழர்கள் என்பதால் தாக்கப்படவில்லை. ஆனால், ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலேயே தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன். இருப்பினும், இந்தத் தகவல்கள் வந்தவுடனேயே மத்திய அரசின் உள் துறை அமைச்சர் அவர்களும், மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் அவர்களுக்கும், அங்குள்ள தமிழர்கள் அனைவருக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்று' வற்புறுத்தி, செய்திகள் அனுப்பினேன், கடிதங்கள் அனுப்பினேன் , டெலக்ஸ் செய்திகள் அனுப்பினேன். அதன் பின்னர் ஏறத்தாழ 6 ஆயிரம் தமிழர்கள் பம்பாயிலிருந்து இங்கே தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்களில் எத்தனை பேர் திரும்பிச் செல்ல விரும்புகிறார்கள் என்பது இன்னும் தெரியவில்லை. அவர்கள், வந்தவர்கள் நிரந்தரமாக இங்கே தமிழகத்திலேயே இருக்கப்போகிறார்களா அல்லது சிறிது காலம் கழித்து மீண்டும் பம்பாய் சென்றுவிடலாம் என்று முடிவு செய்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்துகொண்டு இருக்கிறோம். அவர்கள் இங்கேயே இருந்து ஏதும் தொழில் செய்ய விரும்பினால், அவர்களுடைய மறுவாழ்வுக்கு தமிழக அரசு எல்லா உதவிகளையும் செய்யும் என்பதனை இந்த நேரத்தில் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 12-05*

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. தமிழ்நாட்டிற்கு வந்து இருக்கிற அந்தத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்பதற்காகத் தான் நான் குறிப்பிட்டேன். அதேபோன்று தமிழ்நாட்டில் காவல் துறையை நவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக மத்திய அரசிடத்திலே 80.45 கோடி ரூபாய் கேட்டதாகவும், இதுவரையில் 10 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், நடப்பாண்டில் 30 கோடி ரூபாய்க்கு மத்திய உள்துறை அமைச்சர் அனுமதி தந்திருப்பதாகவும் நம்முடைய ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய காவல்துறையை நவீனப்படுத்த வேண்டுமென்பது மிகவும் அவசியமாகும். இன்றைக்கு நாம் காவல்துறையை நவீனப்படுத்துவது என்பது மிக அவசியமாகும். நாட்டிலே சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கும், சீர் கேடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் மக்களுடைய பிரச்சினை

களில் உடனடியாகத் தீர்வு காணுவதற்கு, இந்த நாட்டிலே
பெருகி வருகின்ற கொள்ளை, கொலை, வழிப்பறிகளைத் தடுப்ட
தற்கு காவல் துறை நவீனப்படுத்த வேண்டியது இன்றைக்கு
அவசியமாக இருக்கிறது. வட மாநிலங்களைப் பார்க்கிறபோது,
தென் மாநிலங்களில் அமைதி காப்பதற்கு காவல் துறையை
நாம் நவீனப்படுத்த வேண்டும். நீண்டகாலக் கோரிக்கையாக
இது இருந்து வந்துகொண்டிருக்கிறது. அதற்கான முயற்சி
களிலே தமிழக அரசு இன்றைய தினத்திலே ஈடுபடுகின்ற வகை
யில் 9,500 பேரை, புதிய காவலர்களைத் தேர்ந்தெடுக்கின்ற
முயற்சியை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதையெல்லாம்
நாங்கள் வரவேற்கிறோம். அதிலே ஒன்றும் எங்களுக்குச்
சங்கடம் இல்லை.

காவல் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு உதவி
ஆய்வாளர்களாக இருக்கக்கூடிய பலபேர்கள் பல ஆண்டுக்கால
மாக பதவி உயர்வு இல்லாமல் இருக்கிறார்கள். ஏனென்று
சொன்னால் மேல் மட்டத்தில் இருக்கிற டி.ஜி.பி. போன்றவர்
களுக்கெல்லாம் பதவி உயர்வு கிடைக்கிறது. ஒரு டி. ஜி. பி.
இருந்த இடத்திலே 5 டி. ஜி. பி, வந்திருக்கிறார்கள். சாதாரண
மாக, காவலர்களாக இருக்கிற போலீஸ்காரர்களுக்குகூட
எஸ். ஐ. அளவுக்கு இன்றைக்குப் பதவி உயர்வு கிடைத்துக்
கொண்டிருக்கிறது. ஆனால் எஸ். ஐ.-யிலே இருந்து மேல் பதவி
களுக்கு உயருவதற்கு 14 ஆண்டுக்காலமாக அவர்களுக்குப்
பதவி உயர்வு இல்லை. அரசு இன்னும் மறு பரிசீலனை செய்ய
வில்லை. அதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று இட ஒதுக்கீடு, நமக்கு இருக்கிற அந்த 50
சதவீத இட ஒதுக்கீட்டை, நம்முடைய உரிமையைப் பறிக்கின்ற
வகையில் உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை நாம் ஏற்றுக்
கொள்ள முடியாது. அதற்கு தமிழ்நாடு அரசு எந்தவொரு நட
வடிக்கையை எடுத்தாலும் எங்களுடைய கட்சியின் சார்பாக
முழு ஆதரவைக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.
அதே நேரத்தில் நம்முடைய தமிழக அரசு மீண்டும் உச்ச நீதி
மன்றத்துக்குச் செல்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்றுதான் நேரு விளையாட்டு அரங்கம். உண்மை
யிலேயே, 71/2 மாதங்களுக்குள்ளாக கட்டப்பட்டிருப்பது
தமிழகத்தின் இளைய தலைமுறையினருடைய உணர்வுகளைப்
புரிந்து செயல்பட்டு இருக்கிறீர்கள், இன்றைக்கு இருக்கிற
இளைஞர்கள் உற்சாகத்தோடு வரவேற்று இருக்கிறார்கள்.
நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி).



அதேபோன்று 1992–93 ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு
1486 கோடி அளவில் நிர்ணயிக்கப்படவேண்டுமென்று தெரி
வித்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அது 1751
கோடி திட்ட ஒதுக்கீட்டை எய்த தமிழ்நாடு ஒரு வழியைக்
கண்டுபிடிக்கும் என்று கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்
கிறது. அது எந்தவகையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதன்
மூலம் 100 கோடி ரூபாயை அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்
படுத்த இருக்கிறீர்கள் என்பதற்கான விளக்கத்தை பட்ஜெட்
கூட்டத்திலேயாவது எதிர்பார்க்கிறேன் அல்லது உங்களுடைய
பதிலுரையிலாவது நான் எதிர்பார்க்கிறேன்.

அதேபோன்று வெள்ள நிவாரணம் பற்றிகூட சொல்லப்
பட்டிருக்கிறது. சென்ற ஆண்டைவிட 20 சதவீதம் தமிழக
அரசால் அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்
பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பணத்தினுடைய மதிப்பு
20 சதவீதம் குறைக்கப்பட்ட பின்னால் திட்டச் செலவு 20
சதவீதம் என்பது மிகச் சாதாரணமானது, ஏற்கெனவே பணத்
தினுடைய மதிப்பு குறைந்து விலைவாசிகள் இன்றைக்குக்
கடுமையாக உயர்ந்திருக்கிற நேரத்தில், இதை அதிகம் என்று
சொல்லிவிட முடியாது.

பிற்பகல் 12-10

அடுத்து, வெள்ள நிவாரண நடவடிக்கைகள், தென்
ஏாவட்டங்களில் ஏற்பட்டிருக்கின்ற கடுமையான வெள்ளம்,
புயல் அநேகமாக 238 பேர் இறந்திருக்கிறார்கள். அதுபோன்று
குடிசைகளை இழந்திருக்கிறார்கள். நமது மரியாதைக்குரிய
மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்றி
ருந்தபொழுதுகூட நானும், எங்களுடைய கட்சியினுடைய
தலைவர்களும்கூட அந்தப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு—நாங்கள்
அங்கேயெல்லாம் சென்று பார்த்தோம். முதலமைச்சர் வருகிற
பொழுதுகூட அங்கேயிருந்தோம்—இன்னும்கூட முழுமையாகப்
பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு அந்த நிவாரண நடவடிக்கை
போய்ச் சேரவில்லை.

குறிப்பாக, திருவள்ளுவர் நகரத் தெருவிலே—அம்பா
சமுத்திரத்தில் 27 பேர் இறந்துபோன—அந்தக் குடும்பங்
களுக்கு—இறந்த அந்தக் குடும்பங்கள் நிர்க்கதியானார்களே
தவிர, முதலமைச்சர் வருகிறபொழுது அவர்களுக்கு நிவாரணம்
வழங்குவதாகவும் சொன்னார்களே தவிர, அநேகமாக முதல
மைச்சர் வந்த பின்னால் அந்த 27 பேர் குடும்பங்களுக்கு எந்த
வொரு நிவாரணம் அளிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.
10,000 வழங்குவதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு 5,000
மட்டுமே வழங்கினார்கள். அதிலும் இறந்தவர்களைக்கூட,

இவ்வளவு கோரமான நிகழ்ச்சியிலே இறந்தவர்களைக்கூட போஸ்ட்மார்ட்டம் செய்ய வேண்டுமென்று, 5,000 கொடுத்ததிலே, 1,500 ரூபாய் செலவுகூட செய்திருக்கிறார்கள். இது நேரடியாக நான் கண்டது. உங்களைக் குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. முருகையா பாண்டியன்.

<u>திரு. ஆர். முருகையா பாண்டியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் புயல் அடித்த நேரத்திலே மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் அவர்கள் டெல்லியிலே இருந்தார்கள். அப்படியொரு சம்பவம் நிகழ்ந்தபொழுது அதே அம்பாசமுத்திரத்திற்கு வருவதாகத் தகவல் கொடுக்கப்பட்டு, அங்கே வருகை தந்து, அதன் மூலம் அங்கேயிருக்கிற பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகச் சென்று ஆறுதலும் கூறி, பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாலான உதவிகளை முதலிலே மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் செய்தார்கள், அதன் பின்பு தன்னுடைய சொந்தப் பொறுப்பிலே கிட்டத்தட்ட பாதிக்கப்பட்ட குடும்பம் மட்டுமல்ல; அங்கே வருகை தந்திருக்கின்ற ஒரு பத்தாயிரத்திற்கு மேற்பட்ட அந்தக் குடும்பங்களுக்கு உடை, வேட்டி, சேலை, அரிசி போன்றவைகளையெல்லாம் கொடுத்தார்கள். அதுபோன்று ஒவ்வொரு....

*<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்தப் பொறுப்பில் செய்யவில்லை; கழகத்தின் சார்பில் செய்தேன்.

<u>திரு. ஆர். முருகையா பாண்டியன் :</u> அதுபோன்று, பல உதவிகளைச் செய்து, புயலால் பாதிக்கப்பட்ட அந்த உணர்வு கூட அங்குள்ள மக்களுக்கு மறந்து, புரட்சித் தலைவியைக் கண்டவுடனே அவர்களெல்லாம் ஒரு மகிழ்ச்சியிலே அதையெல்லாம் பெற்றுக் கொண்டார்கள். அதேநேரத்திலே கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபாயைத் தமிழக அரசினுடைய நிதியாகக் கொடுக்கப்பட்டு அது இன்றையதினம் அவர்களெல்லாம், பாதிக்கப்பட்டவர்களுடைய குடும்பத்திற்கு வங்கியிலும சிலபேருக்கு வாரிசே இல்லாமல் போய்விட்டது- அப்படிப்பட்டவர்கள் பணமெல்லாம் வங்கியிலே போடப்பட்டிருக்கிறது.

இந்த இறந்தவர்களுடைய குடும்பங்களெல்லாம் எல்லோருமே வசதியுள்ளவர்கள். கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் ரூபாய், மூன்று இலட்சம் ரூபாய் உள்ள வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். எதிர்பாராத புயலின் காரணமாக அந்த வெள்ளம் அங்கே அதிகமாக வந்து ஒரு வீடே நிரம்பிப் போகக் கூடிய அளவிற்கு இருந்ததே தவிர, வேறு எதையும் அவர்கள்



எதிர்பார்க்கவில்லை என்பதையும், தமிழக அரசு எல்லா உதவிகளையும் செய்தது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. உங்களுடைய கவனத்திற்கு, நான் சென்றிருந்தபொழுது அங்கேயிருந்த மக்கள் நேரடியாகச் சொன்னதை கண்ணீர் விட்டதை, முதலமைச்சர் வந்து நின்று பார்த்த இடம் வரையில் சொன்னார்கள். அந்த இடமெல்லாம் முதலமைச்சரவர்கள் போய்ப் பார்த்தார்கள்; எங்களுக்குத் தெரியும்.

அதுபோன்று மதுரையிலே மேகமலைக்கு நம்முடைய பேரவைத் தலைவரவர்கள், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் சென்றிருந்தபொழுது நானும் சென்றிருந்தேன். ஆனால் அவர்கள் மேலே சென்று விட்டார்கள். நான் கூடப் போக முடியாமல், கடுமையான போலீஸ் பாதுகாப்புடன்தான் செல்ல வேண்டுமென்று சொன்னதாலே நான் திருப்பி வர முடிந்தது. அவ்வளவு மோசமான நிலையை நான் பார்த்தேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. பழனிசாமி, போலீஸ் பாதுகாப்போடுதான் போக வேண்டுமென்று இல்லை. மிகக் கடுமையான மலைப் பாதை, கொஞ்சம் கஷ்டப்பட்டுப் போக வேண்டும். போலீஸ் தேவை இல்லை. எங்களோடு வந்த போலீசே பாதிப்பேர் வர முடியவில்லை. நீங்கள் ஏதோ போலீஸ் பாதுகாப்பு இருந்தால் போய் இருப்பீர்கள் என்பது போலச் சொல்ல வேண்டாம். மலை ஏறுவதற்குத் தெம்பு இருந்தால், ஏறி இருக்கலாம். (சிரிப்பு).

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> உங்களை எல்லாம் பத்திரமாக கயிறு கட்டி அழைத்துக்கொண்டு போனார்கள். அதனாலேதான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மக்களுக்கு முழுமையான நிவாரணம்- அதிலே ஏதேனும் முறைகேடு நடந்திருந்தால் அது உடனடியாகச் சரி செய்யப்பட வேண்டுமென்று திரும்பவும் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இந்த சேனமடம் என்ற இடத்தில் ஒரு 55 உயிர்களைக் காபந்து பண்ணிய உலகநாதன் என்பவர், அந்தக் கோயிலிலே இருந்து காபந்து பண்ணினார். முதலமைச்சரிடத்தில் முதல் நாள் மனுக் கொடுப்பதற்கு நின்றபொழுது நம்முடைய காவல்துறையினர் அனுமதி கொடுக்காத காரணத்தினால் அவர் கிட்டத்தட்ட 55 வயது- அவரிடத்தில் . அவர் மனு கொடுக்க முடியாமல் அவரைப் போலீசார் அனுமதிக்காத

[திரு. ஜி. பழனிசாமி] [1993 பிப்ரவரி 12

காரணத்தினால் அவர் விடுபட்டார் இல்லையென்று சொன்னால்
உயிர்களைக் காப்பது செந்த தன் உயிரைக்கூட பணயம் வைத்து
வெள்ளத்திலே காபந்து செய்தவர்களுகெல்லாம் பரிசு அளிக்
கப்பட்டது அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது என்று
சொன்னார்கள். உண்மையிக வேதனைப்பட்டு அந்த சேனமடத்
திலே இருந்த அந்த உலகநாதன் என்னிடத்திலே சொன்னார்.
55 உயிர்களை, ஒரு பெண்ணினுடைய சேலை மூலமாகவே
அவர்களைக் காபந்து பண்ணினார் என்ற அந்த நிகழ்ச்சியை
என்னிடத்திலே சொன்னார்கள்.

பிற்பகல் 12-15

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதமைச்சர்
அவர்கள்.

<u>*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. பழனிச்சாமி அவர்கள் சொன்ன இரண்டு கருத்துக்களுக்கு
பதில் கூற விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அரசுக்குக் கொடுத்த பட்டியல்களின்படி, எல்லோருக்கும்
வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. அதில் சில
பேர் எக்காரணத்திற்காவது விடுபட்டிருந்தால், மீண்டும்
மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குச் சொல்லி அவர்களுக்கு
தேவையான உதவிகள் அளிக்கப்படும் என்பதை இந்த நேரத்
திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி) வெள்ளத்திலிருந்து சில உயிர்களைக் காப்பாற்றியதற்காக
வீரதீரச் செயல்கள் புரிந்ததற்காக சில பேர்களுக்கு தனிப்பட்ட
முறையில் சிறப்புப்பரிசை நான் கொடுத்திருந்தேன். அப்படி
ஒருவர், உலகநாதன் என்பவர் என்னை நெருங்க முடியவில்லை
என்பதை, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள்
இங்கே தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனி
சாமி அவர்கள், இந்த உலகநாதன் அவர்களை சென்னைக்கு
அழைத்து வந்தால், அவருக்கு நானே என் கையாலேயே
பரிசு வழங்கத் தயாராக இருக்கிறேன். என்பதையும் தெரி
வித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அதேபோன்று கோரமான (குறுக்கீடு
கள்) இல்லை; இல்லை. நான் கூப்பிட்டுக் கொண்டு வரு
கிறேன். நிச்சயமாக நான் அவருக்குத் தகவல் கொடுத்து,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அவரைக் கொண்டு
வந்து சேர்க்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. பழனிச்சாமி
அவர்கள் அந்த உலகநாதன் என்பவரைக் கொண்டு வந்து சேர்ப்
பதிலே ஏதாவது கஷ்டம் இருக்கப் போகிறது! அப்படி
ஒருவர் இல்லாமல் இருக்கப் போகிறார்? (சிரிப்பு)



1993 பிப்ரவரி 12]

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அடுத்து அங்கே கோரமாக சேதங்கள் நடை
பெற்றிருந்ததை, மத்திய அரசு சார்பாக நேரிடையாக வந்து
அங்கே பார்வையிட்டார்கள். நமது மாநில அரசும்கூட
அநேகமாக 550 கோடி ரூபாய்க்கு மேலாக சேதாரக்
கணக்கையெல்லாம் கொடுத்தது. ஆனால் இன்றையதினம்
மத்திய அரசு, ஏதோ கடன்காரனுக்கு சின்ன ஆட்டைக்
கொடுப்பதைப்போன்று, வரியிலே இருந்து அதை ஈடுகட்டிக்
கொடுக்கலாம் என்று ஒரு அவசிய உணர்வுகூட தெரியாத
அளவுக்கு மத்திய அரசு செய்திருக்கிறது என்று சொன்னால்;
ஒரு இயற்கை சீற்றத்தினால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய
பாதிப்புகளைக்கூட உணரமுடியாத அளவுக்கு மத்திய அரசாங்
கம் இன்றைய தினத்திலே இருக்கிறது. இன்றைய தினம்
காங்கிரஸ் கட்சிக்கும், ஆளுகிற அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்திற்கும் ஒரு சிறிய அரசியல் கருத்து வேறுபாடு
இருந்தபோதிலுங்கூட, மத்திய அரசுக்கு ஆதரவாக இருக்கக்
கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, இன்னும்
கூட அந்த நிவாரணப் பணிகளுக்கு நிதிகளைப் போராடிப்
பெற்றிருக்க வேண்டும். ஆக அதைச் செய்ய நமது மாநில
அரசு தவறி இருக்கிறது. என்றுதான் நான் குறிப்பிடக்
கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு பொதுப்
பணித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 530 கோடி
ரூபாய்க்கு மேலாக திட்டங்கள் தயாரித்து, இழப்புக்களை
ஈடு செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,
பிரதமரிடத்திலே நேரிலே பேசியிருக்கிறார்கள். பிரதமரும்
இங்கே வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அதற்குப்
பின்னாலே, அனுமதித்த தொகையும் தெரியும். ஆகவே,
அவர்கள் கொடுக்காத நிலையிலேகூட, மத்திய அரசிலே
நிதியாதாரங்கள் பிரச்சினை இருந்தாலும்கூட, உலக வங்கி
மூலமாக வாங்கித் தாருங்கள் என்று சொல்லி, அதற்காக
ஒரு ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தையும் தயார்
செய்து, எப்படியாவது நிதியைக் கொண்டு வந்தாவது, இதைச்
சீரமைக்க வேண்டுமென்ற எண்ணத்திலேதான், தமிழக
முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்
என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள
வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான பரிந்துரை
கள் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு நம்
முடைய அரசின் சார்பில் என்னென்ன அளவிலே நடவடிக்கைகள்
எடுக்க முடியுமோ அத்தனையும் எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழக
முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள்
என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலத்தான் உணவு தானியங்கள். இன்றைக்கு உணவு தானிய உற்பத்தியிலே தமிழகம் தன்னிறைவு பெற்றிருக்கிறது. அதே நேரத்தில், 100 லட்சம் டன்களுக்கு மேலாக உணவு தானிய உற்பத்தி செய்திருக்கிற விவசாயிகளுக்குப் பரிசு வழங்கப்பட்டிருப்பது என்பது இன்றைக்கு தம்முடைய கவர்னர் உரையிலே நன்றி தெரிவிக்கப் பட்டிருப்பதுதான். ஆனால் அவர்கள் மீது இன்றைக்கு சுமத்தப்பட்டிருக்கிற உரத்தினுடைய விலையைப் பற்றி யெல்லாம் தம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். பல்வேறு கிராமங்களுக்கிடையிலே, விவசாயிகள் உற்பத்தியிலே இந்த ஆண்டு ஈடுபட்டிருக் கிறார்கள். உரத்தினுடைய விலை என்பது அநேகமாக 100 சதவிகிதம் இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதே போன்று, உரத்தினுடைய தட்டுப்பாடும் ஏற்பட்டு, கள்ளத்தன மாக கள்ள மார்க்கெட்டிலே வாங்கி விவசாயிகள் தங்களுடைய நிலத்தில் சாகுபடி செய்திருக்கிறார்கள். அந்த விவசாயி களுக்கு, நீங்கள் கவர்னர் உரையிலே நன்றி தெரிவித் தாலும், அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிற 90 சதவிகிதம் நிலத்தினுடைய வரியை நீங்கள் குறைப்பதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால் இன்றைக்கு விவசாயிகள் சாகுபடி செய்வதில், உணவு உற்பத்தி செய்வதில் ஆர்வத்தோடு ஈடுபட முடியாத சூழ்நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12.20

அதேபோன்று இன்றைக்குத் தொழில் துறையை எடுத்துக் கொண்டால் மாநில அரசு அதற்கான முயற் சிகளை மேற்கொள்வதாக ஆளுநர் உரையிலே குறிப் பிடப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே முதலீடு செய்து தொழில் துவக்கக் கூடியவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு வருவதாக ஆளுநர் உரையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஏற்கனவே ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் திறக் கப்பட்டிருக்கிறது. வரவேற்கிறோம். அதேபோன்று இன்றைக்குப் புதிதாகத் தொழில் தொடங்க முன்வருபவர்கள் அவ்வளவு சாதாரணமாக, எளிதான முறையிலே தொழில் தொடங்க முடியாத ஓர் சூழ்நிலைமை இருக்கிறது. அநேகமாக அவர்கள் அரசிடமிருந்து வாங்கக்கூடிய நிதிகளைப் பெற்று, சுயநிதியாகத் தொழில் தொடங்கக் கூடியவர்கள் தங்களுடைய பணத்திலே பாதியைச் செலவு செய்தால்தான் தமிழ் நாட்டிலே தொழில் தொடங்க முடியும் ; அனுமதி பெற முடியும் என்கிற ஒருநிலை இன்றைய தினத்திலே இருக்கிறது. ஆகவே, அதற்கு எளிதான முறையில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றதற்குப் பின்னாலேதான் புதிய தொழிற்கொள்கையை வகுத்து ஏற்கனவே தமிழ் மாநிலம் தொழில் துறையிலே பின்தங்கியிருக்கிறது என்பதற்காக-அதற்கு வேண்டிய, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு-பல்வேறு தொழில் முனைவோர்களை இங்கே கொண்டு வருவதற்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். அதற்கும் பின்னாலே புதிதாகத் தொழில்கள் தொடங்குவதற்கு ரூபாய் 8,500 கோடி அனுமதித்து, புதிதாகத் தொழிற் சாலைகளை இங்கே கொண்டு வருவதற்கு Table Clearance முறையிலே உத்தரவிட்டார்கள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை இங்கே தெரியப்படுத்த வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தொழில் முனைவோர்களை உற்சாகப்படுத்து வதற்காகத்தான், அவர்களை அழைத்துப் பேசி, இதுவரை அவர்களுடன் இரண்டு கூட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அழைத்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுடைய அறை யிலேயே உத்தரவுகளை வழங்கியிருக்கிறார். ஆகவே, தமிழ்நாட்டில் அப்படி தொழில் தொடங்க முன்வருபவர்களுக்கு எந்தவிதமான சங்கடமும் கிடையாது, எவ்விதச் செலவும் செய்ய வேண்டியதில்லை. இடவசதி, மின்சார வசதி, அனைத்தையும் தொழிற்சாலை தொடங்க ஆரம்பித்தால் அவர்களுக்கு மூன்று மாத காலத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று உத்தரவுவிட்டிருக்கிறார்கள். ஆகவே, பல்வேறு தொழில் முனைவோர்கள் தமிழ்நாட்டை தேடி இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். வரும் 14, 15 தேதியில் சிங்கப்பூரிலிருந்து வரவிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியினையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களோடு என்னுடைய உணர்வுகளையும் நான் இணைத்துக் கொண்டு, மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர் களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கடந்த 1 ஆண்டுகளில் மட்டும் புதிய தொழில்கள் துவங்குவதற்கு 20,000 கோடி ரூபாய்க்கான புதிய முதலீடுகள் தமிழகத்திற்கு கிடைத்திருக்கின்றன

[மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 பிப்ரவரி 12

என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

''டேசிட்'' என்ற Intrast ucture Development Corporation ஒன்றைப் புதிதாக உருவாக்கி, புதிதாகத் தொழில் தொடங்க முனைபவர்களுக்கு, விரும்புகிறவர்களுக்கு உடனடியாக நிலம், மின்சார சப்ளை, தண்ணீர் சப்ளை போன்ற எல்லா வித இன்ஃப்ராஸ்டரக்ச்சர் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக ஒரு புதிய கழகமே துவங்கப்பட்டிருக்கிறது. என்பதையும், விற்பனை வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் rles tax deferral போன்ற சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கிறதுஎன்பதையும்தெரிவித்து இப்போதுU.KU.S.A Canada Singporeஇல் இருந்தும், இன்னும் பல மேலை நாடுகளிலிருந்தும் பலர் இந்தியாவில் முதலீடு செய்ய விரும்புவார்கள் முதலில் தமிழ்நாட்டில் தான் முதலீடு செய்ய விரும்புகிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகிழ்ச்சி. அதேபோன்று இன்றைக்குத் திறக்கப்பட்டிருக்கும் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தில் 4,000 பேர்களுக்கு மேல் வேலை பார்க்கிறார்கள். அதிலே வேலை பார்க்க விரும்பாதவர்கள் கூட இன்றைக்கு 900 வாலன்டியரி பேர்கள் ரிட்டைர்மென்ட்டுக்கு எழுதி கொடுத்திருக்கிறார்கள். அதில் 300 பேர்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். பாக்கி 600 பேர்களுக்கு அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகுப்பு ஊதியங்கள் எல்லாம் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. அதைக் கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. சே. ரகுபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து தொழிற்சங்கத் தலைவர்களுக்கும், நிர்வாகத்திலிருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இப்போது தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> அதே போன்று ஆளுநர் உரையிலே தமிழகத்திலே மின்சாரத் தட்டுப்பாடே இல்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த தட்டுப்பாடு இந்தத் தடவை இல்லை என்பது உண்மை.



1993 பிப்ரவரி 12] [திரு. ஜி. பழனிச்சாமி]

ஆனால் முற்றிலும் இல்லையென்று சொல்வது பொருத்த
மில்லை. நகர்ப்புறங்களைப் பார்த்துக் கொண்டு, கிராமப்
புறங்களிலே அந்த நிலை என்று சொல்ல முடியாது. அனேக
மாக நகர்ப்புறங்களிலே பார்த்தால் மின்சாரத் தடை
இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. கிராமப்புறங்களுக்கு எப்
பொழுது மின்சாரம் வரும் என்று தெரியாத ஒரு சூழ்நிலை,
கிராமப்புறங்களில் 70 சதவிதம் மக்கள் வாழக்கூடியபகுதியிலே
இந்த நேரத்திலே அந்த நிலைமை இருக்கிறது அதற்
கும் மின்சார வாரியத்தின் மூலமாக உரிய நடவடிக்கை
மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மின்சார வெட்டு இல்லை என்
பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள்
பெரிய தொழில்களுக்கும் restrictions என்று சொல்லப்படுகின்ற
அந்த த்தடைகள் இல்லை என்பதையும் தமிழகத்திலே தான் நாம்
ஏற்படுத்தி இருக்கிறோம் கிராமங்களைப் பொறுத்த
மட்டில் எந்தப் பகுதியிலே மின்வெட்டு
என்பதை அவர்கள் தெளிவாகத் தெரிவித்தால் நல்
லது. ஒன்றே ஒன்று, மின்வெட்டு, என்பதற்கும், மின் பற்
றாக்குறை காரணமாக ஏற்படுகின்ற சில பிரச்சினைகளுக்கும்
வித்தியாசம் இருக்கிறது. நான் ஏற்கெனவே பலமுறை தெரி
வித்திருக்கிறேன். 40 ஆண்டுக் காலமாக இருக்கிற பிரச்
சினை, மின் வாரியம் ஏற்பட்டதிலிருந்து இன்றைக்குப் பல்
வேறு பிரச்சினைகள் (low voltage proplem) பல
இடங்களிலே இருக்கிறது. அதற்காகத்தான் புதிய துணை
மின் நிலையங்கள் புதிய transformer களை அமைக்
கின்ற பணிகளை இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னா
லே மேற்கொண்டது. எந்தெந்த இடத்திலே புகார்கள் வரு
கின்றதோ அவைகளையெல்லாம் தீர்க்க வேண்டுமென்று உட
னடி நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். உதாரணமாக
நாகை காயிதே மில்லத் மாவட்டத்திலே பல பகுதிகளிலே
அந்தப் புகார்கள் வந்தபோது உடனடியாக இந்த அரசு
நடவடிக்கை மேற்கொண்டது. ஆகவே மொத்தமாக 70
சதவிதம் வாழ்கின்ற மக்கள் பகுதியிலே மின்சாரத் தட்டுப்
பாடு என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. குறிப்பிட்ட சில
இடங்களிலே மின்தடை காரணமாக, குறைந்த மின் அழுத்தம்
காரணமாக பிரச்சினைகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்
பினர் அரசின்கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். உடனடியாக
அவையெல்லாம் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

[1993 பிப்ரவரி 12

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே போல கூடங்குளம் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்த இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசி விலை உயர்வு இந்த நேரத்திலே தமிழகத்திலே கொந்தளிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. குறிப்பாக........ (குறுக்கீடுகள்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

<u>மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புறத்திலே உங்களுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அரிசிவிலை ஏற்றம் என்று சொல்கிறீர்கள். மற்றொரு புறத்திலே விவசாயிகளை ஒன்று கூட்டி நெல் விலையை உயர்த்துங்கள் என்று சொல்கிறீர்கள். உங்களுடைய கொள்கை என்ன என்பதைத் தெளிவாக்கினால் நலமாக இருக்கும்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரிசி விலையை உயர்த்தியதைப் பற்றி குறிப்பிடுகிறபோது, நெல் விலையையும் உயர்த்தத்தான் வேண்டும். நான் இல்லையென்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்). மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரிசி விலை தமிழ்நாட்டில் உயர்த்தப்பட்டிருக்கிறது. எனக்கு சரியாக ஞாபகம் இருக்கிறது. என்று கருதுகிறேன். 1989 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிற போது, அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது, இங்கே ஒரு 25 பைசா அரிசி விலையை உயர்த்த வேண்டுமென்று ஒரு கடிதம் அனுப்பி அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முதல்வராக இருந்தவர் இங்கே அறிவித்த போது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், நாங்களும் சேர்ந்து கூடி, இந்த அவையிலே வன்மையாகக் கண்டித்திருக்கிறோம். இந்த 25 பைசா விலையை உயர்த்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். அன்றைக்கும் மத்திய அரசு அந்தக் தாக்கீதை அனுப்பியது. இன்றைய தினம் மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தினார்கள் என்று காரணம் காட்டி, அதைவிட அதிகம் கட்சியாக வந்த பிறகு 75 பைசா உயர்த்துவது என்பது எந்த வகையிலே நியாயமாக இருக்க முடியும் ? (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உணவு அமைச்சர்.



1993 பிப்ரவரி 12]

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரே நேரத்தில் கிலோவுக்கு ஒரு ரூபாயாக உயர்த்தப்பட்டது. என்பதை அவருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே, மத்தியிலே அரிசி விலையை உயர்த்திய காங்கிரஸ் கட்சிகூட ரோடுகளிலே மறியல் பண்ணுகிறார்கள். அரிசி விலையை உயர்த்தியிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த தினத்திலே இரயில் மறியல் பண்ணுகிறார்கள். ஆக............. (குறுக்கீடுகள்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர். அவர்கள்

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மத்திய அரசாங்கம், P.D.S. Public Distribution System -ல் வழங்கப்படும் அரிசியின் விலையை உயர்த்தவில்லையென்று சொன்னால் தமிழகத்திலும் அரிசி விலையை உயர்த்த வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். மத்திய அரசாங்கம் உயர்த்தவில்லை என்று சொன்னால் இங்கே நாங்களும் உயர்த்தியிருக்கப்போவதில்லை. கடந்த 1 ஆண்டுகளில் மத்திய அரசாங்கம் அரிசியின் விலையை கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் 48 காசு என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறது. ஆனால் நாங்கள் இப்பொழுது 75 பைசா மட்டுமே கூட்டி இருக்கிறோம். என்பதை அவருக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-30

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மத்தியில் இருந்த காங்கிரஸ் கட்சியின் அன்றிருந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் ஆட்சியில் இருந்தபோது மத்திய அரசு கொடுத்துக்கொண்டு இருந்த அளவைக் குறைத்தார்கள். அரிசி விலையை உயர்த்தினார்கள். அப்போது இங்கே முதல்வராக இருந்த மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் மத்திய அரசை எதிர்த்து சென்னை நகரத்தில் கடலோரத்தில் உண்ணாவிரதம் இருந்தார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று வன்மையாகக் கண்டித்தார்கள். ஏழை எளிய மக்கள் வாங்கிச் சாப்பிடுகிற அரிசியின் விலையை உயர்த்த முடியாது என்று அன்றைய தினம் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் . மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அன்றைய தினம் மத்தியத் தொகுப்பிலிருந்து தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய அரிசியின் அளவைக் குறைத்து மாநில அரசு கேட்ட அளவுக்கு அரிசி வழங்காததால்தான், அந்தக் காரணத்திற்காகத்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அரிசியின் விலையைக் குறைக்கின்ற வகையில் மறு பரிசிலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மருத்துவத் திட்டம். இன்றைக்கு மருத்துவத் திட்டம் பற்றி நம்முடைய கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தில் மருத்துவத் திட்டத்தால் 7 கோடி பேர்கள் பயனடைந்திருப்பதாக அதாவது நம்முடைய முதலமைச்சர் மருத்துவத் திட்டத்தால் பயனடைந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பல்வேறு தாலுகா மருத்துவமனைகளில் போதுமான மருந்து கிடையாது. டாக்டர்கள் இருந்தால் கூட மருந்துகள் கிடையாது. முன்பு எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு 40 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற வெள்ளம், வறட்சி போன்றவற்றால் உயிரிழந்தவர்களைவிட காலரா நோயால் உயிரிழந்தவர்கள் இப்போது ஆயிரம் பேருக்கு மேல் எட்டிப்பிடித்திருக்கிறார்கள். நாகப்பட்டினத்தில் மட்டும் அரசாங்கத்தின் மெடிக்கல் ஆபீஸர் கணக்குப்படி 111-ஐத் தாண்டிவிட்டது. சென்னையை எடுத்துக்கொண்டால் 118 பேர்கள் இறந்திருக்கிறார்கள். இப்படி பல்வேறு இடங்களில் இறந்து இருக்கிறார்கள். குறிப்பாக வெள்ளம் போன்றவற்றால் இறந்தவர்களுக்கு மேல் இன்றைய தினம் தமிழகத்தில் இப்படி இறந்து இருக்கிறார்கள் என்று சொன்னால் போதுமான மருந்துகள் இன்றைக்கு இல்லாத சூழ்நிலைதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து சம்பந்தமான பிரச்சினையைப் பற்றி ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி



தெரிவித்து அதற்கு விளக்கமாக பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் இன்றைக்கும் அதே கருத்தைச் சொல்கிற காரணத்தால் திரும்பவும் சொல்ல வேண்டி இருக்கிறது. ஏற்கெனவே நான் சொன்னபடி கடந்த 40 ஆண்டுக் காலத்தில் இல்லாத அளவுக்கு கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் மட்டும் அதாவது இந்த இடைக்காலத்தில் ஏறத்தாழ 39 சதவீதம் மருந்தின் விலை உயர்ந்துவிட்ட காரணத்தால் பெரும் பிரச்சினையை இந்த அரசு சமாளிக்கவேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டது. இந்த நிலையைப் புரிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டாண்டுகளாக ஆறு கோடி ரூபாயைக் கூடுதலாக, தனியாக ஒதுக்கித் தந்தார்கள். இப்போது அந்த நிலைமை மேலும் சமாளிக்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணத்தால் அதனை உயர்த்தி 70 கோடியாக இந்த ஆண்டு கொடுத்திருக்கிறார்கள். இந்த மருந்து வாங்கிக் கொடுக்கிற முறையில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கிற காரணத்தாலும், முறையாக அதைக் கண்காணிக்க முடியவில்லை என்ற காரணத்தாலும், அதற்காகத் தனி அதிகாரிகள் இல்லாத சூழ்நிலை இருப்பதன் காரணத்தாலும் தனியாக அதற்கென்று ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு அடுத்த ஆண்டிலிருந்து அந்த அமைப்புத்தான் பணியைச் செய்யும் என்ற நிலையை உருவாக்கி இருக்கிறார்கள். காலரா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் நிச்சயமாக மருந்து இல்லாத காரணத்தால் இறந்து விட்டார்கள் என்று சொல்வதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. சில இடங்களிலே திடீரென்று ஏற்பட்டுவிடுகிற நிலையில் அங்கே போதிய அளவுக்கு மருந்துகள் இல்லை என்றால் அருகாமையிலிருந்து மருந்துகளைக் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சென்னையிலிருந்து மருந்து அனுப்பிக் கொண்டிருக்கிறோம். விழுப்புரத்தில் அப்படி நடந்தது. அதேபோன்று பல இடங்களிலே நடந்தபோது இங்கே இருந்து லாரிகளில் மருந்தை ஏற்றி உடனடியாக நாங்கள் அனுப்பி இருக்கிறோம். எனவே மருந்து இல்லாத காரணத்தால் இறந்து விட்டார்கள் என்று சொல்வதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. தகவல்கள் மிகக் காலதாமதமாகக் கொடுக்கப்பட்ட காரணத்தாலும், உடனடியாக மருத்துவமனைக்கு அவர்களைக் கொண்டுவராத காரணத்தாலும்தான் சில இடங்களில் அவ்வாறு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் காலரா நோயால் இறந்தவர்கள் கடந்த காலத்தில் இல்லாத அளவுக்கு இப்போது ஆகி விட்டது என்பதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தோம். ஒவ்வொரு ஆண்டும் நடந்திருப்பதை விட இந்த ஆண்டு கூடுதலாக இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 30 நிமிடத்திற்கும் அதிகமாகப் பேசியிருக்கிறீர்கள். 37 நிமிடம் ஆகிறது. 7

நிமிடம் குறுக்கீடுகளுக்காக என்று எடுத்துக் கொண்டிருந்தாலும் கூட 30 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். எனவே இன்னும் 2, 3 நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்றுதான் அந்தப் பணம் போதாது என்று கூறுகிறேன். அந்தப் பணத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காலரா நோயால் ஒருவர் அனுமதிக்கப்பட்டால் சுமார் 2,000 ரூபாய்; மருத்துவமனையில், ஒரு நபருக்குச் செலவாகிறது. ஏழை எளிய மக்களுக்கு கிராமப்புறத்திலே அந்த நோய் வருகிறபோது 2 ஆயிரம் ரூபாய் எப்படி செலவு செய்து பாதுகாத்துக்கொள்ளமுடியும் என்பதை நீங்கள் உணரவேண்டும் என்பதற்காகத்தான் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இப்போது 70 கோடி ரூபாய் மருத்துவத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பேக்கிங் சார்ஜிலேயே பாதி போய் விடுகிறது அந்தப் பணம். பாதிதான் மருத்துவத் திட்டத்திற்கு வருகிறது. அதை மீண்டும் மறுபரிசீலனைச் செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12.35

அதே போன்று இன்றைக்கு காவிரி நதி நீர்ப் பிரச்சினை. காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் கொடுக்கப்பட்ட தீர்ப்பு, நமக்கு வழங்கப்பட்டிருக்கிற ஒரு நல்ல தீர்ப்பு. அதன் பலனை இன்றையதினத்திலே நாம் பெறமுடியவில்லை. இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னால், மத்தியிலே இருக்கும் காங்கிரஸ் கட்சி அரசு இன்றைக்கு அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. காவிரி நதி நீர்ப் பிரச்சனைக்காக காரணம் காட்டி அரசியல் ஆதாயம் தேடியவர்கள் எல்லோரையும் நாம் இன்றைய தினத்திலே கண்டு கொண்டிக்கிறோம். ஆனால் இன்றைய தினத்திலே காவிரி நதி நீர்ப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுவதற்கு நமது மாநில அரசு மீண்டும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய இயற்கைச் சூழ்நிலை எப்போதும் இருக்காது.

அதேபோன்றுதான் இன்றைக்கு உள்ளாட்சித் தேர்தல். உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள்—விரைவிலே இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பதாக இங்கே அறிவித்திருக்கிறார்கள். விரைவிலே நடத்துங்கள். தனி அதிகாரிகளுடைய ஆட்சியின் மூலமாக மக்களுடைய பிரச்சினைகளை நேரடியாகக் காணமுடியாது. உள்ளாட்சி அமைப்பு





களிலேகூட அநேகமாக உள்ளாட்சி ஒன்றியங்களுக்கு செய்யக்கூடிய நல்ல திட்டங்களை எல்லாம் இன்றைக்கு ஆளுங்கட்சிக்காரர்களே முழுமையாகப் பெற்று, அவர்கள்தான் செய்கிறார்களே தவிர பொதுவாக இருக்கக்கூடிய காண்ட்ராக்டர்கள் யாரும் அங்கே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாக, திரு. பழனசாமி அவர்கள் இப்படி ஓர் தவறான, குற்றச்சாட்டை எப்பொதும் ஒவ்வோரு முறையும் அப்படித்தான் சொல்லி கொண்டிருக்கின்றார்கள். அந்த நிலைமை எங்கேயும் இல்லை. யார் யார் அதை முன்வந்து செய்கிறார்கள் என்பதை—ஒரு கட்சியினுடைய சார்பாக இருப்பவர்கள், ஆளுங்கட்சியினுடைய சார்பாக இருப்பவர்கள் செய்கிறார்கள் என்பது நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று—அப்படிப் பேசுவதே சரியும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ** தகவலை, உங்களைக் குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. பொதுவாக என் தொகுதியை எடுத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** வேண்டாம் ** அவைக் குறிப்பிலே வேண்டாம்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை. என் தொகுதியிலேகூட, அநேகமாக ஆளுங்கட்சிக்காரர்கள்தான் முழுமையாக எடுத்துக் கொள்கிறார்கள். அதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை. இருக்கிற தொகுதியே இரண்டொரு தொகுதிதானே, ஆகவே, கான்ட்ராக்டர்களுக்குக் கொடுக்கமுடியவில்லை என்பதுதான்.

அதே போன்றுதான். இன்றைக்குப் பொதுப் பணித்துறையிலே கூட, செட்யூலே கொடுப்பதில்லை ** என்று நாகப்பட்டினத்திலே உள்ள கோட்டப் பொறியாளரே, ஆனால் அவர் நல்ல சிறப்பாக பணியாற்றிக்கொண்டிருப்பவர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி** அந்த உள்நோக்கம் கற்பித்து, பேரவையில் பேசுவது கூடாது. அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கூட சட்டமன்றத்திலே இதைப் பற்றித் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். காங்கிரஸ் உறுப்பினர் கூட அதைப் பற்றி கேட்டபோது, நான் சென்ற பட்ஜெட் கூட்டத்திலே அதைப் பற்றித் தெளிவாக விளக்கிப் பேசியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கூட நன்றாக அறிவார்கள். பொதுவாக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலங்களிலேயும் சரி, சில நேரங்களிலே கான்ட்ராக்டர்களும் சங்கங்களை வைத்துக் கொண்டு, ஒரு 12 பேர் வேலைக்கு செட்யூல் வாங்குகிறார்கள். கடைசியிலே பார்த்தால் 2 பேர் தான் அந்த வேலைக்கு ஒப்பந்தம் போடுகிறார்கள். நாங்கள் ஒரு மாதம், 2 மாதம் என்று அப்படிகூட கொடுத்துப் பார்த்தோம். பெரும்பாலான—90 சதவிகிதம் ஒப்பந்தங்களில் 10 பேர் 12 பேர் செட்யூல் வாங்கிக் கொண்டு, ஒன்று இரண்டு ஒப்பந்தங்களிலே போட்டிருக்கிறோமே தவிர, 95 சதவிகித ஒப்பந்தங்களிலே இரண்டுபேர் அல்லது ஒருவர் தான் போடுகிறார்கள்.

இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், நீங்கள் கொடுக்கின்ற பணத்தை நான் செலவழித்தாகவேண்டும். சென்ற மார்ச் மாதம் நீங்கள் பணம் ஒதுக்கியிருக்கிறீர்கள் என்றால் அடுத்த மார்ச் மாதத்திற்குள்ளே அந்தப் பணத்தை சேமித்து வைத்துக்கொண்டிருந்தால், அந்த இலாகா அமைச்சர் சரியில்லை, அதிகாரிகள் சரியில்லை, வேலை நடக்கவில்லை என்பீர்கள். ஆகவேதான் நாங்கள் ஒரு முறையைக் கொண்டு வந்தோம். அப்படி அங்கீகரிக்கின்ற போது, கான்ட்ராக்டர்கள் அவர்களுக்குள்ளாகப் பேசிக்கொள்கிறார்கள், அப்படிப் பேசிக்கொண்டு, அந்தக் கான்ட்ராக்டர்கள் சங்கத்தின் ஒரு குறிப்பிட்ட சிலர் மட்டும் போடுவது, மற்றவர்கள் அதிலேயிருந்து விலகிக்கொள்வது என்று சொல்லி, ஒரு உள் ஒப்பந்தத்தை வைத்துக்கொண்டிருந்தார்கள். ஆகவேதான் ஒரு முறையை அறிவித்தோம். யார் தெளிவாக வேலை செய்யக்கூடியவர்கள், ஒப்பந்தங்களைப் பதிவு செய்பவர்கள், அந்தப் பகுதியிலே தகுதியாக இருக்கின்றவர்களுக்குத் தான் ஒப்பந்தம் கொடுக்கவேண்டும் என்று. வெறும் ரெஜிஸ்ட்ரேஷன் வைத்துக் கொண்டு வேலையே பார்க்காமல் இருப்பவர்களும் இருக்கிறார்கள். 10 ஆண்டுக்காலம், 15 ஆண்டுக்காலம் என்று வைத்து நாம் கணக்கெடுத்துப் பார்த்தோம். ரெஜிஸ்ட்ரேஷன் செய்துவிட்டு 10 ஆண்டுக்காலம், 15 ஆண்டுக் காலம் அவர்கள் வேலையே பார்த்தது கிடையாது. ஆனால் கான்ட்ராக்ட் ரிஜிஸ்ட்டர் மட்டில் இருக்கிறது. ஆகவே தகுதியான ஒப்பந்தக்காரர்கள் மட்டும்தான் வேலை செய்ய வேண்டும்.



அதில் பதிந்து இருப்பவர்கள் மட்டும்தான் பொதுப்பணித் துறையாக இருந்தாலும், நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும் வேலை செய்ய முடியும். தனி நபர் வேலை செய்ய முடியாது. அப்படித்தான் ஒப்பந்தங்கள் கொடுக்கின்ற கணக்குகளைப் பார்த்தால் தெரியும். அதில் சட்ட விதிகளுக்குப் புறம்பானதாக எதுவும் நடக்கவில்லை என்பதை நான் சட்டமன்றத்திலே தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே யார் ஒப்பந்தக்காரர்கள் தொடர்ந்து வேலை செய்துகொண்டிருக்கிறார்களோ, தொடர்ந்து தகுதி உள்ளவர்களாக இருக்கிறார்களோ, சால்வன்சி அடிப்படையிலே அவர்களுக்கு வேலை கொடுத்துக்கொண்டிருக்கிறாமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல, உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது சரியல்ல. அப்படி எங்காவது ஒப்பந்தக்காரர்கள் தெளிவான வேலை செய்யக்கூடிய தகுதியிருப்பவர்கள், இவர்களுக்கு ஒப்பந்தங்கள் மறுக்கப் பட்டால், அதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அப்படி கொடுக்கப்படாதவர்களுக்கு சால்வன்சி இருக்குமானால், பதிவு செய்து இருப்பார்களேயானால், அந்த ஒப்பந்தங்களை அவர்களுக்குக் கொடுப்பதற்கு அறிவுரைகள் வழங்கப்படும். அந்த மாதிரிப் பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்பில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, சுருக்கமாக முடிக்க வேண்டும். மற்ற தலைவர்கள் பேசி முடிக்க வேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அதை சரி பார்த்துக்கொள்ள வேண்டும். அநேகமாக எந்த ஒரு டெண்டராக இருந்தாலும் ஒருவரைத் தவிர வேறு யாரும் போடுவதில்லை. அதற்குத்தான் சொல்ல வந்தேன். அதேபோன்றுதான் இன்றைக்கு குடிநீர்த்திட்டம். சென்னை நகருக்கு அக்கறை செலுத்துவதுபோன்று கிராமப்புறங்களிலும் இன்றையதினம் குடிநீர்ப் பற்றாக்குறை, வறட்சி வந்துகொண்டிருக்கிற காரணத்தினால் கிராமப்புற மக்களுக்கு குடிநீர் வழங்குகின்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 12-40

அடுத்து, சட்டம்-ஒழுங்கு. தமிழகத்தை எடுத்துக்கொண்டால் அந்நிய நாட்டு அபாயத்தை இன்றைக்குத் தடுத்திருக்கிறோம். அதே நேரத்தில் உள்நாட்டில் பல்வேறு இடங்களில் கொலை, கொள்ளைகள் நடக்கின்றன. அதுமட்டுமல்லாமல், பஸ்ஸிலே கொலைகள் நடைபெறுகின்றன. காவல்துறையினர் கண்டுகொள்ளாமலும் இன்றைக்கு, பல்வேறு இடங்களில் நிலைமைகள் இருக்கின்றன. அதேபோன்றுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அறங்காவல் துறையைப் பாதுகாக்க வேண்டுமென்று நல்ல முயற்சி எடுத்துக்கொண்டு அதற்காக நிதியைக்கூட சேர்த்து பல்

வேறு கோயில்களைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்றைக்கு கோயில்களில் இருக்கின்ற விலை மதிப்புள்ள சிலைகள் எல்லாம் களவு போய்க்கொண்டிருக்கின்றன. அதுபோல நாகப்பட்டினத்தில் கோமேதக லிங்கத்தினுடைய சிலை கிட்டத்தட்ட பல கோடி ரூபாய் மதிப்புள்ள சிலைகள் களவு போய்விட்டன. அதேபோல, திருவாரூருக்கு அருகிலுள்ள திருக்கடவாசலில் இருக்கிற மரகதலிங்க சிலை திருட்டுப் போய் இருக்கிறது. இப்படி பல இடங்களில் கோயில்களில் பல கோடிக் கணக்கான மதிப்புள்ள சொத்துக்கள் களவு போய்க்கொண்டிருக்கின்றன. காவல்துறையினர் கண்டுகொள்ளாத நிலை இருக்கிறது. காவல் துறைக்கு பல கோடிக் கணக்கான ரூபாய் நாம் செலவு செய்கின்ற நிலைமை இருப்பதால் அரசாங்கத்தினுடைய செலவு கோயில் சொத்தைப் பாதுகாப்பதிலே அக்கறை இருக்க வேண்டும்.

அதேபோல பார்களோடு இணைக்கப்பட்டிருக்கிற அந்நிய நாட்டு மதுக்கடைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதன்மூலமாக எந்த அளவு கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியும் என்பதை அரசு மறுபரிசீல்னை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதுபோலதான் பார் எடுக்கப்பட்டதன் மூலமாக... (குறுக்கீடு) பார் எடுக்கப்பட்டதன் மூலமாக எந்த ஒரு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு பழனிசாமி பார் எடுத்ததாலே மிகுந்த வருத்தபபடுகிறார்கள். (சிரிப்பு) அது இருக்கவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? அது தொடர்ந்து இருந்தால் நல்லது என்று கருதுகிறீர்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: நிச்சயமாக பார் எடுக்கப்பட வேண்டுமென்று சொல்கிறேன். ஆனால் பார் எடுக்கப்பட்டதற்குப் பிறகாவது கள்ளச் சாராயம் ஒழிந்துவிடுமா என்றால் நிச்சயமாக முடியாது. ஏனென்றால் இன்னும் கொஞ்சம்கூட அதிகமாகப் போகிறது. கிராமங்களில் அநேகமாக காவல் துறையுடைய அனுமதியோடுகூட அது நடைபெறுகிறது. அதேபோல விற்பனை நடக்கிறது. இந்தக்காவல் துறையும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச்சாராயத்தைப் பொறுத்தவரை அநேகமாக எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இங்கே



கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் சில இடங்களில் நடக்கிறது என்று உறுப்பினர் எடுத்துக்காட்டலாம். தவறு இல்லை. எங்கேயாவது நடக்கக்கூடும். நடந்தால் எடுத்துக்காட்டலாம். ஆனால் காவல் துறையுடைய அதிகாரிகளுடைய துணையோடு. அவர்களுடைய அனுமதியோடு நடக்கிறது என்று சொல்வது அவ்வளவு சரியாக இருக்காது. உறுப்பினருக்கு காவல்துறை அதிகாரிகள் யார் மீதாவது தனிப்பட்ட முறையில் வருத்தம் இருந்தால் வெளியிலே காட்டிக்கொள்ள வேண்டுமே தவிர, இங்கே வந்து சொல்வது அவ்வளவு சரியாக இருக்காது.

திரு. ஜி. பழனிசாமி: எனக்கு காவல்துறை அதிகாரிகள் யார் மீதும் நிச்சயமாக அப்படிப்பட்ட முறையில், தனிப்பட்ட முறையில் குற்றம் சுமத்தவேண்டுமென்ற விருப்பம் இல்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய அளவிற்கு, தமிழகத்திலே, நான் இதே சட்டமன்றத்தில் சென்ற இடைக்காலக் கூட்டத்தில் செப்டம்பர் 22-ம் தேதி சாராயம் பெருக்கெடுத்துவிட்டது என்று பேசினேன். அப்படி சட்டமன்றத்தில் பேசிவிட்டு நான் சென்னையிலிருந்து ஊருக்குச் செல்வதற்கு முன்பாக பட்டதாரி ஆசிரியர்களுடைய போராட்டம் நடைபெற்றபோது அன்றையதினம் முதலமைச்சருடைய செயலாளரை சந்தித்து அந்த ஆசிரியர்களை விடுவிக்க வேண்டும் என்பதற்காக—26 மற்றும் 27 ஆகிய நாட்கள் சனி, ஞாயிறாக இருந்ததால்—28 ஆம் தேதி முதலமைச்சரின் செயலாளரைச் சந்தித்தேன். சந்தித்து அவர்களை விடுவிக்க வேண்டுமென்று சொன்னேன். அப்போது காலையிலேயே முதலமைச்சர் அவர்கள், ஆசிரியர்களை விடுவிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்று என்னிடம் சொன்னார்கள். திருத்துறைப்பூண்டிக்கு அன்றைக்கு இரவுதான் நான் சென்றுகொண்டிருந்தேன். சாராயம் அன்றைக்கு ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது என்று சொன்ன பிறகு, என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 80 பேர்கள் மீது காவல்துறையினர் கேஸ் போட்டார்கள். நான் எந்தக் கோயிலை காரணமாக ஆதாரமாக சுட்டிக்காட்டினேனோ அந்தக் கோயில் அருகிலே ஒரு செக்போஸ்ட் அமைத்தார்கள். அந்தக் கோயிலிலேயே 3 பெண்களைக் கைது செய்தார்கள். அவர்கள் எல்லாம் 60 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கோர்ட்டிலே ஃபைன் கட்டினார்கள். 28 ஆம் தேதி நான் சென்னையிலிருந்து திருத்துறைப்பூண்டிக்கு சென்றிருந்தேன். திருத்துறைப்பூண்டியில் 28 ஆம் தேதி மாலை 7 மணியளவில் என்னுடைய வீட்டிலே காவல் துறையினர் 10 பேர், சிறப்புப் படைக் காவலர்கள் 2 பேர், ஒரு எஸ். ஐ. உள்பட 10 பேர் நான் சாராயம் காய்ச்சுவதாகவும், விற்பதாகவும் நேரடியாகப் பரிசோதித்திருக்கிறார்கள் அதற்கு மாறாக உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக அங்கே இருக்கக்கூடிய வீடுகளுக்கு நீர்க் கழிப்பிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதற்காக முதலில் எல்லா வீடுகளுக்கும் குழாய் வெட்டியபோது என்னுடைய வீட்டிலும் குழாய் வெட்டினார்கள். நான் ஊருக்குப் போன

போது அதைப் பார்த்துவிட்டு ஏன் குழி வெட்டப்பட்டிருக்கிறது என்று கேட்டேன். அரசாங்கத்தால் இலவசமாகக் கழிப்பிடம் கட்டிக் கொடுப்பதாகவும், அதற்காகத் தான் இந்தக் குழி வெட்டப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள், நான் இருக்கக்கூடிய தெருவில் 60 வீடுகள் இருக்கின்றன, அனைத்து வீடுகளுக்கும் இந்த குழி வெட்டப்பட்டிருக்கிறதா என்று கேட்டேன், இல்லை என்று சொன்னார்கள். அப்படியானால் உடனடியாக இதைத் தடுத்துவிடுங்கள். இது மோசமான நிலைமையை உண்டாக்கும். ஒரு சட்டமன்ற உறுப்பினர் வீட்டுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் அரசாங்கம் சலுகை கொடுக்கிறது என்று நினைக்கிற சூழ்நிலை வரும் என்று சொன்னேன். அந்தக் குழியைப் போய் நம்முடைய காவலர்கள் தோண்டிப் பார்த்திருக்கிறார்கள். வைக்கோல் போரைப் போய்ப் பார்த்திருக்கிறார்கள். இப்படி அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காக. (குறுக்கீடு).

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்ற இந்த சம்பவத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் அரசாங்கத்தின்மீது உள்நோக்கம் கற்பித்து குற்றஞ் சாட்டி பத்திரிகைகளில் எல்லாம் அறிக்கைகளும், பேட்டிகளும் கொடுத்திருக்கிறார். அதே குற்றச்சாட்டை இன்று மீண்டும் சட்டமன்றத்தில் கூறிக் கொண்டிருக்கிறார். நாளை, விரிவாக நான் என்னுடைய பதிலைக் கூற இருப்பதால், சம்பந்தப்பட்ட விபரங்கள் என்னிடத்தில் தற்போது இல்லை என்பதால் சுருக்கமாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின் போது சட்டசபையில் தெரிவித்த கருத்துக்களுக்கும், அவர் வீட்டில் காவலர்கள் நடத்திய சோதனைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை; தொடர்பும் இல்லை என்பதைத் திட்டவட்டமாக இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் வீட்டில் சோதனை போடவேண்டுமென்று காவல்துறையினருக்கு நான் எந்த உத்தரவும் இடவில்லை. சில காவலர்கள், மேலதிகாரிகளின் இன்ஸ்ட்ரக்ஷன், ஆர்டர் இல்லாமல் தன்னிச்சையாக செயல்பட்டார்கள். அதற்கு உள்ளூர்ப் பிரச்சினைகள்—ஒரு வேளை அவர்களுக்குள் ஏதாவது கருத்து வேறுபாடு இருக்குமோ என்னவோ தெரியாது. உள்ளூர்ப் பிரச்சினைகள்தான் காரணம் என்று தெரியவந்தது. அதன் பின்னால் சம்பந்தப்பட்ட காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்த உள்நோக்கமும் கொண்டு பேசவில்லை. சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தால், அந்த பகுதியிலே இருக்கிற ஆளுகிற கட்சிக்காரர்கள், எதிர்க்கட்சிக்காரர்கள் என்ற வித்தியாசம் பாராமல் நான் நடந்துகொள்வது வழக்கம். என்மீது முதலமைச்சர் அவர்கள் ஒரு போலிஸ் குழுவை அமைத்து நான் அந்தப் பகுதியில் ஏதாவது ஒரு முறைகேடான காரியத்தையாவது எந்த ஒரு வகையிலும் செய்திருக்கிறேனா என்று தேடிப் பார்த்தாலும் நிச்சயமாகப் பார்க்க முடியாது. முதலமைச்சரைக் குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை. இப்போது சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போதும் அரசியல் பொது வாழ்க்கையில் 25 ஆண்டுக் காலம் இருக்கும் போதும், நேர்மையான முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன் என்பதை அறியலாம். இன்றையதினம் வரையிலும் அப்படித்தான் இருக்கிறேன். ஆனால் வேண்டுமென்றே ..... (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களின் நேர்மையைப் பற்றி இங்கே யாரும் எவ்வித தவறான கருத்தையும் சொல்லவில்லை. அவருடைய நல்ல காரக்டரை, நல்ல குணத்தை யாரும் சந்தேகிக்கவும் இல்லை. ஆனால் அந்த சம்பவம் நடைபெற்றதிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சட்டசபையில் ''நான் கள்ளச் சாராயத்தைப் பற்றி பேசினேன். அதனால் என் வீட்டில் காவலர்கள் இப்படி சோதனைப் போட்டார்கள்'' என்று ஏதோ அரசுக்கு எதிரான கருத்துக்களை அவர் இங்கே தெரிவித்ததால் அரசே அவரைப் பழிதீர்த்துக் கொண்டதாக அப்படி உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது சரியல்ல. அப்படிப் பார்க்கப் போனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இன்னும் எத்தனையோ கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசுக்கு எதிரான பல கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசு அவர்களைப் பழிவாங்கவும் இல்லை. அப்படி வாங்கவேண்டுமென்ற எண்ணமும் இந்த அரசுக்கு இல்லை என்பதை மட்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைத் தெளிவுபடுத்தி விட்ட காரணத்தால் இதை இத்தோடு விட்டுவிடலாம். நீங்கள் இதை காலையிலேயே கிளப்பினீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நான் பதில் சொல்கிறேன் என்று சொன்னார்கள். இப்போது பதில் பெற்றிருக்கிறீர்கள். வேறு பிரச்சினையோடு ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் சொல்கிறார். அதை நான் வரவேற் கிறேன். அதில் ஒன்றும் எனக்கு வித்தியாசம் இல்லை. ஏனென் றால் நான் சட்டமன்றத்தில் பேசியதற்குப் பிறகுதான் இந்த சம்பவம் நடந்தது என்பதற்காக. . (குறுக்கீடு).

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : அதைத்தான் நான் மீண்டும், மீண்டும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். மாண்பு மிகு உறுப்பினர் பழனிசாமி இங்கே சட்டமன்றத்தில் கள்ளச் சாராயத்தைப் பற்றிப் பேசினார் என்பதற்காக எந்த நட வடிக்கையும் எடுக்கவேண்டுமென்று நான் உத்தரவு போடவும் இல்லை. எனக்குத் தெரியாமல், காவல் துறை உயர் அதிகாரி களுக்கும் தெரியாமல், சில காவலர்கள், உள்ளூர்க் காவலர்கள் உள்ளூர்ப் பிரச்சினை காரணமாக தன்னிச்சையாக இந்த நடவடிக்கை எடுத்தார்கள். அதனால் அவர்கள் மீது நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடவடிக்கை எடுத்திருக் கிற போது வேறு பிரச்சினையே இல்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குப் பின்னால் அங்கே ஏற்பட்டிருக்கிற மக்களுடைய கிளர்ச்சியின் காரணமாக என்னுடைய கட்சியைச் சார்ந்த பலர் மீது போலீசார் பல்வேறு கடுமையான வழக்கு களைப் போட்டிருக்கக்கூடிய அளவுக்கு இன்றையதினம் அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். அதையும் நீங்கள் மறுபரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

பிற்பகல் 12-50

அதேபோன்றுதான் காமராசர் மாவட்டத்தில், எங்கள் கட்சியின் மாவட்டச் செயலாளராக வெங்கிடசாமி அவர்கள் இருக்கிறார்கள் ; எங்கள் கட்சியின் மாநிலக் குழுவின் உறுப்பின ராகவும் இருக்கிறார்கள். அவர்கள் பொதுவாழ்க்கையில் ஈடு பட்டு நீண்டகாலமாக செயல்பட்டு வருகிறார்கள். அவரைக் கூட சாராயம் விற்பதாகக் கூறி காவல் துறையினர் 16—1—1993 அன்று சோதனையிட்டது பற்றி எங்களுடைய மாநில மையத் திற்குத் தகவல் கொடுத்து இருக்கிறார்கள். இது எதைக் காட்டு கிறது என்றால், காவல் துறையினர் ஏதோ இந்த அரசைக் களங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக, சில இடங்களிலே செய்கிற காரியமாக இருக்குமோ என்று நான் சந்தேகிக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, இது குறித்தும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). முடித்து விடுகிறேன். இன்னும் ஒன்றே ஒன்றுதான்.



அன்னை தெரசா பள்ளி இன்றையதினம் தமிழகத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் இன்றையதினம் கொடைக்கானலுக்குக் கொண்டு போவதற்கு (குறுக்கீடு) பதட்டத்திலே தவறாகச் சொல்லி விட்டேன், அந்தப் பல்கலைக் கழகத்தை மீண்டும் கொடைக்கானலுக்குக் கொண்டு போவது என்று அரசு உத்தரவிட்டதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை மறுபரிசிலனை செய்ய வேண்டும். ஏனென்றால், அந்தப் பல்கலைக் கழகத்தில் கேரளாவில் இருக்கக்கூடிய மாணவிகள், மற்றப் பகுதிகளில் இருக்கக்கூடிய மாணவிகள் தான் பயின்று வருகின்றார்கள். கொடைக்கானலில் அந்தப் பல்கலைக் கழகம் இருப்பதை விட, அதை சென்னைக்குக் கொண்டுவந்த பிறகுதான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்சம் இருங்கள். அந்தத் தொகுதி உறுப்பினர் திரு. பெரியவீரன் அது குறித்து கருத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறார்.

திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசாவின் பேரால் நாட்டில் கிராமப் புற மக்கள் அனைவரும் நலம் பெறவேண்டும்; அந்தப் பகுதி வளம் பெற வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தில் தான் புரட்சித் தலைவர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா பெயரில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவினார்கள். பின்னர் முன்பிருந்த தி. மு. க. அரசு காலத்தில் அதை சென்னைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். கொடைக்கானல் பகுதியிலே கிறித்தவப் பெருமக்களும், அந்நிய நாட்டிலிருந்து வருகின்ற அனைத்துத் தரப்பு மக்களும் ஏகபோகமாக, ஐக்கியமாக விளங்கிக் கொண்டிருக்கும் அந்த இடத்திலே அன்னை தெரசா பல்கலைக் கழகம் இருப்பது எங்கள் பகுதிக்கு பெருமகிழ்ச்சியையும். உற்சாகத்தையும் ஏற்படுத்தும். அன்னை தெரசா பல்கலைக் கழகம் எங்கள் பகுதிக்கு மீண்டும் வருகின்ற ஒரு செய்தி கண்டு எங்கள் பகுதி மக்கள் அனை வரும் பூரிப்பு அடைந்துள்ளார்கள். அதனால் அந்தப் பகுதி இன்னும் வளம் பெறும் என்ற ஒரு பெரிய நம்பிக்கையோடு நாங்கள் இருக்கின்றோம். ஆகவே, பல்கலைக் கழகத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் மீண்டும் இங்கே கொண்டு வர நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடுதான் அந்தப் பல்கலைக் கழகத்தைக் கொண்டுவந்தார்கள் என்பதிலே எனக்கு மனமாச்சரியம் இல்லை. 1989—90 ஆம் ஆண்டில் 23 பேர்

கொடைக்கானலிலே படித்திருக்கிறார்கள்: 1990—91 ஆம் ஆண்டில் 36 பேர் படித்திருக்கிறார்கள்; 1991—92 ஆம் ஆண்டில் 52 பேர் இன்றைய தினம் இருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் என்பது மகளிருடைய பிரச்சினையை பற்றி ஆய்வு செய்வதற்காக சிறப்பான முறையிலே அமைக்கப் பட்ட ஒரு பல்கலைக் கழகம் ஆகும். அது ஒரு பெண்கள் கல்லூரி அல்ல. அதைக் கொடைக்கானலிலிருந்து சட்ட விரோதமாக சென்னைக்கு மாற்றி இருக்கின்றார்கள். இன்றைக்கு இருக்கிற அந்தச் சட்டத்தின்படி அது கொடைக் கானலிலேயேதான் இருக்க வேண்டும். சட்டத்தில் திருத்தம் செய்யாமலேயே அதை அங்கே இருந்து இங்கே கொண்டு வந்தார்கள். இங்கே கொண்டுவருவதற்குச் சொல்லப்பட்ட காரணம், குடிநீர் வசதி இல்லை என்பது ஆகும். நல்லவேளை, பல்கலைக் கழகத்தை மட்டும் மாற்றினார்கள்; குடிநீர் வசதி இல்லை என்பதற்காக கொடைக்கானலையே மாற்றாமல் விட்டுவிட்டார்கள். ஆனால், இன்றைய தினம் இங்கே படிக்கிற மாணவிகளுக்குத் தேவையான பாதுகாப்பை செய்து தருவோம் என்று அரசின் சார்பிலே சொல்லி இருக்கின்றோம். இங்கே கல்லூரியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற அந்தப் பல்கலைக் கழகம், கொடைக்கான லுக்குப் போய், மறுபடியும் பல்கலைக் கழகப் பெருமையைப் பெற வேண்டும் என்று அரசு விரும்புகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. ஜி. பழனிசாமி, முடித்து விடலாம். உங்கள் கோரிக்கையை எல்லாம் நிறைய வைத்து விட்டீர்கள். (குறுக்கீடு) நிறையக் கோரிக்கையைவைத்து இருக்கிறீர்கள். (குறுக்கீடு) இன்னும் ஒன்றுதான் பேசவேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், நீங்கள் அந்தப் பல்கலைக் கழகத்தை சென்னையிலேதான் வைக்க வேண்டும் என்பதல்ல; தமிழ் நாட்டிலே, கொடைக் கானலுக்கு கீழே இருக்கிற அடிவாரத்திலேயாவது, அல்லது வேறு எங்கேயாவது ஓர் இடத்தில் வையுங்கள், அந்த இடத்தை மாற்றி வையுங்கள். ஏனென்றால் கொடைக்க கானலுக்கு குழந்தைகள் சென்று படிக்க அங்கே இருக்கக் கூடிய சீதோஷ்ண நிலை நன்றாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பல்கலைக் கழகம். மாண்புமிகு கல்வி அமைச்சர்.





மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகம் குழந்தைகளோ அல்லது வேறு யாரோ படிப்பதற்காக அல்ல ; அதற்கு வேண்டுமானாலும் கல்லூரிகள் ஆரம்பித்துக் கொள்ளலாம் ; அது வேறு விவகாரம். இந்தப் பல்கலைக் கழகம் ஆய்வு செய்வதற்காக, ஒரு சர்வதேச அளவிலே இந்தப் பல்கலைக் கழகம் வர வேண்டும் என்கிற ஆசை யிலேதான் அன்றைய தினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொடைக்கானலைத் தேர்ந்தெடுத்தார்கள். அது, தமிழ்நாட்டிலே ஒரு கல்லூரி போல விளங்க வேண்டு மென்று நாங்கள் விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, இத்தோடு முடித்துக் முடித்து விடலாம் ; (குறுக்கீடு) கொள்ளுங்கள்.

பிற்பகல் 12-55

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரை மீது பேசுவதற்கு அனுமதி தந்த உங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்."

என்று திருவள்ளுவர் கூறி இருக்கிறார். அரசை வாழ்த்த, புகழ, முதலமைச்சரை வாழ்த்த, பாராட்ட பலபேர் இருக்கிறார்கள். வெளியே பொதுமக்கள் மத்தியில் நிலவுகிற அபிப்பிராயங்களை, அரசின் குறைபாடுகள் என்று நாங்கள் கருதுகிற சிலவற்றை சிறிது நேரம் அவகாசம் தந்து ** உரையாற்ற அனுமதிக்க வேண்டுமென்று........(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் ஆரம்பமே தவறு : எதையும் தவறாகவே ஆரம்பிப்பீர்கள் என்பது இப்போது தெரிகிறது. (குறுக்கீடு) இரங்கல் தீர்மானத்தி லேயே அரசியல் பேசுகிறவர்களுடைய நடவடிக்கைகள் இப்படித்தான் இருக்கும் என்பது தெரிய வருகிறது. (குறுக் கீடு) நீங்கள் ஆரம்பிக்கிற பொழுத ** என்று பேசுகிறீர்கள். ஒரே ஒரு உறுப்பினராக இருக்கும் பொழுதும் எவ்வளவோ வாய்ப்புகள் கொடுத்துப் பேச வைக்க வேண்டுமென்று

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உரிய நேரத்தில் உங்களைப் பேச அழைக்கின்ற பொழுதே, அந்த அழைப்பையே நீங்கள் இப்படி உதாசீனப் படுத்துவதைப் போலப் பேசுவது சரியல்ல. ** என்று இருக்கிற வாசகம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முதலில் அறந்தாங்கி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், புரட்சித் தலைவர் இதய தெய்வம் எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அறந்தாங்கியில், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைப்பதற்காக உரிமம் மத்திய அரசால் வழங்கப்பட்டிருந்தது. இப்போது அந்த கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் அறந்தாங்கித் தொகுதியில், அல்லது அறந்தாங்கித் தொகுதியில் நீங்கள் அனுமதிக்க முடியாது என்றால் புதுக்கோட்டை மாவட்டத்தில் எங்காவது ஒரு தொகுதியில் அந்த கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஆரம்பிக்க வேண்டுமென்று நான் இந்த இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் விவசாயப் பெருமக்களிடம் அதற்காகப் பங்கு மூலதனமும் வசூலிக்கப்பட்டு, தனி அதிகாரியும் போடப்பட்டு, ஜீப் வழங்கப்பட்டு, அலுவலகம் தொடங்கப்பட்டு, இவ்வளவும் முடிந்ததற்குப் பின்னால் அந்த ஆலை அங்கே வராமல் போவது நியாயம் அல்ல ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின்போதே அறந்தாங்கியில் அந்த சர்க்கரை ஆலையை ஏன் தொடங்க முடியாது என்பதற்கான விவரமான காரணங்களை இங்கே தெரிவித்து இருக்கிறேன். அதன் பின்னர் ஏதோ அரசியல் உள்நோக்கம் கற்பித்து மாண்புமிகு உறுப்பினர் இதே குற்றச்சாட்டைச் சொல்வது சரியல்ல என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் (மேசையைத்தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே இங்கே விவாதிக்கப்பட்ட ஒரு பொருள் பற்றி திரும்பவும் பேசக்கூடாது என்று பேரவை விதி இருக்கிறது. நீங்கள் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்றால் ஒரே வரியில் ஆலை திரும்பவும் வருவதற்கு வற்புறுத்துகிறேன், கேட்டுக் கொள்கிறேன். மறு பரிசீலனை செய்யுங்கள் என்று வேண்டு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கோள் மட்டும் வைக்கலாமே தவிர, அதை ஒரு விவாதப் பொருளாக ஆக்கக்கூடாது. நீங்கள் பேரவைத் துணைத் தலைவராக இருந்தவர். அந்த விதியையும் நீங்கள் பேரவைத் துணைத் தலைவராக இருந்த போதே அறிந்திருப்பீர்கள், ஏற்கனவே நீங்களே இதே விவாதத்தை அவையில் எழுப்பி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு விரிவான பதிலும் உங்களுக்குத் தந்து விட்டார்கள். அதற்குப் பிறகு அதே பிரச்சினையைப் பேசுவது விதிகளுக்குக் கூடப் புறம்பாக அமையும். எனவே வேறு பிரச்சினையைப் பேசுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னதே எனக்கு தெளிவாகப் புரிந்தது. உங்களுடைய இவ்வளவு நேர ** தேவை இல்லை. என் நேரம் போகிறது. அதனால் சொல்கிறேன் ............ (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிக்குப் புறம்பாகவே இருப்பேன் என்பது போல நீங்கள் முடிவெடுத்துப் பேசுகிறீர்கள் என்பதற்காகச் சொல்ல வந்தேன். ஏனென்றால் விதியைச் சொல்ல வேண்டியது என்னுடைய பொறுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஏற்கனவே பதில் சொல்லி இருக்கிறேன் என்பதாகச் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) அதுகூட அவைக்குறிப்பில் இருக்கலாம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற வார்த்தை அவ்வளவு பொருத்தமானதாக இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அதற்கு வேறு ஒரு ** கொடுக்கிறார். அதற்கு விளக்கம் என்று பொருள் சொல்கிறார். அதுபோன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருந்தால், நல்லமுறையில் பேசி முடிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வார்த்தைகள் மட்டுமல்ல, பேரவைத் தலைவருடைய விளக்கத்தையே விமர்சிப்பது என்பதே கூட மரபுக்கு உகந்த காரியம் அல்ல. இருந்தாலும் விமர்சிக்கிறார். ஆனால் அந்த ** என்ற வார்த்தை மட்டும் நீக்கப்படுகிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, அது சான்ஸ்கிரிட், தமிழில் விளக்கம். அவ்வளவுதான் அது ஒன்றும் தப்பான வார்த்தை அல்ல. எனவே (குறுக்கீடு).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : அப்படியானால், மாண்புமிகு உறுப்பினர், இந்தி, சான்ஸ்கிரிட் போன்ற வார்த்தைகளை ஆதரிக்கிறாரா ?

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே குறிப்பிட வந்தது, மீண்டும் இந்த அரசு அதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான். ஏற்கனவே அங்கே சர்க்கரை ஆலை அமைப்பதற்கான தண்ணீர் வசதி எல்லாம் இருக்கிறது என்கிற அடிப்படையிலேதான் பரிந்துரை செய்யப்பட்டது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே விவாதித்து, பதில் அளித்த விவரத்தை மேற்கொண்டு அதிகமாகப் பேசவேண்டாம் என்று சொல்கிறேன்- வேண்டுகோள் வைப்பதோடு நீங்கள் முடிக்கலாம். தண்ணீர் இருக்கிறதா. இல்லையா என்பது போன்றவை பற்றி எல்லாம் நீங்கள் இங்கே விவாதம் வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு விரிவாகப் பதில் அளித்திருக்கிறார்கள். அப்படி விவாதிக்கப்பட்ட பொருள் பற்றிய கருத்துக்களை மீண்டும் தெரிவிப்பது இங்கே முறையல்ல என்பதைத் திரும்பவும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு). பேசுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : விவாதிக்கப்பட்ட பொருள் என்றால், டிஸ்பியூட்டட் பிரச்சினைகளாக இருந்தால் பேசக்கூடாது. நான் என்ன சொல்கிறேன் என்றால், மறுபரிசீலனை செய்வதற்கான அடிப்படையைச் சொல்கிறேன். எனவே, அரசாங்கம்........

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலையைத் தொடங்குவது பற்றி, ஒரு ஆய்வுக் குழுவே அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டி பரிசீலனை செய்து, அந்த புரப்போஸ்டு சர்க்கரை ஆலைக்குத் தேவையான அளவு தண்ணீர் அங்கே இல்லை என்றும், அந்த சர்க்கரை ஆலையின் கெப்பாசிடி என்னவென்று நிர்ணயிக்கும்போது, தேவையான கரும்பை சுற்றுப்புறங்களில் உற்பத்தி செய்ய முடியாது என்ற காரணங்களினாலும் அதாவது டெக்னிக்கல் காரணங்களுக்காகத்தான், அங்கே சர்க்கரை ஆலை தொடங்குவது சாத்தியமானது அல்ல என்று அதற்காக அமைக்கப்பட்ட ஒரு கமிட்டி கொடுத்த தீர்ப்பைத்தான் இங்கே தெரிவித்தேன்.



திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே இருக்கிற குடி தண்ணீர் வசதி, கரும்பு போன்றவை எல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் அதிகாரிகள் சென்று பார்த்ததற்குப் பின்னாலே தான், லைசென்சுக்கு அப்ளை செய்கிறோம். மனு செய்கிறோம். பிறகு டெல்லியிலேயிருந்து ஒரு உயர்மட்டக் குழு வந்து அந்தப் பகுதியை எல்லாம் சுற்றிப் பார்த்து, அதற்குப் பின்னாலே அங்கே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க முடியும் என்று அந்த டெல்லிக் குழுவே பரிந்துரை செய்ததற்குப் பின்னாலேதான், டெல்லியிலே உரிமம் கிடைத்தது. ஆகவே, இவ்வளவுக்கு எல்லாம் பின்னாலே இன்னொரு ஆய்வு எதற்கு?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின்போதே, இந்த விவரங்களை எல்லாம், இந்த மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து, அதற்கான மிக நீண்ட, விரிவான பதிலை, எல்லா விவரங்களும் அடங்கிய பதிலை, கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலே தான் தெரிவித்து இருக்கிறேன். அதே பதிலைத் தான் இன்றைக்கும் சொல்ல முடியும். எனவே, கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின் போது நான் சொன்ன பதிலை எடுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் இந்த அரசை நான் வற்புறுத்துகிறேன். பரிசீலனை செய்ய வேண்டும். மறு பரிசீலனை செய்ய வேண்டும். அந்த சர்க்கரை ஆலையை அந்த மாவட்டத்திலே அமைக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

இந்த ஆளுநர் உரையில் பல்வேறு சாதனைகளாக சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஒன்றிரண்டில், நேரு ஸ்டேடியம் ஒன்று. 40 கோடியிலே கட்டப்பட்ட அந்த ஸ்டேடியத்தை. டெண்டர் விட்டுக் கட்டியிருக்கலாம். ஆனால், அவசரமாக முடிக்கவேண்டும் என்பதற்காக, டெண்டர் இல்லாமலேயே கட்டினீர்கள். பரவாயில்லை. ஆனால், அதிலேயே பணியாற்றிய தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், அரசு நிர்ணயித்த சம்பளம் தரப்படவில்லை, ஏற்கனவே பாக்கி இருக்கிறது என்று சொல்லி, குரல் கொடுத்திருக்கிறார்கள். இவற்றை அரசு பரிவோடு கவனித்து அவர்களுக்கு உரிய....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரு விளையாட்டு அரங்கம் லார்சன் அன்ட் டுப்ரோ என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அந்த வேலைகள் எல்லாம் முடிக்கப்பட்டு இருக்கிற தருவாயில, அதிலே வேலை செய்கிற தொழிலாளர்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு, எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களைப் பாரத்து புரட்சித் தலைவி அவாகளுடைய சார்பில வேட்டி சேலைகள் எல்லாம் அவர்களுக்கு வழங்கபபட்டு அவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கிற நிலைமையில், அவர்கள் இவரிடத்திலே முறையிட்டாரகளா? அப்படி என்றால் எப்போது முறையிட்டார்கள், யார் முறையிட்டாரகள் என்பதைப் பற்றித் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

பிற்பகல் 1.05.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் ஏதாவது ஒரு கடிதத்தை, ஏதோ ஒரு காகிதத்தை ஆதாரமாக வைத்துப் பேசுவதாக இருந்தால், அதை என்னிடம் முன் கூட்டியே கொடுத்துவிட்டு, என்னுடைய ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும். என்னுடைய ஒப்புதலைப் பெறாமல், ஏதோ ஒரு காகிதத்தை வைத்துக் கொண்டு,** என்று சொல்லிக் கொண்டிருந்தால், அது எப்படி நியாயமாகும்? விதிகளின்படி, இப்படிப்பட்ட, ஏதேனும் சான்றுகளை ஆதாரமாக நீங்கள் அவையில் காட்டுவதாக இருந்தால், என்னுடைய அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். என்னிடத்திலே அதைக் காண்பித்து, நீங்கள் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அப்படிப் பெறவில்லையே!** இந்த மாதிரி ஆதாரத்தை என்னிடத்திலே கொடுத்து விட்டுப் பேசினால்தான் அது குறிப்பிலே ஏறும். எனவே இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை என்னிடம்கொடுத்து, நீங்கள் அனுமதி பெறவில்லையே! நீங்கள் யாரோ ஒருவர் எழுதினார் என்றால் (குறுக்கீடு) அதை என்னிடம் முன் கூட்டியே கொடுத்திருக்க வேண்டும். என்னிடம் கொடுத்து அனுமதி பெற்று, நீங்கள் படித்திருக்கலாம்.**

இப்போது நான் உறுப்பினரைக் கேட்டுக் கொள்வது, அமைச்சர் கேட்டுக் கொள்வதை விட நீங்கள் கையில் ஒரு காகிதத்தை வைத்துக் கொண்டு, அதை ஆதாரம் என்று என்னிடம் காண்பிக்காமல் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது.**

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**மாண்புமிகு உறுப்பினர் சொன்ன எல்லாவற்றையும் நீக்கிவிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

பிற்பகல் 1.10.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து கவனிக்க வேண்டும். என்னிடம் நீங்கள் கொடுக்காமல் ஏதோ ஒரு பேப்பரைக் கையில் வைத்துக்கொண்டு அது ஆதாரம் என்ற வகையில் அதிலே இருக்கிற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பேச நீங்கள் அரம்பத்திலிருந்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேசியது வரை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான்பேசிய பத்து நிமிடப் பேச்சில் 'மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' என்பது மட்டும் அனேகமாக இருக்கும் என்று நினைக்கிறேன். பாக்கியெல்லாம் ஒரளவுக்கு நீக்கி விட்டீர்கள், பரவாயில்லை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இதே கருத்தை நீங்கள் வெளியிலே பத்திரிகையிலேயும் சொல்லி இருக்கிறீர்கள். "நான் எப்போது அவையிலே எழுந்தாலும் 'பேரவைத் தலைவர் அவர்களே,' என்ற சொற்றொடரைத் தவிர எதுவும் பேசுவது இல்லை. பேச

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அனுமதிப்பது இல்லை. அப்படி நான் பேசிய அனைத்தையும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிடுவார்கள்'' என்று வெளியிலேயும் பேசி இருக்கிறீர்கள், இப்போதும் நீங்கள் சொல்லுகிறீர்கள். எனவே நான் இதற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்களைப் பேச அனுமதிப்பது என்பது நீங்கள் இந்த மன்றத்தின் உறுப்பினர் என்ற வகையில் ஒரு உறுப்பினருக்குரிய உரிமையைக் கொடுத்துப் பேச அனுமதிக்கிறோம். மற்றபடி பேரவையைப் பொறுத்த மட்டில் கட்சிகள் என்று அனுமதிப்பதாக இருந்தால் இங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சி, தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி தவிர மற்ற கட்சிகளுக்கு, 'கட்சிகள்' என்ற வகையிலே அனுமதிப்பதற்கு நம்முடைய அவையிலே விதியிலே இடம் இல்லை. இருந்தாலும் ஒரு உறுப்பினர் என்ற முறையில் உங்களுக்கு அனுமதி அளித்து பல்வேறு சந்தர்ப்பங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. இரங்கல் தீர்மானத்தில் பேசுவதற்கு உங்களுக்கு கொடுக்கிறவாய்ப்பைக்கூட அரசியல் ஆக்குகின்ற முயற்சியில் நீங்கள் ஈடுபட்டு இந்த அவையினுடைய வரலாற்றில், இரங்கல் தீர்மானத்தில் ஒருவர் பேசியதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்குகிற துர்ப்பாக்கிய நிலைமை எந்தப் பேரவைத் தலைவருக்கும் வந்தது இல்லை. நீங்கள் பேசியதைத்தான் நான் ஒன்றுக்கு இரண்டு முறை இரங்கல் தீர்மானத்தில் பேசியதைக்கூட அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் அனைத்து மரபுகளையும் மீறி சாதாரண நாகரிகம் உள்ளவர்கள் யாரும் இரங்கல் தீர்மானத்தில் அரசியல் பேசக் கூடாது என்ற அந்த வரம்பையும் மீறி நீங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் நீக்குகிறேன் என்று சொல்லுகிற காரணத்தினாலே, அந்த அடிப்படை நாகரிகம்கூட இல்லாமல் இங்கே நீங்கள் பேசுவதை நீக்காமல் வேறு என்ன செய்ய முடியும்?

திரு. எஸ். திருநாவுக்கரசு: சரி, சரி, உங்கள் இஷ்டம்போல் செய்து கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவரையே அவ்வப்போது நீங்கள் சாடுவது என்பது எந்த வகையிலேயும் விதிகளுக்கு உட்பட்டது அல்ல. (குறுக்கீடு) நீங்கள் பேசுவதாக இருந்தால் விதிகளுக்கு உட்பட்டு, மரபுகளுக்கு உட்பட்டுப் பேசலாம். அல்லது உங்களுக்குப் பேசுவதற்கு விருப்பம் இல்லை. இங்கே ஏதாவது விவகாரத்தை உருவாக்கவேண்டும், அது மட்டும் எனக்குத் திருப்தி அளிக்கும் என்ற வகையிலே நீங்கள் பேசினால் அதை அனுமதிக்க இந்தப் பேரவைத் தலைவர் தயாராக இல்லை. (குறுக்கீடு.)



திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மேலே உயரமான இடத்தில் உட்கார்ந்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்வது எல்லாம் பதிவு ஆகும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: தனிப்பட்ட முறையிலே தலைவரைப் பற்றி சொல்லுகிறார். அது என்ன நியாயம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் பற்றி எதுவும் திருநாவுக்கரசு பேசவேண்டியதில்லை, மற்றபடி ஏதாவது பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: சரி, விஷயத்திற்கு வருவோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வந்த தகவலை உங்களுக்கு அனுப்புகிறேன். கட்டிடத் தொழிலாளர் கொடுத்திருக்கிற மனு, சுப்ரீம் கோர்ட்டினுடைய கடிதம் இரண்டையும் உங்களுக்குக் கொடுத்து அனுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுவதற்கு முன்பே அதைச் செய்திருக்க வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: இப்போது வாங்கிக் கொள்ள மாட்டீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வாங்கிக்கொள்ளலாம். கொடுக்கிறேன் என்று கூடச் சொல்லி, பிறகு கொடுக்கலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: இப்போது வாங்கிக் கொள்ளலாம். தப்பு ஒன்றும் இல்லை. வாங்கிக் கொள்ளுங்கள். ஆக அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் போராளிகள், விடுதலைப் புலிகள் ஆகியோரைப் பற்றி அவர்கள் நடமாட்டம் தடுக்கப்பட்டது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதில் நான் அதிகமாகச் சொல்ல ஒன்றும் இல்லை. ஒரே ஒரு கருத்து, அதை மட்டும் சொல்லிவிடுகிறேன். கிட்டு வந்த கப்பல் குறித்து துவக்கத்திலே உரையாற்றிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் காந்திராஜன் அவர்கள் பேசுகிறபோது அந்தக் கப்பல் சிங்கப்பூரிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் போனது, சர்வதேச எல்லையில் பிடிபட்டது, நம்முடைய எல்லைக்குள் வரவில்லை என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் பேசுகிறபோது அது தமிழ்நாட்டின்

எல்லைக்குள் வந்தது என்று சொன்னார். தமிழ்நாட்டு எல்லைக்குள்ளே இட்டு வந்து, கப்பல் வந்து, அதைக் கப்பல் படையினர் பிடித்திருந்தால் அது நியாயம். இங்கே அவர்கள் நடமாட்டம் தடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்படவேண்டும் என்று சொல்லலாம். ஆனால் அதே நேரத்திலே இன்டர்நேஷனல் எல்லையிலே, சர்வதேச எல்லையிலே பிடிபட்டிருந்தால் அல்லது பிடித்திருந்தால் அது தவறு. சர்வதேச சட்டத்திற்கே தவறானது. இன்றைக்கு பல பேர் நெடுமாறன் போன்றவர்கள் 'தடா' சட்டத்திலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அதைத்தான் சொன்னார்கள். இன்டர்நேஷனல் எல்லையிலே பிடிபட்டது, இங்கேயிருக்கின்ற கப்பற்படை செய்தது தவறு என்று அவர்கள் சுட்டிக்காட்டியதற்குப் பின்னாலே அவர்கள் எல்லாம் 'தடா' சட்டத்திலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1.15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலை புலிகளின் கப்பல் எம். வி. அகத் பற்றி இங்கே சரியான தகவலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

15-1-1993 அன்று இந்தியக் கடலோரக் காவற் படையைச் சேர்ந்த 'விவேக்' என்ற கப்பல், எம்.வி. அகத் என்ற கப்பல் அடிக்கடி தான் செல்லும் திசையை மாற்றி சென்று கொண்டிருந்ததை சந்தேகத்தின் பேரில் கவனித்தது. அச்சமயம் அது இந்தியக் கடல் எல்லையை நோக்கி வந்து கொண்டிருந்தது.

தகவல் அறிந்த வரையில் அது விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான 400 டன் எடையுள்ள கப்பல் என்றும், அதில் ஏராளமான ஆயுதங்களும், வெடிமருந்துப் பொருட்களும் இருக்கின்றன என்றும் தெரிய வந்தது.

இத்தகவலின் பேரில் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த 'கிர்பன்' என்ற கப்பல் சந்தேகத்திற்குரிய 'எம்.வி. அகத்' கப்பலைக் கண்காணிக்க அனுப்பப்பட்டது.

16-1-1993 அன்று [illegible] விடுதலைப் புலிகளின் கப்பல் 'எம்.வி.அகத்' சென்னை கடற்கரையிலிருந்து 13 நாட்டிக்கல் மைல் தொலைவில் இந்தியக் கடல் எல்லைக்குள்



இருந்தபோது கப்பலின் மாலுமிகளும், விடுதலைப்புலி போராளிகளும் சரண் அடைவதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் கப்பலில் இருந்த சிலர் கப்பலில் உள்ள பொருட்களை கடலுக்குள் எறிந்துவிட்டு, கப்பலுக்குத் தீ வைத்துவிட்டு கடலில் குதித்துவிட்டார்கள்.

கடலில் குதித்த 9 நபர்களை இந்தியக் கடற்படையினர் காப்பாற்றினர். கப்பலில் ஏராளமான வெடி மருந்துப் பொருட்கள் இருந்ததால் கப்பல் தீப்பிடித்து எரிவதிலிருந்தும், அதனை நீரில் மூழ்குவதில் இருந்தும் காப்பாற்ற இயலவில்லை. எம்.வி. அகத கப்பலில் இருந்த அடையாளம் தெரியாத அளவிற்கு கருகிய 4 சடலங்களை, இந்தியக் கடற்படையினர் கண்டெடுத்தனர். மேற்கண்ட கப்பலில் இருந்து காப்பாற்றப்பட்ட 9 நபர்களில் எல்.டி.டி.இ யைச் சேர்ந்த கிட்டு இல்லை.

கப்பலின் தலைவன் ஜெயசந்திரன் என்பவர் அக்கப்பலில் ஏராளமான வெடிமருந்துப பொருட்களும், ஆயுதங்களும், கையெறி குண்டுகளும் மற்றும் 25,000 லிட்டர் பெட்ரோலும் இருந்ததாகக் கூறினார்.

எம்.வி. அகத் என்ற விடுதலைப் புலிகளின் கப்பலில் இருந்து காப்பற்றி கைது செய்யப்பட்ட எல்.டி.டி.இ. போராளிகளின் பெயர்கள் பின்வருமாறு

1. ஜெயச்சந்திரன்
2. கே. நாய்கன்
3. எஸ். சிவராஜன்
4. இந்திரலிங்கம்
5. எஸ். சுபாஷ்சந்திரன்
6. பாலகிருஷ்ணன்
7. மோகன்
8. சர்குணலிங்கம் (காயமுற்றவர்,
9. கிருஷ்ணமூர்த்தி (காயமுற்றவர்)

கப்பலுக்கு வைக்கப்பட்ட தீயினால் மாண்டுபோன ஒரு போராளி 'அசோக் பிரபு' என அடையாளம் தெரிய வந்தது. அவ்வாறு தீ வைக்கப்பட்ட எம்.வி. அகத் கப்பல் வங்கக் கடலில் மூழ்கும் முன்பு கிட்டு தற்கொலை செய்து கொண்டார் என்ற தகவல் கடற்படையினரால் யூகிக்கப்பட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட 9 நபர்களும் இந்தியக் கடற்படையினரால் விசாகப்பட்டினத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

25-1-1993 அன்று மத்தியப் புலனாய்வுத் துறையின் தனி விசாரணைப் பிரிவு (ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டீம் ஆஃப் சி.பி.ஐ.) இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

தனி விசாரணைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள், விசாகப்பட்டினம் துறைமுகக் காவல்படையினர் இச்சம்பவம் குறித்துப் பதிவு செய்த வழக்கினை தனி விசாரணைப் பிரிவிற்கு மாற்றியுள்ளார்கள் என்றும், தனி விசாரணைப் பிரிவு இது குறித்து புலன் விசாரணை மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்கள்.

இங்கே ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் காந்திராஜன் அவர்கள் தெரிவித்த கருத்துக்களைப் பற்றி உறுப்பினர் அவர்கள் பேசினார்கள்.

தமிழக அரசோ, தமிழகக் காவல் துறையினரோ இந்த நடவடிக்கைகளில் சம்பந்தப்படவில்லை. இது முழுக்க, முழுக்க இந்தியக் கடற்படை மற்றும் மத்திய அரசினரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகும்.

எனவே மத்திய அரசும், மத்திய கப்பற்படையும், மத்திய கோஸ்ட் கார்ட் பிரிவும் கொடுத்த தகவல்கள்தான் எங்களுக்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்துதான் சரியான கருத்து. ஏனென்றால் இந்த எல்லைக்குள்ளே தான் அவர்கள் பிடிபட்டிருக்கிறார்கள். அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் அறிக்கையும் விளக்குகிறது. ஆனால் காந்திராஜன் அவர்கள் சொன்னபோது இந்த எல்லைக்குள்ளே வரவில்லை என்றார். அதற்காக அறிக்கை கேட்டேன். அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ச. காந்திராஜன்.

<u>திரு. ச. காந்திராஜன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இதுபற்றி பேசியிருக்கின்றபோது, அது இந்திய எல்லைக்குள் என்றுதான் நான் சொல்லியிருக்



கிறேன். என் பேச்சினுடைய குறிப்பிலே அது தெளிவாக இருக்கிறது. நீங்கள் அந்தக் குறிப்பை தயவு செய்து பார்க்க வேண்டும்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> தமிழ்நாட்டு எல்லைக்குள்ளே வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேசிய அவர், குறிப்பிலே இப்படித்தான் இருக்கிறது, நானும் அப்படித்தான் பேசியிருக்கிறேன் என்கிறபோது அதற்கு மேற்கொண்டு வேறு விதமான விளக்கத்தை நீங்கள் கூறிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

<u>திரு. ச. காந்திராஜன் :</u> தலைவர் அவர்களே, யாழ்ப்பாணத்திற்குப் போகிற வழியில் இந்தியக் கடற்படை எல்லைக்குள்தான் என்று கூறியுள்ளேன். சர்வதேச எல்லை என்று நான் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர் சிங்கப்பூரிலிருந்து யாழ்ப்பாணம் போகும் வழியில் என்று சொன்னால், இந்திய எல்லையிலே வரவில்லை என்று எப்படி அர்த்தமாகும்?

<u>திரு. ச. காந்திராஜன் :</u> தலைவர் அவர்களே, தெளிவாக என்னுடைய பேச்சிலே பதிவாகியிருக்கிறது.

பிற்பகல் 1-20

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> சரி, ஒன்றும் பிரச்சனை இல்லை. ஆக, அதற்கடுத்து தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருப்பவர்களுடைய எண்ணிக்கை, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலங்களில் பதிவு செய்து இருப்பவர்களுடைய எண்ணிக்கை 1990-91 ஆம் ஆண்டின் கணக்கின்படி ஏறக்குறைய 28 இலட்சம் பேர், ஏறக்குறைய 4 லட்சம் பேர் ப்ரொபஷனல் அண்ட் டெக்னிகல் கோர்ஸ் முடித்தவர்கள். சுமார் 4 இலட்சம் பேர். 1990-91-ஆம் ஆண்டு கணக்கின்படி ஏறக்குறைய தமிழ்நாட்டில் 35 இலட்சம் பேர் படித்து விட்டு வேலை பார்ப்பதற்குத் தயாராக இருக்கிற இளைஞர்கள், வேலைவாய்ப்பு இல்லாமல் தமிழ்நாட்டில் பதிவு செய்து இருக்கிறார்கள். ஆண்டுதோறும் சுமார் 8 லிருந்து 10 இலட்சம் பேர் பதிவு செய்து கொண்டு வெளியே வருகிறார்கள். கல்லூரிகள், பள்ளிகளிலிருந்து வெளியே வருகிறார்கள். ஆகவே இன்றைக்கு சுமார் 40 இலட்சம் இளைஞர்கள் தமிழகத்தில் வேலை வாய்ப்பு இல்லாமல் வாடுகிறார்கள். ஆளுநர் உரையில், அந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தருவது பற்றி எந்தவிதமான குறிப்புகளும் இல்லாதது வருத்தத்திற்குரியது.

[1993 பிப்ரவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்து இருப்பவர்களுடைய பட்டியல்தான் அதுவே தவிர பட்டியலில் இருக்கிற அத்தனைபேரும் வேலை இல்லாதவர்கள் என்று அர்த்தம் இல்லை. அவர்கள் அரசாங்க வேலை அல்லது ஏதாவது ஒரு நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பதிவு செய்து தங்களுக்கு வேறு வேலைவாய்ப்புகள் தனியார் துறைகளில் கிடைத்தாலும் தங்களுடைய பதிவை ரத்து செய்யாமல் இருக்கிற காரணத்தால்தான் 35 லட்சம் பேர் என்று இருக்கிறதே தவிர, அத்தனை பேரும் வேலை இல்லாதவர்கள் என்று அர்த்தம் இல்லை என்பதை இங்கே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல் 35 லட்சம் பேரில் உண்மையிலேயே எத்தனைபேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் அல்லது பதிவு செய்துவிட்டு பாக்கி எத்தனை லட்சம் பேர் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்கிற விவரத்தை அவர் சொல்ல வேண்டும். எனவே, 35 லட்சம் பேரில் 34 லட்சம் பேர் வேலையில் இருப்பவர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தனியார் அலுவலகங்களில் வேலை கிடைத்தவர்கள் யாரும் வந்து தங்கள் பதிவை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்பதில்லை. கேட்டால் அந்தப் புள்ளிவிவரத்தைத் தர இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அப்படி என்றால் தமிழ்நாட்டில் இப்போது வேலைவாய்ப்பு இல்லை என்ற பிரச்சினையே இல்லை. ஏன் என்றால் எல்லோரும் சும்மா தான் பதிவு செய்து கொண்டு அத்தனை பேரும் இருக்கிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் சொன்ன பதிலை நீங்கள் திசை திருப்பக்கூடாது. அதில் பலர் என்று சொல்லியிருக்கிறார்கள்; ஒருவரும் இல்லையென்று அவர் சொல்லவில்லை. மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனவர் துறை அமைச்சர்.



1993 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் மத்திய அரசு எடுத்த புள்ளி விவரத்தின்படி இந்தியாவைப் பொறுத்தமட்டில் 1 கோடியே 70 லட்சம் பேர் வேலைவாய்ப்புக்காகப் பதிவு செய்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 20 லட்சம் பேர்தான் பதிவு செய்து காத்துக்கொண்டிருக்கிறார்கள், உறுப்பினர் சொல்வது போல் 35 லட்சம் பேர் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. நீங்கள்—அரசாங்கம் கொடுத்திருக்கிற ஸ்டேட்டிஸ்டிக்ஸ் ஹேண்ட் புக்கிலிருந்து, 1990—91-ஆம் ஆண்டில் நீங்கள் கொடுத்த புள்ளி விவரத்தைத்தான் நான் சொல்கிறேன், வேண்டுமென்றால், அந்த புக்கைப் பார்த்துக்கொள்ளுங்கள். ஆக நீங்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்தை வைத்துத்தான் நான் சொல்கிறேன்.

இன்னும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். அனைத்திந்திய அளவில் சொன்னார்கள், உண்மைதான், அதிலே, தமிழ்நாட்டிலே வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அதிகமான பேர் 37 லட்சம் பேர் பதிவு செய்திருக்கிறார்கள் என்று மத்திய அமைச்சர் பாராளுமன்றத்தில் கேள்விக்கு பதில் சொல்லும் போது சொன்னார். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிகமாகப் பதிவு செய்து, வேலையில்லாமல் இருப்பவர்கள் இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரமும் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற படித்தவர்கள்தான் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தங்களைப் பதிவு செய்து கொண்டு நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரும், உறுப்பினர்களும் என்ன சொல்லுகிறார்கள், தமிழ்நாட்டில்தான் படித்தவர்கள் அதிகம் என்று சொல்ல விரும்புகிறார்கள். அதைவிட கேரளாவில் படித்தவர்கள் அதிகம். அதுபோல் இன்னும் மகாராஷ்டிராவில் படித்தவர்கள் அதிகம். —ஆகவே படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்கள் இங்கேதான் அதிகம். அந்தப்

புள்ளிவிவரத்தைத் தான் பாராளுமன்றத்தில் அமைச்சர் சொன்னார், அந்தப் புள்ளி விவரத்தைத்தான் நான் சொன்னேன். அதிலே அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சி குறித்து முதலமைச்சர் மேலவையிலேயே பேசி சுமார் ரூபாய் 20 ஆயிரம் கோடிக்கு உடனடியாக தமிழ்நாட்டில் தொழில் முதலீடு வர இருக்கிறது. இனிமேல் அனேகமாக ஒரு தொழில் புரட்சியே தமிழ்நாட்டில் நடக்கும் என்று நம்பலாம். நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வது, இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மத்திய அரசுக்கு எவ்வளவு தொழிலுக்கு உரிமம் கேட்டு கடிதங்கள் அனுப்பியிருக்கிறீர்கள்? மத்திய அரசு எவ்வளவு லெட்டர் ஆப் இன்டென்டு கொடுத்திருக்கிறது? இந்த 2 ஆண்டுகளில் எத்தனை லைசன்ஸுக்கு மத்திய அரசு உரிமம் கொடுத்திருக்கிறது? எத்தனை மத்திய அரசினுடைய நிலுவையில் தேங்கியிருக்கிறது என்கிற விவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். 20 கோடியிலே, 30 கோடியிலே தொழிற்சாலைகள் எல்லாம் வருகிறது என்று சொல்வது கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. ஆனால் பத்திரிகையில் இருந்து பிரயோசனம் இல்லை. நடைமுறையில் அது வரவேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளில் இந்த அரசு எந்த வகையில் ஈடுபட்டிருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1.25

அதுபோல் இன்னொன்று, அரிசி விலை. அரிசி விலையை ரேஷன் கடைகளிலே ஒரு கிலோவுக்கு 0·75 பைசா ஏற்றியிருப்பதை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும். அதை கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அது நல்லது. அவர்கள் தொகுதியிலே போகிறபோது, ஏனென்றால் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நிறைய இருக்கிறார்கள். தொகுதியிலே போகிறபோது அங்கே போய்...... (குறுக்கீடு) ஆகவே, தொகுதியிலே போகிறபோது என்ன, அரிசி விலையை கிலோவுக்கு 0.75 பைசா ஏற்றி விட்டீர்களே என்று கேட்டால் அதற்கு.... (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே ஒரு பொது அமைதியை நீங்கள் நிலைநாட்டிக் கொடுத்தால் பேசுவதற்கு நன்றாக இருக்கும். ஆகவே....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. க. முத்துசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்காமல் இருந்தால் நன்றாக இருக்கும்.



<u>திரு. எஸ். திருநாவுக்கரசு</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதியிலே போகிறபோது, பொது மக்கள் கேட்கிறபோது, ஆந்திராவைப் பார்; கர்நாடகத்தைப் பார்; அஸ்ஸாமைப் பார்; காஷ்மீரைப் பார் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியிலே விளக்கம் சொல்ல முடியாது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய காலத்திலே 12 ஆண்டுக்காலம் அரிசி விலையை உயர்த்தாமல் இருந்தார்கள் என்று சொன்னால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட என்ன சொல்கிறார்கள், சரிதான். அப்போது மானியம் குறைவாக அரசாங்கம் கொடுக்கவேண்டி வந்தது. இப்போது 350 கோடி ரூபாயை எட்டி விட்டது என்று நம்முடைய உணவுத்துறை அமைச்சர் சொல்கிறார். நல்ல நிர்வாகி. **

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: இது தவறான கருத்து. இது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. இதேமாதிரி முன்னர் ஒருமுறை நீங்கள் பேசி அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். திரும்பவும் நீங்கள் இதே முறையில் பேசுவது என்பது, இப்போது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சொன்னது மாதிரி பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கிற வகையிலேதான் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, அவர் ஏதோ சபாநாயகரைவிட, சட்டமன்ற உறுப்பினர்களை விட, அமைச்சர்களைவிட பெரிய அறிவாளி போலவும், தைரியம் உள்ளவர் போலவும்....... (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பதைப்போலத்தான் உங்களுடைய நடவடிக்கைகள் ஆரம்பத்திலேயிருந்து இருக்கிறது. (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும். உட்காருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அமைச்சர்கள் மிகவும் திறமைசாலிகள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இலாக்காக்களை மிகவும் திறம்பட, அவர்கள் நிர்வகித்து வருகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். அவர்கள் திறமையைப் பாராட்டி, அவர்கள் மீது முழு நம்பிக்கை எனக்கு இருப்பதால் தான் அந்தந்த இலாக்காக்களை அவர்களுக்குக் கொடுத்து

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இருக்கிறேன். எனவே, அமைச்சர்களின் செயல்பாட்டை நானே பல முறை பாராட்டி இருக்கின்றபோது ** என்பது அபத்தமான ஒரு சொல் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி விலையை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏறக்குறைய 12 ஆண்டுகாலம் உயர்த்தாமல் பார்த்துக் கொண்டார்கள் என்று சொன்னால் ஏழையெளிய மக்கள், அரிசி வாங்கிச் சாப்பிடுகிற மக்கள், ஏறக்குறைய ஒரு கோடிக்குமேல் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்கிற காரணத்தினாலேதான். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே மானியம் குறைவுதான் ; உண்மைதான். இப்போது அதிகம்தான். அதுவும் உண்மைதான். ஆனால், அப்போது அரசாங்கத்தினுடைய வருமானம் எவ்வளவு? பட்ஜெட் எவ்வளவு ? சேல்ஸ் டாக்ஸ் மூலம் பொது மக்கள் கொடுத்த வரி எவ்வளவு ? 1977-78-லே ஏறக்குறைய ஆயிரம் கோடி என்றால் இன்றைக்கு 10 ஆயிரம் கோடி. ஆக, அரசாங்கத்தினுடைய வருமானம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்துக்கு எவ்வளவு வருமானம் வருகிறது ? என்ன செலவு செய்யவேண்டுமென்பது வருட ஆரம்பத்திலேயே நிதிநிலை அறிக்கையை இங்கே வைத்து விவாதித்து முடிவு செய்து அப்படித்தான் செலவு செய்து கொண்டு வருகிறோம். கையிலே பணத்தை வைத்துக் கொண்டு இருப்பதல்ல. ஆகவே 5 ஆயிரம் கோடி வருமானம் வந்தால் அதற்கு ஏற்ற செலவிற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். கையிலே எந்தப் பணமும் இல்லாத காரணத்தினாலே தான் ஒரு பெருந்தொகையை ஈடுசெய்யமுடியாது என்ற நிலையிலேதான் இன்றைக்கு விலையை ஏற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதே தவிர, கையிலே பணத்தை வைத்துக் கொண்டல்ல.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக, மாநில அரசு சொல்கிற காரணம் மத்திய அரசு அரிசி விலையை ஏற்றியிருக்கிறது என்கிற காரணம். மத்திய அரசு அரிசியையோ, கோதுமையையோ ஆண்டுதோறும் விலையை ஏற்றத்தான் செய்வார்கள். ஏன் ஏற்றுகிறார்கள் என்று சொன்னால் விவசாயிகள் நெல்லை, கரும்பை—கரும்புக்கு தமிழ்நாடு அரசு விலை நிர்ணயம் செய்கிறது. கோதுமை போன்றவற்றுக்கு மத்திய அரசு விலை நிர்ணயம் செய்கிறது. ஆண்டுதோறும் உர

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



விலை ஏறுகிறது. பூச்சி மருந்து விலை ஏறுகிறது ; உற்பத்தி செலவு ஏறுகிறது. விவசாயிகளுக்கு நன்மை செய்ய ஆண்டுதோறும் 40 ரூபாய், 50 ரூபாய் விவசாயிகளின் நலன் கருதி மத்திய அரசு ஏற்றும். அப்பொழுதெல்லாம் மாநில அரசு என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால், அந்த மாநில அரசு அந்த விலையேற்றத்தை எந்த நோக்கத்திலே பார்க்கிறது என்றுதான் பார்க்க வேண்டும். சில மாநிலங்களிலே அவற்றையெல்லாம் ஒரு சோஷியல் வெல்ஃபேர் ஸ்கீம் என்ற அடிப்படையிலே ஏற்றுக் கொள்ளாமல் மத்திய அரசு என்ன விலை நிர்ணயிக்கிறதோ அதே விலையைச் சில மாநிலங்களிலே நிர்ணயிக்கிறார்கள். சில மாநிலங்களிலே சப்சிடைஸ் செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே அந்தப் பழக்கம் தொடர்ந்து வருகிறது. ஆக, மத்திய அரசு விலையை ஏற்றாமலே இருந்தால் விவசாயிகள் பாதிக்கப் படுவார்கள். அப்படி ஏற்றுகிற.....

பிற்பகல் 1-30

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் விவசாயிகளுக்குக் கொடுக்கும் கொள்முதல் விலையை ஏற்றுவதில் எங்களுக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை, ஆட்சேபனையும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் மத்திய அரசாங்கம் என்ன விலை நிர்ணயிக்கிறதோ, அதற்குமேல் 35 ரூபாய் இந்த மாநில அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. அரிசியைப் பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் வழங்க வேண்டுமென்றுதான் இந்த அரசு ஆசைப் படுகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆண்ட 11 ஆண்டு காலத்தில் மத்திய அரசாங்கம் ஏழு முறை அரிசி விலையை உயர்த்தியது. ஆனால் அந்த 7 முறை உயர்வையும் கூட்டினால் அது 89 பைசா மட்டுமே என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இரண்டு முறை மத்திய அரசாங்கம் அரிசி விலையை ஏற்றி யிருக்கிறது. இந்த இரண்டு முறை உயர்வு மட்டும் 1 ரூபாய் 48 காசு என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதையெல்லாம் ஏற்கனவே தெளிவாக விளக்கியிருக்கிறோம்.

ஏற்கனவே அரசாங்கம் 360 கோடி ரூபாய் மானியத்தை—மானியச் சுமையைத் தாங்க வேண்டியிருக்கிறது. இந்த விலையேற்றம் செய்யவில்லை என்றால் அந்த மானியச் சுமை 460 கோடி ரூபாயாக அதிகரிக்கும். அதனைத் தாங்குகின்ற சக்தி மாநில அரசுக்கு இல்லை என்பதாலேதான் இப்பொழுது வருத்தத்துடன், வேறு வழியின்றி 75 பைசா உயர்த்தியிருக் கிறோம் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1.32 ஆகிவிட்டது ; 12.55-க்கு ஆரம்பித்தீர்கள். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரவர்களே இரண்டு அறிக்கை படித்திருக்கிறார்கள்; மற்ற அமைச்சர்கள் தலையிட்டிருக்கிறார்கள். பேச வேண்டாமென்றால் நிறுத்தி விடுகிறேன்; இப்பொழுதே நிறுத்தி விடுகிறேன், சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே நிமிடத்தில் முடியுங்கள் என்று சொல்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : முடிக்கிறேன். அப்படிச் சொல்லுங்கள். சுருக்கமாக முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே நிமிடம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ஒரே நிமிடம் என்றால், 'பேரவைத் தலைவரவர்களே, என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தால்தான் முடியும். மற்ற ஒன்றும் பேச முடியாது. மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, ஆக சிறிது நேரம் கொடுங்கள். ஒரே நிமிஷத்தில் என்ன பேசுவீர்கள்? உட்காருகிறேன் என்று சொல்லிவிட்டு உட்காரலாம், அவ்வளவு தான்செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு மணிக்குள் முடிக்க வேண்டும். தமிழரசன் பேச வேண்டும். பண்ருட்டியார் பேச வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: எல்லோரும்தான் பேச வேண்டும். நாளைக்கு ஒரு நாள் விட்டு, திங்கட்கிழமை முதலமைச்சர் பதிலை வைத்துக் கொள்ளுங்கள், சிறப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, முடியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே அரிசி விலை உயர்வைக் கைவிட வேண்டுமென்று நான் இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அந்த 100 கோடி ரூபாயை நீங்கள் பல்வேறு மற்ற செலவினங்களிலே குறையுங்கள். அரசினுடைய ஆடம்பரச் செலவுகள், விளம்பரங்கள், கட்-அவுட்டுகள், போஸ்டர்கள் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு நிர்ணயிக்கின்ற அந்த அரசு நிகழ்ச்சியுனுடைய செலவைக் காட்டிலும் ஏதாவது ஒரு இடத்திலே அதிகமாகச் செலவு செய்திருக்கிறார் என்பதை உறுப்பினர் குறிப்பிட்டால் பரவாயில்லை. கட்சியின் சார்பாக- நீங்கள்கூட 4 பேர் வைத்திருக்கிற கட்சியிலே என்னென்ன ஆடம்பரச் செலவுகள் செய்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆகவே, இது மக்களுடைய இயக்கம் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, மக்கள் செய்கின்ற செலவைப் பார்த்து அரசாங்கம் குறைக்கலாம் என்று சொல்வது நியாயமாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : 'இன்பர்மேஷன்' அமைச்சராக நான் இருக்கிறேன். எனவே நான் இதை உறுதியாகச் சொல்ல முடியும். அரசாங்கத்திற்கு பப்ளிசிட்டி செலவுக்காக—விளம்பரச் செலவுகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்படுகிறது. அது ஆறு கோடி, ஏழு கோடி ரூபாய் உள்ளாகத்தான் இருக்கும். அந்தத் தொகையைவிட அதிகமாக விளம்பரத்திற்காக அரசாங்கம் செலவு செய்யவில்லை. எந்த விதமான ஆடம்பரச் செலவையும் அரசாங்கம் செய்யவில்லை வேறுவிதமான விளம்பரச் செலவுகளைக் கட்சிதான் செய்கிறதே தவிர, அரசு செய்யவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆக மீண்டும் அரிசி விலை உயர்வைக் குறையுங்கள் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்து விடுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: முடித்து விடுகிறேன். இன்னும் சில விஷயங்கள் பேசவேயில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒரு நிமிடம் என்று கொடுத்தேன், 5 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் பேசவே இல்லையே. விஷயங்களைப் பேசவேயில்லையே, ஒன்றுமே பேசவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 12-55-க்கு ஆரம்பித்திருக்கிறீர்கள். வேண்டுகோள் எல்லாம் வைத்திருக்கிறீர்கள். அது போதும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன். (குறுக்கீடு) 12.55-க்கு ஆரம்பித்து, 1-35 ஆகியிருக்கிறது. 40 நிமிடங்கள் (குறுக்கீடு) திரு. செ. கு. தமிழரசன். (குறுக்கீடு).

(திரு. எஸ். திருநாவுக்கரசு நின்று கொண்டு பேசிக் கொண்டேயிருந்தார்.)

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையை வரவேற்று, (குறுக்கீடு) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து, இந்த அவையில் கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானத்தை வழிமொழிந்து, இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே நான் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். (திருநாவுக்கரசு தொடர்ந்து குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தமிழரசன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திரு. தமிழரசன் பேசிக் கொண்டிருக்கிற போது, திருநாவுக்கரசு குறுக்கிட்டுப் பேசுவது நல்லதல்ல. தமிழரசன் பேசிக் கொண்டிருக்கிறார். இன்னொரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறபோது, இந்த மாதிரித் தடை செய்யக் கூடாது. (குறுக்கீடு). பேசுகிற அவருக்கும், எனக்கும் இடையிலே குறுக்கே நிற்பதே தவறு.

திரு. செ. கு. தமிழரசன்: பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (திருநாவுக்கரசு குறுக்கீடு). இன்றைக்கு பக்கத்திலே இருக்கிற கர்நாடகத்தைப் போலவோ, ஆந்திராவைப் போலவோ, பஞ்சாபைப் போலவோ, அஸ்ஸாமைப் போலவோ, காஷ்மீரைப் போலவோ இல்லாமல், ஒரு அமைதிப் பூங்காவாக, தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்றால், அதற்கு வலிவான மனதோடு நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிற, தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நாள்தோறும் புதிய, புதிய திட்டங்கள் புதிய, புதிய சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிற, நித்தம், நித்தம் புதிய சரித்திரத்தைப் படைத்துக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

(திரு. எஸ். திருநாவுக்கரசு நின்றுகொண்டு ஏதோ பேசிக் கொண்டேயிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையிலே 2 பேர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேரவையிலே இரண்டு பேரையும் அனுமதிக்கிறீர்களா? ஒருவரை மட்டும் அனுமதிக்கிறீர்களா என்பதை நீங்கள் அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தமிழரசனைப் பேச அழைத்திருக்கிறேன். திரு. தமிழரசனுக்கு இடையூறாக, விதிகளுக்குப் புறம்பாக, இன்னொரு உறுப்பினர் திருநாவுக்கரசு எழுந்து நின்று கொண்டிருக்கிறார். (திருநாவுக்கரசு குறுக்கீடு). எனவே, திரு. திருநாவுக்கரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். உறுப்பினருக்கு 40 நிமிடங்கள் வாய்ப்பளித்தேன். 40 நிமிடங்களைப் பயன்படுத்திக் கொண்டு, அவர் இன்னொரு உறுப்பினரைத் தடை செய்வது நல்லதல்ல. நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு)

திருநாவுக்கரசு வெளியேற வேண்டும். அவையை விட்டு வெளியேறவும்.

திருநாவுக்கரசை அவையைவிட்டு வெளியேற்றுகிறேன்.

(திரு. திருநாவுக்கரசு வெளியேறாமல் பேசிக் கொண்டே இருக்கிறார்.)

மார்ஷல், திருநாவுக்கரசை அப்புறப்படுத்தவும். (குறுக்கீடு).

மார்ஷல், திருநாவுக்கரசை அப்புறப்படுத்தவும். நான் திரு. தமிழரசனைப் பேச அழைத்ததிலிருந்து, திருநாவுக்கரசு எழுந்து நின்று கத்தியது எல்லாம், அவைக் குறிப்பில் ஏறாது. நான் மார்ஷலை அழைத்து அவரை வெளியேற்றியதுதான் அவைக் குறிப்பில் இருக்கும்.

(உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு, பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எவ்வளவு வாய்ப்புக் கொடுத்தோம் என்பதைப் பேரவை இப்போது பார்த்தது. திரும்பத் திரும்ப உட்காருமாறு கேட்டும், இன்னொரு உறுப்பினரைத் தடை செய்கிற நோக்கத்தில், அந்த அளவுக்கு முறைகேடாக, விதிகளுக்குப் புறம்பாக திருநாவுக்கரசு பேசிக் கொண்டிருந்தார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இப்பேர்ப்பட்ட [illegible]கரிகமான மனிதர்தான் பேரவைத் தலைவரைப் பற்றி வெளியிலே போய் அறிக்கை என்கிற பெயரால், அவதூறுகளைப் பரப்புகிறார் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

திரு. ஜி. பழனிசாமி: ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பிரதானமான எதிர்க்கட்சியாக இருக்கிற காங்கிரஸ் கட்சியில் ஒருவருமே இன்று அவைக்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நான் திரு. தமிழரசனைப் பேச அழைத்திருக்கிறேன். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன இருக்கிறது? திரு. தமிழரசன் பேசியதிலே ஏதாவது இருக்கிறதா? இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. ஒருவருமே வரவில்லை என்றால் நீங்கள் அவர்களைப் பார்த்துக் கேட்க வேண்டும். அதை நீங்கள் என்னிடம் கேட்டால் எப்படி? திரு. தமிழரசன் பேசிக் கொண்டிருக்கிறார். இதிலே ஏதாவது ஒழுங்குப் பிரச்சினை இருந்தால் நீங்கள் கேட்கலாம். பழனிசாமி உட்காருங்கள். திரு. தமிழரசன். (குறுக்கீடு). நீங்கள் என்னைக் கேட்டால் எப்படி? இதில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை. திரு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற இந்தத் தீர்மானத்தின் மீது, நேரத்தின் அருமை கருதி....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது திரு. தமிழரசன் அவர்களைப் பேசச் சொல்லி இருக்கிறேன். அதிலே ஏதாவது ஒழுங்குப் பிரச்சினை கேட்கிறீர்களோ என்றுதான் நான் நினைத்தேன். நீங்கள் வேறு எதையோ கேட்கிறீர்கள். திரு. செ. கு. தமிழரசன்.

பிற்பகல் 1-40

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது, இதனை வழிமொழிந்து இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் நேரத்தின் அருமை கருதி சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

இந்த அரசு, ஏழைகள், நலிந்தவர்கள், பெண்கள், ஆகிய ஒடுக்கப்பட்ட மக்களின் நலன் காக்கிற அரசாக, நித்தம், நித்தம், புதிய, புதிய திட்டங்களை, சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிற அரசாகத் (மேசையைத் தட்டும் ஒலி) திகழ்ந்து கொண்டிருப்பதால், நான் முதலிலே என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.



நடுநிலைமையாளர்கள், நாட்டின் முன்னேற்றத்திலே அக்கறை கொண்டவர்கள், அரசியலிலே மனச்சாட்சியோடு தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுகின்றவர்கள், மனிதநேயம் மிக்கவர்கள், யாராக இருந்தாலும், இந்த அரசை குறை சொல்லவே முடியாது. பாராட்டித்தான் ஆக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்த அரசை நான் பாராட்டுகிற இந்தச் சந்தர்ப்பத்திலே சில இன்றியமையாத கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

பேரறிஞர் அம்பேத்கரால், மிகப் பெரிய புரட்சியாளர் மஹாத்மே பூலேயால், மாமேதை நாராயண குருவால், பகுத்தறிவுத் தந்தை பெரியாரால், ஆக மிகப் பெரிய ஒரு வரலாறால் பெறப்பட்ட இட ஒதுக்கீட்டு முறைக்கு இன்றைக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சுகிற அளவுக்கு மத்திய அரசின் போக்கும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பும் இருக்கிறது என்பதை நான் இங்கே வேதனையோடு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். சமுதாயப் புரட்சி காண்பதற்காக, சமத்துவம் காண்பதற்காக, இவ்வளவு பெரிய மேதைகள் எல்லாம் ஆண்டாண்டு காலமாகப் போராடி வாங்கிய அந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இன்றைக்கு இல்லாமல் போய் விடுமோ என்று ஏழை மக்கள், ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அஞ்சுகிற அளவுக்கு நீதிமன்றத்தின் தீர்ப்பும், மத்திய அரசின் போக்கும் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை நான் மிக, மிக வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்காக உச்ச நீதிமன்றத்திலே நியமிக்கப்பட்ட ஒரு பெஞ்ச், அதிலே 9 பேரிலே 4 உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பெரும்பான்மையை தீர்ப்பு ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பை மத்திய அரசு செயல்படுத்துமேயானால், அதைச் செயல்படுத்திட மாநில அரசுகளை மத்திய அரசு கட்டாயப்படுத்துமேயானால் நம்முடைய தமிழகத்தின் பெருமை இருக்கிறதே, முதன் முதலில் 1921-லே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அமல்படுத்திய மாநிலம் என்று, அந்தப் பெருமையினை இழக்கிற அளவுக்கு நிலைமை போய்விடும். நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரையிலே 30 சதவீதம் பிற்பட்ட வகுப்பினருக்கும், 20 சதவீதம் மிகப் பிற்பட்ட வகுப்பினருக்கும் சீர்மரப்பினருக்கும், 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், 1 சதவீதம் மலைவாழ் மக்களுக்கும், ஆக 69 சதவீதம் என்பதை நாம் இங்கே இடஒதுக்கீடாக வைத்து சமுதாய நீதியைப் பின்பற்றி வருகின்றோம். இன்றைக்கு அதற்கு உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கின்ற ஆணையின் அடிப்படையிலே அதை மத்திய அரசு செயல்படுத்திட முற்பட்டால், இந்த 69 சதவீதத்திலே 19 சதவீதம் குறைய வேண்டிய நிலை வரும். 50 சதவீதத்திற்கு மேலே இட ஒதுக்கீட்டு முறை நீடிக்கக்கூடாது

என்று அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. தேவையே இல்லாமல், காரணமேயில்லாமல், மண்டல் கமிஷன் பிற்பட்ட மக்களின் இடஒதுக்கீடு பற்றி மட்டும் சொல்லியிருக்கிற பரிந்துரையினை விசாரிக்க வேண்டிய அந்த பெஞ்ச் அந்தத் தீர்ப்பிலே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இனி பதவி உயர்விலேயும் இட ஒதுக்கீடு தரக்கூடாது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதைச் செயல்படுத்திட மாநில அரசுகள் முன்வருமேயானால் இனி தாழ்த்தப்பட்ட மக்கள் உயர் அதிகாரிகளாக வரமுடியாத ஒரு நிலைமை, ஒரு வேதனை, அப்படிப்பட்ட ஒரு அவமானம் இங்கே நிகழ்ந்து விடும். எனவே, நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புவது, நம்முடைய மாநில அரசு இதை மறுபரிசீலனை செய்ய மத்திய அரசிடமும், உச்ச நீதிமன்றத்திலும் கோரிக்கை தொடர இருக்கிறது என்பதனை நான் அறிவேன். அப்படிப்பட்ட நிலைமை வருகிறபோது, தாழ்த்தப்பட்ட மக்களின் இந்தப் பதவி உயர்வு குறித்தும் நீங்கள் அந்த மனுவிலே குறிப்பிட வேண்டும் என்ற கோரிக்கையினை நான் உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன். இதை செயல்படுத்துவதன் மூலம் ஏற்கெனவே 'Carry Forward Vacancy' என்று சொலவார்களே அந்த Vacancy-ஐ இனி தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரமுடியாத நிலைமை வந்துவிடும். அதுமட்டுமல்லாமல் நம்முடைய மாநில அரசிலே 7 துறைகளிலே மட்டும்தான் பதவி உயர்விலே இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி வருகிறோம். மத்திய அரசின் இந்த செயலாக்கத்தை செயல்படுத்த முன்வந்தால், இனி 7 துறைகளிலும்கூட பதவி உயர்வில் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற முடியாத நிலைமை வந்துவிடும். ஆக, அவ்வளவு பெரிய ஆபத்தை நாம் இன்றைக்கு சமுதாய அளவிலே சந்தித்துக் கொண்டிருக்கிறோம். எனவே, நாம் மறுபரிசீலனை என்று சொல்லி, மறு ஆய்வு நடத்திட ஒரு மனு போடுகிறபோது, தாழ்த்தப்பட்ட மக்களின் இந்தப் பிரச்சினையையும் சேர்த்து உங்களுடைய மனுவிலே குறிப்பிட வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன் வைக்கிறேன். ஏனென்றால் புரட்சித் தலைவி அவர்களைத் தவிர, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, வேறு யாரும் பாதுகாவலராக, இரட்சகராக இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி). காரணம், சாதிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு மிகப் பெரிய சமதர்மவாதியாகத் திகழ்ந்து கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள். நான் ஏன் இதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், இடஒதுக்கீடு முறையே தவறு என்ற அவர்கள் வாதத்திலே உண்மை இருக்குமானால்,—எந்தத் தேர்விலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு வினாத் தாளும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு வினாத் தாளும், வேறு மக்களுக்கு ஒரு வினாத் தாளும் வைக்கப்படுவது இல்லை. தேர்வுகளைப் பொறுத்தவரையிலே ஒரே மாதிரியான தேர்வைத்தான் நடத்துகிறார்கள். ஆனால் தேர்வில் வெற்றி பெற்று, தகுதியின் அடிப்படையிலேதான் வேலைத் தருகிறோம். அதற்குப் பிறகுதான், இந்தப் பதவி உயர்விலே மட்டும்தான் இந்த இட-



ஒதுக்கீடு முறையைப் பின்பற்றுகிறோம். எனவே, அந்த முறையைப் [illegible]ப்படுத்தாமல், சின்னப்படுத்தாமல் அந்த நிலைமையை [illegible]வதற்கு மாநில அரசு முன்வந்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் எப்பொழுதும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-45

நான் நேரத்தின் அருமை கருதி வேக வேகமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த சில மாதங்களுக்கு முன்னாலே சம்புவராயர் மாவட்டத்திலே குன்னூர் என்கிற கிராமத்திலே, ஆதி திராவிட மக்கள் மீது அங்கே உள்ள ஒரு திராவிட முன்னேற்றக் கழக ஒயின் கடை அதிபருக்கு ஆதரவாக காவல் துறையினர் ஒரு அராஜகப் போக்கை மேற்கொண்டார்கள். இதை நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்தபோது, அவர்கள் உடனடியாக, சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளையும், அனைத்து அதிகாரிகளையும் மாற்றி ஒரு நீதி விசாரணைக்கே உத்தரவிட்டார்கள். இந்த நல்ல முயற்சி [illegible] இந்த வேகமான செயற்பாட்டை நான் வரவேற்கிறேன். இதே போல கும்பகோணத்துக்குப் பக்கத்திலே குடிதாங்கியிலே நடந்த போது கடுமையான நடவடிக்கையை புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொண்டார்கள். அவர்கள் பார்வைக்கு அனுப்புகிறபோது, அவர்கள் கடுமையான நடவடிக்கைகளையும், வேகமான தீர்வையும் மேற்கொள்கிறார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக பல இடங்களிலே நடக்கிற சம்பவங்களை அவர்களுடைய மேலான நினைவுக்குக் கொண்டு போக முடியாத ஒரு நிலைமை வந்துவிடுகிறது. சாதாரண மக்கள், நலிந்த மக்கள், தங்கள் பிரச்சினையை, பாதிப்பில் அவதிப்படுகிறபோது, கொண்டுவருவதற்கு அவர்களால் முடிவதில்லை. சமீபத்திலே களக்காட்டிலே, திருநெல்வேலி வட்டாரத்திலே அப்படி ஒரு கலவரம் நடந்தது. செய்யாறுக்குப் பக்கத்திலே ஒரு கிராமத்திலே ஒரு தாழ்த்தப்பட்டவருக்கு விஷத்தைக் கட்டாயப்படுத்திக் கொடுத்து சாகடித்து விட்டார்கள். அதை நிரூபிக்கவே முடியவில்லை. காரணம் வேறு வழியில்லாமல் போய்விட்டது. எனவே, இப்படிப்பட்ட நிலைகளை ஆய்வதற்காக பிற்பட்ட மக்களுக்காக ஒரு நிரந்தர கமிஷனை இந்த அரசு கொண்டு வரும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுடைய பிரச்சினைகளைப் போக்குவதற்காக ஒரு நிரந்தரக் கமிஷனை உருவாக்கித் தர வேண்டும் என்கிற என்னுடைய பணிவான கோரிக்கையை இங்கே நான் அவர்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு பல நல்ல காரியங்களுக்கு வழங்குகிற மானி
யங்களை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டே
வந்திருக்கிறது. இப்போழுதுகூட ஜே.வி.வி.டி. என்று சொல்
வார்களே இங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெரும்
அளவிலே வீடு கட்டிக் கொடுக்கிற திட்டம் இருக்கிறது. அது
இப்பொழுது குறைந்து விட்டது. காரணம், என்னவென்றால்
மத்திய அரசு வழங்குகின்ற மானியத்தை அவர்கள் குறைத்
திருக்கிறார்கள். எனவே, இந்த மானியத்தைக் குறைக்காமல்
மேலும் அதிகப்படுத்திட மாநில அரசு மத்திய அரசை
வலியுறுத்த வேண்டும் என்பதை நான் இங்கே சொல்ல விரும்பு
கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களைப் பொருளாதாரத் துறை
யிலே முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக
இங்கே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி பல திட்டங்
களை ஈரோட்டிலும், திருப்பூரிலும், தொழிற் பேட்டைகளை
யும் 40 கோடி, 40 கோடி அளவிலே தொடங்கியிருக்கிறார்கள்.
ஆக மிகப் பெரிய அந்தத் திட்டங்களை உருவாக்கித் தரு
கிற புரட்சித் தலைவி அவர்களுடைய இந்தக் காலக்கட்டத்தி
லே நான் ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாதாரண
கிராமப் புறத்திலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள்,
வளர்ந்துவருகிற பொருளாதார நெருக்கடியிலும், பொரு
ளாதாரச் சந்தையிலும், மேலும், மேலும் வறுமைக்கு ஆட்
படுகிற நிலைமை உருவாக்கப்படுவதற்குக் காரணம் பல்வேறு
பிரச்சினைகள்தான். எனவே, கிராமப்புறங்களிலே இருக்கிற
தாழ்த்தப்பட்ட மக்கள் 3, 4 ஏக்கர் வைத்திருந்தால்
அதை விற்க முடியாத அளவிலே, விற்பதற்கு அரசின் அனு
மதி வேண்டுமென்ற அளவிலே ஒரு சட்டத்தைக் கொண்டு
வர வேண்டுமென்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-50

இதே சட்டத்தை உத்திரபிரதேசத்தில்கூட சமீபத்
தில் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற தாழ்த்
தப்பட்ட மக்கள் 3 ஏக்கர், 4 ஏக்கர் வைத்திருந்தால் அதை
அவர்கள் அரசின் அனுமதி இல்லாமல் விற்கவே முடியாது.
அதேபோல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிராமங்களில் பூர்
வீகச் சொத்து இருந்தால் அரசு அனுமதி இல்லாமல் வேறு
யாரும் அதை வாங்க முடியாது என்கிற சட்டத்தையும் உத்திரப்
பிரதேசத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோல், இங்
கேயும் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று நான் சொல்ல
ஆசைப்படுகிறேன். இதே கருத்தினை 1920 ஆம் ஆண்டிலே
சட்டமன்ற மேலவையில் அதாவது இந்த சட்டமன்றப் பேரவை
அப்போது மேலவையாகத் திகழ்ந்தபோது—அன்றைக்கே எங்
களுடைய தலைவர் தாத்தா ரெட்டைமலை சீனிவாசன்
அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள்.
அதைச் செயல்படுத்த நாம் முன் வந்தால் கிராமத்தில் இருக்
கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொஞ்சம் பாதுகாப்பு இருக்கும்



என்ற முறையில்—நான் அதைச் சுட்டிக்காட்ட விரும்பிகிறேன்.

அடுத்து இன்றைக்கு பலரும் வெளியே அரிசியின் விலை உயர்ந்திருப்பது குறித்து அதனை அரசியலாக்கிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள. நான் அதை விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை. கிராமபுறத்தில் உள்ள ஒரு பழமொழிதான் என் நினைவுக்கு வருகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அந்தப் பழமொழி இந்த அவையில் பொருத்தமாக இருக்காது. எனவே அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

<u>திரு. செ.கு. தமிழரசன் :</u> பழமொழியை மட்டும், நீக்குகிறீர்களா? அல்லது..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் பழமொழியை ஆரம்பித்ததிலிருந்து இப்போது வரைக்கும் அதற்கு விளக்கமெல்லாம் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறீர்களே, அது வரையில் நீக்கப்படுகிறது.

<u>திரு. செ.கு. தமிழரசன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே என்னுடைய தொகுதி குறித்தும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய சம்புவராயர் மாவட்டத்தில் என்னுடைய தொகுதியான வந்தவாசித் தொகுதி ஒரமான பகுதி. எல்லையோரப் பகுதி, அது மிகவும் வறண்ட பகுதி. அங்கே வேறு தொழிலே கிடையாது. எனவே அங்கே ஒரு தொழிற்சாலை வேண்டுமென்ற கோரிக்கையை நீண்டகாலமாக அந்த மக்கள் வலியுறுத்திக் கொண்டு இருக்கிறார்கள். எனவே ஒரு தொழிற்சாலையை அங்கே உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே நான் வைக்க விரும்புகிறேன்.

ஒரு கல்லூரி இல்லாததால் தென்னாற்காடு மாவட்டத்திற்கோ, செங்கற்பட்டு மாவட்டத்திற்கோ, அம்பேத்கர் மாவட்டத்திற்கோதான் மாணவர்கள் படிப்பதற்காகப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே அங்கே ஒரு கல்லூரி உருவாக்கித் தரவேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்திட, வலுவான தலைமையில் ஒரு திறமையான நிர்வாகம் இயக்கமாகச் செயல்பட, ஏழை எளிய, மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் புரட்சித் தலைவியின் தலைமை, மிகத் திறமையான

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. செ. கு. தமிழரசன்] [1993 பிப்ரவரி 12

தலைமையாக சிறப்பான தலைமையாக, வலுவான தலைமையாக இங்கே விளங்குவதற்கு தமிழக மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும். ஆனால், பலர் இன்றைக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு இந்தப் புகழில் தங்களுக்குப் பங்கு கிடைக்கவில்லையே என்ற வேதனையோடு இப்போது விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் மிக வேதனையோடு இந்த அவையில் சொன்ன வரிகள் இப்போதும் என் நினைவுக்கு வருகிறது. அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். "நான் தண்ணீரில் நடந்தால்கூட எனக்கு நீந்தத் தெரியவில்லையே என்று குறை சொல்வார்களே தவிர நான் தண்ணீரிலே நடந்தேன் என்பதைக்கூட பாராட்டுவதற்கு அவர்களுக்குத் தெரியாது" என்று சொன்னார்கள். இலக்கிய பூர்வமான, ஆழமான, சிந்தனைபூர்வமான இந்த வரிகளை மீண்டும் நான் நினைவுபடுத்தி, தாழ்த்தப்பட்ட மக்கள் ஏழை எளிய மக்கள் என்றைக்கும் உங்களுடைய இந்த வேகமான செயல்பாட்டிற்குத் துணை நிற்பார்கள் என்று சொல்லி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 6. அரசினர் தீர்மானம்.

### விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் "வினாக்கள்—விடைகள்" என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 13—2—1993 அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்". என்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.



1993 பிப்ரவரி 12] [பேரவைத் தலைவர்]

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (13—2—1993) காலை 10-00 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-55 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

164983

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

84. 1991-92 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

85. 1990-91 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

86. 1990-91 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முப்பத்திநான்காவது நிர்வாக அறிக்கை. (1948 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

87. 1991-92 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

88. 1991-92 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.

D
V 211, 31 N93
N93.322